56.5

யா!...

(வேர்ச்சொல் விளக்கவுரை)

KOVILOOR ANDA
A. No. 26959
LIBRARY, KOVILOOR

ஆசிரியர் :

ப. அருளி
" தனித்தமிழ் மனை "
காளிக்கோயில் தெரு,
தமிழூர்
புதுச்சேரி - 605009.

முதற்பதிப்பு : தி பி. 2023 — மீனம் — 23. 1992—ஏப்பி

மொத்தப் பக்கங்கள் : 276

பதிப்பக முகவரி :

அறிவன் பதிப்பகம்
காளிக்கோயில் தெரு,
தமிழூர்,
புதுச்சேரி - 605 009.

அச்சீடு :

தமிழ் அச்சகம்
55-வழுதாவூர்ச் சாலை,
தருமபுரி,
புதுச்சேரி - 9.

வெளியீடு : எண்-4.

தமிழினத் தொண்டியக்கம் — புதுவை மா

விலை : உருவா. நாற்பது
(Rs- 40/-)

56-5

நன்றிப் படையல்.......

நாணத்தனும்

மானத்தனும்-

ஆக-இலங்கும்,

புதுவை- ஒழுகுகரை- "மு. சங்கரதாசு" என்றழைக்கப்பெறும்,

"முருகன்பன்"

என்னும் என் இனிய நன்னண்பனுக்கு!.......

குறுக்கமும்- நூற்பெயரும் : பட்டியம்-1

அகத்தியர் குண: அகத்தியர் குணவாகடம்
அகம். : அகநானூறு
அக. நி. : அகராதி நிகண்டு
அறப்பளீ. சத. : அறப்பளீசுவரர் சதகம்
அறு. இலக்.: அறுவகை இலக்கணம்
அஷ்டப். திருவேங். : அஷ்ட்டப் பிரகரணம்
ஆனந்த வண்டு-தூது. : காஞ்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடுதூது
இரகு. யாகப். : இரகு வம்சம்
இன். நாற். : இன்னா நாற்பது
ஈடு. : திருவாய்மொழி ஈடு முப்பத்தாறாயிரப்படி.
உபதேசகா. : உபதேச காண்டம்
ஐங். (ஐங்குறு.) : ஐங்குறுநூறு
ஐங். தி : ஐங்குறுநூறு-திரட்டு
ஐந். ஐம். : ஐந்திணை ஐம்பது
ஒழிவி.: ஒழிவிலொடுக்கம்
கச்சி, காஞ்சிப்பு. : காஞ்சிப்புராணம்
கதிரை. அக.: கதிரைவேற்பிள்ளை- தமிழ் அகராதி
கந்தபு. : கந்தபுராணம
கந்தரல. : கந்தரலங்காரம்
கம்பரா. : கம்பராமாயணம
கயற்.மாலை.:கயற்கண்ணி மாலை
கலி. (கலித்.) : கலித்தொகை
கலிங். : கலிங்கத்துப்பரணி
கலைசைக். : கலைசைக்கோவை
களவழி. : களவழி நாற்பது
காரைக். அந். : காரைக்காலம்மை யார்- அற்புதத் திருவந்தாதி
கார் நாற். : கார் நாற்பது
குருபரம்.:குருபரம்ப்ராப்ராபாவம் பன்னீராயிரப்படி
குறள். : திருக்குறள்
குறிஞ்சி. (குறிஞ்சிப்.) : குறிஞ்சிப் பாட்டு

குறுந். : குறுந்தொகை
கைந்நி. : கைந்நிலை
சங். அக. : மதுரைத் தமிழ்ச்சங்கத் தமிழ்ச்சொல் அகராதி (சங்கத்தகராதி)
சங்கர கோவை. : சங்கரமூர்த்தி கோவை
சாம்ப.அக. : சாம்பசிவம்பிள்ளை- அகராதி
சித் பரி. அக. : சித்தர் பரிபாஷை அகராதி
சிலம்பு. : சிலப்பதிகாரம்
சிவஞா. காஞ்சிப். : சிவஞான முனிவர் காஞ்சிப்புராணம்
சிவதரு. : சிவதருமோத்திரம
சிவ. திரு-: சிவஞான தேசிக சுவாமிகள் - திருவருட்பாத்திரட்டு,
சிவப்பிர. : சிவப்பிரகாசம்
சி.வை.அ.:சித்தவைத்திய அகராதி
சிறு (சிறுபாண்.): சிறுபாணாற்றுப் படை
சிறுபஞ். : சிறுபஞ்சமூலம்
சீகாழித். ; சீகாழித்தலபுராணம்
சீதக்.: சீதக்காதித் திருமணவாழ்த்து மடல்,
சீவக, [சீவக. சிந்]: சீவக சிந்தாமணி.
சீவரட். : சீவரட்சாமிர்தம
சூடா. (சூடா. நி,) : சூடாமணி நிகண்டு
செ. ப. க. த. பே. : சென்னைப் பல்கலைக்கழகத்தமிழ்ப்பேரகராதி
சேரமான் பொன் : பதினோராந் திருமுறை- பொன்வண்ணத்தந்தாதி
ஞானப்பிர. ஒப்பியல்அக, : ஞானப்பிரகாசர் ஒப்பியல்அகராதி
ஞானா. : ஞானாமிர்தம்
தக்கயாகப். : தக்கயாகப் பரணி
தத்துவப். ; தத்துவப் பிரகாசம

தனிப்பா. : தனிப்பாடல் திரட்டு
தாயுமா.(தாயுமா.பா.):தாயுமானவர் பாடல்கள்
திணைமாலை [தி. மா.] : திணைமாலை நூற்றைம்பது
திணைமொ.:திணைமொழி ஐம்பது
திரிகடு. : திரிகடுகம்
திருக்குற்றா. பு : திருக்குற்றாலத் தல புராணம்
திருக்கோ. : திருக்கோவையார்
திருக். மரபு : திருக்குறள் தமிழ் மரபுரை
திருநெல். பு. தக்கன் : திருநெல் வேலித் தலபுராணம்
திருப்பு. : திருப்புகழ்
திருப்போ. சந். அலங். : திருப் போரூர்ச் சந்நிதிமுறை
திருமந். : திருமந்திரம்
திருமழிசை. : திருமழிசையாழ்வார் திருச் சந்த விருத்தம்
திருமாளிகைத் திருவிசை: திருமாளிகைத் தேவர்திருவிசைப்பா
திருமுரு. [முருகு]:திருமுருகாற்றுப் படை
திருவ. சித்து. : திருவகுப்பு
திருவருணைக்கலம்.: திருவருணைக் கலம்பகம்
திருவலங். திர : திருவலங்கல் திரட்டு
திருவாச.[திருவாசக.]:திருவாசகம்
திருவாடானைப் பு. : திருவாடானைப் புராணம்
திருவாலவா. : திருவால வாயுடையார்- திருவிளையாடற் புராணம்
தில்.யம.அந் : திருத்தில்லை யமக அந்தாதி
திவா. : திவாகரம்
திவ். இயற்: நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
திவ். இயற்.(திவ். இயற்.நான்) இயற்பா நான்முகன் திருவந்தாதி
திவ் திருப்பல் : நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம்-திருப்பல்லாண்டு
திவ். திருப்பள்ளியெழுச்சி : நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம்
திவ். திருப்பா: நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம்- திருப்பாவை.
திவ்.நாச் : நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்-நாச்சியார்திருமொழி
திவ். பெரியதிரு : நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம்-பெரிய திருமொழி.
தெ.இ.க : தென்னந்தியக் கல்வெட்டுகள்.
தென்னார்க்.வழ, : தென்னார்க்காட்டு வழக்கு
தேவா. தேவாரம் :
தொல். : தொல்காப்பியம்
நம்பி.திருத்தொண். : திருத்தொண்டர் திருவந்தாதி
நம்பியகப்.வி: அகப்பொருள்விளக்கம்
நற். : நற்றிணை
நாமதீப. : நாமதீப நிகண்டு
நாலடி. : நாலடியார்
நான்மணி, : நான்மணிக்கோவை
நீல.தரு : நீலகேசி
நெடு. [நெடுநல்.]: நெடுநல்வாடை
நைட.[நைடத] : நைடதம்
பகவற். : பகவற்கீதை
பட்.[பட்டினப்.] : பட்டினப்பாலை
பட்டினத்தார், : பட்டினத்தார் திருப்பாடல்கள்
பட்டினத்துப். நான்மாலை. ; பட்டினத்துப்பிள்ளையார் நான்மணிமாலை
பதார்த்த.: பதார்த்தகுணசிந்தாமணி
பதிற்றுப்(பதிற்.பத்.):பதிற்றுப்பத்து
பரி.(பரிபா.) : பரிபாடல்
பரிபா.திர. : பரிபாடல் திரட்டு
பழ. : பழமொழி
பழமலை. அந். : பழமலைஅந்தாதி
பாத்மோத்.பு. : பாத்மோத்தர புராணம்

பாரத. : பாரதம்
பிங்.[பிங்.நி] : பிங்கல நிகண்டு
பு,வெ.[பு.வெ.மா,] : புறப்பொருள் வெண்பாமாலை
புள்ளிருக் கலம். : புள்ளிருக்கு வேளூர் கலப்பகம்
புறம். : புறநானூறு
பெரியதி. : பெரிய திருமொழி
பெரியபு. : பெரியபுராணம்
பெருங் : பெருங்கதை
பெருந் : பெருந்தொகை
பெரும். [பெரும்பாண்] : பெரும்பாணாற்றுப்படை
பொதி. நி : பொதிகை நிகண்டு
பொருநரா : பொருநராற்றுப்படை
மணி. [மணிமே.] : மணிமேகலை
மதன. மாலை : மதனகாமராசன் கதை
மது. (மதுரை. மதுரைக். : மதுரைக் காஞ்சி
மது. அக. (மதுரை. அக. : மதுரைத் தமிழ்ப் பேரகராதி
மதுரைச் : மதுரைச் சொக்கநாதர் உலா.
மர இனப் பெ : மர இனப்பெயர்த் தொகுதி
மலை.[மலைபடு] : மலைபடுகடாம்
மறைசை : மறைசையந்தாதி
மீனாட்சி.பிள் : மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
முக்.பள் : முக்கூடற்பள்ளு
முல்லை : முல்லைப்பாட்டு
மூத்த திருப் : திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்
மூலிகையக. : வைத்திய மூலிகை அகராதி
யாப். காரிகை. : யாப்பருங்கலக் காரிகை
யாப்.வி. : யாப்பருங்கல விருத்தி
யாழ். அக. : யாழ்ப்பாண அகராதி
ரா.வட்.அக. : ராசநாராயணன் வட்டார- வழக்குச் சொல்லகராதி
வட.நி. : வடமலை நிகண்டு
வட்.சொ.வி. :வட்டாரச் சொற்களும் விளக்கங்களும்
வாக்கு. : வாக்குண்டாம்
விக்கிர.உலா. : விக்கிரம சோழன் உலா
விவேக சிந். : விவேக [சிந்தாமணி
விறலிவிடு. : விறலிவிடு தூது
வின்சிலோ. : வின்சிலோ அகராதி
வெங்கைக். : வெங்கைக் கோவை
வைண. ஆசா. : வைணவம்

நூற் பெயர்கள் : பட்டியம்-2

1. இரண்டாந் திருமொழி
2. இறையனார் அகப்பொருள்
3. இன்னிலை

4. ஏலாதி
5. கல்லாடம்
6. காசிக் கலம்பகம்
7. கொண்டல் விடுதூது
8. சங்க இலக்கியத் தாவரங்கள்
9. சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்
10. சதுரகராதி
11. தமிழ் நாவலர் சரிதை
12. தமிழ் வரலாறு
13. தைல வருக்கச் சுருக்கம்
14. பாகவதம்
15 பாரிகாதை
16. பெருஞ்சொல்லகராதி— [தொகுதி — 1,2,]
17. பெற்றோரைப்பற்றி!...
18. மச்சபுராணம்
19. மலையகராதி
20. முத்தொள்ளாயிரம்

நூற் பெயர்கள்- பட்டியம் : 3

1. A Dravidian Etymological Dictionary
   [T. Burrow and M.B. Emeneau]
2. A Latin Dictionary [Lewis and short]
3. An Etymological Dictionary of the English language
   [Rev. Walter W. Skeat]
4. An Sanskrit- English Dictionary [Sir. M. Monier Williams]
5. Greek- English Dictionary [Stuart Jones and Meckenzie]
6. Linguistic survey of India (Grierson)

7. Tamil- English Cyclopaedic Dictionary- Medicine Chemistry Botany and allied Sciences (T.V. Sambasivam) (Bi-lingual)
8. The compact edition of the Oxford English Dictionary
9. The practical Sanskrit- English Dictionary (V.S. Apte)

குறுக்கமும்- விளக்கமும்.

C. O. D. : The Concise Oxford Dictionaryof Current- English
Eng. : English
f : from
GK : Greek
ibid : ibidem
L : Latin
M. E : Middle English
P : Page
Pl : Plural
Skt : Sanskrit
T.A S. : Tamil Nadu Archeological Survey
W.I. : The wealth of India

அடியார் ; (அடியார்க்கு) அடியார்க்கு நல்லார்
அ.மொ.உ : (தமிழ்- சமற்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகளின் ஆராய்ச்சி நிறுவனத்தில்) அருளி ஆற்றிய மொழியியல் உரைகள்
அரும் : அரும்பதவுரையாசிரியர்
உ.வ : உலக வழக்கு
எ.டு : எடுத்துக்காட்டு
ஒ.நோ : ஒப்பு நோக்குக்கு
த.ப.அக : தமிழ்ப்பல்கலைக்கழகப் பெருஞ்சொல்லகராதி
நச் : நச்சினார்க்கினியர்

பக் : பக்கம்

ம.பெ.தொ. : மக்கட் பெயர்த் தொகுதி

மே.கா : மேலும் காண்க

யாழ். வழக்கு : யாழ்ப்பாண வழக்கு

வட். வழ : வட்டார வழக்கு

மொழிகளும் கிளை - மொழிகளும் - பட்டியம் : 5

1 Abor
2 Aka
3 Aka[ka]
4 A-Ko
5 AMok
6 Andro
7 Angāmi
8 Ang.Kū
9 Arabic
10 Arakanese
Bado (or) Bara
11 Areti dialect of pashai
12 Ashkun
13 Assamese
14 Badaga
16 Badrawāhi
17 Bagātī
18 Balti of Purik
19 Bashkarīk
20 Bengāli
21 Betta Kurula
22 Bhadrawāhi dialect of Pahārī
23 Botia
24 Bra
25 Brāhūi
26 Burmese
27 Burušaski
28 Bwa
29 Cantonese
30 Chairel
31 Chamba Lāhulī
32 Chāng
33 Chingpa
34 Dana
35 Danjonka
36 Danu
37 Deuri-Chutiya
38 Dimā-sā
39 Dōdō Sirājī
40 Dogri
41 Dūmi
42 En
43 English
44 Empēo
45 French
46 Gadba
47 Garō, Achik
48 Gawar-bati
49 Gondi
50 Gujarati
51 Gurung
52 Gyami
53 Gyarung
54 Gypsy-(or) Romani
55 Haurpa
56 Hē-Miao
57 Hindi
58 Hirōi-Lamgāng
59 Hloke-
60 Hlōtā
61 Inao
62 Irula
63 Italy

64 Jaunsārī dialect of pahārī
65 Juang
66 Kabui
67 Kacchī
68 Kachin
69 Kachur-i-sala dialect of Pashai
70 Kadu
71 Kāgātē
72 Kaikadi
73 Kalāsa
74 Kangoi
75 Kannada
76 Karenbyn
77 Karenni
78 Kariā
79 Kashmirī
80 Kāsī
81 Kātiyāwādi
82 Katuṛṛ
83 Kerwārī, Santālī
84 Kezāmā
85 Kiutalī
86 Kodagu
87 Kohistāni, Garwi
88 Koirāo
89 Kolāmi
90 Konda
91 Korava
92 Korean
93 Kōta
94 Kōwār [or] Chitrālī
95 Kui
96 Kului
97 Kurangali dialect of Pashai
98 Kūrku
99 Kurux (or) Kurak
100 Kuwi
101 Kwoireng
102 Ladaki of Spiti
103 Lahnda of Shahpur
104 Lālung
105 Language of Inscriptions of Asoka
106 Language of Kharosthī
107 Lanten-yao
108 Lāri
109 Laši [or] Lechī
110 Latin
111 Limbu
112 Lisu
113 Lolo
114 Lo-lo-po
115 Magarī
116 Maingoa [or] Ngachang
117 Maithili
118 Malayalam
119 Malto (or) Maler
120 Man
121 Manchātī (or) patnī
122 Manda
123 Mandarin
124 Man-lan tiēn
125 Mano
126 Man ta pan
127 Manyāk
128 Maram
129 Maru
130 Me-gyā
131 Meitei
132 Mikir
133 Miri
134 Mismi, Digāru
135 MongLwe
136 Mopwa, Bilichi
137 Mopwa, Dermuha
138 Mō-šōng
139 Mo-so
140 Mrū
141 Mundāri
142 Mandeālī
143 Munjāni (or) Mungi
144 Murām
145 Murmi
146 Naiki
147 Naikri
148 Namsangiā
149 Nepāli
150 Nēwāri
151 NiDoc
152 Nirlā i dialect of Pashaī
153 Nung
154 Old English
155 Old French
156 Old High German
157 Old Meitei
158 Old Norse

159 Old Saxon
160 Oriya
161 Pādarī
162 Pāhlvi
163 Palaung
164 Pali
165 Pangwāli
166 Panjābi
167 Pasai (Eastern)
168 Pengo
169 Pōguli
170 Prakrit
171 Pun-Samong
172 Pwo
173 Pwo-Bassein
174 Pwo-Maulmein
175 Pyen (or) Pyīn
176 Rai [or] Jimdar
177 Rāmbānī
178 Sakai
179 Sanskrit
180 Sarpa
181 Savara
182 Savi
183 Sema
184 Semang
185 Sga
186 Shina
187 Shumashti
188 Si-hia
189 Sindhi
190 Sindhi-vichōli
191 Singpo
192 Sinhalese
193 Sirmauri
194 Son
195 Sze [or] Atsi
196 Tākpa
197 Tāmi
198 Talaing
199 Tamlu
200 Tavoyan
201 Taungyo
202 Telugu
203 Tengsa
204 Tipurā
205 Toda
206 Tukumi
207 Turki
208 Wa
209 Wai-alā
210 Wār
211 Wegali dialect of Pashai
212 Wewaw
213 Yachumi
214 Yin (or) Riang
215 Zayein

❋❋❋

பின் உரைக்கு முன் உரைப்பு!...

''யா!..'' என்னும் ஒரு மூலஒலிபற்றிய மூல விளக்கம் மட்டும்—இந்நூலுள் இருநூற்று ஐம்பத்தொன்பது பக்கங்களில் பரவி ஒளிர்கின்றது! தமிழ்மொழியின் வரலாற்றிலேயே இந்நூலுக்கு இந்நிலையில் ஒரு தனிச்சிறப்பும் உண்டு! அது-என்ன எனில்-மூல வேரொலி ஒன்றை-மட்டுமே எடுத்துக்கொண்டு - அதற்கெனத் தனிநூல் ஒன்று-தமிழில் தோற்றப்பெறவில்லை என்பதே-அது!

பதின்மூன்று ஆண்டுகளுக்கும் முன்னீடாக - 1979 'சனவரியில்' அதாவது தி.பி. 2009—சுறவத்திங்களில்— பொங்கல் திருநாளன்று—அச்சில் வார்த்தெடுத்திருந்த என்னின் இரு புதிய நூல்கள் முதன் முதலாகச் சுடச்சுட வெளிவந்ததும்—அவ்விரண்டையும் பழவகைகள் சிலவற்றொடு சேர்த்தெடுத்துப் பெருமிதத்தொடு தூக்கிக்கொண்டு கலைஞர்-கருணாநிதி நகர் நோக்கி ஓர் உள்ளுணர்வுக் கொந்தளிப்புடனும் உவப்புச் செம்மாப்புடனும் ஓடினேன்! அவ்வினிய மாலைப் போதில்—வாடகை வீடொன்றில் வதிந்திருந்த என் "மொழியியல் தந்தை" பாவாணர் பெருமகனாரைக் காணத்தான்-அவ் விரைவு ஓட்டம்!... அச் செவ்வந்தி மாலைப்போதில் அவ் வீட்டுக்குள் அடியெடுத்து வைத்தவாறே, "ஐயாஅஅ..." என்றேன்! கரியநிறங் கவினிய அவ்வொளிஞாயிறு அகலித்த நன்னகையொடு ஓர் அறையின் உள்ளிருந்து வெளிவந்து உற்றுப் பார்த்தது! ஆம்!... அத் தமிழ்மலை என் முன் நின்று, ஏறெடுத்துப் பார்த்து நலங் கேட்டது!

நான் சென்னைச் சட்டக்கல்லூரியில் பயின்றுவந்த முழு மூவாண்டுக் கால இடைவெளிகளில் மிகப் பலமுறைகள் அக் கதிரோனைச் சந்தித்து உரையாடிய நிகழ்வுகள் பேராளமாயினும் அப் பொங்கல் நாள் சந்திப்பு—தனிச் சிறப்புடையது! அவரின் வேர்ச்சொல்லியல் முறைகளுக்கே சிறிய அளவான தாக்குதல் தொடுப்பு மேற்கொள்ளும் முறைமையுடனும் முற்போக்குடனும் யான் யாத்திருந்த ஏறத்தாழ எண்பது பக்கங்கள் அளவிலான "தகுதி" என்னும் பெயரிய குறுநூல் ஒன்றுடனும், "நிறைந்தேன்" என்னும் பாத்தொகை நூல் ஒன்றுடனும்—உள்ளம் வேறுறாத கொள்கை விடாப்பிடியொடு அவரின்முன் அக்கால் நின்றிருந்தேன்! எழுபத்தேழு அகவை ஏற்றின் முன் — இருபத்தொன்பது அகவை இளங்குருளை!... அவர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதத் தொடங்கிப் பத்தொன்பது ஆண்டுகள் கழிந்த பிற்பாடு—இத் தமிழமண்ணில் முளைத்துத் தளிர்த்த இளையவனாகிய நான் — அவ் அரிமாவையே சீண்டும் சிறப்பொடு ஆங்கு நின்றிருந்தேன்!

"ஏதாவது செய்தியா?..." என் துடிப்பு நிலையைக் கணித்த நெஞ்

சொடு நெடுவினா ஒன்றும் தொடுத்தார்! "ஆம்—ஐயா!— இரு புது நூல களை வெளியிட்டுள்ளேன். அவற்றை முதன்முதலாக உங்களிடம் தந்து வாழ்த்து வாங்குவதற்காக வந்திருக்கின்றேன்!'' உடனே, அவர்— "மகிழ்ச்சி! மகிழ்ச்சி!" — என்றார். அவரிடம் நூல்களைத் தந்தவாறே சொன்னேன்..." இத் ''தகுதி'' என்னும் நூலில் உங்களை மறுத்தே பல விடங்களில் எழுதியிருக்கின்றேன்— ஐயா!''

''அப்படியா! மிக்க மகிழ்ச்சி! நல்லது!''—என்றவாறே இருகை களிலும் அவ்விரு நூல்களையும் பிடித்தவாறே— அவற்றின் முகப்பு அட்டைப் பகுதிகளை மலர்ந்த முகத்துடனும் கூர்த்த நோக்குடனும் கவனித்த வாறே துடுமெனச் சிரித்தார்! சிரித்தவாறே சொன்னார்...... (இடக்கை யில் ''தகுதி'' இருந்தது! வலக்கையில் ''நிறைந்தேன்!'' இருந்தது!) ''தகுதி — நிறைந்தேன்!" ''தகுதி—நிறைந்தேன்!...'' என்றவாறு இரண்டு மூன்று முறைகள் உரத்த குரலில் கூறிவிட்டு— ''நீங்கள் "தகுதி நிறைந்தேன்!'' என்று என்னிடம் கூறுவது போலவே உள்ளது! அருமையான தலைப்புகள்! மிக்க மகிழ்ச்சி!'' என்றவர்,— ''நிறைந் தேன்''— நூலை அங்கிருந்த மிசை (மேஜை) மீது வைத்துவிட்டு—இருக் கையில் திடுமென விரைந்து அமர்ந்தவாறே— தகுதி நூலின் பக்கங்களை விரைவோட்டமாகப் புரட்டியவாறே நோக்கலானார்! பிறகு எதுபற்றி யும் பேசவில்லை! நேரம் சென்றுகொண்டிருந்தது! நானே விடை பெற் றேன்! அவரின் மனத்தைப் புண்படுத்திவிட்டோமா!— என்றவாறொரு நெருடல் நிலையிலேயே மாணவர் இல்ல அறைக்குட் புகுந்தேன். இரவு முழுக்கவும் திரும்பத் திருப்ப — அந் நூலின் அகப் பகுதிகளில் அகஞ் செலுத்தியவாறு — என்னையே நான் திறனாய்ந்து கொண்டிருந்தேன்! (முடிபு!... நான் சரியாகத்தான் இருக்கின்றேன்! சரியான போக்கிலேயே போகின்றேன்!...

இம் முடிபுகளுக்கெல்லாம் உள்ளீடாக ஓர் உண்மையுணர்வு என் னுள் அக்கால் ஆழ அகங்கொண்டிருந்ததை-இக்கால் நான்வெளிப்படுத்தி யாக வேண்டும்! 1972-இல் இருந்து, அவருடைய ஆய்வு முடிபுகளை ஆழ்ந்து உள்வாங்கிக் கொண்டிருந்த நேரங்களிலெல்லாம் என் துருதுரு வென விரையும் தமிழநெஞ்சுக்குள் ஓர் வல்லிய கவலையுணர்வானது— அவ்வக்கால் தொடர்ந்து கவ்விவரத் தொடங்கிவிட்டது! அது—இது! ''பாவாணர் ஐயா அவர்களின் சொல்லாராய்ச்சிகளின் போக்குகளை— வாய்பாடுகளை அப்படியே அறிவுலகத்தின் முன்வைத்து—''உலக முதன் மொழி தமிழ்தான்!'' என்பதை நிலைநாட்டிவிட இயலவே இயலாது!''

ஐம்பானாண்டுகள் காலத்திடையே இவ்வாய்வுக்களத்தில் உழன்று ழைத்து நின்ற அப் பெருமகனார் நமக்காக விளைவித்துத் தந்துள்ள விளைவுகள் — நம்மின் எம் (?) முன்னோடியரின் உழைப்பினைவிடவும் மீமேம்பெருமை மிக்கன என்பதை இமயவுச்சியேறிக் கூட இவ்வுலகெல்

லாம் கேட்கும்படியாக உரக்க உரைப்பேன்! அதே நேரத்தில்—அவர் உழைப்பு எவ்வளவுக்கெவ்வளவு மதித்து வணங்கிப் போற்றத் தக்கதோ —அவ்வளவுக்கவ்வளவு அவர் தந்துள்ள ஆய்வுப் போக்கு வரையறைகளிற் பெரும்பான்மையன புறக்கணிக்கத்தக்கன என்பதையும் அதே இமயவுச்சியேறி அதனினும் உரத்துக் கூவவும் செய்வேன்! ஏன் எனில் —எந்த நிலைக்கும் மேலானது நம் தமிழ்! தமிழ் வளர்ச்சிக்கென வருந்தியுழைத்த அல்லது உழைக்கும் எவரின் சிறு உழைப்பையுங்கூட ஏற்றிப் போற்றிப் பேணிநிற்கும் பெருநெஞ்சோடு— அந்நோக்கத்தோடு ஈடுபடுகையில் அதற்கெனவுழைக்கும் அறிவரின் திசைவுகளையும்—திரிபுகளையும்-பிழைகளையும் எதிர்த்து— (அல்லது) — புறக்கணித்து— (அல்லது) மறுத்துக் கருத்துரைக்கும் தென்பும் திராணியுமுள்ள தெண்ணெஞ்சமும் தமிழ்க்காப்புமானத்தன் `எவனுக்கும் அமைந்திருக்கவேண்டும் என்று கருதுபவன்—நான்

. ஐயா—பாவாணர் அவர்களின் வேரியற்கருத்துகளுக்குப் பன்னிலைக் கோணங்களில் மாறுகொண்ட கருத்துப் போக்குடையவனான நான்---அப் பெருமகனாராலேயே எவ்வாறு கருதப் பெற்றேன் என்பதற்கென சிறு எடுத்துக்காட்டு ஒன்றையும்—என் மீது தவறுதலாக மாறு கருத்துகள் கொண்டிருக்கும் பாவாண்ர் அன்பர்களிற் சிலவர் மட்டும் அறிதற்பொருட்டாக இவ்விடத்தில் குறிக்க விரும்புகின்றேன்!என்னை-அவரின் கருத்துகளுக்குஎதிரனவாயிருந்தஎன்னின்பல்வேறுகருத்துமாறுபாடுக்ளை மிகப்பலகால் பாவாணர் அவர்கள் பெரிதும் மதித்தார்! என்னைக் கண்டவுடனேயே மலர்ந்தார்! என்னின் சில முடிபுக் கருத்துகளை அழுத்தமாக வலியுறுத்தி அவர்முன் வைக்கையில்— அவற்றை வாய் திறவாமலேயே அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்! நேரிடையாக— என்னை எந்நிலையிலும் ஊக்கப்படுத்தாமலேயே இருந்துவந்த அம் மொழிக்கதிரவன் —நான் மிக வலிந்து வேண்டி அழைத்தும் எம் திருமணத்திற்கு வருகை தாராமல் "வாழ்த்து மடல்"மட்டும் அனுப்பி வைத்திருந்தார்! பாவலரேறு —ஐயா அவர்களுடைய முகவரிக்கும்—என் முகவரிக்குமாக அவ் வாழ்த்து மடல் வந்து சேர்ந்தது! அது—இது!,

''தெருளுறு கல்வி யோடு திருவருள் பாங்காய் நிற்ப
அருளிதேன் மொழியர் ஒன்றி அன்பினா லின்பம் பொங்கிப்
பொருளெனத் தமிழின் தூய்மை போற்றியீ ரறிஞர்ப் பெற்றே
உருளுறும் உலக றத்தின் உரம்பெற நீடு வாழி!'' (24.1.80)

மணம்முடிந்து—புதுவைக்கு வந்து, மீண்டும் உடன் சென்னைக்குத் திரும்பிய நானும் என் துணைவியாரும்—பாவாணர் ஐயா அவர்களைப் பார்த்துவரச் சென்றோம்! அவரின் அகம் சென்றடைந்ததும்—அவர்க்கு முகம் முழுவதும் உகப்பு! பெரும் பூரிப்பு! நாங்கள் இருவரும் நெடுஞ்சாண்கிடைகளாக அவரின் காலடிகளின் முன்னர்க் கிடந்தோம்! என்னைத் தூக்கியவாறே அவர் சொன்னார்!... "என்னின் வாழ்த்துமடல்

கிடைத்ததா? ''வந்து சேர்ந்ததையா!'' என்றேன். ''அதனுள் ஓர் உட்குறிப்பு இருந்ததைக் கண்டீர்களா?—என்றார்! எதுவெனத் தெரியாமல் திகைத்தவாறிருந்தேன்! அவரே — சொல்லத் தொடங்கினார்! ''இரண்டு அறிஞர்களைப் பெற்று நீடு வாழுங்கள்!'' என்று எழுதியிருந்தேனே! —அது!'' [என்றார்.] எனக்கு மகிழ்ச்சி தலைக்கேறி நின்றது! அவர் மேலுஞ் சொன்னார். ''உங்களைத் தவிர— வேறெவர்க்கும் இப்படி எழுத என் கை வாராது! உங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் அறிஞர்களாகவே பிறப்பர்!...'' உடலெல்லாம் சிலிர்த்தது! உள்ளமெல்லாம் குளிர்ந்து உறைந்தது! அவர் என் மீது கொண்டிருந்த அகப்பற்றின் ஆழ அகலங்களையும்—என் உழைப்பின் மீதான அவரின் கணிப்புகளையும் அக்கால் என்னால் நன்கு உணர முடிந்தது! (அவரின் வாழ்த்துநிலை அடிப்படையை வணங்கியே— என் பிள்ளைகள் இருவர்க்கும் முறையே ''அறிவன்'' என்றும், ''தெள்ளியன்'' என்றும் கூட பெயரிட்டு நிறுத்தினேன்!

என்னின் எந்த வேரியற் சிந்தனையிலும்— அப்பெருமகனாரின் சிந்தனையோட்டங்கள் எப்பொழுதும் ஊடாடுகின்றன! முடிபுகளை மட்டும் நானே தெளிகின்றேன்! அவரால் யாம் பெற்ற பயன்களில் பெரும் பயன் யாது எனில்—ஒரு சொல்லை எடுத்து ஆயத் தொடங்குகையில்—அதனை என்னென்ன கோணங்களிலெல்லாம் பார்க்க வேண்டுமோ—அத்துணைக் கோணங்களுக்குரிய விளக்கமுறைகளையும் வெவ்வேறிடங்களில் அவர் பரவலாக பதிவாக்கியிருக்கின்றனமயே, அது!

''யா!...''-என்னும் இந்நூல்-ஓர் உரைப்பொழிவு விளக்கநூல்! 1991-சூலைத்திங்கள் 13-ஆம் நாள் மாலை 6-30 மணியளவில்-கதிர்காமம் "அறிவகம்" என்னும் செந்தமிழ்திரு. மா. இளம்வழுதி அவர்களின் இல்லமாடியில் கொள்கையுறவோரும் - அறிவோரும் சூழ்ந்து திரண்டிருந்த திறந்தவெளியில்-எங்களின் ''இனமானத்தந்தை'' புதுவை மூர்த்தி ஐயா அவர்களின் தலைமையின் கீழ்-பகுத்தறிவுக்கருத்தாளர் மன்றச் சார்பில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த ஆய்வுக்கூட்டத்தில் ஏறத்தாழ மூன்று மணிநேர அளவுக்கு யான் விளக்கிய உரைப்பொழிவு, இது! மின் ஒலிவாங்கியும் பரப்பியுமான ஒரு சிறிய கையடக்கமான கருவியை என் பையகத்துள் போட்டுக்கொண்டு நான் உரையாற்றியமையால்-அக்கம் பக்கத் தெருக்களிலிருந்தும்-சுற்றுச் சுழற்பகுதிகளிலிருந்தும் பல குடும்பத்தினரும் இவ்வுரைப் பொழிவைத் தத்தம் வீட்டு வானொலிகளில் ஆங்காங்கிருந்தே கேட்டுக்கொண்டிருந்தனர் என என்னிடம் பலர் கூறி மகிழ்ந்தனர்!

அப்பொழுது ஆற்றிய உரையைக்-கருத்துத் துலக்கத்திற்கெனச் சற்றே விரிவுபடுத்திச் சான்றுகள் பிணைத்து எழுதலானேன்! நேரமும் பொருளும் நெருக்குறவே - இறுதியில் பெரும்பகுதியையே சுருக்க வேண்டியவனானேன்! ஒருவாறு நூல் முடிவெய்தியுள்ளது!

‘‘ஒரு சொல்லுக்கே ஒரு நூலா?-‘‘(தகுதி!)’’என்றவாறு ஏகடியமா -கவும் ஏளனமாகவும் பத்தாண்டுகளுக்கு முன்பே பகடியாடிய நம்மவர் பல்லோர்-இன்று மேலும் மென்று சொல்லாடிக் கிடப்பதற்குரிய வகையில் ‘‘ஓர் ஒலிக்கே - ஒரு நூல்! ‘என்றவாறு திடனொடு வடிவமைந்து கிடக்கின்றது!’

இந்நூல் மொழியியலில் ஒரு புதிய எண்ணப் போக்கைக் கட்டாயம் விளைத்தே தீரும்! இம்முறைக் கொள்கைப்போக்கில் மேலும் பல நூல்கள் தொடர்ந்து வடிவெடுக்கக் காத்திருக்கின்றன!

கருமைக்கருத்து - பொருந்துதற்கருத்து-வினாக்கருத்து- தன்மைச் சுட்டுக்கருத்து என்றவாறாக நான்கு கருத்துப்பிரிவுகளில் - இவ்“யா” என்னும் மூலமானது எவ்வெவ்வாறெல்லாம் விரிந்து-பரவி-விளைந்து நிலைத்துப் பயன்பாட்டில் பதிவுற்றிருக்கின்றது என்பதை இந்நூல் விளக்குகின்றது! அறிவுலகம் ஆழ்ந்து சிந்தித்துப் பயன் கொள்ளப் பணிவன்போடு வேண்டுகின்றேன்!

இந்நூல் இங்ஙனமாக இவ்வுருப்பெற—உழைப்பெடுத்து உயர்ந்து நிற்கும் எம் இனிய கொள்கையுறவோர்களான — ”செவ்வியன் ஐயா” மாமா-தாமரை, சீனு-தமிழ்மணி, க. குணத்தொகையன், முருகன்பன், பச்சையப்பன், இளம்வழுதி, அருளுருவோன் (கருணாமூர்த்தி), விழுப்பரையன் ஐயா, நக்கீரன் ஐயா, கணியன் ஐயா- ஆகியோரை எதிர்காலத் தமிழகம் நன்னினைவொடும் நன்றியுணர்வொடும் போற றியே தீரவேண்டும்!

இந்நூலின் தோற்றச் சிறப்புக்கெனத் துணைநின்ற இளவல் தமிழூர்- சீனு-மீனத்தன்- என்னும் பற்குணனுக்கு என்னின் இனிய நன்றி களும் வாழ்த்துகளும் எப்போதும் போல — இப்போதும் உரியன!

‘‘தமிழுணர்வுச் செம்மல்’’ — அர. சந்திரசேகரனார், அன்புத் தம்பி. சுப்பிரமணியன், தொண்டுள்ளஞ் செழித்த இனியன் — தமிழூர். மு. பாலு ஆகிய மூவருக்குங்கூட — அவர்கள் நேரத்துக்கு வந்து சுமந்து செய்த உழைப்புக்கென நன்றி செலுத்துதற்கு நான் கட்டாயம் கடமைப் பட்டவனாகின்றேன்!

தமிழையே எண்ணிஅத்தமிழின் சொந்தக்காரர்களையே எண்ணி தமிழ்மண்ணையே எண்ணி-அவற்றின் - அன்னோரின் மெய்ந்நலம் நோக்கி உழைக்கப் புறப்பட்டுவிட்ட என் செலவில் இந்நூலும் ஒரு தொலைவுக்கல்!

தி.பி: 2023 மீனம் 21- ஆம்நாள்
3-4-1992

அன்பு,

ப. அருளி

யா!...

யா : (கருமைக்கருத்து மூலவேர்)

கருமை என்னும் நிறக்கருத்து அடிப்படையில்- மர வகையினுள் ஒன்று, "யா"- என்றவாறே பண்டைய நம் தமிழ்மாந்தர்களால் சுட்டப் பெற்றது. ஈராயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னீடாகத்- தமிழகம் முழுமைக்கும் மிகப் பரவலாகவும் தெளிவாகவும் இனந்தெரிந்திருந்த இம் மரம்-இன்றைக்கு மிகப்பெரிய நிலத்திணை அறிஞர்களாலேயே எம் மரம் என்று கண்டறியமுடியவில்லை என்றவாறு கலக்கத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும் மறைதிறத்ததாகும்!

[காண்க : "இக் குறிப்புகளைக் கொண்டு "யா" என்பது ஒரு பாலைநில மரமென்றறிவதல்லது, அதன் (நிலத்திணை-) தாவரப் பெயரைக் கண்டு கூற இயலவில்லை!" "தாவரப்பெயர்: . தெரிய வில்லை." நூல்: சங்க இலக்கியத் தாவரங்கள். ஆசிரியர்: அறிஞர். கு. சீநிவாசன். பக்கங்கள்: 771-772.]

கரிய அடிப்பகுதியை (தாள் பகுதியை) உடைய மரம் என்பதாலேயே- கருமைக் கருத்து மூலச் சொல்லான "யா" என்பதினின்றே, இது பெயர்பெற்றுள்ளது.

(1) " நெருப்பவிர் கனலி யுருப்புச் சினந் தணியக்
கருங்கால் யாத்து வரிநிழ லிரீஇ" (ஐங்: 388:1-2)

(2) " மனையுறை கோழி அணல்தாழ்பு அன்ன
கவையொண் தளிர கருங்கால் யாஅத்து"
(அகம் : 187:14-15)

[உரை: வீட்டின்கண் உறைகின்ற சேவற்கோழியின் தாடி தொங்குவது போன்ற கவைத்த ஒளிபொருந்திய தளிரையுடைய கரிய காலையுடைய யாஅ மரங்களையுடைய......]

யா மரத்தின் தாள் பகுதியானது கரிய வடிவமானது கண்டு மக்கள் வழங்கிய "கருந்தாளிமரம்" என்னும் சொற்பயில்வைச் சாம்பசிவம் அகராதி சாற்றுவதும் இவ்விடத்தில் கூர்ந்து கவனிக்கத் தக்கதாகும்.

தொல்காப்பியத்துள் இம்மரம் பற்றிய குறிப்புகளாவன:

(1) "யாமரக் கிளவியும்.........மெல்லெழுத்து மிகுமே"
(தொல். எழுத்.உயிர்ம: 27:1-2)

(யா + அம் + கோடு > யாஅங்கோடு)

(2) "வல்லெழுத்து மிகினும் மானமில்லை"
(தொல். எழுத். உயிர்ம: 28:1)

(யாஅ + கோடு > யாஅக்கோடு)

"யா"- என்பதுவே இம்மரத்தின் பெயராக இருந்தது. "யா" என்னும் வினாக்கிளவிக்கும் இம்மரக்கிளவிக்கும் உள்ள ஒலியொப்பு நிலையால் ஏற்பட்ட மயக்கம் போக்கும் முகமாக, "யாஅ" என்றவாறாகவும், "யாஅம்" என்றவாறாகவும் இருவேறு அளபெடுத்த வடிவுகளையும் அக்காலப் புலவர்பெருமக்கள் தங்கள் தங்கள் இலக்கியவாக்கங்களிடையே ஆள்வாராயினர்.

யாஅ :

(1) "யாஅ ஒண்டளிர்" (அகம் : 331:1)

(2) "யாஅ வரிநிழல்" (குறுந் : 232:5)

(3) "நனந்தலை யாஅத் தந்தளிர்ப் பெருஞ்சினை"
(அகம் : 343:10)

யா :

கருத்துச் சூழலில்,- மயக்கம் ஏற்பட வழியில்லாவிடங்களில், "யா" என்னும் மூலவடிவம் இயல்பிலமைந்திருந்தவாறே படிவெய்தியது.

(1) "உம்பல் அகைத்த ஒள்முறி யாவும்" (மலை : 429)
(2) "யாவுயர்ந்து ஓமைநீடிய கானிடை யத்தம்" (நற்:198:1-2)
(3) "யாவுயர் நனந்தலை" (அகம். 65:13)

யா மரம்- நெடிதுயர்ந்து வளரும் மரமாகும்.

(1) "நிலையுயர் யாஅத்து" (அகம்: 31:5), (குறுந் :307:4-6)
(2) "நெடுநிலை யாஅ மொற்றி" (அகம்: 59: 8-9)
(3) "செந்நிலை யாஅத்து" (அகம் : 33:3)
(4) "நீடுநிலை யாஅத்து" (அகம்: 263:8)

தாள்நெடுமை :

நெடியமரமாக நிற்கும் இதன் தாள்பகுதி- நெடுமையும் சுற்றுப் பருமையும் கொண்டதாகும்.

(1) "நெடுந்தாளி யாத்து" (அகம் : 51:2)
(உரை: நீண்ட அடியையுடைய யாமரத்தின்...)

(2) "குறும்பொறை எழுந்த நெடுந்தாள் யாஅத்து"
(அகம்: 193:7)

ஏணியைச் சேர்த்தி ஏறவேண்டிய அளவுக்குத் தாள்பகுதியாகிய அடிமரம் நெடிய உயரமுடையதாகும்.

(1) (வழிச்செல்வோர் ஏறி வழியைக் காணப் பயன்படும் மரம்)
"கள்வர் பகைமிகு கவலைச் சென்னெறி காண்மார்
மிசைமரஞ் சேர்த்திய கவைமுறி யாஅத்து"
(அகம் : 257:13-14)

[உரை: கள்வராகிய பகைமிகுதற்கிடனான கவர்த்த நடை வழியை அறிதற்பொருட்டு ஆறுசெல்வோர் ஏணிமரத்தைச் சார்த்தி வைக்கப்பட்ட கவைத்த தளிர்களையுடைய யா மரத்தினது...)

(2) (வழிக்கண்வரும் வம்பலரைக்காண எயினர் ஏறிப்பார்க்கப் பயன்படும் மரம்)

"வேறுபல் கவலைய வெருவரு வியன்காட்டு
ஆறுசெல் வம்பலர் வருதிறம் காண்மார்
வில்வல் ஆடவர் மேலான் ஒற்றி
நீடுநிலை யாஅத்துக் கோடுகொள் அருஞ்சுரம்"
(அகம் : 263:5–8)

[உரை : வெவ்வேறு திசை நோக்கிய பலவாகிய கிளைவழிகளை உடைய அச்சம் வருதற்கியன்ற அகன்ற காட்டின்கண் வழியைப் போகின்ற புதியவர் வருகின்ற தன்மையைக் காணும்பொருட்டு, வில் தொழிலில் வல்லவரான எயினர் நீண்ட நிலைமையை உடைய யாஅ மரத்தின் உயரே மறைந்து கிளையில் ஏறி இருக்கின்ற கடத்தற்கரிய பாலைவழியிலே...)

யாமரம் ஓர் இலையுதிர் நிலையுடைய மரம்.

(1) "இலை இல வோங்கிய நிலையுயர் யாஅத்து"
(அகம் : 31:5)

[உரை : இலைகள் இலவாகி மிக ஓங்கிய நிலையையுடைய யா மரத்தின்...)

(2) "கவைமுறி இழந்த செந்நிலை யாஅத்து" (அகம் : 33:3)

[உரை : கவைத் தளிர்களை இழந்த- செங்குத்தான நிலையினையுடைய யாமரத்தில்...)

யாமரம் ஓர் இலையுதிர் நிலையுடைய மரமாதலால்- அதன்மேல் விழும் கதிரவ வெளிச்சத்தின் வழி- அம்மரத்தின் அடிப்புறப் பரப்பிடம் வரி வரியான நிழல் அமைவுகள் உடையதாய் இருக்கும்.

(1) "ஒல்குநிலை யாஅத்து ஓங்குசினை பயந்த
அல்குறு வரிநிழல்..." (அகம் : 287:11)

(2) "கருங்கால் யாத்து வரிநிழ லிரீஇ" (ஐங் : 388:2)

(3) "யாஅ வரிநிழல்" (குறுந் : 232:4–5)

யாமரம் ஒளிபொருந்திய தளிர்களையுடையது. அத் தளிர்கள் யாவும் கவைப்புடையதாய்- இரட்டைப்பிரிவு உடையதாய் அமைந்திருக்கும்.

(1) "கவைமுறி இழந்த செந்நிலை யாஅத்து" (அகம் : 33:3)
(2) "கவையொண் தளிர கருங்கால் யாஅத்து" (அகம்:187:15)

யாமரத்தின் தாள்பகுதி நார்ச்செறிவு உடையது.
"யாஅத்து நார்அரை மருங்கின்" (அகம்:257: 14-15)

(1) யாமரத்தின் தாள்பகுதி, உரித்தற்குரியபடி அமைந்த பட்டைகளையுடையது. (2) இப்பட்டைகளை யானை உரித்து மிக விரும்பியுண்ணும். (3) தாள்பகுதி பொரி- பொரியாய் அமைந்த கரட்டுமுரட்டுத் தோற்றத்தையுடையது.

(1) "அத்த யாஅத்துப் பொரியரை முழுமுதல்" (குறுந்: 255:1-2)

(2) "பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்" (குறுந்: 37:2-3)

(3) "யானைதன், கொன்மருப் பொடியக் குத்திச்
சினஞ் சிறந் தின்னாவேனி லின்றுணை யார
முளிசினை யாஅத்துப் பொளி பிளந் தூட்ட"
(அகம் : 335:47)

[பொளி = பட்டை. உரிப்பது காரணமாக-அதாவது பொளிக்கப் பெறுவது காரணமாகப் பொளி என்னப்பெற்றது. ஆகுபெயர்.]

(4) "......................கவைமுறி யாஅத்து
நாரரை மருங்கின் நீர்வரப் பொளித்துக்
களிறு சுவைத்திட்ட கோதுடைத் ததரல்"
(அகம்: 254: 14-16)

[உரை: நாரமைந்த அடிப்பகுதியில் நீர்கசியும்படி உரித்துக் களிற்றியானைகள் மென்று சுவைத்துப் போகட்ட சக்கைகள் ஆகிய சுள்ளிகள்......]

யா மரத்தின் பட்டையை உரித்தால் நீர்கசியும்
"நாரரை மருங்கின் நீர்வரப் பொளித்து" (அகம்: 254 15)

"யா"—என்னும் இம் மரப்பெயர்க்குப் பொருள் எழுதப் புகுந்த அறிஞர்பெருமக்கள் அனைவரும்- இம்மரத்தின் இன்றைய பெயர்மாறி நின்றிருக்கும் வழக்கைச் சற்றும் உற்றுப்பாராமலேயே- தமக்கு விளங்காமையால் நமக்கும் விளங்கச் சுட்டாமலேயே— "யா" = ஒருவகை மரம் என்றவாறு மட்டும் பொத்தாம்பொதுவாகக் குறிப்பிட்டுப் போவாராயினர்!

காண்க :

(1) Tamil- English cyclopaedic dictionary

Medicine Chemistry Botany and allied sciences
[T.V. Sambasivam]
யா = ஒருமரவகை. a kind of tree
சென்னைப் பல்கலைத் தமிழ்ப் பேரகராதி
யா = மரவகை. a tree [பக்: 3396]

(3) மரஇனப் பெயர்த்தொகுதி -(இரண்டாம் தொகுதி)
யா : a kind of tree, மரவகை (பக்: 221)

"யா"- மரம் இன்றையவழக்கில் "ஆச்சா" என வழங்கப்பெறுகின்றது. "ஆமணக்கு விதைத்தால் ஆச்சா முளைக்குமா?" -என்பது நமக்கு நன்கு பழக்கமான நாட்டுப்புறப் பழமொழி!

"யா" -என்னும் ஒலிப்பு,- காலப்போக்கில் "ஆ" என்றவாறே ஒலிப்புறலாயிற்று. இதற்கு மொழியியலில் பேராளமான சான்றுகள் உள.

["யா?" -என்னும் வினாக்கிளவி-அஃதாவது வினாமொழி, யா > ஆ என்றவாறு மாறிச் சொல்லின் ஈற்றில் வந்து கேள்வியெழும்பி நிற்கும் வினா இடைச்சொல்லாக [an interrogative term] நிற்கும் உண்மையையும் இவ்விடத்திற் கருதிப்பார்க்க வேண்டும்.

சான்றுகள் : வந்தான் + ஆ > வந்தானா?
சென்றான் + ஆ > சென்றானா?
கேட்டான் + ஆ > கேட்டானா?]

"யா" -என்னும் இம் மரத்தின் பெயர் ஆளப்பெற்றுள்ள மலைபடுகடாத்து வரிகளிடையில் வரும் "யாவும்" என்னும் சொல்லுக்கு "யாம் பூவும்"- (அதாவது, யா மரத்தின் பூவும்...) என்று நச்சினார்க்கினியர் உரை வரைந்துள்ளதாகப் பதிப்பித்துள்ளமைக்கு,— உ.வே. சாமிநாதர் ஐயா அவர்கள் அடிக்குறிப்பாகத் தந்துள்ள பாடவேறுபாடு ''ஆச்சாவிற் பூவும்'' என்றவாறு குறிக்கப் பெற்றுள்ளது. இவ்வடிக் குறிப்பே, —''யாமரம்" இன்றைக்கு '' ஆச்சா '' என்றவாறு வழங்கிவரப் பெறுகின்றது என்னும் உண்மையைக் கண்டுணர வழிவகுத்துள்ளது.
[காண்க: பத்துப்பாட்டு. மலைபடு. நச். பக்: 648]

யா > ஆ = யா மரம்

[1] ''ஆவும் ஆரமும் ஓங்கின எங்கணும்''
[சிலம்பு.மதுரைக்.வேட்டுவவரி. உரைப்பாட்டு மடை :1:2]

[உரை : ஆச்சாவும் சந்தனமும் உயர்ந்து வளர்ந்தன எவ்
விடத்தும்...]

[2] ''வேங்கையும் ஆவும் விளவும் வேயும்'' [பெருங்: 2:12:13]

[3] ''...........ஆவும் ஆச்சா'' [பிங்கலம்: 2669]

[4] ''தே யாழ் ஆ ஆம்'' [சிவஞா. காஞ்சிப்பு. சுரக: 21]

யாஅம்>யா மரம்

(1) ''மென்சினை யாஅம் பொளிக்கும்'' (குறுந்: 37:2-3)

(2) ''நெடுநிலை யாஅம்'' [அகம்: 659: 8-9]

யாஅம்>ஆஅம் = யா மரம் [ஆச்சாமரம்]

''ஆஅம் தளிர்க்கும் இடைச்சென்றான்'' [கலித்: 143:30]
''யா'' என்னும் செப்பவடிவத்தினின்று தோன்றிய-பிற வழக்கு வடிவங்களாக ''ஆய்'' என்பதனையும், ''ஆவு'' என்பதனையும் ''சாம்பசிவம் அகராதி'' சுட்டும்.

யா>ஆ>ஆ+சு>ஆசு

ஆசு+ஆ>ஆசா = யா மரம்

யாமரத்தைக் குறித்து வழங்கிய பண்டைய இத் தமிழ்வடிவங்கள் இன்றும் கன்னடமொழியில் ''ஆசு'', ''ஆச'', ''ஆர்ச'' என்றவாறான வடிவங்களில் ஒலிப்புறுகின்றன.

ஆசா> ஆச்சா. [வலித்தல்திரிபு]
ஆச்சா = ஆச்சா மரம், பண்டைய யா மரம்
[Hard Wickia binata]

சேலம் மாவட்டத்தில் ''கராச்சி''என்று சுட்டப்பெறும் ''ஆச்சா'', ''கரு'' என்னும் அடையடுத்தலால் உருவான ''காராச்சா'' என்பதன் திரிபாகும்.

கரு (கார்)+ஆச்சா>காராச்சா = ஆச்சா [சாம்ப.அக.]
காராச்சா = ஆசா [W.I.]

வேறு சில பகுதிகளில் "காட்டடகு" என்றவாறும் இதனை வழங்குகின்றனர். 40 மாத்திரி உயரத்தையும், 5 மாத்திரி அகலத்தையும் அடையக்கூடிய அழகான இலையுதிர்மரம் என்றவாறு புதலியல்[Botany] இதனைக் குறிப்பிடுகின்றது.

வணிக நடைமுறையில் இன்று ''அஞ்சன்'' [anjan] என்று குறிப் பிடப் பெறுகின்றது.

ஒ. நோ: அஞ்சனம் < (skt) ānjana அஞ்சனம் = (1) மை, கண்ணுக்கிடும் மை (2) இருள் [வின்சிலோ] (3) கருநிறம் (பிங்கலம்)

கருமைக்கருத்து அடிப்படையில் "யா" என்பதுவும், ''ஆச்சா'' என்னும் திரிபுப் பெயரும் பெயர்பெற்றமை போன்றே- கருமைக்கருத்துச் சொல்லாகிய ''அஞ்சன'' என்பதினின்று சமற்கிருதத்தில் ''யா'' மரத் தைச் சுட்டும் பெயரும் உளவறிந்து உருவாக்கப்பெற்றுள்ளது.

''சூரல் அஞ்சனம் மந்தரை'' (மச்சபுராணம்- அத்திரி-5)

'' மய் '' என்னும் பிறிதொரு கருமைக்கருத்து மூலத்தினின்று தோன்றிய "மாய்" என்ற சொல்கொண்டும் ஆச்சாமரம் சுட்டப் பெறு வதையும் இவ்விடத்திற் கருத்திற் கொள்ளவேண்டும்.

மய் > மாய் = ஆச்சாமரம் [மலையகராதி]

இதற்குரிய வேறு புடைவடிவங்களாவன:

மாய் + கை > மாய்கை (சாம்ப. அக)

மய் > மை + ஆளி > மையாளி [சாம்ப. அக]

மையாளி மரம் [சாம்ப. அக]

யா > யாஅல் > யால் > யால் + அம் > யாலம்

யாலம் என்பது ஆச்சாமரத்தைச் சுட்டும் வேறொரு- ஒரு பொருட் சொல்லே என்னும் குறிப்பை அகராதிநிகண்டின்வழி உன்னித்து உண்மை காண்கின்றோம்.

யாலம் > (சமற்கிருதம்)sāla > (English) sal = sal tree

யா : (கருமைக்கருத்து மூலவேர்)

யானை :

பெருமைக்கும் கருமைக்கும் இலக்கணவுருத்தோற்றத்தையுடைய இவ்விலங்கு- தமிழ் மண்ணுக்குரிய மரபுச் சொத்துகளுள் ஒன்று.

இவ் விலங்குக்கு எனத் தமிழர்கள் இட்ட பெயர்கள்- அன்றைய தமிழகத்தில் இதனின் அளவுப் பெருக்க நிலையையும்- இவ் விலங்கொடு அவர்களுக்கிருந்த வாழ்வியல்சார் தொடர்பையும் நன்கு துலக்கிக் காட்டு வனவாகும்.

கழக இலக்கியங்களில் [சங்க இலக்கியங்களில்] ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் இம் மா மேய்கின்றது! அக் காட்சிகளெல்லாம் கண் கொள்ளா அழகுகள் வாய்ந்தன! ஒரு கைப்பிடிக்குள் அடங்கக் கூடிய அளவில் மட்டும் எஞ்சிநின்று நமக்குக் கிடைத்துள்ளனவாகிய கழக இலக்கியங்களில், ''யானை'' என்னும் சொல்லாட்சியே நானூறு இடங்களுக்கும் மேலாகப் பதிவெய்தியுள்ளது.

யானைக்குரிய பெயர்களும்- அவற்றிற்குரிய காரணங்களும்:

துளையுடைமை :

1. தும்பி : துளையமைந்த கையினை உடைய விலங்கு

2. புழைக்கை : புழையமைந்த- அதாவது, துளை பொருந்திய கையினை உடைய விலங்கு

3. பூட்கை : புழைக்கையினை உடைய விலங்கு
புழை+கை>பூழ்க்கை>பூட்கை
[கொள்கை பூணுகையாகிய பூண்கை என்பதன் திரிபாக வரும் ''பூட்கை'' என்பது,- இதனினும் வேறுபுடையில் மலர்ந்த வேறொரு சொல்! திரிபின் காரணமாக இவ்வண்ணம் ஒரு வடிவு கொள்ளுவது- போலி வகையதாகும்.]

கை போன்ற உறுப்பமைவு :

4. கைம்மா : கையினை உடைய விலங்கு

5. கைம்மலை: கையினையும்- மலை போன்ற தோற்றத்தையும் உடைய விலங்கு

தொங்குகை :

6. குஞ்சரம் : தொங்கும் கையினையுடைய விலங்கு
குஞ்சுதல் = தொங்குதல்
குஞ்சி = தொங்கும் ஆண்குறி
குஞ்சு + அரம் > குஞ்சரம் [''அரம்-ஓர் ஈறு]
''குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை''
[தொல். பொருள். மரபி: 19]

7. தூங்கல் : தும்பிக்கை தொங்குதலையுடைய விலங்கு
தூங்குதல் = தொங்குதல்,
தூங்கு > தூக்கு = தொங்குகை
[ஒ.நோ: தூக்கு + அணம் > தூக்கணம்
தூக்கணம் + குருவி > தூக்கணங்குருவி]

8. நால்வாய் : தொங்கும் வாய்போன்ற- தும்பிக்கையை உடைய விலங்கு
[நாலுதல் = தொங்குதல்]

பருத்த அடியினை உடமை:

9. கறையடி : உரல் போன்ற கால்களை உடைய விலங்கு
''கறையடி யானை'' [பெரும்பாண்: 351]
[நச். உரை : உரல் போன்ற அடியினையுடைய யானை...]
[குறுதல் = குத்துதல். "தினைகுறு மகளிர்"
[மலைபடு: 342]
குறு + ஐ > குறை = தவசங் குத்துதற்குரிய உரல்.
குறை > கறை = உரல்]

10. பொங்கடி : பருத்து வீங்கிய தோற்றத்தையுடைய- அடியினையுடைய விலங்கு

முகத்திற் புள்ளிகளையுடைமை:

11. புகர்முகம் : புள்ளிகள் பொருந்திய முகத்தினையுடைய விலங்கு
''பொறிவரிப் புகர்முகந் தாக்கிய வயமான்''
[பெரும்பாண்: 448]

மதநீர் ஒழுக்குடைமை :

12. வழுவை : மதநீர் வழுவுதலையுடைய (ஒழுகுதலையுடைய) விலங்கு

வண்டுகள் மொய்ப்புடைமை :

13. மொய் : வண்டுகள் மொய்த்தலையுடைய விலங்கு

வண்டுகளைக் கடிந்தோட்டுதலுடைமை :

14. கடிவை : [வண்டு] ஞிமிறு முதலியவற்றைக் கடிந்து ஓட்டுவதற்கு எப்போதும் காதுகளை அசைவித்துக் கொண்டிருக்கும் விலங்கு
[கடிதல் = விலக்குதல்
''கொடிது கடிந்து கோறிருத்தி'' [புறம்: 17:5]
கடி = நீக்கம் [பிங்கலம்]
கடிவை = யானை [திவாகரம்]

மந்தமுடைமை :

15. மந்தமா : சுறுசுறுப்பின்றி- பெரும்பாலும் அமைதியாக இயங்கும் விலங்கு

மதமுடைமை :

16. களிறு : மதத்தையுடைய விலங்கு
[கள் > கள் + இர் > களிர் > களிரு > களிறு]
''களிறு மதயானை'' [பிங்கலம் : 2413]

17. மதக்கயம்: மதத்தையுடைய கரியநிற விலங்கு

18. மதமா : மதத்தையுடைய விலங்கு

மருட்சி நோக்குடைமை :

19. மருண்மா : மருண்டு நோக்கும் நோக்கத்தினையுடைய விலங்கு

பெருந்தோற்றமுடைமை:

20. பகடு : பெரிய உருத் தோற்றத்தையுடைய விலங்கு
[பகம் = பெருமை]

21. எறும்பி : பெரு விலங்கு
[இறு > இறும்பு > இறும்பு+இ > இறும்பி > எறும்பி]

22. பெருமா : பெரிய விலங்கு

23. பெருவிலங்கு: பெருந் தோற்றத்தையுடைய விலங்கு
["பெண்டாட்டி பெருவிலங்கு (யானை), பிள்ளையிரண்டும் சுள்ளாணி!'' என்பதொரு பழமொழி.]

உயரமுடைமை :

24. உம்பல் : உயரமான தோற்றத்தையுடைய விலங்கு

25. உவா : உயரமுடைய விலங்கு

வலிமையுடைமை :

26. வல்விலங்கு: வலிமை பொருந்திய விலங்கு

27. வயமா : வலிமை மிக்க விலங்கு
[''வய வலியாகும்'' தொல். சொல். உரி: 70]

கட்டுப் பேறுடைமை :

28. கம்பமா : கம்பத்தில் கட்டப் பெறுதலையுடைய விலங்கு; தறியில் கட்டப் பெறுதலையுடைய விலங்கு
''கம்பமா என்றேன்!'' [தனிப்பா:]

சங்கொலிப்புடைமை :

29. வாரணம் : பெருஞ்சங்குப் போன்ற ஒலியையெழுப்பும் விலங்கு
''புகர்முக வாரணம்'' [மணிமே: 7:115]

ஊதுலைத் துருத்தியுருவுடைமை:

30. தோல் : துருத்தியைப் போன்ற தோற்றமுடைய விலங்கு
தோல் = துருத்தி
''மென்றோன் மிதியுலைக் கொல்லன்''
(பெரும்பாண்: 206)
தோல் = யானை
''புரைத்தோல் வரைப்பின்'' [மலைபடு: 88]

மூங்கில் முளையுண்ணல்
விழைவுடைமை :

31. வேழம் : மூங்கில் முளைகளை விரும்பியுண்ணும் விலங்கு
வய் = துளை. வய் + இர் > வயிர் = துளையினை யுடைய ஊதுகொம்பு. "திண்காழ் வயிரெழுந் திசைப்ப" (திருமுரு: 120)
வயிர் = துளையினையுடையதாகிய மூங்கில்
"முளிவயிர்ப் பிறந்த வளிவளர் கூரெரி"
[ஐங்குறு: 395]

வயிர் + இயர் > வயிரியர் = ஊதுகொம்பு ஊதுபவர்கள்; பாடகர் "வயிரிய மாக்கள் பண்ணமைத் தெழீஇ" [பதிற். பத்: 29]
வய் > வெய் > வேய் = 1. மூங்கில். "வேய்ப்பெயல் விளையுட் டேக்கட் டேறல்" (மலைபடு: 171). 2. உட்டுளைப் பொருள் [பிங்கலம்]

வேய்க்கண் = மூங்கிற் கணு [நாமதீப:297], வேய்ங்குழல் = புல்லாங்குழல் [திவ். திருப்பள்ளி யெழுச்சி. 4], வேய்ம்பரப்பு = மூங்கிற்பாய் [நாஞ்சில் நாட்டு வழக்கு], வேயரிசி = மூங்கிலரிசி [திவாகரம்] வேய்த்தோள் = மூங்கில் போன்ற தோள்.

காண்க: "முறிமேனி முத்தம் முறுவல் வெறி நாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு" [குறள்: 1113]
வேய் + அம் > வேயம் > வேழம் = மூங்கில்
வேழம் = மூங்கில் முளைகளை விரும்பியுண்ணுவதாகிய யானை

ஒ.நோ: வேழம் > வேழம் + பு > வேழம்பு + அர் > வேழம்பர் = கழைக் கூத்தர் [பிங்கலம்]

கருநிறத் தோற்றமுடைமை:

32. கயம் : கரிய நிறத் தோற்றத்தையுடைய விலங்கு
[கய் = கருமைக்கருத்து மூலவேர்களுள் ஒன்று]
கய் + அம் > கயம் = யானை
கயமுனி = யானைக் கன்று

"பொய்பொரு கயமுனி முயங்குகை கடுப்ப"
[மலைபடு: 107]

முனி = யானைக் கன்று
"முனியுடைக் கவளம் போல" [நற்: 360:9]

கயம் > (Prakrit) gaya
[யகர ஜகரத் திரிபின்வழி] gaya > [Sanskrit] gaja = elephant
[Pali] gaja = elephant

33. நாகம் : கரிய நிறத்தையுடைய விலங்கு
"ஏந்தெழில் வரிநுதல் பொருதொழி நாகம்"
[நெடுநல் : 116-117]
[யானையைச் சுட்டும் நாகம் எனும் சொல்லுக்குரிய விளக்கத்தை "நாகம்" எனும் கட்டுரையில் காண்க.]

34. ஆம்பல் : கரிய நிறமுடைய விலங்கு
[இதற்குரிய வேர்வழி விளக்கத்தை "ஆம்பி" என்னும் கட்டுரையுள் காண்க.]

35. கள்வன் : கரிய நிறத் தோற்றத்தையுடைய விலங்கு
[கள்: கருமைக்கருத்துப் பக்கவேர்]
கள் > கள் + வு > கள்வு + அன் > கள்வன் = கரியவன் (பிங்கலம்)
கள்வன் = (கரிய நிறத்தாகிய-) யானை (பிங்கலம்)

36. களவன் : கரிய நிறத்தையுடைய விலங்கு
கள் > கள் + அவு > களவு + அம் > களவம் = யானை [வின்சிலோ]
களவம் > களபம் [வகர பகரத் திரிபு] = யானை
[ஒ.நோ: கலவுதல் = கலத்தல், தொகுதல்
கலவு + அம் > கலவம் = தொகை, தோகை
(தொகு = ஒன்றுசேர், கல.
தொகு + ஐ > தொகை > தோகை]
கலவம் > கலாவம் > கலாபம் = தோகை,
தோகையையுடையதாகிய மயில்
"மணிவயிற் கலாபம்" (சிறுபாண்: 15)

37. கரி : கரியநிற விலங்கு

கரு + இ > கரி. "கொடுங்கரிக் குன்றுரித்து"
(திருவாச: 6, 19)

கரி > (Sanskrit) kari = elephant
மேலும் காண்க :

Kari-kumbha	=	the frontal globe of an elephant
Kari-garjit	=	the roaring of the elephant
Kari-carman	=	an elephant's hide
Karija	=	a young elephant
Kari- danta	=	elephant's tusk
Kari- nāsa	=	the trunk of the elephant
Kari - pa	=	the keeper of an elephant
Kari- patha	=	the way of an elephant
Kari- pota	=	a young elephant
Kari– bandha	=	the post to which an elephant is tied
Kari- mācala	=	destroyer of elephants
Kari- mukha	=	elephant faced
Kari- yādas	=	a water elephant (hippopotamus = நீர்யானை)
Kari- vara	=	an excellent elephant
Kari- skandha	=	a herd of elephants
Karika	=	an elephant
Karinī	=	a female elephant

[Page : 254 A Sanskrit- English Dictionary- Sir Monier Monier Williams]

இவ் வகையாக- யானையைக் குறிக்கும்- ஒரு பொருட் பன்மொழி களாக (யானை என்னும் சொல்லையும் சேர்த்து-) முப்பத்தெட்டுப் பெயர் களைத் தமிழமாந்தர் உருவாக்கிப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

இம் மேற்பகுதியில் சுட்டுப்பாடுற்ற முப்பத்தேழு பெயர்களுள்கயம், நாகம், ஆம்பல், கள்வன், களபம் என்னும் ஆறு சொற்களும், அதனின் கரிய நிறச் சிறப்புத் தோற்ற அடிப்படையில் அமைந்தனவாகும். அத் தகு போக்கு முறையிலேயே- கருத்தடிப்படையிலேயே "யானை" என்னும் பெயரும்- கருமைக் கருத்துக் காரண அடியில் தோன்றியுள்ளது.

யா > யா + அன் > யாஅன் > யான் > யான் + ஐ > யானை = கரியநிற விலங்கு

(1) "யானையும் குதிரையும் கழுதையும் கடமையும்"
(தொல். பொருள். மரபி : 15:1)

(2) "வார் கோட்டு யானையும்" (தொல். பொருள். மரபி : 38)

(3) "பிடிஎன் பெண்பெயர் யானை மேற்றே"
(தொல். பொருள். மரபி : 52

தமிழிய மொழிகளில் இதன் திரிபுகளாவன :

Malayalam	:	āna
Kota	:	a. n
Toda	:	a. n
Kannada	:	āne, yāne
Kodagu	:	a- ne
Tulu	:	ānè
Telugu	:	ēnugu, ēnika, ēniga, ēnige, ēnuga
Kolami	:	enāgi, ēngi
Naiki	:	ēnagī
Parji	:	ēnu
Gondi	:	yēnī
Konda	:	ēngu

இயல்பு நிலையினும் பெரிய அளவுருக் கொண்ட பொருள்கள் சிலவற்றை யானை (ஆனை) என்ற சொல்லாட்சியை முன்னிறுத்திக் கூட்டியவாறு சுட்டிய கூட்டுச்சொற் பெருக்கமும் தமிழ்மொழிக்கண் நிரம்பவுண்டு.

யானைச் சீரகம் = பெருஞ்சீரகம் (மலையகராதி)

யானைச் சொறி = பெருந்தினவு நோய், பெருஞ்சொறிசிரங்கு (psoriasis)

யானை நெருஞ்சில் = பெரு நெருஞ்சில் (பதார்த்த: 355)

யானைப் புளி = (பப்பரப் புளி) பெரும்புளி

யானை மஞ்சள் = பெருத்த கிழங்குகளையுடைய மஞ்சள் வகை (மலையகராதி)

யானை மீன் = பெருமீன் வகை (பிங்கலம்)
திமிங்கில வகை (தக்கயாகப் : 384-உரை)

யானைவாழை = பெரிய வாழை வகை

[பெரும் பொய்யனை "யானைப் புளுகன்" என்பதுவும் வழக்கு]

யானை > ஆனை = யானை

"ஆனைத் தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்து"
(சிலம்பு : 12:17:1)

ஆனைத் தீ = எதனாலும் தணியாத பெரும்பசியை உண்டாக்கும் ஒரு நோய் வகை

(1) "ஆனைத் தீக் கெடுத்து" (மணிமே : பதி: 66)

(2) "ஆனைத் தீநோய் அரும்பசி களைய" (மணிமே: 20:35)

ஆனைக் கற்றலை= கடல் மீன் வகை

ஆனைக் கற்றாழை= ஒரு வகை நீண்ட கற்றாழை

ஆனைக் கோரை = பெருங்கோரை வகை (Typha elephantina)

ஆனைப்புல்= ஆனைக் கோரை

ஆனைச் சிரங்கு= ஒரு வகைப் பெரும் புண்

செய்வதற்கரிய பெருந்தொழிலை- "ஆனைத்தொழில்" என்பதுவும் வழக்கு.

"இவன் பெரிய ஆனைத்தொழிலைச் செய்யாநிற்க..."
(ஈடு : 7, 4, 3)

யா : (கருமைக்கருத்து மூலவேர்)

யாடு

இதற்கு முற்கட்டுரையுள் விளக்கிய யானையைப் போன்றே-தமிழ் மொழியில்- கருமைக்கருத்து அடிப்படையில் மேலும் சில விலங்குகள் பெயர் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று, இன்றைக்கு "ஆடு" என்று வழங்கப்பெறும் பண்டைய "யாடு" ஆகும்.

கருமையான நிறத்தது என்னும் அடிப்படையில்தான் "யாடு" என்றவாறு அதற்குப் பெயரிடப்பெற்றது! அந்நிறம் பெறாது வெள்ளை நிறத்ததாக இருந்த "ஆடு" வெள்ளாடு (வெள்-என்னும் வெண்மைக்குரிய அடை சேர்க்கப்பெற்றது) வேறு பிரித்துத் தெளிவுற வழங்கப்பெற்றது.

வெள்ளாட்டிற்கு "வெள்ளை" என்றவாறே பண்டைக்காலத்தில் தனிப் பெயர் வழங்குதலுற்றது.

"குமிழ் உண் வெள்ளை மறுவாய் பெயர்த்த
வெண்காழ் தாய.................." [புறம் : 324: 9-10]

[உரை : குமிழம்பழத்தை உண்ணும் வெள்ளாடுகள் எருவாய் வழியாக வெளிப்படுத்த- வெள்ளிய கொட்டைபோலப் பிழுக்கைகள் பரந்து கிடக்க...]

"வெள்ளாடு" என்றவாறு வழங்கத் தொடங்கிய பின்னர்க் கருமைக் கருத்து அடிப்படையில் தோன்றிய அதே "ஆடு" என்ற சொல்லையே மறு படியும் "கரு" என்னும் அடைச் சேர்க்கையிட்டுக் கரு + ஆடு > காராடு எனச் சுட்டும் வழக்கெழுந்தது. [காண்க : "காராடு" (முத்தொள்ளாயிரம் 106: 1)]

"துமர்"— என்னும் சிவப்புக்கருத்து அடிச் சொல்லினின்று திரி பெய்திய "தமர்" என்பதனின்று உருவாகிய தமர் + ஐ > தமரை > தாமரை என்னும் பூப்பெயர்- வெள்ளை நிறத்திலும் அமைந்திருந்த அவ்வினப் பூவொன்றைச் சுட்டுதற்கு வெண் + தாமரை > "வெண்டாமரை" என்ற வாறு அடையொட்டி வேறுபிரித்து வழங்கியமை போன்றதே- இவ் "வெள்ளாடு" என்னும் வழக்காறுமாகும்.

சிவப்புக்கருத்து அடிப்படையில் தோன்றிய "தாமரை" என்பதனையே- வெண்டாமரை என்னும் பெயரினின்று நிறமுரண்

பாட்டைத் தெளிவுறச் சுட்டுதற்கெனச் "செம்மை" என்னும் சிவப்புத் தன்மைப் பொருட்பாட்டைக்கொண்ட "செம்" என்ற அடைமொழி சேர்த்துச் செம் + தாமரை > செந்தாமரை என்றவாறு வழங்கியமை போன்றதே மேற்குறித்த "காராடு" என்னும் வழக்காறுமாகும்.

கரிய நிறத்தது என்னும் அடிப்படையில்- மய் (கருமைக் கருத்து மூலவேர்) > "மை" என்றவாறே "ஆடு" பண்டைய வழக்கில் பயிலப்பெற்று வந்துள்ளமை- இக் கருத்துக்குப் பெருத்த வலிமையும் அரணும் சேர்ப்பதாகும்.

மய் > மை = கரிய ஆடு, காராடு

மை = ஆடு (பிங்கலம்: 2479)

(1) "மாடந்தோறும் மைவிடை வீழ்ப்ப" [புறம் : 33: 21]

(2) "மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்" [புறம்: 113:1]

(3) "மைவிடை யிரும்போத்து செந்தீச் சேர்த்தி" [புறம் : 364: 4]

மை + ஊன் > மையூன் – ஆட்டிறைச்சி

"மையல் யானை யயாவுயிர்த் தன்ன
நெய்யுலை சொரிந்த மையூன் ஓசை [புறம் : 261: 7-8]

[உரை : மதத்தான் மயங்கிய யானை உயங்குதலான் நெட்டுயிர்ப்புக் கொண்டாற்போன்ற நெய் காய்கின்ற உலையின்கண் சொரியப்பட்ட ஆட்டிறைச்சியினது ஓசையையுடைய பொரியலை...]

மையூன்: (மேலுங்காண்க) : (நற்றிணை: 83:5) (பதிற்றுப்பத்து:12:17) (புறம் : 96:7)

மை + நிணம் + விலைஞர் > மைந்நிண விலைஞர் = ஆட்டிறைச்சி விற்பவர் [சிலம்பு: 5:66] [மணிமே: 28:33]

யாடு + டு > யாடு = கரிய விலங்காகிய ஆடு

[" டு "— ஒரு சொல்லாக்க ஈறு. ஒ.நோ: மா + டு > மாடு]

(1) "யாடும் குதிரையும் நவ்வியும் உழையும்"
(தொல். பொருள். மரபி: 12:1)

(2) "மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்
யாத்த என்ப- யாட்டின் கண்ணே" (தொல். பொருள். மரபி: 48)

(3) "காடுறை இடையன் யாடுதலைப் பெயர்க்கும்
மடிவிடு வீளை வெரீஇக் குறுமுயல்
மன்ற இரும்புதல் ஒளிக்கும்" (அகம்: 394: 13-15)

[உரை: காட்டில் தங்குகின்ற இடையன் தன் யாடுகளை இடம் விட்டுப் பெயர்த்தல் பொருட்டு நாக்கை மடித்து விடுகின்ற சீழ்க்கை ஒலியை அஞ்சிக் குறியமுயல் தேற்றமாகப் பெரிய புதருக்குள் மறைந்து கொள்ளுதற்கு இடனான...]

யாடு > ஆடு [யா > ஆ]

தமிழிய மொழிகளில் யாடு (ஆடு) என்னும் சொல்லின் திரிபுகளாவன:

Malayalam	:	ātu = goat, sheep
Kota	:	a. ṛ = goat
Toda	:	o. d
Kannada	:	āḍu
Kodagu	:	a. di
Tulu	:	ēdu
Telugu	:	ēta, ēdika
Gondi	:	yētī, (ēṭi= she-goat = பெட்டையாடு)
Pengo	:	ōḍa= goat
Manda	:	ūde
Kui	:	ōda
Kuwi	:	o'ḍā
Kurux	:	ēṛā= she-goat
Malto	:	èṛe
Brahui	:	hēt
Korava	:	hɔta
Kaikadi	:	āt
Irula	:	ādu
Badaga	:	adu

இந்திய- ஆரிய மொழிகளில் இதன் திரிபுகளாவன:

Sanskrit	:	eda

ēdaka = ஆண் யாடு
ēdi = பெட்டையாடு

The language of
Inscriptions of Asoka : eḍaka

Language of "Kharoṣthi" inscriptions :
[In Chinese Turkestan]
[Discovered by Sir Aurel Stein] : heḍ'i = sheep

Prakrit	:	ēdayā (f) ēdakka [m]
Pashai	:	ēṛā
Wegali dialect of pashai	:	ēṛā, ērī
Areti dialect of pashai	:	yeṛō
Shumashti	:	yēre
Gawar- bati	:	ēṛa, erayē
Bashkarik	:	īr
Savi	:	yeṛo
Pahlvi	:	yīro
Shina	:	ēri

யாடு > யேடு > ஏடு > ஏடை + அன் > ஏடையன் > எடையன்
எடையன் > இடையன் = ஆடுகளை மேய்ப்பவன், ஆட்டுக்காரன் [எகர இகரத் திரிபு]

சான்று : செவ்வு + ஐ > செவ்வை
செவ்வு + அப்பு > செவ்வப்பு > செவப்பு > சிவப்பு

[திருத்தமாக எழுதுகின்றோம் என்னும் நினைப்பில்- "செலவு" என்பதையே சிலர் "சிலவு" என்றவாறு எழுதும் தவறான போக்கிலும் கூட, இவ் எகர- இகரத் திரிபின் உண்மையைக் காணலாம்]

மலையாளம் : இடையன், எடயன்

இடையன் :

(1) "ஒன்றமர் உடுக்கைக் கூழார் இடையன்"
(பெரும்பாண் : 175)

(2) "மாசுண் உடுக்கை மடிவா யிடையன்" (புறம் : 54: 11)

இடை=இடைச்சாதி (செ. ப. க. த. பே. பக்: 285)

இடை+அச்சி>இடையச்சி>இடைச்சி= முல்லை நிலப்பெண் (பிங்)

இடை+சேரி>இடைச்சேரி= இடையர் ஊர் (சீவக. சிந். 422. உரை)

இடைமகன் = இடையன்

"இடைமகன் கொன்ற வின்னா மரத்தினேன்" (சீவக்: 1914)

இடையர்= இடைச்சாதியார் (திவ். பெரியதிரு. 11:8,6)

யா : (கருமைக்கருத்து மூலவேர்)

யா > யாஅன் > யான் > யான் + அம் > யானம் > யேனம் > ஏனம் = கரிய நிறத்ததாகிய பன்றி

ஏனம் = பன்றி

"ஏனம் இடந்திட்ட ஈர்மணி கொண்டு" (திணைமொ. 4:1)

ஏனம்: இது முகப்பிலெழுந்த கொம்புகளையுடைய (மருப்பினையுடைய) காட்டுப் பன்றி

"புகழா வாகைப் பூவின் அன்ன
வளை மருப்பு ஏனம் வரவு பார்த் திருக்கும்"
[பெரும்பாண்: 109-110]

[வாகைப்பூ = அகத்திப்பூ
கொம்பு, அகத்திப்பூப் போன்ற தோற்றமுடையது]

இதன் கொம்புகள் வெண்மையான இளம்பிறையைப் போன்ற தோற்றமுடைன.

"...ஏனத்து
வளைவெண் கோடு பறித்து மற்றது
முளைவெண் திங்கள் என்னச் சாத்தி"
[சிலம்பு. வேட்டுவ: 23-25]

ஏனம் = [கோணி]

வளைந்த கொம்புகளுடையதாய் இருந்தது பற்றி ஏனம், "கோணி" என்றவாறும் சுட்டப் பெற்றது.
கோணி = பன்றி. (பிங்கலம்: 2502)

ஏனம் : [வல்லுளி]

வலிமை வாய்ந்த உளிகளைப் போன்றே சிறிய கொம்புகளை உடையதாயிருந்தமை பற்றி ஏனம்-வல் + உளி > வல்லுளி என்றவாறும சுட்டப் பெற்றது.

வல்லுளி = பன்றி (பிங்கலம்: 2502)

ஏனம் = (பன்றி)

வெள்ளிய- வெளிப்பாங்காக உறுத்து முன்னெழுந்த உறுப்புகளாகிய இரு பற்களின் தோற்றச்சிறப்புக் காரணமாகப், பல்>பன்> பன்+தி> பன்றி என்றவாறான பெயரை "ஏனம்" ஏற்றது.

"பன்றி, புல்வாய், உழையே, கவரி"

(தொல். பொருள். மரபி: 40:1)

புல்வாய், உழைமான், மரை, கவரி, புலி, கராம் (முதலை வகை) என்னும் அறுவகை உயிரிகளுக்கு ஆண்பால் சிறப்பீட்டுப் பெயராக "ஒருத்தல்" எனும் ஒரு பெயரைக் குறிப்பிட்டுக்கூறிய தொல்காப்பியனார்,— அஃதடுத்த தனி நூற்பாவில்,- "வார்கோட்டி யானையும் பன்றியும் அன்ன" [தொல். பொருள். மரபி. 38] என்றவாறு தெள்ளிதாகப் பிரிவுபடக் குறித்திருப்பதின் அடிப்படையே- யானைக்கும், பன்றிக்கும் முன்னேந்திகளாக அமைவுற்றிலங்கும் மருப்புகளென்னும் உறுப்பமைப்பை உளங் கொண்டமையால்தான்!

அதனை உன்னியுணர்வதற்குரிய அடிப்படையைப்- பன்றியைக் குறித்தற்கு முன்னீடாக யானையை "வார் கோட்டியானை" என்றவாறு அடைசிறக்கக் கூறியதனுள் காணலாகும்! இருவகை விலங்குகளும் மருப்புடையனவே! யானையின் கோடுகள்- வார்கோடுகள்! அவை யாவன, நெடுங்கோடுகள்! (ஒ.நோ: ' ' வார்தல் .... நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள ' ' [தொல். சொல். உரி: 19]) பன்றியின் கோடுகளோ,- இளம்பிறையை ஒத்த வளைகோடுகள்!- அவ்வளவினவே!

[உயிரிகளுடைய உடற்கூற்றியல் அமைப்பின்படிப் பார்த்தால்,- யானைக்கும் பன்றிக்கும் (கேழலுக்கும்) முன்னேந்தியனவாகத் தோன்றும் கூரிய குத்துறுப்புகள் இரண்டும் உண்மையில் பற்கள்தாம்! முன்னுறுத்தி வெளிப்படத்தோன்றிய தோற்றத்தின் வாகமைவும், பயன்படுத்தச் சிறப்பும் கருதி- அவற்றின் பற்களையே [இரண்டினை மட்டும்] கொம்புகள் என்றும், கோடுகள் என்றும், மருப்புகள் என்றும் வழங்குவது வழக்கமாகி விட்டது!]

ஏனம் = [களிறு]

' ' களிறு ' '— என்னும் சொல், மதத்தின் மதர்ப்பு நிறைந்த யானையையே, குறிப்பாக- ஆண் யானையையே சிறக்கக் குறிக்கும்

செந்தனிச் சிறப்புச் சொல்லாகும் என்னும் உண்மையைக் கழக இலக்கியப் பரப்பானது விரிவுறக் காட்டும்!

''வேழக் குரித்தே விதந்து களிறென்றல்'' [தொல். பொருள். மரபி: 35] என்றவாறு சுட்டப்பெறும் தொல்காப்பிய நூற்பாவில் பயிலப்பெறும்"விதந்து"என்னும் சொல்லாட்சியில், ஆண்யானைக்கேயுரிய உரிமைச் சொல்லாகக் ''களிறு'' என்பது வழங்கி விளங்கியமையை விளங்கிக் கொள்ளவியல்கின்றது!

யானையை மட்டுமன்றிச்- சிறுபான்மையாக, ஏனமாகிய பன்றி யையும் ''களிறு'' என்னும் அச் சிறப்புச் சொல் கொண்டு பண்டைய தமிழர் பயின்றுவந்த உண்மையைத் தொல்காப்பியனார்"கேழற்கண்ணும் கடிவரை யின்றே'' (தொல். பொருள். மரபி : 36) என்றவாறு அடுத் ததாக நூற்பாவொன்று யாத்துவைத்துள்ளமையினின்றும் தெரிந்து கொள்ளுகின்றோம். [கேழல்= ஆண்பன்றி]

[ஆண் யானையையும் ஆண் பன்றியையும்- ''களிறு'' என் னும் சொல்லாற் குறித்தமைக்குரிய அடிப்படை ஒற்றுமைப்பேறுகள் இரண்டு! ஒன்று : கரிய நிறம். இரண்டாவது : மருப்பு! இரண்டும் ஒத்த தோற்றத்தன! பெரியதும் சிறியதுமான பருமையளவு வேறுபாடு களுடைய அவற்றினுள்- சிறியதாகிய பன்றியின் முகமுகப்பின் முனையில் அதற்குரிய அளவில் தும்பிக்கையொன்றுமட்டும் தொங்கியிருந்திருக்கு மானால் பண்டை இலக்கியவாணர் இதனைச் சீறியானை[சிறு+யானை] என்றவாறே கட்டாயஞ் சுட்டியிருக்கக் கூடும்! அவ்வளவுக்குப் பெரும் பான்மையொப்புமை கொண்டன இவையிரண்டும்!]

ஏனம் : [கேழல்] = ஆண்பன்றி

(1) "வளைவெண் மருப்பின் கேழல்" [ஐங்குறு : 265:2]

(2) "இளம்பிறை யன்ன கோட்ட கேழல்
களங்கனி யன்ன பெண்பாற் புணரும்" [ஐங்குறு: 264:1-2]

கேழல் : (சொற்காரணம்)

கீழ்தல்= தோண்டுதல்

'' வேரொடுங் கீழ்ந்து வெளவி'' (சீவக: 2721)

கீழ் >கீழ்+அல் (ஒரு சொல்லாக்க ஈறு) >கீழல்

கீழல் > கேழல் (ஈ > ஏ-திரிபு)

[ஒ.நோ: ஈர் > ஏர் = ஈர்தலைச் செய்யும் கருவி. வீறுவீறு > வேறுவேறு]

நிலத்தைத் தோண்டிக் கிழங்குணவு உண்ணும் செயற்பாடு காரணமாகக் "கேழல்" என்னும் இப்பெயரை "ஏனம்" ஏற்றது!

கேழலின் தோண்டுதற் சிறப்பு வினைச் சான்றுக் காட்சிகளில் சில:

(1) "கேழல் கெண்டிய" (நற் : 399: 4)

(2) "கேழல் உழுதெனக் கிளர்ந்த எருவை" (ஐங்குறு : 269: 1)

[உரை : பன்றிகள் கிண்டியுழுதனவாகப் பண்பட்ட கரம்பு நிலமானது கிளர்ச்சியுற்றுத் தழைத்து மண்டிய பஞ்சாய்க் கோரை......]

(3) "கிழங்ககழ் கேழ லுழுத சிலம்பில்" (ஐங்குறு: 270: 1)

[உரை: கிழங்குகளை அகழ்ந்துண்டற் பொருட்டுப் பன்றிகளால் உழப்பட்ட குறிஞ்சிக் கொல்லையின்கண்.........]

(4) "...................................காந்தள்
கொழுங்கிழங்கு மிளிரக் கிண்டிக் கிளையொடு
கடுங்கட் கேழ லுழுத பூழி" (புறம்: 168: 2-4)

[உரை: மலர்ந்த காந்தளினது கொழுவிய கிழங்கு பிறழக் கிளறி தன் இனத்தோடு கூட, தறுகண்மையுடைய கேழல் உழுத புழுதிக் கண்ணே......]

கேழலின் (பன்றியின்) நிறவுருக்காட்சி :

"கட்டளை"— என்பது கட்டளைக்கல். அஃதாவது, பொன்னுரைத்துப் பார்த்தற்குப் பயன்பெறும் சொரசொரப்பான கருநிறப் பட்டைக் கல். [ஒ. நோ: கருமமே கட்டளைக்கல் (குறள்: 505:2)] மிகக் கரியநிறச் சொரசொரப்புக் கல்லாயிருத்தலினால்தான்- ஒளிர்வுமிக்க பொன்னை மாற்று அறிதற்கென அதில் உரசிப்பார்ப்பது தொன்றுதொட்டு வரும் வழக்காகி வருகின்றது. அக் கரிய கட்டளைக்கல் போன்றே தோற்றமுடையதாக கேழல் விளங்கிநின்றது என்றவாறு ஒரு பாட்டின் கண் உவமை கூறினார், கபிலர் பெருமான்!

தினைக் கொல்லையில் புகுந்து தினையுணவு மேயும்போது, ஆங்கு முற்றிப்புலர்ந்த பொன்னிறக்கதிர்கள் பன்றியின் உடற்கண் கோடு கோடாக உரசலுறச் சாய்ந்து கிடக்கையில்- பன்றியானது கட்டளைக்கல் போலவும்- அதன் உடலிற் சாய்வுற்றுக் கிடந்தசையும் கதிர்கள் பொற்கம்பிகள் போலவும் காட்சிதருகின்றன என்றவாறான பொருள்பட

''நன்பொன் னன்ன புனிறுதீ ரேனல்
கட்டளை யன்ன கேழன் மாந்தும்'' (ஐங்குறு: 263: 1-2)

என்றார், அவர்! பன்றியின் கருநிறத் தோற்றக் காட்சியானது, இப் பாடல் வரிகளின்கண் கட்டளைக்கல்லில் உரைத்துக் காட்டினாற் போன்ற தெளிவுக் காட்சியாகவே நிற்கின்றமையைக் காண்கின்றோம்.

ஏனம்: கரியநிற விலங்காகிய பன்றி

(யா > யாஅன் > யான் > யான் + அம் > யானம் > யேனம் > ஏனம்)

(1) ''..................................இரும்பிணர் எருத்தின்
இருள் துணிந்தன்ன ஏனம்...'' (மலைபடு: 246-247)

[உரை: கரிய சருச்சரையையுடைய (சொரசொரப்புடைய) கழுத்தினையுடைய- இருள் அற்றுக் கிடந்தாற் போன்ற பன்றி......]

(2) ''செவ்வாய்க் கிளியைத் தத்தை என்றலும்
வெவ்வாய் வெருகினைப் பூசை என்றலும்
இருள்நிறப் பன்றியை "ஏனம்" என்றலும்''
(தொல். பொருள். மரபி: 69: 3-5)

ஏனம்: பன்றியின் கொம்பு. [இது பொருள் விரிவாக்கக் கூற்றின் பாற்பட்டது.] [Semantic extension]

கருமைச் சிறப்புக்கு அடுத்த சிறப்புக் கூறான- அதனின் கூரான வளைமருப்பும் (கொம்பும்) "ஏனம்" என்ற சொல் கொண்டும் ஆகு பெயராகச் சுட்டப் பெற்றது.

"ஏன மாகிய நுனைமுறி மருப்பில்" (பதிற். பத். 16:6)

ஏனம் > ஏன் = பன்றி

"ஏனொருவனா யெயிற்றில் தாங்கியதும்" (திவ்.இயற்.நான்:70)

ஏனம் : (இருளி)

இருட்டைக் குறித்த ''இருள்'' என்னும் சொல்வழியாக- இருள் + இ > இருளி என்றவாறும் பண்டையமக்கள் இப் பன்றியைச் சுட்டினர்.

இருள் + இ > இருளி = கரியபன்றி (திவா.)

ஏனம் : (கருமா)

கரிய விலங்கு என்னும் பொருள்படும் "கருமா" என்பதுவும் இக் கரும்பன்றிக்குரிய பெயர்களுள் ஒன்று.

கருமா = பன்றி [பிங்கலம்: 2502]

ஏனம் : (மைம்மா)

"மய்"— என்னும் கருமைக் கருத்துப்பொருள் வேரின்வழி- மய் > மை > மை + மா > "மைம்மா" என்றவாறான அரிய அழகிய வடிவிலும் இப் பன்றி பண்டையில் சுட்டப்பெற்றது.

மை + மா > மைம்மா = பன்றி [பிங்கலம்: 2502]

யா : (கருமைக்கருத்து மூலவேர்)

யா > யாஅன் > யான் > யான் + அல் > யானல் > யேனல் > ஏனல்

ஏனல் = கருந்தினை

(1) ''பொய்பொரு கயமுனி முயங்குகை கடுப்பக்
கொய்பத முற்றன குலவுக் குரல் ஏனல்''
(மலைபடு : 107-108)

[நச். உரை: தம்மில் விளையாடிப் பொருகின்ற யானைக் கன்று களின் ஒன்றோடொன் றுஞ் சேர்ந்த கைகளையொப்பத் தம்மிற் பிணையுங் கதிர்களையுடைய தினை...]

(2) ''....................................மையுறக் கவினி
ஈனல் செல்லா ஏனற்கு'' (புறம் : 159: 17-18)

[உரை : இருட்சியுற அழகுபெற்றுக் கோடைமிகுதியான் ஈன்றலைப் பொருந்தாத தினைக்கு......]

(3) ''மலை அயல் கலித்த மையார் ஏனல்'' (நற்:108:1)

[உரை : மலைப்பக்கத்து முளைத்துத் தழைத்த கரியநிற முடைய தினை.........]

(4) ''அணிவரை மருங்கின் ஐதுவளர்ந் திட்ட
மணியேர் தோட்ட மையார் ஏனல்'' (நற்: 344: 1-2)

[உரை : அழகிய மலைப்பக்கத்தில் வியப்புடையதாய் வளர்ந்த நீலமணி போன்ற தோட்டினையுடைய நிரம்பிய கருமையான தினைக் கதிர்......]

ஏனல் : (இறடி, கங்கு)

இக் கருந்தினைக்கு- '' இறடி '' என்றும், '' கங்கு '' என்றும் கருமைக்கருத்து வேர்ச்சொற்கள்வழித் தோன்றிய பிற பெயர்களும் உள.

(1) ''இறடியுங் கங்கும் கருந்தினை யென்ப'' (பிங்கலம்:2966)

(2) ''பகர்ந்திடுங் கருந்தினைப்பேர் அந்தமாமிறடி கங்கு''
(சூடா. நிக : 4: 40: 3-4)

ஏனல் : (தினைப்புனம்)

தினையையும் பின்னர்த் தினைக்கதிரையுங் குறித்த சொல்லாகிய ''ஏனல்''— என்பதுவே, அது விளையும் கொல்லைக்களமாகிய தினைப் புனத்துக்கும் அக்கால் ஆகுபெயராய் ஆகியது.

(1) ''தினைப் புனமும் தினையும் ஏனலாகும்''
[பிங்கலம்: 3235)

(2) ''ஏனல் அங் காவலர்'' [அகம்: 12:6]
(உரை : தினைப்புனங் காக்கும் மகளிர்)

(3) ''நெருநல் எல்லை ஏனல் தோன்றி'' [அகம்: 32:1]

(4) ''புலர்குரல் ஏனல் புழையுடை ஒருசிறை''
[அகம்: 82:13]

யா : (கருமைக்கருத்து வேர்)

யாமம் : (இரவு) > நள்ளிரவு

யா > யாஅம் > யாம் > யாம் + அம் > யாமம்

கருமைக்கருத்து வேர்ச் சொல்லாகிய ''யா'' என்பதினின்று யா > யாஅம் > யாம் > யாம் + அம் > யாமம் என்றவாறு எங்கும் கரிதாகி நிலவும் இரவுக்காலமானது பொதுப்பட்ட பொருளில் முதற்கண் குறிக்கப் பெற்று அவ்விரவுக் காலத்தில் கருங்கரிய- செறிந்த இருள் நேரமாகிய நடு இரவைச் சிறப்புப்படச் சுட்டுஞ் சொல்லாகி நிலைத்தது.

யாமம் = இரவு

இராக்காலத்தில்- அதனின் நடுப்பகுதி நேரமாகிய நள்ளிரவு (நள்ளிரவு= இருள் செறிந்த நடுஇரவு நேரம்) நள்ள்ள்ள்ள்............ என்றவாறு ஓசையுடையவாறு இருப்பதாகப் பண்டைய தமிழர் கருதி யிருந்தனர். பறவைகளும் விலங்குகளும் மாந்தரும் பிறபிறவும் வெளிப் படுத்தும்ஒலியீடுகள் அடங்கிய பின்னர்- நள்ளென்னும் இடையறாத் தொடரோசை எங்கும் இயம்பலுறுவதாகத் தாமும் எற்றுக் கொண்டு, இலக்கியப் புலவர்பெருமக்களிற் பலரும் இம் மரபுப் பயில்வைத் தத்தம் கழகஆக்கங்களுக்கிடையில் பதித்துள்ளனர்.

காண்க : [1] நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்" [நெடுநல்: 186]

[2] "நள்ளென் யாமத்து மழைபொழிந் தாங்கே" [நற்: 22:11]

[3] "நள்ளென் யாமத்துங் கண்படை பெறேஎன்" [நற்: 178.8]

[4] "நள்ளென் யாமத்து உயவுதோ றுருகி" [நற்: 199:3]

[5] "ஒலியவிந்து அடங்கி யாமம் நள்ளென" [நற்: 303:1]

[6] "நள்ளென் யாமத்து உள்ளு தொறும்" [நற்: 333:12]

[7] "நள்ளென் றன்றே யாமம்" (குறுந் : 6:1)

[8] "நள்ளென் யாமத்து" [குறுந் : 160:4]

[9] "பலர் துஞ்சு நள்ளென் யாமத்து" (குறுந் : 244:1)

[10] "நள்ளென் யாமத் தையெனக் கரையும்" [குறுந் 261:4]

[11] "நள்ளென் யாமத்து உயவுத்துணை யாக" [அகம்:103:12]

[12] "கடல்மீன் துஞ்சு நள்ளென் யாமத்து" [அகம்: 142:20]

[13] "உரவுப்பெயல் பொழிந்த நள்ளென் யாமத்து"
[அகம்: 328:3-5]

யாமம்—, "இர்வு" என்னும் பொதுப்பொருளில் குறிக்கப்பெற்றது என்னும் உண்மையை- அவ்வியாமம் நான்கு கூறுகளை உடையனவாகக் கொண்ட தமிழர்களின் பகுப்புப் போக்கினால் அறிய முடிகின்றது. முதல் யாமம்— மதுரைக் காஞ்சியில், "முந்தையாமம்" என்றவாறு குறிக்கப் பெறுகின்றது. முந்தையாமம் (மதுரைக்: 620) என்பதற்கு நச்சினார்க் கினியர் "முற்பட்டசாமம்" என்றவாறு உரையெழுதியமை அறியத்தக்கது.

"யாம நல்யாழ்" என்பது முதற்சாமத்திலே மீட்டுதற்குரிய நல்ல யாழ் ஆகும் என்னும் கருத்தும் இவ்விடத்தில் ஒப்புநோக்கத் தக்கது. ["யாம நல்யாழ் நாப்ப ணின்ற" (மதுரைக்: 584) நச்.உரை : முதற் சாமத்திலே வாசித்தற்குரிய நன்றாகிய யாழ்களுக்கு நடுவே......] "அச்சமறியா தேம மாகிய மற்றையாமம் பகலுறக் கழிப்பி" எனவரும் மதுரைக்காஞ்சி அடிகளுக்கு (652-653)- மற்றையென்பதனை முந்தை யாமஞ் சென்ற பின்றை என்பதன் பின்னும்- மூன்றாஞ் சாமத்தினோடுங் கூட்டுக என்றவாறு நச்சினார்க்கினியர் உரைக்குறிப்பு வரைந்திருப்பதும் இவ்விடத்தில் உளங்கொளத் தக்கதாகும்.

மூன்றாம் யாமம் : "கடவுள் வழங்கும் கையறு கங்குலும்" என வரும் மதுரைக்காஞ்சி வரியொன்றனுக்கு— "இரண்டாம் சாமத்திற்கும், நான்காம் சாமத்திற்கும் நடுவிடத்ததாகிய தெய்வங்கள் உலாவும் செய லற்ற கங்குல்"- என்றவாறு குறிக்கப் பெற்றிருக்கும் நச்சினார்க்கினியர் உரையின்வழி- மூன்றாம் யாமம் சுட்டப்பெறுவதையும் அறிகின்றோம்.

நான்காம் யாமம் = வைகறை யாமம்

"யாம இரவின் நெடுங்கடை நின்று
தேமுதிர் சிமையக் குன்றம் பாடும்
நுண்கோல் அகவுநர் வேண்டின்" (அகம்: 208:1-3)

[உரை : இரவின்கண் சென்று நெடிய கடைவாயிலில் நின்று அவனது தேன்மிக்க உச்சியினையுடைய மலையினைப் பாடுகின்ற நுண்ணிய நரம்பினை வருடிப் பாடுகின்ற பாணர்கள் பரிசில் அவன்பால்

வேண்டின்... [இவ்விடத்தில் "யாமஇரவு" என்பது - வைகறை யாமத்தைக் குறிக்கும்.]

இரவு என்பது நான்கு கூறுகளை உடையது என்பதுவும்- அவை முதல் யாமம், இரண்டாம் யாமம், மூன்றாம் யாமம், நான்காம் யாமம் என்பதுவும்- கடைக் கழகக் காலத்திற்குப் பிந்தி வகுத்த கூறுகள்!

கடைக்கழகக் காலத்திற்கு முற்பாடாக- ஒரு நாளின் முழுப் பகுதியானது ஆறு கூறுகளாகக் கொள்ளப்பட்டுப்- பகற்காலமானது- விடியல் (கதிரவன் வெளிப்பாட்டுப் பொழுது), நண்பகல் (உச்சிவெயில் நேரம், உரும நேரம்), எற்பாடு (கதிரவன் சாயுங்காலம்- சாய்ங்காலம்) என்றவாறாகவும், இராக் காலமானது- மாலை, யாமம், வைகறை என்றவாறாகவும் தெளிவுற்ற பிரிவுகளாகச் சுட்டப்பெற்றன! விடியல் என்பது பகற் பொழுதின் முற்கூறு. நண்பகல் என்பது பகற்பொழுதின் நடுக்கூறு. எற்பாடு என்பது பகற் பொழுதின் பிற்கூறு. அவையே போல் மாலை என்பது இராப்பொழுதின் முற்கூறு. யாமம் என்பது இராப் பொழுதின் நடுக்கூறு. வைகறை என்பது இராப்பொழுதின் பிற்கூறு. [வைகுறு + ஐ > வைகுறை > வைகறை = வைகும் (தங்கியிருக்கும்) இருளின் இறுதிக்காலம்.]

கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்றவாறாகப் பெரும்பொழுதுகள் ஆறாகவும்.— மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு என்றவாறாகச் சிறுபொழுதுகள் ஆறாகவும்- கொண்டது அக்கால ஆறு! (நெறி!)

சிறு பொழுதுகளாகிய ஆறு கூறுகளும்-சேர்ந்த முழுநேரத்தொகுதி அறுபது நாழிகைகளைக் கொண்டது! "அல்லும் பகலும் அறுபது நாழிகை!"- என்பது தொன்று தொட்டு வரும் மக்கள் மணிமொழி! இதில் "அல்" முப்பது நாழிகைகள்! "எல்" முப்பது நாழிகைகள்! ஒரு நாழிகை என்பது இருபத்து நான்கு (24) நிமையக் கூறுகளின் தொகுதி. இன்றைய உலகப் பொதுக்கணக்கில் சொல்வதானால்- 1 மணி நேரம் என்பது இரண்டரை நாழிகைகள்! பன்னிரண்டு மணிநேரம்- என்பது, முப்பது நாழிகைகளைக் கொண்டது! ஆக, ஒவ்வொரு சிறு பொழுதும பத்து நாழிகைகளின் மொத்த நேரஅளவைக் கொண்டதாகும். அதாவது, நான்கு மணி நேர அளவின் தொகுதியே ஒரு சிறு பொழுதாகும்!

கதிரவன் சாயுங் காலத்தைச் "சாய்ங்காலம்" என்பது, அன்றிலிருந்து இன்றும் தொடரும் அறாத வழக்காகும். எல் படுகின்ற (மாய்கின்ற) அவ் எற்பாட்டு நேரம் முடிந்த பின்னர்த் தொடங்கும் நேரம்

மாலை நேரம் ஆகும்! இருள் தொடக்கமாகிக் கட்புலனுக்குப் பொரு ளானது புலனாகாது போய்க் கொண்டிருக்கும் நேரம் அது! "மருள் மாலை" —என்பார் வள்ளுவர் பெருமான்! [குறள் : 1222, 1230]

மாஅல் > மால் = கருமை 'மால்கடல்' [பெரும்பாண்: 487]
மால்கடல் = கருங்கடல்
(நச். உரை: கருமையையுடைய கடல்)

மால் > மால் + ஐ > மாலை = அந்திப்பொழுது
"மாலையுழக்குந் துயர்" (குறள்: 1135)

காலைக்கு எதிர்ச்சொல் மாலை! விடியலினின்று காலைப்பொழுது தொடங்குகின்றது! காலை முடிந்ததும் பகற்பொழுது தொடங்குகின்றது! பகற்பொழுது-முற்பகலெனவும் பிற்பகலெனவும் இரு பாற்படும். (ஒ.நோ: பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா பிற்பகல் தாமே வரும் (குறள் : 319), முற்பகலுக்கும் பிற்பகலுக்கும் இடைப்பட்ட நடுப் பகல்—நண்பகல் என்னப்பெறும். உச்சிவெயில் உறைக்கும் வெப்ப நேர மாகையால்- அந் நேரப் பகுதியை உரும நேரம் என்றவாறு உரைப்பதும் வழக்கம்! (இக் கடுமையான நேரத்தில் ஞாயிற்றுடைய முழுத் திறமும் நிலமிசைத் தாக்குறுத்துகை உணர்ந்து, உச்சியிலிருந்த அஞ் ஞாயிற்றை "உச்சிக்கிழான்" என்றவாறு சுட்டும் வழக்கமும் அக் காலத்தில் தோன்றியது. (ஒ.நோ: உச்சிக்கிழான் கோட்டம் (சிலம்பு: 9:11) (உச்சி = நடுப்பகல் (பிங்.)

மாலை = 1. அந்திப்பொழுது (இருளடையும் நேரம்)
2. இருள் ("மாலைமென்கேசம்" திருப்பு :32)
3. இரா (பிங்.)

மாலை என்பது இருளின் தொடக்கக் காலம். அதாவது, இராப் பொழுதின் முற்கூறு! யாம நேரத்தைக் குறிக்கையில் நள்ளென்னும் ஓசைச் செறிவு நேரமாகக் குறிப்பிடுவது வழக்கம் என்பதை இக் கட்டு ரையின் தொடக்கத்திற் கண்டோம். மாலை நேரம் இரவுத் தொடக்க நேரமாகையால் அந் நேரத்திலுங் கூட நள்ளென்னும் ஓசைச்செறிவு நள்ளியிருப்பதாகப் புறநானூற்றுப் பாட்டொன்று சுட்டுவதும் இங்குக் கருதத் தக்கதாகும்.

["நள்ளென் மாலை மருதம் பண்ணி" புறம்: 149. 1-2]

மாலை நேரம்! பூந்தொடி மகளிர் விளக்குக் கொளுத்தும் நேரமிது! [1] இப் பொழுதின் தொடக்கந்தான்— தமிழர்களின் நாள் தொடக்கமுமாகும். நாள் என்னும் சொல்- இந் நாளில் பகலையும் இரவையும் ஒரு சேரச் சுட்டும் பொதுச் சொல்லாகிப் பொருள் பருத்து வழங்குகின்றதெனினும்- மூலப்படி- உண்மைப்படி, "நாள்" என்பது மாலை தொடங்கி வைகறை இறுதியெய்துகின்ற இருட்காலப் போழ்தை முற்றுங் குறித்து நின்ற- அதற்கெனவே தோற்றிய- உருவாக்கிய பழஞ் சிறப்புச் செஞ்சொல் ஆகுப்!

யா = கருமை

யா > யாஅல் > யால் > ஞால் > ஞாள் > நாள்

மாலைக் காலம் நாளின் தொடக்கம்! வைகறை இறுதி நாளின் (முடிவு) அறுதி!

(1) நாள் ஈண்டிய நல் அகவர் (மதுரைக். 223)
= வைகறையிற் பாடும் பாணர்

அல்லங்காடி = மாலை நேரக் கடை, அந்திக்காலக் கடை
"அல்லங்காடி அழிதரு கம்பலை" (மதுரைக்: 544)

நாளங்காடி = வைகறைக் காலக் கடை
"நாளங்காடி நனந்தலைக் கம்பலை"
(மதுரைக்: 430)

நாள் + கள் > நாட்கள் = வைகறைப் பொழுதிலும்- அதற்கு முந்தைய பொழுதிலும் விடிவதற்கு முன்னரே மரத்தினின்று இறக்கப் பெறும் புதிய கள்

"நாட்கள் உண்டு நாண்மகிழ் மகிழின்
யார்க்கும் எளிது தேரீ தல்லே" [புறம் : 123. 1-2]

---

1. அ. "வளமனைப் பூந்தொடி மகளிர்
சுடர்தலைக் கொளுவி" (குறிஞ்சிப்: 223)

ஆ. "கொண்டி மகளிர் உண்துறை மூழ்கி
யந்தி மாட்டிய நந்தா விளக்கின்"
[பட்டினப்: 246-247]

நாள்மீன்= நாட்காலத்தில் (இரவுப் பொழுதில்) விண்ணில் தோன்றும் உடு, விண்மீன்

" நீணிற விசும்பின் வலனேர்பு திரிதரு
நாண்மீன் விராய கோண்மீன் போல"
(பட்டினப் : 67-68)

அரைநாள் :

அரைநாள் என்று சொல்லும்பொழுது- ஒரு முழு நாளில் பாதி நாள் அதாவது பன்னிரண்டு மணி நேரக் காலப்பகுதி என்றவாறாகவும் பகல் நாளில் பாதிநாள் அதாவது ஆறு மணி நேரக் காலப்பகுதி என்றவாறாகவும் இரு பொருள்முறைகளில் பொருள்கொள்ளும் வழக்கம் இன்று நம்மிடையே உள்ளது. பண்டைக்காலத்தில் அரைநாள் என்னும் சொல்லுக்கு, இரவுநேரத்தில் பாதிநாள் என்னும் பொருளே சிறக்க வழங்கியது.

" நாள் "- என்பது, தொடக்கத்தில் இரவு நேரத்தை மட்டுமே குறித்தது. அதாவது, மாலை 6.00 மணி தொடங்கி வைகறையிறுதியாகிய 6 00 மணியாகிய கால எல்லையின் இடைப்பொழுதாகிய பன்னிரண்டுமணி நேரம்— அல்லது முப்பது நாழிகைகள் முழுமையும் நாள் என்னும் சொல்லால் குறிப்பிடப்பெற்றது.

" அரைநாள் " என்னும் சொல்லாட்சி. சழக இலக்கியங்களில் பன்னிரண்டு இடங்களில் குறிக்கப்பெற்றுள்ளது. அவற்றுள் பத்து இடங்களில் " அரைநாள் " என்பது நள்ளிரவாகிய நடு இரவை மட்டுமே சிறக்கக் குறிப்பது மிகவும் கருதத்தக்கது. அப் பத்திடங்களுள்ளும் அக நானூற்றிற் பதிந்துள்ள இடங்கள் மொத்தம் ஏழு ஆகும்.

[1: பெரும்பாண்: 110-116. மதுரைக்: 647-650 நற்: 341:6-10
1-அ : அகம் : 112:1-7, 138:15-9, 198:4-11,
260: 11-13, 294: 11-16, 298: 10-14, 311: 1-5]

நாள் என்பது, மக்களின் செயல் இயக்கத்திற்குகந்த முழுப்பகல் நேரத்தையும் குறிக்கும் வழக்கம் எழுந்த பின்னர்- நடு இரவு நேரத்தினைச் சுட்டிய " அரைநாள் " என்ற அதே சொல் வழக்காறுகொண்டே உரும நேரமாகிய- உச்சி வெயில் நேரமாகிய நண்பகல் நேரமும் சுட்டப் பெற்றது. [காண்க : நெடுநல் : 72-75]. அதற்குப் பின்னர்ப்- பகற் காலத்தை நாள் என்னும் இன்றைய வழக்குப் போலவே- ஒரு பகற்

போதின் பாதிநேரம் (முற்பாதியாயினும்- பிற்பாதியாயினும்-) "அரை நாள்" ஆகும் என்னும் கருதுமுறையும் கடைக்கழகக் காலத்திலேயே முளைவிட்டு விட்டது. [குறுந் : 280: 3-5]

அரையிரவு= நடு யாமம், நடுஇரவு, நள்ளிரவு
"ஆர்இருள் அரையிரவில்" (புறம் : 229: 2)

அரையிருள்: இருட் பகுதிக்காலத்தில்—அரைப்பகுதியில் நிற்கும் நள்ளிரவு நேரம்

[1] "அரையிருள் நடுநாள்" [குறுந்: 190:5]

[2] "உரவுரும் உரறும் அரையிருள் நடுநாள்" [நற்: 68:8]

"நாள்"- என்பது, முழு இரவுப்பொழுது நேரமே என்பதை மிகத் துலக்கமாக அறியவுதவும் பொருட் கூறுகளில்- "பானாள் கங்குல்" என்பதுவும், "பானாள் இரவு" என்பதுவும், "நடுநாள் யாமம்" என்பதுவும் ஆகிய கழக இலக்கியங்களிற் பதிவெய்தியுள்ள இப் பண்டைய வழக்காற்றுச் சொற்கள் மிக மிக வலிந்த சான்றுகளாகும்.

பகல்= பகுப்பு, பகுத்தல், பிரிவு

"பிரிவு" என்னும் கருத்துப் போங்குடைய "பகு" என்னும் வினைச் சொல்லின் வழித் தோன்றிய பகல் (பகு+அல்) என்பது,- பிரிவு, அல்லது ஒரு முழுக் கூறின் நடுவாகிய பிரிவு என்னும் பொருளுடையதாகும்.

[கதிரவ இயக்கக்காலப் பகுதியாகிய வெளிச்சக் காலத்தைக் குறிக்கும் "பகல்" என்னும் சொல், பய்>பய்கு>பகு என்றவாறு விரிவெய்திய தான- ஒளிக்கருத்து அடிப்படையில் தோன்றியதான- வேற்று வேர் விளர்ச்சியின்படி உருவெய்தியதாகும்! அப், "பய்" என்னும் வேரும் "வய்" என்னும் ஒளிக்கருத்து மூலவேரின் பக்கவேராகும். வகர பகரத் திரிபின் வழியே— "வய்" என்பது "பய்" என்றானது. இது வேண்டிய விடத்து விரிவுற விளக்கப் பெறும்.]

பகல்>பால்= பிரிவு, பகுதி, பாதி

ஒ.நோ: பகுதி>பாதி= 1. இரண்டு சமப் பாகங்களாகப் பகுக்கப்பட்ட பொருட்பகுதி
2. நடு

பகல் > பால் = பகுதி, நடு
ஒ.நோ: மகள் > மாள்
(வேண்மகள் > வேண்மாள்)

மகன் > மான்
(பெருமகன் > பெருமான்)

துகள் > தூள்

பால் + நாள் > பானாள் = பாதிஇரவு, நடுஇரவு, நள்ளிரவு
பானாட்கங்குல் = நள்ளிரவு, நடுஇரவு

பானாட்கங்குல் : காண்க: குறுந்: 301:4, 355 4. அகம்: 57:18, 58:2, 92:2, 94:3, 183:10, 252:11, 274:3, 297:1, 322:2]

பானாளிரவு = (பால் + நாள் + இரவு) பாதிஇரவு, நடுஇரவு, நள்ளிரவு

(1) "பாடுபெயல் நின்ற பானா ளிரவில்" (கலி : 90:6)

(2) "பானாள் இரவின் வந்தெம் இடைமுலை பொருந்தி" (அகம்: 328: 4-5)

நடுநாள் = நடுஇரவு, நள்ளிரவு

(1) "நெடுநா ஒண்மணி நிழத்திய நடுநாள்" (முல்லை: 50)
(நச். உரை : நெடிய நாக்கினையுடைய ஒள்ளியமணி எறிந்துவிட்ட நடுயாமத்தும்..... ...)

(2) "உருகெழு நடுநாள்" (அகம்: 22.11)
(உரை : அச்சம் பொருந்திய நடுஇரவில்...)

(3) "துளிதலைக் கொண்ட நளிபெயல் நடுநாள்" (அகம்: 72:2)
(உரை: துளியைத் தன்னிடத்தே கொண்ட மிக்க பெயலை யுடைய நள்ளிரவில்...)

(4) "அடுபுலி வழங்கும் ஆரிருள் நடுநாள்" (அகம்: 118:9)
(உரை : கொல்லும் புலி வழங்கும் அரிய இருள் சூழ்ந்த நள்ளிரவில்...)

(5) "மாலிருள் நடுநாள்" (அகம்: 126:7)
(உரை : கரிய இருள்படர்ந்த நள்ளிரவில்....)

(6) "நடுநாள் வாரல்... வருந்துதும் யாமே!" (குறுந்: 69:5-6)
(உரை : நள்ளிரவில் வாரற்க...)

(7) "நடுநாள் வருதலும் வரூஉம்" (குறுந்: 88:4)
(உரை : இடையிரவில் வருதலையும் செய்வான்...)

(8) "பெயலான் றவிந்த தூங்கிருள் நடுநாள்" (அகம்: 158:2)

(9) "புயலேறு உரைஇய வியலிருள் நடுநாள்" (அகம்: 218:6)

(10) "ஆரிருள் நடுநாள்" (அகம்: 253:10) (குறுந்: 143:7)

[மேலுங்காண்க: அகம்: 162:6, அகம்: 238:3, 292:9 குறுந்: 268:5, 321:3, 329:5]

''நாள்''- என்பது, மாலை தொடங்கி வைகறை அறுதிக் காலம் வரை இயல்வதாகிய இருட்காலம் என்பதை மேற்கண்ட இலக்கியப் பதிவுகள் செறிந்து வைத்துள்ளன. நாள்- என்பது கதிரவன் வழங்காக் காலப் பகுதியான இராப்போது என்னும் கருப்பொருளைப் ''பானாள்'' "நடுநாள்" என்னும் இரு கூட்டுச் சொற்களின் பல்லிட இலக்கியப் பயில்வுகள் உருவிளக்கமாக்குகின்றன!

யாமக்காலம் மூவகைப் பிரிவுகளையுடையது. ஒன்று, மாலை யாமம். அடுத்தது, இடையாமம் அல்லது நடுயாமம். இறுதியது, வைகறை யாமம். [காண்க: ''வைகறையாமம் துயிலெழுந்து'' (ஆசாரக்: 4)]

நாள் ஒன்றில்— மாலை என்பது. ஆறு மணியிலிருந்து பத்து மணிவரையிலான காலம் [6.00—10.00]. பத்திலிருந்து- இரண்டுமணி வரையிலான காலம், யாமம் [10.00—2.00]. இரண்டு மணியிலிருந்து ஆறு வரையிலான காலம், வைகறையாமம். [2.00—6.00]

இரவு நேரமாகிய கங்குட்பொழுது முப்பகுதிகளாகக் கருதி வழங்கியமையை மாற்றி- நாற்பகுதிகளாக, முதற்சாமம், இரண்டாஞ்சாமம், மூன்றாஞ்சாமம், நான்காஞ்சாமம் என்றவாறு பிரித்துவழங்கத்

தலைப்பட்ட பின்றைக் காலத்தில்— பத்து நாழிகையளவான அல்லது நான்கு மணி நேர அளவிலான சிறுபொழுதின் நேரக்கூறு- ஏழரை நாழிகையளவான அல்லது மூன்றுமணி நேர அளவினையுடையதாய்க் கணக்கிடப் பெற்று வழங்கப் பெறுவதாயிற்று! நச்சினார்க்கினியர் காலத்திலும் இந்நிலை நிலவியது.

முதல்சாமம் முடிவடையும் காலம், ஏழரை நாழிகையின் இறுதி. அடுத்த- இரண்டாம் சாமம், ஏழரை நாழிகையினின்று தொடங்கி அடுத்த ஏழரை நாழிகையின் இறுதியாகிய பதினைந்தாம் நாழிகை வரை இயல்கின்றது!

பொதுப்பட இரவைக்குறித்துத் தோற்றிய ''யாமம்'' என்னும் சொல், கருத்துக் கூர்ப்பு எய்தி நள்ளிரவாகிய நடுஇரவையே சிறக்கக் குறித்து வழங்கத் தலைப்பட்டது.

பானாள் [பால்+நாள்] என்னும் கூட்டுச்சொல் பாதி நாளாகிய அரை நாளாகிய நடு இரவைக் குறித்த சொல் என்பதை முன்னர்க் கண்டோம். இப்பானாளின்நேர அளவு எது என்பதை- மதுரைக்-காஞ்சியுள் வந்த ''பானாட் கொண்ட கங்கு லிடையது'' [631] என்னும் வரிக்கு உரைகூற வந்த நச்சினார்க்கினியர்— ''பதினைந்தாம் நாழிகையை முடிவாகக் கொண்ட கங்குல்'' என்றவாறு தெளிவித்துள்ளமையில் காணலாம். இன்றைய கணக்கில்- பதினைந்தாம் நாழிகையின் முடிவு என்பது மிகத் துல்லியமாக நள்ளிரவு பன்னிரண்டு மணியினைக் குறித்து நிற்பதாகும்.

யாமம்= நடுஇரவு, நள்ளிரவு

[1] ''பனிக்கால் கொண்ட பையுள் யாமத்து'' [நற்: 241: 10]

[உரை: பனி நிலத்தில் விழத் தொடங்கிய துன்பத்தைத் தருகின்ற நடு யாமத்தில்...]

[2] ''துஞ்சூர் யாமத்துந் துயிலறி யலரே'' [ஐங்குறு: 13:14]

[உரை : ஊரிலுள்ள அனைத்துயிரும் உறங்குதற்குரிய நள்ளியாமத்தினும் உறங்காமல் விழித்திருப்பர்...]

[3] ''புலம்புகொள் யாமத்து'' [குறுந்: 279:3]

[உரை: தனிமைத் துன்பம் உறுதற்குக் காரணமான நடு இரவின்கண்ணே...]

[4] ''.....................................உறைசெறிந்து
ஊதை தூற்றும் கூதிர் யாமத்து'' [குறுந்: 86:3-4]

[உரை: வாடைக்காற்று மிகுந்து மழைத் துளியைத் தூவா நின்ற இக் கூதிர்காலத்து இடையிரவின் கண்...]

[5] ''காம விருவ ரல்லதி யாமத்துத்
தனிமகன் வழங்காப் பனிமலர்க் காவின்''
[புறம்: 33:18-19]

[6[''யாமமும் நெடிய கழியும்'' (நற்: 378:1)

[உரை: இரவு நடுயாமமும் நெடும் பொழுதுடையவாகிக் கழியா நிற்கும்...]

[7] ''குறிஞ்சி, கூதிர் யாமம் என்மனார் புலவர்''
[தொல். பொருள்: 1:7]

'' யாமம் ''— என்பது, நடுநாள் அதாவது நள்ளிரவு என்னும் பொருள்படுதலை ''நடுநாள் யாமம்'' என்னும் தொடர்வழக்குத் துலக்கி நிற்பதையும் இவ்விடத்தில் ஒப்பு நோக்கலாம்.

[1] ''நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்'' [புறம்: 189:3]

[2] ''படுமழை உருமின் உரற்றுகுரல்
நடுநாள் யாமத்தும்'' [நற்: 129: 8-9]

யாமம் > (Sanskrit) yāma = night watch of three hours

(Pali) yāma
(Prakrit) yāma
(Sindhi) yam-a

"யாமம்" என்னும் கருமைக்கருத்து அடிப்படைச் சொல்லினின்று (சகரமெய் முற்பேறுற்றுத்) திரிபெய்திவாறு பயில்வு கொண்டுள்ள இந்திய- ஆரிய மொழிச் சொற்களாவன :

யாமம் > [Sanskrit] syāma = black, swarthy, dark-blue
[Prakrit] sāma = black, dark-blue
[Pali] : sāma = black, dark
[Pashai] šāmak, šamec = black

Kachur-i sala
dialect of pashai: šamek = black

Nirlāmi dialect of
pashai: sāmek = black

Wegali dialect of
pashai: sāmek = black

Kuraṅgali dialect of
pashai: sāmāk

Kashmiri : somu	=	dark blue, dark brown
Nepali : sãu	=	dark coloured
Assamese : xãu, xão	=	swarthy, lightish dark
Gujarati : sām	=	black, dark
Sindhi : sam-van	=	black colour

அடுத்த திரிபு வளர்ச்சி :

யாமம் > [Sanskrit] syāma > šyāmala = dark-coloured

Prakrit : sāmala = dark coloured
Sindhi : sãvilo = dark-blue
Panjābi : sãvla, saulā, sāvlā, sāulā
saula = black, dark-complexioned
Nepali : sãulo = swarthy
Oriya : sāula, sāmala

ஒரு ஒப்புநோக்குக்கு :

[Sanskrit] šyāma-sāstri [சியாமா சாஸ்திரி = கருப்பாசிரியன்]
[கருப்பாசிரியப் பார்ப்பான்]

யா = கருமை

யா > [Sanskrit] syāva = dark, dark-brown
Kohistāni : šā = black

யா > [Sanskrit] syāva > syāviya, syāvyā = darkness

❁

யாமங் கொள்பவர் = இடையாமத்து ஊர் காப்பவர்

[1] "யாமங் கொள்பவர் சுடர்நிழற் கதூஉம்
கடுமுரண் முதலைய நெடுநீ ரிலஞ்சி" [புறம்: 37: 9-10]

[உரை : இடையாமத்து ஊர்காப்பாருடைய விளக்கு நிழலைக் கவரும் கடிய மாறுபாடு பொருந்திய முதலையையுடைய நீர்மிக்க மடுவினையும்...]

(2) "நெடுங்கொடி நுடங்கும் வான்தோய் புரிசை
யாமங் கொள்பவர் நாட்டிய நளிசுடர்
வானக மீனின் விளங்கித் தோன்றும்" [அகம்: 114:9-11]

[உரை: நெடிய கொடி அசையும் வானைத் தோயும் மதிலின்கண் இராப்பொழுதைக் காத்திருப்போர் ஏற்றிய நெருங்கிய விளக்குகள், வானிடத்தேயுள்ள மீன்போல விளக்கமுற்றுக் காணப்பெறும்...]

'யாமங் கொள்பவர் = யாமந்தோறும் காவல்செய்தலை மேற்கொள்ளும் காவலர்

"காப்புடை வாயில் போற்றோ என்னும்
யாமங் கொள்பவர்......" [நற்: 132: 8-9]

யாமங் கொள்பவர் : யாமத்தில் நாழிகைக் கணக்கிடுவோர்

"கோமகன் கோயில் குறுநீர்க் கன்னலின்
யாமங் கொள்பவர் ஏத்தொலி யரவமும்" [மணி: 7:64-65]

[உரை: அரசன் மாளிகையில், குறிய நீரினைக் கொண்ட நாழிகைவட்டிலால் நாழிகைக் கணக்கிடுவோர் ஏத்துகின்ற ஒலியாகிய முழக்கமும்...]

யாமங் காவலர் = இரவின்கண் காவல்செய்யும் தொழிலுடையார்

"யாமங் காவலர் அவியா மாறே" [குறுந்: 375:6]

யாமபேரி = இரவில் ஒவ்வொரு சாமத்தின் தொடக்கத்திலும் கொட்டப் பெறும் பேரிகை

"யாம பேரி இசைத்தலால்" (கம்பரா.கைகேசி சூழ்: 57)

யாமயாழ் = நள்ளிரவில் இசைக்கப்பெறும் யாழ்

"யாமயாழ் மழலையாள்" (கம்பரா.நாடுவிட்: 34)

❀❀

யா > யாஅம் > யாம் > யாம் + அம் > யாமம், என்றவாறு கருணமக்கருத்து

அடிப்படையாக இருளையும் பின்னர்ச் சிறப்புப்பட நள்ளிரவையும் குறித் தெழுந்த தூய தமிழ்ச்சொல்- தமிழிலேயே அகர சகரத் திரிபேற்றுச் "சாமம்" என்றவாறாகவும் வழங்கப்பெற்றது. "யாமம் என்பது சாம மாகும்" (பிங்: 220)

யாமம் > ஆமம் > சாமம் = 1. நடுச்சாமம் (வின்சிலோ.)
2. இரவு (பிங்: 229)

சாமம் + காரன் > சாமக்காரன் = இரவுக்காவலன் (யாழ்-வழக்கு)
சாமம் + காவல் > சாமக்காவல் = இராக்காவல் (யாழ்.அக.)
சாமம் + கோழி > சாமக்கோழி = நடுச்சாமத்திற்கூவும்கோழி

"உறங்குமது தான் சாமக்கோழி"
(திவ்:திருப்பா.18 வியாக்.பக் :170)

❁❁❁

யாம் > யாம் + ஐ > யாமை = இரவு (யாழ்.அக.)

❁❁❁❁

யாம் > யாம் + ஐ > யாமை = கரிய கனிகளைக் கொண்ட மணித் தக்காளி
(Solanum nigrum)
[சாம்ப.அக: ஐந்தாம்தொகுதி:
பக்: 3733.]

யா: (கருமைக்கருத்து மூலவேர்)

நாம் = அச்சம்

யா > யாஅம் > யாம் > ஞாம் > நாம்

விண்மீன்கூட்டம் தவிர, விலங்குகளும் பறவைகளும், பலவகைப் பட்ட ஊருயிரிகளும் — தமரும் பிறரும் — பிற பொருள்களும் தம் கண் களுக்குத் தெளிவுறப் புலப்படாக் கடுங்காலமாகிய இரவுக் காலத்தை—, தாம் இயங்குதற்கே பெருந்தடையாகவிருந்த இருட்சிக் காலத்தை— எவ் வகை இடுக்கண்கள் இக்கால் நேருமோ என்றவாறு நெஞ்சகங்களில் அச்சவுணர்வு கவ்வியிருந்த தொடக்கக்காலத் தமிழமாந்தர் — யாம் (யாமம்) என்னும் கருமைக் கருத்தடிப்படையில் தாம் வழங்கிய இருட் காலப்போழ்தைக் குறித்த சொல்லினின்று (யாம் > ஞாம் >) நாம் என்ற வாறு அச்சத்தைக் குறிக்கும் சொல்லொன்றையே தம் மொழியுட் கொள்வாராயினர்.

கருமைக்கருத்துவழித் தோன்றிய இருண்மைக்கருத்து அச்சக் கருத்து வளர்ச்சிக்கு வழிகோலியது. (Semantic extension)

"பேஎ, நாம் உருமென வரூஉம் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சப் பொருள" (தொல்.சொல்.உரி: 69)

[தெய்வச்சிலையார் உரை: பேஎ என்னும் சொல்லும், "நாம்" என்னும் சொல்லும், உரும் என்னும் சொல்லுமாகிய அம் முறைமை யுடைய மூன்று சொல்லும் அச்சப் பொருண்மையை உடைய]

நாம் + அம் > நாமம் = அச்சம்

(1) "நாம அருந்துறைப் பேர்தந் தியாமத்
தீங்கும் வருபவோ" (அகம்: 18:7-8)

[உரை: (அணங்கு உறைதலின்...)- அச்சந்தரும் அரிய துறையினைத் தாண்டி நள்ளிரவில் இத்தகைய இடத்தும் மக்கள் வருவாருளரோ?...]

(2) "நகையுரும் உரறும் நாம நள்ளிருள்" (நற்: 122.5)

[உரை: "...மின்னொளியுடன் கூடிய இடிமுழங்குகின்ற அச்சத் தையுடைய இரவு நடுயாமத்து இருளில்...)

(3) "நாமஞ்சால் தெவ்வரின் நடுங்கினள் பெரிதே" (கலி: 30:21)

[உரை: அச்சமமைந்த பகைவரைப் போலே பெரிது நடுங்கினாள்...]

(4) "நாமம் அறியா வேம வாழ்க்கை" (பதிற்.பத்: 68:12)

[உரை: துன்பத்தால் வரும்- அச்சத்தையறியாத இன்பமேயான வாழ்க்கை...]

(5) "நனிகடுஞ் சிவப்பொடு நாமந் தோற்றி" (அகம்: 235:14)

[உரை: மிகவும்கொடிய சினத்தோடே உயிர்களுக்கு அச்சத்தைத் தோற்றுவித்து...)

(6) "தோமர வலத்தர் நாமஞ் செய்ம்மார்" (பதிற்.பத்: 54:10)
[நாமஞ் செய்ம்மார் = அச்சத்தைச் செய்யும் பொருட்டு...]

(7) "நாமநீர் வைப்பின்..." (குறள்: 149:1)

[= அச்சம் பொருந்திய நீரையுடைய கடல் சூழ்ந்த இவ்வுலகின்கண்...]

[பாவாணர் குறிப்பு : நாமம் = அச்சம். இஃது, உரிச்சொல். அகலம், ஆழம், தீயவுயிர்கள், கொந்தளிப்பு, நிலமுழுக்கு முதலியவற்றால் அஞ்சத்தக்கதாகலின், கடலை நாமநீர் என்றார்.
(திருக்.மரபு: பக்: 108)

(8) "நாமநீர் வேலி யுலகிற்கு" (சிலம்பு : 1:8)

[உரை: அச்சத்தைத் தருகின்ற கடல்சூழ் உலகிற்கு...]

(9) "நாமக் காலத் துண்டெனத் தோழி
ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்"

(தொல். பொருள் :கற்பி : 5:9-10)

[உரை: நாமக்காலம் = (தலைவன் வரும் வழியின் இடையூறுகளை எண்ணித் தோழியும் தலைவியும் தலைவனுக்கு என்ன நேருமோ என-) அஞ்சுதற்கேதுவாகிய களவுக்காலம்]

(9) "விற்சுழிப் பட்ட நாமப் பூசல்
உருமிடைக் கடியிடி கரையும்..." (நற்: 65:7-8)

[உரை: வில்லினின்று விடும் அம்புபட்டதனாலாகிய சுழன்ற அச்சத்தைத் தருகின்ற பிளிற்றலின் பேரொலியானது இடியிலுண்டாகும் மிக்க முழக்கத்தைப் போலே ஒலிக்கும்...)

(10) "நாம வெள்ளத்து நடுவண்" (பரி: 3:92)

[உரை : அச்சத்தைத் தரும் பெருவெள்ளத்தின் நடுவே...)

(11) "நாம வெஞ்சுரம்" (அகம்: 131:7)
= அச்சந்தரும் செவ்விய பாலை வழி.

யா : (கருமைக்கருத்து மூலவேர்)

யா > யாஅம் > யாம் > யாம் + து > யாந்து > யாந்து + ஐ > யாந்தை
யாந்தை > ஆந்தை

ஆந்தை: இருட்காலத்தில் அச்சந்தரும் வகையில் கூவும் இயல்புடைய கோட்டான்

ஆந்தைக்குரிய பெயர்களும்- காரணங்களும் :

1. கோட்டான் :

மரக்கிளையிலேயே பெரும்பாலும் பற்றிக்கிடப்பதை இரவிற் கண்ணுற்று- அம் மரக்கிளையைக் குறித்த "கோடு" என்னும் சொல்வழி உருவாக்கிய பெயர் இது!

கோடு= மரக்கிளை

[ஒ.நோ: கோடு + அரி > கோடரி= மரக்கிளையை வெட்ட வுதவும் கருவி. கோடரி>கோடாரி>கோடாலி [ரகர லகரத் திரிபு]

கோடு > கோடு + அன் > கோடன் > கோட்டான்
>கோட்டான்

இவ்வடிப்படையில் பெயரமைத்த நீடிய வரலாற்றுண்மையைத் தொல்காப்பியத்திலுள்ள மரபியல் பகுதி நூற்பாவின் வரியொன்று மிகத் தெளிவாகப் புலப்படுத்தி நிற்கின்றது.

"மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்"
(தொல். மரபி. 69:2)

[பேரா. உரை: கூகையைக் கோட்டான் என்றலும் வழக்கா கலான் அமையும். பரம்பயில் கூகை என்றதென்னையெனின்—மரக் கோடு விடாமையிற் கோட்டானென்னும் பெயர் பெற்றதென்றற்கு...]

கோட்டான் = Indian barn owl
பறவையியற்பெயர்: Tyto albo stertens

கோட்டானில் பெருந்தோற்றத்தை உடையது- பெருங்கோட்டான் என்றவாறு சுட்டப்பெற்றது. "பெரும்புள்" என்ற பெயரும் இதற்கு உண்டு.

பெரும்புள் = பெருங்கோட்டான் (பிங்கலம்: 2340)

2. கூகை

கூ > கூ. + வு > கூவு > கூவு + ஐ > கூவை > கூகை

கூவுதல் காரணமாகக் (கூவை >) கூகை என்றவாறு கோட்டான் பெயர்பெற்றது. கோட்டானாகிய கூகையின் குரலொலிப்பைக் குழறுதல் என்றவாறு சுட்டுவது தமிழமரபு.

(2-1) "குன்றக் கூகை குழறினும்" (குறுந்: 153:1)
[உரை: மலையின்கண் வாழும் பேராந்தை ஒலிசெய்யினும்...]

(2-2) "மன்ற மராஅத்த கூகை குழறினும்" (அகம்: 158:13)
[உரை: மன்றத்தின்கண் நிற்கும் மராமரத்திலுள்ள கூகை யானது இரவிலே குழறக் கேட்டவிடத்தும்...]

கூகையின் குரலொலியிடலை- இயம்புதல் என்றவாறு இயம்பு தலும் மரபு.

(2-3) "......................................பல்வேர்
முதுமரப் பொத்திற் கதுமென வியம்பும்
கூகைக் கோழி..." (புறம்: 364: 10-12)

கூகையின் குழறலை, "இயம்புதல்" என்று கூறுவது போலவே, "இசைத்தல்" என்றவாறு சுட்டுதலும் மரபு.

(2-4) "குராஅல் கூகையும் இராஅ இசைக்கும்" (நற்: 218:8)

கூகையின் தோற்றம்:

(1) கூகையின் கண்கள் பிதுங்கியபடி வெளித் துருத்திக் கொண்டிருக்கும். "கழல்கண் கூகை" (பதிற். பத்: 22:36)

(2) கூகையை நோக்கினால்- அதனில் நமக்கு மிகத் தெளிவாக முற்படத் தெரியும் உறுப்பு- அதன் பெரிய கண்கள்!
"தெண்கண்.. கூகை" (நற்: 83)

(3) கூகையின் அலகு தேயாமலும்- வளைவை உடையதாயு மிருக்கும். வாய் மிகவும் வலியது; வெவ்வியது.

(3-1) "தேயா வளைவாய்... கூகை" (நற்: 83)
(3-2) ""வல்வாய்க் கூகை" (அகம்: 122:13)
(3-3) "வெவ்வாய்க் கூகையொடு" (புறம்: 359:2)

(4) அதனின் உகிர்கள் (நகம்) கூரியவாய் அமைந்திருக்கும்.
(கூருகிர்...............கூகை" (நற்: 83)

(5) தலைப்பகுதி நுண்ணிய மயிர்களை உடையதாகியிருக்கும்.
"துய்த்தலைக் கூகை" (பதிற்.பத்: 44:18)

(6) கூகையானது தலைப்பகுதியில் குடுமியை உடையது.
"குடுமிக் கூகை..." (மதுரைக்: 170)

குடுமியின் தோற்றம் கூகைக்குக் கொம்பு முளைத்தாற் போன்ற வடிவச் சிறப்பை ஏற்படுத்தியமையால்- இக் கூகையைக் "கொம்பன் ஆந்தை" என்றவாறு சுட்டு வதும் உண்டு.

கூகை= கொம்பன் ஆந்தை.
Indian great horned owl (or) Eagle owl
பறவையியற் பெயர்: (Bubo bubo bengatensis)

கூகை என்னும் சொல் திரிபெய்தி வழங்கும் தமிழிய மொழிகளாவன:

Kannada = gūge, gūgi, gūbe
Tulu = gūbe
Telugu = gūba
Gondi = gugva

கூகை > (சமற்கிருதம்) ghūka
(பிராகிருதம்) ghuā
(மராத்தி) ghuba(d)

கூகை, திடுமெனக் கூவும் இயல்புடையது. இவ்வுண்மையை ''முதுமரப் பொத்திற் கதுமென வியம்பும் கூகைக் கோழி'' எனவரும் புறவரிகளாற் புலனாகின்றது. (புறம்: 364: 12-13). அப்படிக் கூவும்

குரல் அழுகுரலாகவே எழும்பும். (காண்க: ''அழுகுரற் கூகையோடு'' (பட்டினப்: 258). கூகையின் குரல் கேட்போர்க்கு வருத்தம் உண்டாக்கும் இயல்புடையது. (''வாய்ப்பறை அசாஅம் வலிமுந்து கூகை'' நற்: 83:4) கேட்போர்க்கு வருத்தம் உண்டாக்குவது மட்டுமின்றி அச்சமுண்டாகும்படிக் கூகை கூவும். (''ஆரிருஞ் சதுக்கத்து அஞ்சுவரக் குழறும்'' நற்: 319: 46) அச்சமுண்டாகும்படிக் கூவும் என்பதோடின்றி மனம் அஞ்சியழியுமாறும் கூவுந் தகையது, கூகை! ("வல்வாய்க் கூகை ...அழிதகக் குழறும்" (அகம்: 12:13-14)

கூகையின் குரலிடு-அழைப்பதைப் போன்ற ஒலியை-ஒத்திருக்கும். அவ்வொலி உரத்தும் இருக்கும். ["உழைக்குரற் கூகை யழைப்ப" [புறம்: 261:12]. [பெருத்த குரலாயிருத்தலால் உழைக்குரல் என்னப் பெற்றது.] கூகையின் குரல் ஒழுங்குபட்ட வெளிப்பாடு உடையதாகவும் தாள முறையிலமைந்ததாகவும் இருக்கும். இக் குரலைக் "குழறு குரற் பாணி" [பதிற். பத்: 22:35] என்றார்-பாலைக் கௌதமனார்! "குழறுகின்ற குரலாகிய தாளஇசை" என்பது இத் தொடருக்குரிய பொருள்!

புள் என்பது பறவை! புள்ளெழுப்பும் குரலைக் கொண்டு எதிர்பொழுதில் வரக்கூடிய நன்மை தீமைகளைக் கணக்கிட்டுக் கருதும் அறிவறியா வழக்கமும் ஒரு காலத்தில் தமிழக மக்களிடையே தங்கியிருந்தது! புள்ளொலி கொண்டு வரவிருக்கும் நன்மை தீமைகளைக் கூறும் செயல்க்குப் "புள்ளுரைத்தல்" என்பது பெயர். [காண்க: "முந்து புள்ளுரைத்த முதுமகன்" பெருங். உஞ்சைக்: 56:234]. நன்மை தீமைகளின் அடையாள வெளியீடாக [அறியாமையாற்] கருதி புட்குரலுக்கு முன்னங்கூறும் வழக்கைச் சீவக சிந்தாமணியும் சுட்டும். [காண்க: "ஒருவன் புட்குரன் முன்னங் கூறினான்" சீவக: 415]. சகுனம் [šakuna] என்னும் சமற்கிருதச்சொல்— பறவையைக் குறித்துப், பின்னர்ப் பறவையொலி கொண்டு நன்மைதீமையறியும் செயலுக்கே ஆகியமையும் இங்குக் கருதத்தக்கது. "புள்ளோர்த்துப் படையமைத்து" எனவரும் அகவரி [207: 3-4] அக்கால நந்தமிழரிற் சிலர் கொண்டிருந்த [அறிவறியாத] நம்பிக்கைப்பேற்றைப் பதித்துவைத்துள்ள அருவரி!

கேட்பதற்கே அச்சத்தை விளைவிக்கும் ஆந்தையாகிய கூகையின் ஒலியைத் தமிழர் உற்றுக்கேட்டு(!)- அவ்வொலி "சுட்டுக்குவி" என்று அழைத்துச் சொல்லுவது போலவே கருதினர்! ஈமக் காடுகளிலும் பறந்தலைகளிலும் பரவலாக இரவில் ஒலியிட்ட இக் கூகை செத்துப் போனாரை இவ்வாறு கூறி அழைக்கின்றது என்று கருதினர்!

(ஒ.நோ:) ''பொத்த வறையுட் போழ்வாய்க் கூகை
சுட்டுக் குவியெனச் செத்தோர்ப் பயிரும்
கள்ளியம் பறந்தலை" [புறம்: 240:7-9]

[உரை: பொந்தாகிய தான் வாழுமிடத்து போழ்ந்தாற்போலும் வாயலகையுடைய பேராந்தைசுட்டுக்குவியென்று செத்தோரையழைப்பது போலக் கூவும் கள்ளியையுடைய பாழிடமாகிய புறங்காட்டுள்...]

செத்துப்போனவரை அழைத்துச்"சுட்டுக்குவி"என்பதுபோலஒலித்த கூகையின் குரல்-, புறநானூற்றுக் காலத்திற்குப் பின்- செத்துக்கொண்டிருப்போரை அதாவது சாவோரை நோக்கி இவ்வாறு அழைக்குந்தகைமையது என்றவாறான அறியாமை வளர்ச்சியை அல்லது அச்ச வளர்ச்சியை மக்கள் பெற்றிருந்தமையை மணிமேகலையின் சீத்தலைச் சாத்தனார் வெளிப்பாட்டின்வழி அறிகின்றோம்!

''சாவோர்ப் பயிரும் கூகையின் குரலும்'' [மணி: 6:75]

சாவோர்ப் பயிர்தலாவது- சாவோரைத் திரும்பத் திரும்பக் கூவி அழைத்தலாகும். பொருள் தெரிந்துதான்- "சுட்டுக்குவி" அல்லது "குத்திப்புதை" (ஏதோ ஒன்று!) என்றவாறு பொருள் தெரிந்துதான் ஆந்தை [குடிஞை] இவ்வாறு இசைக்கின்றது என்றார், அகப் பாட்டெழுதிய பொருந்தில் இளங்கீரனார்!

''உருள்துடி மகுளியின் பொருள்தெரிந் திசைக்கும்
கடுங்குரற் குடிஞைய......" (அகம்: 19: 4-5)

ஆந்தையின் பயிர்தல் ஒலியானது- ''சுட்டுக்குவி'' என்னும் பொருளையுடையது மட்டுமன்று- அது ''குத்திப்புதை'' என்றும் "புக்குப் பிடி'' [புகுந்துபிடி] என்றுப்கூடப் பொருள்பட இசைப்பதாக அக் குரலிசையையே எழுத்திற் பதித்துக்காட்டித் திருப்புகழில் மேலும் அச் சுறுத்தினார்- அருணகிரியார்!

காண்க: ''கொத்துப்பறை கொட்டக் களமிசை—
குக்குக்குகு குக்குக் குகுகுகு
"குத்திப்புதை" "புக்குப் பிடியென முதுகூகை..."
(திருப்புகழ்: 2:19-21)

3. குரால்

குர் — ஒலிக்குறிப்பு

குர்+அல்>குரல்= ஒலி

குரல்>குரால்= குரல் பயிரும் கூகை; [கோட்டான்], [ஆந்தை]

(3-1) ''ஓராஅ உருட்டும் குடுமிக் குராலொடு''

[அகம்: 265:19]

[உரை: விடாமற் குழறுகின்ற குடுமியை உடைய கோட்டானோடு...]

(3-2) ''அஞ்சுவரு குராஅற் குரலுந் தூற்றும்''

[புறம்: 280:5]

[உரை: அச்சத்தைத் தரும் கூகையும் தன் குழறு குரலெடுத்து ஒலியா நிற்கின்றது...]

கூகை என்னும் கோட்டானைக் குறித்த சொல் கூவுதல் என்னும் அடிப்படையில் கூ>கூவு>கூவை>கூகை என்றவாறு சுட்டப்பெற்றமை போன்றே— குரால் என்னும் கோட்டானைக் குறித்த மற்றொரு ஆக்கமும் ''குர்'' என்னும் ஒலிக்குறிப்பு அடிப்படையில் குரலிடுவது காரணமாகக் குர்>குர்+அல்>குரல்> குரால் என்னப்பெற்றது!

குரல் என்னும் சொல்—கடைக் கழகக் கால அளவில், (1) ஓசை (2) கதிர் (3) கொத்து (4) தலைமயிர் (5) இசை (6) மிடற்றுப் பாடல் (7) மிடறு (8) கடல் (9) தோகை (10) சொல் (11) யாழ் (12) கழுத்து (13) (ஏழிசையுள் முதலிடத்ததாகிய-) குரல் என்றவாறு பதின்மூன்று வகைப் பொருள்களில் பரவலாக ஆளப்பெற்ற நிலையை இங்குக் கருத்தில் கொண்டால்தான்- "குரல்" - என்னும் ஒலிக்குறிப்பு அடிப்படையில் முதற்கண் சுட்டிய கூகையாகிய குரற்பறவையைக் "குரால்" என்றவாறு தெளிவுப் பொருட்பாடுபட நம்மோர் நெடிலுறக் கூறிய வழக்கிலுள்ள உண்மை நமக்குப் புரியும்!

கூகையும் குராலும் ஒரே பொருளடிப்படையில் வேறுவேறு மூல வேர்களினின்று பிறப்பித்த இருவேறு சொற்களாக இருந்தமையைக்— காலம் செல்லச் செல்ல ஒரு பெயரை ஆண் ஆந்தைக்கும் மற்றொன்றைப் [பெண் ஆந்தைக்கும்] ஆந்தைப் பேடைக்குமாகப் பிரித்து வழங்கத் தலைப்பட்டனர்!

கூகையைக் '' கூகைச்சேவல் '' என்றவாறு தெளிவுபடவும் சில்லிடங்களில் நிலைப்படப் பதித்து வழங்கினர்.

கூகை= ஆண் ஆந்தை, கூகைச்சேவல்
குரால்= பெண்ஆந்தை, கூகைப்பேடு

(காண்க :)

[3-0 1] ''கூகைச் சேவல் குராலோடு ஏறி
ஆரிருஞ் சதுக்கத்து அஞ்சுவரக் குழறும்
அணங்குகால் கிளரும் மயங்கிருள் நடுநாள்''
[நற்: 319:4-5]

(உரை: கூகையின் சேவல் அதன் பெண் பறவையோடு சென்று மக்கள் இயங்காத பெரிய நாற்சந்தி கூடுமிடத்தில் யார்க்கும் அச்சமுண்டாகும்படி குழறா நிற்கும். பேய்களும் வெளிப்பட்டு உலவா நிற்கும்- ஒருவரையொருவர் அறிதற்கியலாது மயங்கிய அத்தகைய இரவு நடுயாமத்தில்...)

[3-0-2] ''குடுமிக் கூகை குராலொடு முரல'' (மதுரைக்: 170)

(நச்.உரை: சூட்டினையுடைய கூகைச்சேவல் பேட்டுடனேயிருந்து கதற...)

[3-0-3] ''.......................................பைந்துணி
வைத்தலை மறந்த துய்த்தலைக் கூகை
கவலை கவற்றுங் குராலம் பறந்தலை''
[பதிற். பத்: 44 17-19]

(உ.வே.சா: ''கொழுப்பு இல்லாத பசிய இறைச்சித் துண்டங்களை வைத்த இடத்தை மறந்த, துய் போன்ற உச்சிக்கொண்டையையுடைய தலையையுடைய கோட்டானினது சேவலை வருத்துகின்ற பெண் கோட்டானையுடைய இடுகாட்டிடத்தில்...)

கூகையின் பெடையை அதாவது பெண்கூகையைக் குறித்து வழங்குதற்கு ''அளகு'' என்னும் சொல்லொன்று தொல்காப்பியர் காலத்திற்கும் மிக முற்பாடேயே இருந்துவந்தது. அது, பெண் கூகைக்கேயுரிய சிறப்புச் சொல்லாக இல்லாமல்- பெட்டைக்கோழிக்கும், பெட்டை மயிலுக்கும் [மயிற்பேட்டுக்கும்] வழக்கிலிருந்தமையால்(1) இக் "குரால்" என்னும் சொல்லையே சிறக்கக் குறித்து நிற்குமாறு தனிப்பட வழங்கத் தலைப்பட்டுவிட்டனர்!

---

1. ''கோழி கூகை ஆயிரண்டு அல்லவை

மேற்குறிப்பிட்டுக்கொண்டு வந்த — ''குரால்'' என்னும் கூகைப் பேட்டைக் குறித்த சொல், தனி! அதே ஒலிப்பில்- அதே வடிவில் போலியாக [போன்மைச்சொல்லாக-] வழங்கிய ''குரு'' என்னும் செம்மைக் கருத்து வேரில் உருவெடுத்ததாகிய ''குரால்'' என்னும் ஏற்றுவகையினைக் [கழுத்துப் பகுதியைத் தவிர மற்று முற்றுஞ் செம்பழுப்பு நிறத்தில் உருக் கொண்டிருந்த காளை வகை-] குறித்த சொல்- மிகத் தனி!

[அது பற்றிய குறுக்க விளக்கம் :]

குரு = செந்நிறம், நிறம்

ஒ.நோ: குரு > குரு + தி > குருதி = அரத்தம்

குருமயிர்க் கடுவன் = செம்பற்றை மயிரையுடைய ஆண்குரங்கு

குரூஉக் கண் = செந்நிறக்கண்

குரூஉக் கதிர் = செங்கதிர்

குரூஉச் செகில் = சிவந்த நிறத்தையுடைய ஏறு

செகில்: [விளக்கம் :]

செய் > செய்ம் > செம் > செம் + மை > செம்மை
= செந்நிறம்
செய் > செய் + கு > செய்கு > செகு
செகு > செக்கு > செக்கு + அர் > செக்கர் = சிவப்பு

"செக்கர் கொள் பொழுது" = செக்கர் வானத்தைக் கொண்ட அந்திக்காலம்.

செகு + இல் > செகில் = செவ்வேறு, சிவந்த காளை
"குரூஉச் செகில் காணிகா!" [கலி: 105:36]

குரல் + இ > குரலி = செங்குரலிக்கொடி
''ஒண்செங் குரலித் தண்கயம் கலங்கி''
[புறம்: 283: 1]

சூழுங் காலை ''அளகு'' எனல் அமையா''
[தொல். பொருள். மரபி: 56]

[1-அ] ''அப் பெயர்க் கிழமை மயிற்கும் உரித்தே''
[தொல். பொருள். மரபி: 57]

மே. கா: குரல் குரல்= செப்பாலை

குரு > குரு + அல் > குரல் > குரல் = செந்நிறம்
குரால்ஆன் = செந்நிறம்கொண்ட ஆ [பசு]
''கூவற் குரால்ஆன் படுதுயர்'' [குறுந்: 224: 3-4[

குரால் = 1. செந்நிற ஏறு

2. கழுத்துப் பகுதியைத் தவிர முற்றிலும் செம்பழுப்பு நிறத்தையுடைய காளை

தாழ்ந்த சடையினையும் ஒரு பக்கத்தே பிறைநுதலினையுடையாளையும் கொண்ட மூன்று கண்களையுடையோனின் முரண்பட்ட நிறத்தைப் பெற்றிருந்த ''குரால்'' என்றவாறு குறிக்கப்பெற்ற கலித்தொகைப் பாட்டொன்றின் கருத்து இவ்விடத்தில் நன்கு சிந்திக்கத் தக்கதாகும்.

[காண்க:] ''மிக்கொளிர் தாழ்சடை மேவரும் பிறைநுதன்
முக்கண்ணா னுருவேபோன் முரண்மிகு குராலும்''
[கலி: 104: 11-12]

முக்கண்களையுடையவன்- சிவன்! அவனின் நிறம் சிவப்பு! [செவ்வு > செவ்வன் > செவன் > சிவன் = சிவந்தவன்.]

சிவன் முழுவுடம்பும் செந்நிறமானவனாயினும்- அவனின் கழுத்திலுள்ள மிடற்றுப் பகுதியோ நஞ்சுண்டமையால் கருநிறப்பட்டு நீலமணி போன்ற தோற்றத்தையுடையதாயிருந்தது. சிவப்பினுட் கருப்பிருந்தது நிறமுரண்!

முதுகில் குட்டேறாகிய திமில் வாய்ந்திருந்த இக் குராலும் முழுமையும் செம்பழுப்பு நிறத்ததாயினும்- இதனின் கழுத்துப் பகுதி மட்டும் கரிய சருச்சரையை உடையது.

[காண்க] ''பெரும்பெயர்க் கணிச்சியோன் மணிமிடற் றணிபோல
இரும்பிணர் எருத்தி னேந்திமிற் குராலும்''
]கலி: 105: 13-14]

[கணிச்சியோன் = சிவன்]

மிடற்றில் கரிய நிறம் வாய்ந்தோனாயினும்- முழுத் தோற்றத்

தாலும் சிவப்புநிறத்தவன் என்னுங் கருத்திலேயே ''சிவன்'' என்னும் பெயர் பெற்றமை போன்றே- கழுத்துப் பகுதியில் கரிய சருச்சரை [பிணர்] அமைந்திருப்பினும்— இவ் ஏறும், ''குரு'' என்னும் செந்நிறக் கருத்து அடிப்படையிலேயே [குரு+அல்>குரல்>] குரால் என்றவாறு பெயர் சூட்டவும் பெற்றது!

சிறிதும் பிறநிறங் கலவாத முழுச் சிவப்பு நிறமுடைய காளையேறு "சேய்" என்றவாறே குறிப்பிடப்பெற்றது. [இவ்விடத்தில் [கலி: 104:13] சேய் என்பதற்குச் "சேவு" என்றவாறொரு பாட வேறுபாடிருப்பினும் கருத்தில் மாறுமில்லை; ஊறுமில்லை!]

"வேல் வல்லான் நிறமேபோல் வெருவந்த சேயும்" (கலி:104:13)

[வேல்வல்லான் = சேயாகிய முருகன்]

செய்>சேய்= அரத்தம் பூசிய உருவொடு வெளி வந்த ஈன்றணித்தான குழந்தை

சேய்= சிவந்தவன், முருகன்

சேய்= முற்றச் சிவந்த நிறங்கொண்ட காளை.

4. குடிஞை

குடு>குடு+இ>குடி>குடி+ஐ>குடியை>குடிஞை

குடிஞை= பொந்தில் தங்கி வாழும் இயல்புடைய கூகை, கோட்டான்

இரா முழுவதும் கிளைகளில் தங்கியவாறு குரலெழுப்பும் இப் பறவை,— கிளை என்னும் பொருள்கொண்ட ''கோடு'' என்னும் சொல் வழியாகக் கோடு>கோடு+அன்>கோடன்>கோட்டன்>கோட்டான் என்றவாறு பெயர் பெற்றுள்ள உண்மையைக் ''கோட்டான்'' என்னும் சொற்பொருள் விளக்கப்பகுதியில் முற்பாடாகக் குறிக்கப் பெற்றுள்ளமையைக் கண்டோம்.

இரா முழுவதும் இக் கோட்டானின் பணி ஓரிடத்தினின்று பிறிதோரிடத்துக்குப் பறந்து சென்று இரைதேடுதலும்- கூக்குரலிடுதலும் ஆதலால், அந் நேரத்திலேயே அதுகிளையைப் பற்றித் தங்கி நிற்கும்!

அப்படி, இராப்பணியில் ஈடுபடும் கூகையாகிய கோட்டான்—பகற் பொழுதில் கிளைமிற் பற்றிக்கொண்டோ, தொற்றிக் கொண்டோ கிடப் பதைக் காணுதல் மிக மிக அரிதினும் அரிதாகும்! எனவே, பகற் பொழுதுகளிலெல்லாம் பெரும்பாலும் பொந்துக்குள்ளேயே— பொந் தாகிய அறைக்குள்ளேயே அமைந்து ஓசையிடாது ஒளிந்து கிடக்கும்!

[காண்க: ''கூகை....................கடும்பகல் வழங்கா''
[அகம்: 148: 9-10]

[உரை: கடிய பகற்காலத்தே வெளிப்பட்டியங்காத கூகை...] கூகைக்குரிய தங்கிடம் அதாவது வாழ்விடம் பொந்தே ஆகும்!

[காண்க:]

[4:1] ''பொத்த வறையுட் போழ்வாய்க் கூகை'' [புறம்:240:7]

[உரை: பொந்தாகிய தான் வாழுமிடத்து- போழ்ந்தாற்போலும் வாயலகையுடைய பேராந்தை...]

[4:2] ''முதுமரப் பொத்திற் கதுமென வியப்பும் கூகைக்கோழி''
[புறம்: 364:11-12]

[உரை: முதுமரத்தின் பொந்துகளிலிருந்து கதுமெனக் கூவும் பேராந்தைகள்...]

[கூகைக்கு ''வளைக்கண் சேவல்'' என்றவாறு ஓர் இலக்கியப் பெயர்ப்பதிவீடு உள்ளமையையும் இங்குக் கருத்திற் கொள்ளவேண்டும்.]

[4:3] ''வளைக்கண் சேவல் வாளாது மடியின்'' [அகம்:122:15]

[வளைக்கண் சேவல்= பொந்தினூடே தங்கியிருக்கும் கூகைச் சேவல்]

பொந்தில் தங்கிவாழும் தன்மையுடையது என்னுப் அடிப்படை யிலேயே ''குடிஞை'' என்றவாறொரு சிறப்புப்பெயர் கொண்டு இக் கோட்டான் குறிக்கப்பெற்றது.

குல்: துளைப்புக் கருத்துவேர்

குல் > குல்+து > குற்று > குத்து = துளையிடு
குல் > குள் > குள்+அம் > குளம் = தோண்டப்பெற்ற நீர்ப்பள்ளம்
குள் > குள்+து > குட்டு = துளையிடு

குட்டு>குட்டு+அம்>குட்டம்= ஆழம், மடு

குட்டு>குடு>குடு+அம்>குடம்= குழிவு செய்யப் பெற்றதாகிய மட்கலம்

குடு>குடு+அம்>குடம்>+பு>குடம்பு>குடம்பு+ஐ> குடம்பை = 1. பறவையின் கூடு 2. வீடு

குடு+ஐ>குடை= துளை, துளையிடு

குடு+இ>குடி= மாந்தர்க்குரிய வாழ்விடக் கூடு, வீடு

குடு+இல்>குடில்= சிறிய குடிசை

[குடு>குடி= துளை, பொந்து]

குடி > குடி+ஐ > குடியை> குடிஞை= பொந்தில் தங்கிவாழும் கூகை

குடியை>குடிஞை [யகர-ஞகரத் திரிபு]

குடிஞையின் ஒலியீடு:

கூகையின் [குடிஞையின்] ஒலி, துடியின் இரட்டிப்போசையின் தொடர்ச்சியை ஒத்தது.

[4-0-1] ''அத்தக் குடிஞைத் துடிமருள் தீங்குரல்''
[புறம்: 370:6]

[4-0-2] ''துடிக் குடிஞைக் குடிப்பாக்கத்து'' (பொருந: 210)
[நச். உரை : துடியோசை போலும் ஓசையினையுடைய பேராந்தை...]

இரு பக்கமும் விசித்துக் கட்டப்பெற்ற தோல்போர்த்துகளின் நடுவிடத்தே — கயிற்றுக் குண்டானது விசைவொடு திரிபுற்று மாறி - மாறி மோதுறுதலின் வழியாகத் துடியின் ஒலிப்பானது இரட்டிப்புற இரட்டுந் தன்மையதாகும்! அவ்வகை ஓசையமைவுகொண்டு இரட்டிப்புறக் கூவும் கூகையின் தகைமையை அருணகிரி அடிகளார் '' குக்குக்குகு குக்குக் குகுகுகு எனவரும் திருப்புகழ்ப்பாட்டின் வரியொன்றனுள்- வண்ண வொழுங்கமைப்புற யாத்திசைத்துக் காட்டினார்! ''குக்குக்குகு'' என்றவாறு வெளிப்படுத்தப்பெறும் இவ்வொலியாப்பை உட்கொண்டே, ''சுட்டுக்குவி'' — '' குத்திப்புதை '' — ''புக்குப்பிடி'' என்றவாறெல்லாம் அக் கூகை பொருள் தெரிந்தே இசைக்கின்றது என்று கற்பனை செய்து, பின் அதைப் படிப்படியே நம்மோர் நம்பவும் செய்தனர்!

5. ஆண்டலை

ஆண் + தலை > ஆண்டலை = ஆண்டலைப் புள்

ஆண்மகனின் தலைபோன்ற தலையமைப்பையும்- புள்ளினைப் போன்ற உடலமைப்பையும் உடைய கூகை வகைப்பறவை.

இது பாலை நிலத்துக்குரிய பறவை.

''நேர்ச்சிக்கடன் செலுத்தும் பலிமேடையில், மறவனொருவன் நெடிய தலைமுடியையுடைய தன் தலையை அறுத்துவைத்தான்! தலை முடியோடு கூடிய அவ் அறுபட்ட தலை, அம் மேடையில் வைக்கப் பெற்றிருக்கின்றது! ஆங்கே, ஓர் ஆண்டலைப்புள் வுந்து அமர்கின்றது! பார்க்கின்றது! தன் இனப்பறவை ஒன்றுதான் இப் பலிமேடையில் வந்து தங்கியிருக்கின்றது என்று கருதி — ஆண்டலைப்புள்ளானது அதனை மிக அருகிற்சென்று உற்றுப் பார்க்கின்றது! அப்படி அணைந்து அருகில் சென்றதும்- அவ் அறுபட்டதலை- ஆண்டலைப்புள்ளை அச்சுறுத்து கின்றது!... ஆண்டலை அஞ்சுகின்றது!..." — இப்படியொரு அழகிய கற்பனைக் காட்சியைக் கலிங்கத்துப்பரணிவழி செயங்கொண்டார் படம் பிடித்துக் காட்டுகின்றார்! இப்பாடல் நமக்கு உணர்த்தும உண்மை என்னையெனின்,- ஆண்டலைப்புள்ளானது ஆண்மகன் ஒருவனின் தலைத் தோற்றத்தினைக் கொண்ட தலையுறுப்பையுடைய புள் என் பதுவே ஆகும்!

அழகிய அப்பாடல் இது!

"நீண்ட பலி பீடத்தில் அரிந்துவைத்த
நெடுங்குஞ்சிச் சிரத்தைத்தன் இனமென்றெண்ணி
ஆண்டலைப்புள் அருகணைந்து பார்க்குமாலோ!
அணைதலும் அச் சிரமச்ச முறுத்துமாலோ!"
(கலிங். கோயில்பாடியது: 16)

ஆண்டலை:

(5-1) "அழுகுரற் கூகையோ டாண்டலை விளிப்பவும்"
[பட்டினப்: 258]

(5-2) "ஆண்டலை வழங்கும் கானுணங்கு கடுநெறி"
[பதிற். பத். 25:8]

(5 3) "சாவோர்ப் பயிரும் கூகையின் குரலும்
புலவூண் பொருந்திய குராலின் குரலும்
ஊண்டலை துற்றிய ஆண்டலைக் குரலும்"
[மணி: 6:75-77]

(5-4) "ஆண்டலை பாட" [முத்த திருப்: 3]

இது ஒரு கற்பனைப் புள்ளென்று செ.ப.க.அ. முதலியில் அறியாது குறித்துள்ளனர்! இப்படியொரு தோற்றத்தையுடைய கூகை வகைப் புள்ளொன்று உள்ளமையைப் பறவையியலர் தெளிவுறுத்தியுள்ளனர்.

ஆண்டலைப்புள்ளின் பறவையியற் பெயர்:
"Turdus ginginianus"

தமிழிய மொழிகளுள் இவ் ஆண்டலையின் பெயர்- கன்னடத்தில் "ādelu" என்றும், தெலுங்கில் "ādelu" என்றும் திரிபெய்தியவாறு வழங்கி வருகின்றன.

கழுக்கக் குறிப்பு: குள்ளவுடலும்- பருத்து அகன்ற தலையும் கொண்ட ஆண்மகனை- நகையாட்டாக ஆண்டலையோடு தொடர்புபடுத்திப் பேசும் வழக்கம், "ஆண்டலை பெற்ற மகனே" என்றவாறு வன்கடுமையாக வசையாப்பெறியும் வழக்கும் அக்காலத்தில் இருந்திருப்ப-தாகத் தெரிகின்றது. (ஒ.நோ: ஆண்டலைக்கீன்ற பறழ் மகன்!" (கலி: 94:6). மலையாளியர் இன்றும் "நாய்க்குப் பிறந்தவனே!" என்னும் பொருட்பாட்டில் வழங்கும் வசையாப்புக் கூற்றுப் போன்றதே- "ஆண்டலைக்கீன்ற பறழ்மகன்!" என்பதுவும் ஆகும்!

6. ஊமன்

– "ஊம் - ஊம்" என்றவாறு திரும்பத்திரும்ப ஒலியெழுப்பிக் கொண்டிருப்பதாகிய கூகை; ஊமைக் கோட்டான்

ஊம் + அன் > ஊமன் = கூகை
ஊமன் = கூகை [பிங்கலம்: 2339]

ஊர்புறத்துமக்கள் ஊமனை, — ஊமைக்கோட்டான் என்றவாறு இன்றும் வழங்குகின்றனர்!

கூகையாகிய கோட்டானை "ஊமைக்கூகை" என்றவாறு அடையடுத்த சொல்வழக்கொன்றால் சுட்டியுள்ளமையும் "ஊமன்" என்னும் சொற்காரணத்தை வலியுறுத்தி நிற்பதேயாகும்!

"ஊமைக் கூகையு மோரியு முறழுறழ் கதிக்கும்" [நீல. தரும: 3:2]

எதற்கெடுத்தாலும்- "ஊம்! ஊம்" என்றவாறாக மட்டும் அவ்வொற்றையொலியைத் திரும்பத் திரும்ப ஒலிக்கும்- பேசுந் திறனற்றவனாகிய ஒருவனை "ஊமன்" என்று குறிப்பது பண்டைய வழக்காகும்! "ஊமை" என்றவாறு பாலீறு இறுதி இயைக்காது உரைத்தல் இன்றைய பரவலான வழக்கு!

"ஊமன்" என்னும் பண்டைய வழக்கு — ஊமைத்தனம் கொண்ட ஒருவனையும்[1] மற்றும் "ஊம்-ஊம்" என்றவாறு மீண்டும் மீண்டும் ஒலியெழுப்பி நிற்கும் கூகையையும் குறித்து நின்றது.

" ஊம் "- என்னும் சொல்லே ஊமைத் தன்மையையும் அக்கால் குறித்துநின்றது. (காண்க:"கூனும்குறளும் ஊமும் செவிடும்"(புறம்:28:2)

"உயர்திணை ஊமன் போல" (குறுந்: 224: 5). உயர்திணையாகிய (மக்களினத்து) "ஊமன்" எனச் சுட்டியுள்ள இவ்வரி— அஃறிணையுளொரு வகையினதாகிய பறவையினத்துள்ளும் "ஊமன்" என்ற பெயர் வழங்கி வந்த உண்மையை உட்கிடையாகச் சுட்டித் தெளிவுறுத்தி நிற்பதைக் காணலாம்!

7. ஆந்தை

இரவு நேரமாகிய யாமநேரம் உயிர்களுக்கு--மிகக் குறிப்பாக அற்றை மாந்தவுயிர்களுக்கு அச்சம் நிரம்பிய நேரமாகும். ["யாம்"—

---

1. அ. "கண்ணில் ஊமன்" (புறம்: 238:16)

ஆ. "கையில் ஊமன்" (குறுந்: 58:4)

இ. "குரால்ஆன் படுதுயர் இராவில் கண்ட
உயர்திணை ஊமன் போல" (குறுந்: 224:4-5)

என்னும் இருண்மைக் கருத்துச் சொல்லின்வழி, "ஞாம்" என்றவாறு மூச்சொலி சிறந்து திரிபெய்தி- அது மேலுந் திருந்தி "நாம்" என்றவாறும் பிறகு மேலுக்கும் மேலாக "அம்" ஈறு (நாம்+அம்>) "நாமம்" என்றவாறு செம்மைப்பாடுற்றும் "அச்சம்" என்னும் பொருளாட்சிக்கு வளர்ந்து நின்றமையை "நாம்" என்னும் கட்டுரைப்பில் முன்னீடாகக் கண்டோம்!]

கடுமையான- வன்மையான- அச்சம் வரப்பண்ணுகின்ற குரலால் ஆந்தை மாந்தனின் கவனத்தைக் கவர்ந்தது! அதனடிப்படையிலேயே அக் குரட்காரண அடிப்படையிலேயே "குரால்" என்பதுவும் "ஊமன்" என்பதுவுமாகக் கோட்டானைக் குறித்த மூவகைச் சிறப்புச் சொற்கள் தோற்றுவிக்கப் பெற்றன!

மரக்கிளையில் தங்கியிருப்பதன் அடிப்படையில் "கோட்டான்" எனுஞ்சொல் உருவாக்கப்பெற்றது! இரவில் மரக்கிளையில் தங்கியிருக்கும் அது, பகலில் பொந்தில் தங்கிடம் கொள்ளுவது அறிந்து அதனடிப்படையிலேயே ''குடிஞை'' என்னும் வாழ்விடக் காரணச் சிறப்புச் சொல்லுந் தோற்றுவிக்கப் பெற்றது! உருத் தோற்றத்தில்- ஆண் மகனின் தலையுருவையும் புள்ளுக்குரிய உடல்வாகுவையும் பெற்றிருந்த கூகைவகைப் புள்ளொன்று-மிகு தனிச் சிறப்புப் பெயரீடாக "ஆண்டலை" என்னும் தெண்சொல்லையே பெற்றுத் தலை தூக்கியது! மக்களின் வாய்மொழியிடையே வழங்கும் வாய்ப்பையும் வாய்ந்தது!

பிற புள்ளினங்கள் போலப் பகற்பொழுதில் காணப்பெறாது அக்கால் பொந்திலும்- பொதும்பரிலும் ஒதுங்கிப் பதுங்கியிருந்து,- சிறப்பாக இராவில் மட்டுமே தன் கொடுங் கூக்குரலாட்சியால் குலை நடுக்கந்தந்த இக் கூகையாகிய கோட்டானைப் — பிற பிற காரண அடிப்படைகளில் பல்வேறு பெயர்களைச் சூட்டிச் சுட்டியமை போலவே,- இரவு நேரத்தில் மிகக் குறிப்பாக நள்ளிரவாகிய யாம நேரத்தில் கூவும் பறவை என்னும் கருத்தடிப்படையில் [யாம் > யாம் + து > யாந்து > யாந்து + ஐ > யாந்தை >] ஆந்தை என்றவாறு ஒரு தனிச் சிறப்புச் சொல்லை நம்மோர் உருவாக்கிப் பரவலாகப் பயன்படுத்தி வந்தனர்! இன்றும் அந்நிலை அறாநிலையாய் நிலைத்து வழங்கி வருகின்றது.

[முந்தைய கடைக்கழகக் காலப் புலமக்கள் ''ஆந்தை'' என்னும் இச் சொல்லைத் தம் இலக்கிய ஆக்கங்களிடையே பயன்படுத்தாமல்- கூகை, குரால், குடிஞை முதலிய சொற்களால் மட்டுமே பெரும்பான்மை

யாகப் பயின்றதும் பயன்படுத்தியதும் என்ன காரணத்தினால் எனின்,- அவர்களின் காலத்தில் - இன்னுஞ் சொன்னால் அவர்களுக்கும் முற்பாடிருந்த தொல்காப்பியர்க்கும் முற்பாடிருந்த புலவர்பெருமக்களிற் சிலர், ஆதன்+தந்தை என்பதன் பிணைந்திணைந்திறுகி உருகியொடுங்கிய வடிவமாகிய ''ஆந்தை'' என்னும் புணர்ந்து தொகுபட்ட திரிபுச்சொல்லைத் தம் இயற்பெயராகவே கொண்டிருந்தமையால்,- அவ்வியற்பெயர் கொண்ட புலவர் பெருமக்களின் போன்மைப் பெயரீட்டைக் கொண்ட அப் புள்ளின் பெயராட்சிப் பதிவை இலக்கியத்திற் பதிவுறுத்துகை-பண்பாடும் நாகரிகமும் ஆகா என எண்ணியமையாலேயேயாம் என்க!

அப் புள்,- எழிலாலும் குரலாலும் சிறப்பிலதாகி, வெறுப்புயிரியாக ஒருவகையில் தீப் புள்ளாக,- இன்னும் தெண்படச் சொன்னால்- அன்மங்கலத்தன்மை கொண்ட வன்புள்ளாக, அக்கால மக்களிற் பெரும்பாலாரால் கருதப் பெற்றமையே- அப் போன்மைப் பெயரையே இலக்கியப் பதிவினின்றும் அறவே ஒதுக்கியோப்பி அப்பாற்படுத்தியிருப்பதற்கான காரணமாகும்!]

கூகை, வெவ்வாயை (சினவெறிகொண்ட- அச்சினத்தைச் செயற்படுத்துதற்குரிய வெவ்விய வாயை-) உடையதுதான்! [புறம்: 359:2] வலிமைமிக்க வாயை உடையதுதான்! [அகம்: 122:13] மிகக் கூரிய உகிர்களை உடையதுதான்! [நற்: 83:3] இவ்வுடற் படைக்கலங்களை இராக்காலத்தில் பயன்படுத்திப் பயன்படுத்தியே பழக்கமாகியும் வழக்கமாகியும் இயல்பாகியும் வாழ்க்கையின் இயங்குமுறை நிலைத்துவிட்டமையால்,—பகற்காலத்தில் வெளிப்பட வெளிவாராது பொந்து வீட்டுக்குள்ளேயே புகுந்து ஒடுங்கியவாறு இருந்திருந்தே இயல்பாகிவிட்டமையால், — வெளிச்சக்காலத்தில்-, பகற்காலத்தில் - கதிரவன் வழங்கும் தெளிவான ஒளிக்காலத்தில் கூகையாகிய ஆந்தை, ஒரு சிறிய பிறவகைப் புள்ளொன்றைக் கூட எதிர்த்துத் தாக்கும் ஏற்றத்தை இழந்தது; தோற்றுப்போகும் தொய்வியல்பே அதற்குத் தோய்ந்தது!

இரவிலே காக்கையொன்று கண்படின்- அதனைக் கண்டதுண்டமாக்கிக் குதறும் கடுந்திறன் வாய்ந்த கூகை—பகலில் காணின் பதறும்! பகற்கால வாய்ப்பு நேருமாயின் காக்கை கூட வலிதாகிய ஆந்தையை எளிதாகத் தாக்கும். தாக்கி அதனுயிர் போக்கவும் இயல்வதாகும்! காலமறிதல் அதிகாரத்துள் வரும் ஒரு குறட்பாவில்—''பகல் வெல்லும் கூகையைக் காக்கை'' (481) என்றவாறு அருங்குறுஞ் சுருக்கமாக இவ்வுண்மையை வடிவமைத்தார்- வள்ளுவர் பெருமான்! காளமேகம்,இதனையே

ஒலியணி ஒள்ளுமாறு தம்ககரவகைத் தனிப்பாட்டொன்றில் "காக்கைக்கா காகூகை-கூகைக்கா காகாக்கை" (தனிப்பா:காளமே:312:1) என்றவாறு கவினொலித்தார்! இம் மேற்சுட்டிய பாவரிகள் வெளிப்படுத்தும் உண்மைகளாவன—கூகை பகலில் வெளிவாராது; (காண்க: கூகை... கடும்பகல் வழங்கா'' (அகம்: 148: 9-10) அப்படியே வரினும், அதனுடற்கும் உயிர்க்கும் காக்கையினால் கூட ஊறு நேரும் என்பதுவும் அதனின் இயக்க நேரம் இரவே என்பதுவும் ஆகும்!

ஆந்தை இரவில்தான் கூவும்! புகைதவழும் சுடுகாடுகளிலும் இடுகாடுகளிலும்- ஆள்அரவமற்ற பொதும்பர் ஆர்ந்த காடுகளிலும சில போழ்துகளில் அது ஒலியிடக் கூடும்! அந்நிலை அரிதினும் அரிதாகும்! மற்ற பிற புள்ளினங்களைப் போலப் பொதுவான மரங்களிலோ- புதர்ப் பகுதிகளிலோ இருந்தவாறு ஆந்தையானது பகற்காலத்தில் ஒலியெழுப்பிய காட்சி என்றவாறு இலக்கியவாணர்களால் எங்கும் சுட்டப் பெறவில்லை! இலக்கியத்துள் வரும் நிகழ்ச்சிக்கூறு பற்றிய கருத்து வலிவுக்காக- பகற்கண்ணும் கூவுவதாகச் சுட்டப்பெற்றுள்ளனவே தவிர அதற்குரிய கூவுங்காலம் இராப்பொழுதே என்பதில் மாறுகருத்தில்லை! இராப்பொழுதே என்பது இற்றைக்கும் தெரிதருதேற்றமாகும்!

கூகை இனத்துள் ஒருவகையினதான ஆண்டலைப்புள்ளும் யாமத்தில் குழறு குரலிடலை நீலகேசி சுட்டியிருப்பதும் இவ்விடத்திற் காணத் தக்கது. [''யாமத்து ஈண்டி வந்து ஆண்டலை மாண்பில அழைக்கும்'' நீல. தரும. 3:3]

ஆந்தை இராவிற் கூவும் இலக்கிய இடங்களாவன:

(7:1) ''இரவுக் குறிவயின் வெருவக் குழறியா
விழிகட் கூகை'' (பெருங்: 22: 150-151)

(7:2) ''குன்றக் கூகை குழறினும்.................
....
ஆரிருட் கங்குல்'' [குறுந்: 153: 1......4]

(7:3) ''குராஅல் கூகையும் இராஅ இசைக்கும்'' (நற்:218:8)

[உரை : குராலாகிய கூகையும் இரவு முழுவதும் குழறா நிற்கும்...]

(7:4) ''மன்ற மராஅத்த கூகை குழறினும்'' (அகம்: 158: 13)

[உரை: மன்றத்தின்கண் நிற்கும் மராமரத்திலுள்ள கூகை யானது இரவிலே குழறக்கேட்டவிடத்தும்......)

(7:5) ''வாய்ப்பறை அசாஅம் வலிமுந்து கூகை!...
....................எம் காதலர் வரல் நசைஇத்
துஞ்சாது அலமரு பொழுதின்
அஞ்சுவரக் கடுங்குரல் பயிற்றா தீமே''
(நற்: 83:4...10)

[உரை: வாயாகிய பறையோசையாலே பிறரை வருத்தி நிற்கும் வலிமைமிக்க கூகையே!... எம் காதலர் வருகையை விருப்பத்தோடு எதிர் நோக்கியவாறு நான் உறங்காமல் இவ்விரவில் வருந்தும்போது அஞ்சத் தக்க கடுங்குரலால் நீ குழறாதே!...)

(7:6) ''கூகைச்சேவல் குராலோடு ஏறி
ஆரிருஞ் சதுக்கத்து அஞ்சுவரக் குழறும்
அணங்குகால் கிளரும் மயங்கிருள் நடுநாள்''
(நற் 319: 4-6)

[உரை: கூகையின்சேவல் அதன் பெண்பறவையோடு சென்று மக்கள் இயங்காத பெரிய நாற்சந்தி கூடுமிடத்தில் யார்க்கும் அச்ச முண்டாகும்படி குழறா நிற்கும்.........பேய்களும் வெளிப்பட்டுக் காற்றுப் போலே இயங்கும் ஒருவரையொருவர் அறிதற்கியலாது மயங்கிய அத் தகைய இரவு நடுயாமத்தில்......)

(7:7) ''கழல்கட் கூகைக் குழறுகுரற் பாணி
கருங்கட் பேய்மகள் வழங்கும்......''
(பதிற்.பத்: 22:36-37)

[உ.வே.சா: பிதுங்கிய கண்ணையுடைய கோட்டான்கள் குழறு கின்றகுரலாகிய தாள இசைக்கு ஏற்பக் கொடிய கண்களையுடைய பேய் மகள் ஆடுகின்ற......) [குறிப்பு: பேய் ஆடும் நேரம் = யாமநேரம்]

(7:8) ''இல்லெலி வல்சி வல்வாய்க் கூகை
கழுதுவழங்கு யாமத்து அழிதகக் குழறும்''
(அகம்: 122:13-14)

[பெருமழை-உரை: பேய்கள் மட்டுமே திரிதற்கியன்ற அந்த நள்ளியாமத்திலும்- நம் இல்லத்தே வாழுகின்ற எலிகளை இரையாகக் கோடற்கு வருகின்ற வலிய அலகுடைய கூகையானது, நம்முள்ளம் ஞெரேலென அஞ்சியழியுமாறு குழறா நிற்கும்......]

இரவுநேரத்தில்- அதிலும் மிகக் குறிப்பாக நள்ளென்னும் ஓசை நண்ணிய நள்ளிரவாகிய நடுயாமத்தில் — கழுது (பேய்) பரந்து திரிந் தாடும் அக் கடுங்கருளிருள் சூழ்ந்த நட்டநடுயாமத்தில் கூவும் பறவை என்னும் கருத்தடிப்படையிலேயே [யாம்>யாமம்= [இரவு>] நள்ளிரவு] [யாம்>யாம்+து>யாந்து>யாந்து+ஐ>யாந்தை>] ஆந்தை என்னு மொரு சொல் உருவாக்கப் பெற்றுள்ளது. மக்கள் வழக்கில் பரவலுறப் பயன்படுத்தமுங்கொண்டு நிலைப்பாடுற்றது!

இச்சொல்- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிடையே கைந்நிலை யில் ஓரிடத்திலும், ஐந்திணையெழுபதில் ஓரிடத்திலுமாக ஈரிடங் களிலேயே பயில்வுறுகின்றது.

(7:0:1) "ஆந்தை குறுங்கலி கொள்ள" (கைந்நி. 21:1)

(7:0:2) "மன்ற முதுமரத்து ஆந்தை குரல்இயம்ப"

[ஐங். எழு: 40 1]

கடைக்கழகக்கால மக்கட் பெயர்களுள் ஒன்றாகிய "ஆந்தை" என்னும் சொல்பற்றிய குறிப்பு:

கடைக்கழகக்கால இலக்கியங்களினுள்- பத்துப்பாட்டிலோ, எட்டுத்தொகையிலோ கூகையைக் குறித்த "ஆந்தை" எனும் சொல் எங்கணும் பயில்வு பெறவேயில்லை!

"ஆதன்" என்னும் இயற்பெயரொடு பிற்பிணைந்த "தந்தை" என்னும் முறைப்பெயர் (ஆதன்+தந்தை>) ஆந்தை என்றவாறு கடும் புணர்ப்பெய்தியது! இதனைப் போன்றே பூதன்+தந்தை என்பது

பூந்தை என்றவாறு வழங்கியது! இதற்குரிய இலக்கணநெறியைத் தொல்காப்பியர் புள்ளிமயங்கியலில் (52, 53) தெளிவுறுத்தியுள்ளார்!

கழகக்காலப் புலவர்களில் நால்வர், "ஆந்தையார்" எனும் பெயர் கொண்டு சுட்டப்பெறுகின்றனர். "அஞ்சில்" என்னும் ஊர்ப்பெயரொடு அஞ்சில் ஆந்தையார் எனவும் (குறுந்: 294, நற்: 233 ஆகியன பாடியவர்), ''சிறைக்குடி'' என்னும் ஊர்ப்பெயரொடு (குறுந்: 56, 57, 62, 132, 168, 222, 273, 300. நற்: 16. ஆகியன யாத்தவர்) சிறைக்குடி ஆந்தையார் எனவும், ''பிசிர்'' என்னும் ஊர்ப்பெயரொடு (அகம்: 308. நற்: 91. புறம்: 67, 184, 191, 212) பிசிராந்தையார் எனவும் முப்புலவர்கள் ஊர்ப்பெயரைச் சேர்த்திய நிலையில் சுட்டப்பெறுகின்றனர். இவர்கள் ஊர்ப்பெயரை முன்னிறுத்திய பேறு பெற்றவர்கள்! நாலாமவரின் பெயர்- ஓதலாந்தையார் என்பது. ஐங்குறு நூற்றில் பாலைப்பகுதியில் நூறுபாடல்களும் (301-இலிருந்து 400 வரை) குறுந்தொகையில் 12, 21, 329 எனவுள்ள எண்களில குறிப்பிடப்பெறும் மூன்று பாடல்களுமாக நூற்றுமூன்று பாடல்களைப் பாடியவர் இவர்! இந்நூற்று மூன்று பாடல்களுள்- ஐங்குறு நூற்றில் உள்ள ஒரேயொரு பாட்டில்

''அறப்புரி யருமறை நவின்ற நாவின்
திறப்புரி கொள்கை யந்தணிர்'' [ஐங்குறு: 387: 1-2]

என்றவாறு வரும் முதலிருவரிகளில் அந்தணரின் ஓதல் தொழிலைச் சுட்டிய ஒரு கருத்து இடம்பெற்றுள்ளது.

ஆரியத்துக்குச் சிறப்புச்செய்யும் கருத்தொன்றைச் சுட்டிய அவ்வரிகளின் வழி ஆரியச் சார்பாளரோ- அல்லது ஆரிய அடிமையுணர்வினரோ —அல்லது ஆரிய நுண்திறச் சூழ்ச்சியரோ, இவர்க்கு ''ஓதல்'' அடை கொடுத்து தூக்கி நிறுத்தியுள்ள வரலாற்றுண்மையை இவரின் பெயர் புலப்படுத்தி நிற்கின்றது.

இம்மேற்குறிக்கப்பெற்ற நான்கு ஆந்தையார்களுங்கூட,"ஆந்தை" என்னும் புள்ளுக்குரிய சொல்லாட்சியைக் கழக இலக்கியங்களுள் புக விடாது புறக்கணித்தமைக்கான காரணத்துள் அடங்குவோராவர்!

யா : (கருமைக்கருத்து மூலவேர்)

நாகம்:

யா > யா + கு > யாகு > ஞாகு > நாகு > நாகு + அம் > நாகம்

நாகம் : 1. புன்னாகம் 2. கரும்பாம்பு [கரியநல்லபாம்பு] 3. நற்றூசு 4. நஞ்சு 5. மஞ்சுள்ளிநச்சு 6. மாட்டு வாலில் அமைந்திருக்கும் தீச்சுழி 7. யானை 8. கருங் குரங்கு 9. விண் 10. முகில் 11. துறக்கம் 12. காரீயம் 13. மலை

1. நாகம் : புன்னாகம்

உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியரின் பெருங்குழப்படிப் பொருள் குறிப்புகளுக்குப் பொருளானவற்றில், இந் நாகமும் ஒன்று!

[சான்று:]

நாகம் (குறிஞ்சிப்பா: 94) = நாகப்பூ
நாகம் (மலைபடு: 520) = புன்னைப்பூ
நாகம் (பொருநரா:209) = சுரபுன்னை
நாகம் (சிறுபா: 88) = சுரபுன்னை
நாகம் (சிறுபா:116) = சுரபுன்னை
நாகம் (திருமுரு: 302) = சுரபுன்னை

சொற்கோவைகளின் (நிகண்டுகளின்) குழப்படிகளுக்கும் குறைவில்லை!

காண்க :

1. "புன்னை புன்னாக நாகம்வழை சுர புன்னைப் பேரே"
[சூடா: நி:ம. பெ. தொ: 4:3]

2. "நாகமென் கிளவி............புன்னையும்..."
(பிங் 3717)

அண்மைக்காலத்துப் புதலியல் அறிஞர்- முனைவர். கு. சீநிவாசன் அவர்களும் மேற்குறித்த உரைக்குறிப்புகளையெல்லாம் ஒருசேரவைத்து மயங்கிப் பொருட்பாட்டுக் கிறக்கமெய்தியமையைக் கீழ்வருகின்ற குறிப் பின்வழி அறியலாகும்!

'' நந்தி நறவம் நறும்புன்னாகம் '' (குறிஞ்சிப்: 91) என்றார் குறிஞ்சிக்கபிலர். இதில்வரும் புன்னாகம் என்பதற்கு நச்சினார்க்கினியர் புன்னையின் விசேடம் என்று உரை கூறியுள்ளார். ஆதலின் புன்னாகம் என்பது புன்னையின் வேறாகிய சுரபுன்னை யாதல் கூடும். மேலும் சூடாமணி நிகண்டு கூறியுள்ளவண்ணம் நாகம் ஆதலுங்கூடும். நாகம் எனப்படும் சுரபுன்னையைப் பற்றிப் புலவர்பெருமக்கள் கூறியுள்ள வற்றை உற்றுநோக்கினால், ''நாகம்'' என்பது சுரபுன்னை யெனவும் புன்னாகம் எனவும் கூறப்படுமாறு காணலாம்'' [நூல்: சங்க இலக்கியத் தாவரங்கள்: பக்: 83-84]

செ.ப.க. தமிழ்ப் பேரகராதி,- "நாகம்" என்பது punnāga என்னும் சமற்கிருதச் சொல்லினின்று தோன்றியுள்ளதாக(!) மூலங்குறித்துவிட்டு (அப்படியொரு வடிவம், பிராகிருதத்தில் உள்ளதே தவிர- சமற்கிருதத் தில் இல்லை! அப் பிராகிருத வடிவமும் ''புன்னாகம்'' என்னும் தூய தமிழ்ச்சொல்லின் திரிபு!)- 1. சுரபுன்னை 2. புன்னை 3. ஞாழல்வகை 4. கஞ்சாங்கோரை 5. இலாமிச்சை வேர் என்றவாறு பொருளடக்கஞ் செய்து (நான்காம் மடலத்தின் இரண்டாந்தொகுதியை 16-11-30 அன்று- அதாவது- அறுபானாண்டுகளுக்கு முற்பாடேயே) குழப்பியது!

இவை ஒருபுறங்கிடக்க,— ''நாகம்'' என்னும் சொல்லுக்குப் பதினான்கு பொருட்பாடுகள் விரிவெய்தியுள்ள இன்றைய நிலையில், இந்நிலைத்திணையின் உண்மைப்பொருள் காணுதற்கு உறுதுணை மூல மாக நிற்கும்— புன்னையின் பொருளை அதனின் வேர் விளர்ச்சியை முதற்கண் விளங்கிச் செல்வது இன்றியமையாததாகும்!

1. (அ) புன்னை

புய்= துளைக்கருத்து மூலவேர்

புய் > பொய் = துளை

பொய் > பொயி > பொழி = துளைவழி ஒழுகு, சொரி

பொய் > பொயி > பொசி = ஒழுகு, கசிவுறு
"புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்" [வாக்கு: 10:2]

புய் > புய் + அல் > புயல் = பொழியும் மழை, நீர், முகில்
"புயலென்னும் வாரி வளங்குன்றிக் கால்" [குறள்: 14]

புயல் = நீர்
"மா மேகம் பெய்த புயல்" [சீவக: 2476]

புயல் > (புஞல்) > புனல் = நீர்
"தண்புனல் பரந்த" [புறம்: 7:11]

புய் > புய்யை > புஞ்ஞை > புன்னை

[ஒ நோ: 1. (யகர ஞகரத் திரிபு)
மய் > மய் + (ய்) + இல் > மய்யில் > மயில் = கருநிறப்பறவை
மய் > மய் + (ய்) + ஐ > மய்யை > மஞ்ஞை = மயில்
"மஞ்ஞை போல் ஏங்கி அழுதாளுக்கு"
[சிலப்பு: 9:24]

2. (யகர-ஞகர-னகரத் திரிபு)

[2-1] முய் > முய்யை > முஞ்ஞை
[புறம்: 197:11]
முஞ்ஞை > முன்னை

[2-2] அய் > அய்யை = தாய்
அய்யை > அஞ்ஞை = (தாய்)
அஞ்ஞை > அன்னை = தாய்]

புன்னைக்காயின் (புன்னங்காயின்) விதையினின்று நெய்யைப் பிழிந்து விளக்கெரிக்கலாம்! அந் நெய்க் கசிவுக்குரிய விதையையுடைய காய்களை உடைமையால் இம்மரம் [புய் > புய்யை > புஞ்ஞை] > புன்னை என்றவாறு பெயர் பெற்றது!

''படுகாழ் நாறிய பராரைப் புன்னை
அடுமரல் மொக்குளின் அரும்புவாய் அவிழப்

பொன்னின் அன்ன தாதுபடு பன்மலர்
சூடுநர் தொடுத்த மிச்சில் கோடு தொறும்
நெய்கனி பசுங்காய் தூங்கும்......''
[நற்: 278: 1-5]

அக்காலத் தமிழகத்தில் குறுக்கை என்னும் நகரிலிருந்து ஆண்டு வந்த 'திதியன்' என்னும் கடைக் கழகக் காலக் குறுநில மன்னன் ஒருவனின் காவல்மரமாக இருந்த பெருமையும் இப் புன்னைக்கு உண்டு!

நெய்தற்பாங்கான கடற்கரை ஓரங்களிலும் உப்பங்கழிக்கரைகளிலும் புன்னை ஓங்கி வளருந் தகைமையது! இக்கால் தோட்டங்களிலும் இவை வளர்க்கப் பெறுகின்றன! அன்றும் இவ்வாறு வளர்ந்தன!

புன்னங்காயிலுள்ள விதையுள் செறிவுற்றிருக்கும் நெய்யையும் இதனைப் பிழிகையில் நேரும் கனிந்தொழுகலையும் அடிப்படைகளாகக் கொண்டே- ''புன்னை'' என்ற பெயரே சூட்டப்பெற்றுள்ளது.

புன்னைமரத்தின் தோற்றம் நீலநிறத்தையுடையது.

[1-அ-1] ''நீல்நிறப் புன்னைக் கொழுநிழல் அசைஇ''
[நற்: 4:2]

[1-அ-2] ''நீல்நிறப் புன்னைத் தமிஒண் கைதை'' [நற்: 163:8]

புன்னையின் பச்சையிலைகள் நீலநிறத்தன போலவே கரும்பச்சை நிறத்தையுடையனவாகப் பொலிந்திலங்குவன!

[1-அ-3] ''......................கருங்கோட்டுப் புன்னை
நீலத்து அன்ன பாசிலை'' [நற்: 249:1-2]

புன்னை மரத்தின் தாள்பகுதியாகிய அடிமரம் கரிய நிறத்தையுடையதாயிருக்கும்.

[1-அ-4] ''கருந்தாட் புன்னை'' [நற்: 231:7]

[1-அ-5] ''புன்னை மாஅரை மறைகம் வம்மதி''
[நற்: 307: 6-7]

(உரை: கரிய புன்னையின் அடிமரத்தின் பின்னே சென்று மறைந்து கொள்வோம்! வருவாயாக!...)

புன்னை மரத்தின் கிளைகள் கரிய நிறத்தை உடையனவாயிருக்கும்.

[1-அ-6] ..."கருங்கால் வெண்குருகு...கருங்கோட்டுப் புன்னை"
[நற்: 67:3-5]

(1-அ-7) "சிறுவெண் காக்கை கருங்கோட்டுப் புன்னை தங்கும்"
[ஐங்: 161:1-2]

(1-அ-8) "கருங் கோட்டுப் புன்னை" [நற்: 311:9]

(1-அ-9) "இருப்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை"
[நற்: 249:1]

மற்ற மரங்களுக்கிடையில் தோன்றும் புன்னையின் தோற்றம் முற்றுங் கரியதாகவே காட்சியளிக்கும். அந்த அளவிற்கு இதனின் இலைகளும் கிளைகளும் அடிமரமும் கருமைநிறந் தோய்ந்தவாறு காணப் பெறும். "இரவு போன்ற இருண்ட நிறத்தையுடைய புன்னை"- என்றவாறு நற்றிணைப் பாட்டொன்றில் தெளிவுற உவமித்தார்- உலோச்சனார் என்னும் கழகப் புலவர்!

[காண்க:] [1-அ-10] "எல்லி யன்ன இருள்நிறப் புன்னை"
[நற்: 354:5]

புன்னை = Calophyllum inophyllium

புன்னை > (Sinhalese) pūna > (English) poon

[காண்க : poon = East- Indian tree of genus Calophyllum
poon-oil [from seeds used in medicine and for lamps]
[f. sinh. pūna]
[page: 858. C.O.D.]

தமிழிய மொழிகளில் இச் சொல்லின் பதிவுகள் :

Malayalam: punna = calophyllum inophyllium
Kannada : punnike, poone, honne
(புன்னை மரம் > honneya mara)
Telugu : ponna

1-ஆ. வழை - சுரபுன்னை

வள் = 1. வளம் ''வள்ளிதழ்மாலை'' [சீவக: 2732]

2. நெருக்கம் [வின்சிலோ]

வள் > வளை > வழை = வளமை, வளப்பம், செழுமை, புதுமை

வழை = புதுமை

''பாக நிறைவழை மது நுகர்பு களிபரந்து''

[பரி: 11:66]

வழை + (ச்) + சு > வழைச்சு = வழை. புதுமை. இளமை

''வழைச்சற விளைந்த'' (பெரும்: 280)

[நச்.உரை: இளமையறும்படி முற்றின...]

நறுமணம் மிக்க மலர்களை உடையது இப் புன்னை வகை மரம்! ஆய்அண்டிரனின் முடிப்பூவாக ஒரு காலத்தில் விளங்கியது. மலைக் காடுகளில் ஓங்கி வளரும் இம் மரம்- காட்டாற்றுக் கரைகளிலும் செழித்து வளரும் தகைமையது.

மலைப்பகுதிகளில் மிகச் செறிந்தடர்ந்து வளரும் இதன் தகைமையை,· வழை அமல அடுக்கத்து (அகப்: 328:1), வழையமல் சிலம்பில் (நற்: 222:7), வழைவளர் சாரல் (கலி. 53:1) என்றவாறெல்லாம் பயிலப் பெறும் கழக இலக்கிய ஆட்சிகளிலும் தெளியலாம்!

எப்பொழுதும் செழிப்பாகவும்- புத்தம்புதிய வளத்தோற்றத்தோடு தோன்றும் மரமாக இது இருந்தமையால்- (வள் > வளை >) வழை என்றவாறு பெயர் சூட்டப்பெற்றது. பிற மரங்கள் வறட்சியால் வாடிப் போனாலுங்கூட இது வாடாது; வளப்பம் தளராது. இதனை ''வறன் உறல் அறியா வழை'' எனவரும் கலித்தொகைப் பாட்டொன்றின் பதிவில் தெளியலாம். [கலி: 53:1]

மலையுள் அடர்ந்த காடுகளினூடாகச் செல்லும் அருநெறி வழியாக ஓரிடத்தினின்று பிறிதோரிடத்துக்குச் சென்றுகொண்டும்- வந்து கொண்டுமாக இயங்கிய அக்கால மக்கள்- அவ் வழிகளின் ஓரத்திலும் உட்புறத்திலுமாகச் செழிப்புற அடர்ந்து வளர்ந்து நின்றிருந்த இம் மரத்தைப் பாலைநிலத்துக்கே உரிய சிறப்புச் சொற்பாங்கோடு—காடு (பு.வெ. 2.3), அருநெறி (திவா.), வழி (பிங்.) என்றவாறான பொருட் பாடுகளிலும் வளர்ந்து பொதிந்துநின்ற ''சுரம்'' என்னும் சொல் வழக்கைச் சேர்த்துச் ''சுரபுன்னை'' என்றவாறும் இவ்வழையை வழங்க-

லாயினர்! இது புன்னை வகையுள் ஒன்றானதால் புன்னையினின்றும் வேறு பிரித்துணர்கின்ற வகையில், அடையொடு இவ்வாறு வழக்குற்றது! வறட்சியே அறியாத இம் மரம் நீர்வளம் உள்ள பகுதி எதுவாயினுங் கூட வளமுற வளர்ந்தோங்கும்! எனவே, இது ஆற்றங்கரையில் வளர்கின்ற தாகக் காட்டும் காட்சிகளும் இயற்கையானவைதாம்!

[காண்க:]

[1-ஆ-1] ''கரையன சுரபுன்னையும்'' [பரி: 11.17]

[1-ஆ-2] ''நறவம் சுரபுன்னை'' [பரி: 12:90]

சுரபுன்னை = Rottleria tinctoria

சுரபுன்னை > (கன்னடம்) Sura honne = Rottleria tinctoria

1-இ. நாகம்

புன்னை மரம் வேறு; சுரபுன்னை என்னப்பெறும் வகையுவேறு; நாகம் என்னப்பெறுவது வேறு.

நிலைத்திணைப் பெயர்களால் இவற்றைத் தெளிவுபடக் கூறுவ தானால் கீழ்க்குறித்தவாறு அடங்குவனவாகும்:

புன்னை = Calophyllum inophyllum

சுரபுன்னை (வழை) = Rottleria tinctoria

நாகம் = Ochrocarpus longifolius

ஒரு நிலைத்திணையின் வகை வேறுற்ற மரங்கள் இவை!

புன்னை மரத்தின் கரிய தோற்றக்காட்சியைக் கழகக்கால் இலக்கிய வழக்கிற் பதிவுற்றிருந்த பத்து இடங்களை முன்னீடாகக் கண்டோம். பத்தாம் எடுப்புக் காட்சியாக ''இரவு போன்ற இருண்ட நிறத்தையுடைய புன்னை'' எனும் பொருள்படவரும் ''எல்லி யன்ன இருள்நிறப் புன்னை'' (நற்: 354:5) என்னும் வரி- புன்னையின் முழுத் துலக்கக்காட்சி!

இவ்வாறான இருள்நிறத் தோற்ற அடிப்படையே- புன்னையின் வகைவேறுபாடுற்ற பிறிதொரு மரத்திற்குக் கருமை என்னும் நிறக்

கருத்து அடிப்படையில் (யா > யா + கு > யாகு > ஞாகு > நாகு > நாகு + அம் > நாகம் என்றவாறாகப் பெயர் குறிக்கப்பெற்றுள்ளது.

"நாகம்" என்பதை இதற்குரிய முழுமையான சிறப்புப் பெயராகச் சுட்டிவரத் தொடங்குகையில்—"நாகம்" என்னும் சொல்லுக்குப் பல்வேறு பொருட்பாடுகள் எங்கும் விரிவாக்கம் எய்திநின்ற அன்றைய நிலையில்- இதனை மிகத் தெளிவாக வேறுபிரித்து உணர்த்துதற்கெனப் — புன்னை வகையைச் சார்ந்த மரமாதலை நன்கு உளங்கொண்டவராய்ப்- புன்னையையும் நாகத்தையும் இயைபுறுத்தி- அதாவது (புன்னை + நாகம் >) புன்னாகம் என்றவாறொரு கூட்டுச் சொல்லாக்கிக் கூறித் தொடர்புறுத்தி அதன்வழியாகப் புன்னையினின்றும் வேறுபடுத்திச் சுட்டிநின்ற தமிழமக்களின் சொல்வழக்குப்பாங்கு மிகவும் ஒண்மையும் தெண்மையும் (தெளிவும்) உடையதாகும்!

புன்னாகம் > (Prakrit) punnāga

பிராகிருதத்தில் நேர்ந்த வேறு திரிபுவடிவங்கள் :

1. punnāya 2. punnāma

> (Sanskrit) pumnāga = [Rottleria tinctoria or Calophylum inophyllum?]

pumnāman = [Rottleria tinctoria]

[Page: 631. M.M. Williams-Sanskrit & English Dictionary]

[குறிப்பு: 1. இவ்விரு வடிவங்களும்,- "புன்னாகம்" என்னும் செந்தமிழ்க் கூட்டுச்சொல்லினின்று பெற்ற பிராகிருதத் திரிபுச் சொற்களின் வழியாகச் சமற்கிருதம் கடன்கொண்டு அகரமுதலிகளில் மட்டும ஏற்றிவைத்துக் கொண்டவை! இப் பதிவீட்டு உண்மையை மானியர் வில்லியம்சு அறிஞர் பெருமகன் "L" (Lexicographers only) என்னும் முன்னெழுத்தால் முன்வைத்துள்ளார்!] [2. உண்மை இவ்வாறிருக்க, punnāga என்றவாறு எழுதி, இது சமற்கிருதச் சொல்லென்றும் இதனின்றே "நாகம்" என்னும் சொல்லே வழக்கெழுந்தது என்னும் மூலங் காட்டியுள்ள குறும்புப் போக்கைச் செ.ப.க.அகரமுதலியுள் காணலாம்!] [3. சமற்கிருத அகரமுதலியுள் குறிக்கப்பெற்றுள்ள நிலத்திணைப் பெயரீடுகள்- இரண்டும் பிழையானவை என்பதையும் இவ்விடத்தில் உளங் கொள்ளவேண்டும்!]

நாகம் வேறு! சுரபுன்னை என்னும் வழைவேறு! இதனை "ஒளி திகழ் உத்தி உருகெழு நாகம்"—அகருவழை" என்றவாறு வரும் பரிபாடல் வரிகள் (பரி: 12:4-5) தெளிவுபடுத்துகின்றன! [மேலுங்காண்க : "நல்லிணர் நாகம் நறவம் சுரபுன்னை" பரி: 12:90]

அதுபோலவே, நாகம்வேறு—புன்னை வேறு என்பதைக் குறிஞ்சிப் பாட்டில் "கடியிரும் புன்னை நரந்தம் நாகம்" எனவரும் வரிசைப்பாட்டு வரி (குறிஞ்சி. 93:94) விளக்கமுறுத்துகின்றது!

[புன்னைப்பெயரையும் நாகப்பெயரையும் சேர்த்து- நாகம் என்னும் பெயர்க்குள்ள பன்வகைப்பட்ட பொருட்பாடுகளின் மயக்கமொழித்தற்குப் பயன்படுத்திய (புன்னைநாகம்) > புன்னாகம் என்னும் கூட்டுச் சொல்லை — தெளிவுச் சொல்லைக் குறிஞ்சிப்பாட்டெழுதிய கபிலர் அதனையும் ஒரு தனி வகைப்பட்டதாக (நாகம் என்னும் சொல்லையும் சுட்டிவிட்டு) வரிசையில் வைத்தது- வழுவுடையதேயாகும்!]

யா > யா + கு > யாகு > ஞாகு > நாகு > நாகு + அம் > நாகம் =
கரிய நிறத் தோற்றத்தையுடையதாகிய புன்னாகம்

(1-இ-1) ''கொழுங் காந்தள் மலர் நாகத்து'' [பொருந: 209]

(1-இ-2) ''சுரும்புண நறுவீ யுறைக்கு நாக நெடுவழி'' [சிறுபா: 88]

(1-இ-3) ''நாகு முதிர் நாகத்து'' [சிறுபா: 108]

(1-இ-4) ''நறுவீ நாகமும் அகிலும் ஆரமும்'' [சிறுபா: 116]

(1-இ-5) ''நாகந் திலக நறுங்கா ழாரம்'' [மலை: 520]

நாகம் > (Sanskrit) nāga = name of a plant
(Pali) nāga
(Prakrit) nāya
(Sinhalese) nāgaha

2. நாகம் = கரியநல்லபாம்பு, கருநல்லரா

யா > யா + கு > யாகு > ஞாகு > நாகு > நாகு + அம் > நாகம்

(2-1) ''நீல நாக நல்கிய கலிங்கம்'' [சிறுபா: 96]

(2-2) ''திருமணி யுமிழ்ந்த நாகம்'' [அகம்: 138:17]
(2-3) ''வேக வெந்திறல் நாகம் புக்கென'' [புறம்: 37:2]
(2-4) ''எலிப்பகை நாகம் உயிர்ப்பக் கெடும்'' [குறள்: 763]
(2-5) ''பை அவிந்த நாகம் போல்'' [நாலடி: 66:3]

இந்திய- ஆரிய மொழிகள் சிலவற்றில் இச்சொல்லின் பதிவுகளாவன :

நாகம் > (Sanskrit) nāga = snake
(Pali) nāga = snake
(NiDoc) nāga
(Prakrit) nāya
(Gypsi or Romani) nā
(Oriya) naa
((Sinhalese) nay, nā, nāya = snake
(Bashkarīk) nāng

தமிழ்மொழியுட் பயன்படுத்தப்பெறும் கூட்டுச் சொற்களிற் சில:

நாகக்கல் = நாகவுரு அமைந்த சிலை
நாகணை = திருமாலின் நாகப்படுக்கை
"நாகணைமிசை நம்பரர்" [திவ். நாச்.10 10]
நாகணையினாள் = திருமால்
நாகதாளி (நாகத்தாளி) = சப்பாத்துக்கள்ளி, நாகம் படமெடுத்தாற் போன்ற தோற்றத்தை யுடைய கள்ளிச்செடி
நாகக்கள்ளி = நாகத்தாளி
நாகத்தாளிக்கள்ளி = நாகத்தாளி
நாகப்பகை = நாகத்துக்கு எதிரியாகிய கலுழன்
"நாகப்பகைக் கொடியானுக்கு"
[திவ். திருப்பல்: 8]
நாகப்பாம்பு = நாகம், கருநல்லரா
"நாகப்பாம்பு பைத்தனைய" [சீவக: 561]
நாகப்பிரம்பு = நாகப்பாம்பு போன்ற ஒருவகைப் பிரம்பு [வின்சிலோ]
நாகமல்லி = நாகம் போல் பரவி வளரும் கொடி வகை
நாகவல்லி = வெற்றிலை

நாகவடம் = நாகவுருக் கொண்ட தோளணிவகை

நாகத்தம் = இரண்டு கால்களையும் கழுத்தில் ஏறிட்டு வைத்துத் தலை கால்களுக்குட்படுமாறு உடலை வளைத்து நிற்கும் இருக்கை வகை "நாகத்த மிடாதானம்" [தத்துவப்: 107]

3. நாகம் = நற்றூசு

''நாகமென் கிளவி நல்லிழை யாடையும்''
[பிங்: 3717:1)

[நாகத்தின் உரியாகிய தோற்சட்டைபோன்ற மெல்லிய ஆடை வகை]

4. நாகம் = நஞ்சு

''அதகங் கண்ட பையண நாகம்போல'' [சீவக: 403]

5. நாகம் = மஞ்சுள்ளி நச்சு

[A prepared arsenic] செ. ப. க. த. பே: மடலம்: 4 பக்: 2197]

6. நாகம் = நாகப்படத்தில் அமைந்துள்ள கோட்டினையொத்து மாட்டு வாலில் தோன்றும் தீச்சுழி வகை [அபி. சிந்]

7. நாகம் = யானை

யா > யா + கு > யாகு >ஞாகு> நா கு> நாகு+அம்> நாகம் = யானை, கரி

(7-1) ''கொடிபிணங் கரில இருள்கொள் நாகம்'' [அகம்: 73:12]

(உரை: கொடிகள் பின்னிய சிறு காட்டினிடத்தவாய இருண்ட நிறத்தையுடைய யானையின்...)

(7-2) ''இகன்மீக் கூறும் ஏந்தெழில் வரிநுதற்
பொரு தொழி நாகம்'' [நெடு: 116-117]

(7-3) ''காள மேகமு நாகமுந் தெரிகில'' [கம்பரா. சித்திர: 12]

நாகம் > (Sanskrit) nāga = elephant
nāga danta = elephant tusk
(Pali) nāga = elephant
(Prakrit) nāya = ,,
(Sinhalese) nā = ,,

நாகமுகன் = யானை முகத்தோன்
''நாகமுக னம்பிக்கு நவிலலுற்றான்''
[பெரியபு. திருமுறை: 11]

8. நாகம் = கருங்குரங்கு [யாழ். அக.]

நாகம் = குரங்கு
''வேடச் சிறா ருழைத் தோற்பறையை
நாகம்பறித்துலர் வாகை நெற்றாற் கொட்ட''
(திருப்போ: சந். அலங்: 14)

9. நாகம் = விண், காயம்

(ஒ.நோ:) கய் = கருமைக்கருத்து மூலவேர்

கய் > காய் > காயம் = கரிய நிறத்ததாகிய வான், நிலவன்

ஒ.நோ: கய் > காய் > காய் + ஆ > காயா = கரிய மலர் களை உடைய மரவகை

கரி பரந் தன்ன காயாஞ் செம்மலொடு'' (அகம்: 133:8)

[காண்க: பொருந: 201, சிறுபா: 165, நற்: 371:1-5. கலி: 101:5-6]

வானம் கரியது; நீல்நிறமுடையது. காராகிய முகில் வறிதாகிக் கிடக்கையில் நீலநிறத்ததாகவும் கமஞ்சூல் கொண்டு காழ்த்திருக்கையில் கருங்கரிய நிறத்தாகவும் தோன்றும்! காண்க: "கார்வான்' (புறம்:147:3) கருமையும் நீலமும் ஓரளவுக்கு ஒவ்விய தோற்றத்தையுடைமையால்- பண்டையில் கருமையை நீலமென்னலும் நீலத்தைக் கருமையென்னலும் பொதுப்பட்ட வழக்காறுகளாகவே இருந்து வந்துள்ளன!

"கய்" என்னும் கருமைக்கருத்து மூலவேரினின்று கய் > காய் > காயம் என்றவாறு- விசும்பைக் குறித்த சிறப்புச் சொல்லொன்று தோற்று விக்கப் பெற்றது!

(9-1) ''விண் என வரூஉம் காயப் பெயர்'' [தொல்.எழுத்:8:10]

(9-2) ''வளிவழங்கு திசையும்
வறிது நிலைஇய காயமும்'' [புறம்: 20:3-4]
[மே.கா: புறம்: 30:3-4]

விண் கரியது; நீலநிறத்தது என்னும் தெளிவுக்காட்சியை மேலுந் துலக்கமுற விளக்கும் பல இடங்கள் கடைக்கழகக் கால இலக்கிய வெளிப் பாடுகளிடையே உள்ளன!

[காண்க: [9-0-1] "நீல்நிற விசும்பின் வல்ஏறு சிலைப்பினும்"
[பெரும்: 135]

[9-0-2] "நீனிற விசும்பி லமர்ந்தன ராடும்''
[மதுரை: 581]

[9-0-3] "நீல்நிற விசும்பின் மீனொடு புரைய''
[நற்: 199:9]

[9-0-4] "நிலவே, நீனிற விசும்பிற் பல்கதிர் பரப்பி''
[நற்: 348:1]

[மே.கா: மதுரை: 678, பட்: 67]

விசும்பு கரிய நிறத்தது [நீல நிறத்தது] என்னும் கருத்துணர்வுப் போக்கினாலேயே "யா" என்னும் கருமைக்கருத்து மூலவேரினின்று யா> யா+கு> யாகு> ஞாகு> நாகு> நாகு+அம் >நாகம் என்னும் சொல் உருவாக்கப் பெற்றுள்ளது.

நாகம்= விண்

''நீடு நாக முடு மேக மோட" [கம்பரா. கலன்காண்: 37]

நாகம்= விசும்பு

''நாகமென் கிளவி,..........விசும்பும்'' [பிங்: 3717:1-3]

நாகம் என்றவாறு கரிய விண்ணைக் குறித்தெழுந்த சொல், பின்னர்ப் பொருள் விரிவாக்கம் எய்திப் படிப்படியே முகிலையும்- துறக்க வுலகத்தையும் குறிக்கலாயிற்று.

10. நாகம்= முகில்
''நாகமே லாயுலவென் னாகமே'' [கொண்டல்விடு தூது]

11. நாகம்= விண்ணுலகம், துறக்கவுலகம்,
"நாகத் தன்ன பாகார் மண்டிலம்" (புறம்: 367:1)

11. அ. நாகம்= துறக்கம் [திவா.]
''எம்மை நாகமே லிருத்து மாற்றால்''
[கந்தபு. திருவிளை: 99]

[விண்ணைக் குறித்தும்,—அதன் வழியே முகிலைக் குறித்தும்- பின்னர் விண்ணுலகு[!] என்னும் கற்பனையுலகத்தைக் குறித்தும் விரி வெய்திய ''நாகம்'' என்னும் செந்தமிழ்ச் சொல்லினின்று- இந் நாவலந் தீவுட் புகுந்து நிலைப்பெய்திக் கொண்டிருந்த அன்றைய மேலைப் பார்ப்பனர் ''nāka'' என்றவாறு திரிபுறுத்தி- அதனைக் கொண்டே பிறர் தம்மை வழங்கி நிற்குமாறும் செய்தனர்!

காண்க: ''வழுத்த வரங்கொடுப்பர் நாகர்'' [நான்மணி: 62]

இம் மண்ணுள் உள்நுழைந்தபோது- எழுத்து மணம் அறியா திருந்த அன்னோர்- அன்றைய நாவலந் தீவிற்கண்ட எழுதுமுறையை உட்கொண்டு தத்தமர்க்குள் பயின்றும் பயிற்றியும் கொள்ளுவதற்கெனத் தேவர் என்றவாறு பொருளூட்டந் திணித்த ''nāka'' எனும் அத் திரி புறுத்திய சொற்கொண்டே ''nākara'' என்றவாறு தாம் கவர்ந்து வகுத்த வடிவப் போலிகளின் எழுத்தமைவுத் தொகுதியைக் குறிக்க லாயினர்!

nāka > nākara = 'நாகரி' எழுத்துத் தொகுதி

[காண்க: ''நாகர நந்தி முதலிபியை''
[சிவதரு. சிவஞானதா:32]

'நாகரி' என்னும் சொல்லாக்கத்திற்கு மேலும் வலிவும் பெருமை யும் உண்டாக்கக் கருதித் "தேவன்" என்னும் செந்தமிழ்ச் சொல்லினின்று திரிபுறுத்திய dēva என்னும் வடிவுகொண்டு முற்பிணித்து dēva-nāgari— 'தேவ நாகரி' என்றவாறு அவ்வெழுதுமுறை பெயர்வழங்கி நிற்குமாறும் செய்தனர்!

12. நாகம்= காரீயம், [கருப்பு ஈயம்]

யா > யா + கு > யாகு > ஞாகு > நாகு > நாகு + அம் > நாகம்

"நாகமென் கிளவி..............காரீயமு மாகும்" [பிங்: 3717:1...4]

நாகம்+மணல்>நாகமணல்= காரீயங் கலந்த மணல்

[=ஈயங்கலந்த மணல் [வின்சிலோ]

13. நாகம்= மலை

யா>யா+கு>யாகு>ஞாகு>நாகு

நாகு=மலை [யாழ். அக.]

நாகு+அம்>நாகம்=மலை

[காண்க:] "பொன்னாகமும்" [கம்பரா.கார்முக: 32]

"நாகமென் கிளவி...........வெற்பும்" [பிங்: 3717:1...2]

யா : (கருமைக்கருத்து மூலவேர்)

யா > யா + வு > யாவு > யாவு + அல் > யாவல் > ஞாவல் > நாவல்

நாவல்:

1. நாவலின் கரிய கனி
2. கரிய கனிகளைக் கொண்ட நாவல்மரம்

எருமை மேய்க்கும் சிறுவனாகத் தோன்றிய முருகக்கடவுள்,— நாவல்மரத்தில் ஏறிக்கொண்டு— "சுட்டபழம் வேண்டுமா?", "சுடாதபழம் வேண்டுமா?" என்றவாறு ஔவையாரிடம் கேட்டான்! நாவலின் கீழிருந்து அண்ணாந்து பார்த்த ஔவையார் — அம் முருகன் கேட்ட கேள்விகளின் உட்பொருளை அறியாது கலங்கியவாறே—"சுட்ட பழமே தருக! என்றாள்! முருகன் நாவற்கிளையை உலுக்கினான். கனிந்திருந்த கனிகள் கீழுதிர்ந்தன! விழுந்த வேகத்தில் அக் கனிகள் கட்டுக் குலைந்ததோடு- மரத்தின் கீழிருந்த மணற்பரப்பின் துகள்களையும்- அவற்றின் சிதைவுற்ற பகுதிகளில் செறிவுறுத்திக் கொண்டன! அவற்றில் ஒன்றைக் கையிலெடுத்த ஔவையார்—அதனில் ஒட்டியிருந்த மணல் துகள்களை, நீக்கியுண்பதற்கென வாயருகில் வைத்து வலித்தமாக ஊதினாள்! ‘ களுக் ’ கெனச் சிரித்த இளமுருகன், "ஔவையே! பழம் சுடுகின்றதா?" என்றான்! ஔவையாருக்குப் பொருளும் விளங்கியது—பொருள்தந்த சிறுவனின் உருவும் விளங்கியது!—இவ்வாறு கவினுறக் கதைத்த கதையொன்றை நாம் முன்னரேயே சுவைத்திருக்கின்றோம்!

கீழ் விழுந்தால்—விழுந்த வேகத்துக்கும் கனிவுக்கும் தக்க அளவில் குலைவுறுவதோடு—குலைவுற்ற பகுதிகளில் துகளொற்றி நிற்கும் இந் நாவற் கனியைப் பற்றிய அழகிய பழமொழிப் பாவொன்று பதினெண் கீழ்க்கணக்குள் பதிவெய்தியுள்ளது! அது- இது!

"கற்றானும் கற்றார்வாய்க் கேட்டானும் அல்லாதான்
தெற்ற உணரான் பொருள்களை!- எற்றே,
அறிவுஇலான் மெய்த் தலைப்பாடு? பிறிது இல்லை
நாவற்கீழ்ப் பெறற கனி! [பழமொழி: 138]

அறிவில்லாதான் அறிவுநூலுணர்த்தும் மெய்ப்பொருள்களை அறிந்து கொண்டது எதுபோலெனின்,- நாவல்மரத்தின் கீழாகக் குலை

வுற்றுத் தூசு தும்புகளொடும் மணல் துகள்களொடும் ஒட்டிக்கொண்டு வீழ்ந்து கிடக்கும் நாவற்கனியினைப் பெற்றுச் சுவைத்த நிலையை ஒத்ததே!—என்றவாறு- ஓர் அழகிய உவமைசான்ற பொருட்பாடொன்று இப்பாட்டுள் ஒன்றியிருக்கின்றது!

இந் நாவற்கனி நம் மண்ணுக்குரியது! கன்னங்கரியது! கன்னங் கருமையே இக் கனிக்குப் பெயர்சூட்டியமைக்கான கருப்பொருள்! "கருங் கனி" என்றவாறு இந் நாவற்கனியைச் சிறப்புறச் சுட்டும் இலக்கிய வழக் கையும் இவ்விடத்தில் நாம் உளங்கொள்ள வேண்டும்!

[காண்க] கருங்கனி = நாவல்

"கண்டன ளென்னைக் கருங்கனிச் சிதைவுடன்"

(மணி: 17:36)

பனங்கனியானது தேர்ந்து முற்றிய பின்னர் மிகவும் கறுத்துத் தோன்றும்! அப் பனங்கனியை யொத்த மற்றொருவகைக் கருங்கனி [இருங்கனி] என்றவாறு- இதனின் நிறச் சிறப்பு நிலையை மணிமேகலை சுட்டுகின்றமையையும் இவ்விடத்திற் கருதுதல் வேண்டும்!

[காண்க:]

''பெருங்குலைப் பெண்ணைக் கருங்கனி யனையதோர்
இருங்கனி நாவற் பழமொன் றேந்தி'' [மணி: 17; 29-30]

கழக இலக்கியங்களுள் இந் நாவல் என்னும் சொல் பதிவெய்தி நிற்கும் இடங்களில்- கருமை மூலமாகிய சொற்பிறப்புக் காரணக் கரு மிகத் தெளிவுற ஒளிர்கின்ற உண்மையைக் காணலாம்!

(1) "புன்கால் நாவல் பொதிப்புற இருங்கனி [நற்: 35:2]

[உரை : புல்லிய காம்பையுடைய நாவலின் களிபொருந்திய புறத்தினையுடைய கரிய கனி...!]

(2) "காலின் உதிர்ந்தன கருங்கனி நாவல்" [மலை: 135]

[உரை : காற்றாலே- கரிய நாவற்பழங்கள் உதிர்ந்தன...]

(3) "கருங்கனி நாவல் இருந்து கொய் துண்ணும்"

[புறம்: 177:11]

[உரை : கரிய நாவற்பழத்தைப் பறித்து இருந்துண்ணும்...]

யா > யா + வு > யாவு > யாவு + அல் > யாவல்

யாவல் > ஞாவல் (யகர ஞகரத் திரிபு)

ஞாவல் > நாவல் (ஞகர நகரத் திரிபு)

வகர-ககரத் திரிபின் வழி "நாவல்" என்பது மக்கள் வழக்கில் "நாகல்" என்றவாறு பயிலப்பெறுகின்றது.

[காண்க:] நாவல் பழம் > நாகப்பழம்
நாவல்மரம் > நாகமரம்

நாவலிற் பலவகையுள! (நிலைத்திணையியலர்-) புதலியலர் (Botanist) இவ்வகைகளை நன்கு தெளிவுபடுத்தியுள்ளனர்.

(1) நாவல் : Syzygium jambolanum [Eugenia jambolana என்பது முன்னைய பெயர்.]

(2) மலைநாவல் : Eugenia anottiana [Arnott's mountain black-plum tree]

(3) பெருநாவல் : Eugenia jambos

(4) சிறுநாவல் : Eugenia rubicunda

(5) நீர்நாவல் : Eugenia gardeneri

(6) வெண்ணாவல் : Eugenia hemispherica (or) Eugenia zylanica

[1-ஆ] நாவலந் தீவு

நாவல் மரங்கள் மிகுவாகச் செழித்து அடர்ந்திருந்த பொழிலாகப் பண்டைய இந்தியா இருந்தமையின்- அக்கால் இது "நாவலந்தீவு" என்னப் பெற்றது.

"நாவலந் தீவே..... ......எனத் தீவேழே
ஏழ்பெருந் தீவும் ஏழ்பொழி லெனப்படும்" [திவாகரம்]

1. பனிமலையும் வட இந்தியாவும் இல்லாத முந்தைய பகுதி

2. பனிமலையோடு கூடிய இந்தியாவும் பழம்பாண்டி நாடும் இருந்த ஒட்டுமொத்தப் பகுதி 3. பழம் பாண்டி நாடு இல்லாத இந்தியா என மூந்நிலைகளைக் கொண்டது ''நாவலந்தீவு'' என்பார் பாவாணர் அவர்கள். (காண்க: தமிழ் வரலாறு: பக்: 3)

நாவலந்தீவு : "நாவலந்தீ வாள்வாரே நன்கு" (ஏலாதி: 56)

நாவலந்(தீவு + அம் > தீவம் = நாவலந்தீவு
"நாவலந் தீவம் போற்றி" [திருவாலவா. கடவு: 8]

நாவல் + அகலிடம் > நாவலகலிடம் = நாவலந்தீவு
"நாவலகலிடத்து ஞாயிறனையாய்" [பு.வெ:8:17]

நாவல் + பொழில் > நாவற்பொழில் = நாவலந்தீவு
"பூமலி நாவற் பொழிலகத்து" [பு.வெ: 9:38]

நாவல் + அம் + தண் + பொழில் > நாவலந் தண்பொழில் = நாவலந்தீவு

❁ "நாவலந் தண்பொழில் வீவு இன்று விளங்க" (பெரும்: 465)
[நச். உரை: நாவலாற் பெயர்பெற்ற அழகினையுடைய குளிர்ந்த உலகமெல்லாம் கேடின்றாக விளங்கும்படி...]

❁❁ "நாவலந் தண்பொழில் மன்னர்" (சிலம்பு: 17:1-3)
[உரை: நாவலந் தீவிலுள்ள ஏனைய அரசர்களும்...]

நாவல் மரங்களின் செறிவிடம் என்னும் பொருட்காரணமாகவே "நாவலந்தீவு" என்னும் பெயர் சூட்டப் பெற்றது என்பதை- "நாவல்" தழீஇய நானிலம் " [திருக்கோ: 19], நாவலொடு பெயரிய மாபெருந் தீவத்து" [மணி: 11:107], "நாவல் ஓங்கிய மாபெருந் தீவத்து" [மணி: 1] என்றவாறு பல்வேறு குறிப்புகள் மெய்ப்பிக்கின்றன.

"யா" என்னும் கருமைக்கருத்து மூலவழியே [யா > யா + அம் > யாம் > யாம் + பு > யாம்பு >] சாம்பு என்றவாறு நாவல்மரத்தைக் குறித்துத் தமிழ மக்களின் வழக்கிலிருந்த சொல்லைத்- தம் வேதமொழிக்குள் "Jambu" என்ற ஒலிப்பமைப்பில் திரித்துப் பதித்துக் கொண்டனர்.

யா > யாஅம் > யாம் > யாம் + பு > யாம்பு > சாம்பு

சாம்பு + அல் > சாம்பல் = எரிபட்டுக் கரிதாகிய நீறு

"சுடுகாடான சாம்பல் அரங்கத்திலே" [பு.வெ: 9:43: உரை]

சாம்பல்>சாம்பர் [லகர-ரகரத் திரிபு]

[ஒ.நோ: குடல்>குடர்
பந்தல்>பந்தர்

சாம்பர்= சாம்பல்

"சாம்பர் அகலத்து அணிந்தாய் போற்றி" [தேவா: 967:4]

யாம்பு>சாம்பு= கரிய கனிகளையுடையதாகிய நாவல்மரம்

சாம்பு= நாவல் [தைலவருக்கச் சுருக்கம்]

மேலுங்காண்க: சாம்பு+அல்>சாம்பல்= நாவல் (மலையகராதி)

சாம்பு> (சம்பு) (skt) jambu

[நாவலைக் குறித்த-] "சாம்பு" என்பதன் சமற்கிருதத் திரிபான "Jambu" என்னும் சொற்கொண்டு—நாவலந்தீவை "Jambu-dvipa" என்றவாறும் குறிக்கலாயினர்!

[தீர்வு > தீவு > (skt) dvipa]

யா : (கருமைக்கருத்து மூலவேர்)

யா > யாஅம் > யாம் > யாம் + பு > யாம்பு > யாம்பு + இ > யாம்பி > ஆம்பி

ஆம்பி:

1. கரிய நிறத்ததாகிய காளான்
2. வெள்ளாம்பி [வெள்ளைக் காளான்]
3. நீர் இறைக்கப் பயன்படும் கருவி, இடா, பன்றிப்பத்தர்
4. பூட்டை (ஏற்றமரம்)
5. ஒலி

கரிய நிறத்தில் முளைத்தெழுந்த "காளான்" ஆம்பி என்னப் பெற்றது. "யா" என்னும் கருமைக்கருத்து மூலவேர் வழி இது முளைத்த செய்தியை (யா > யாஅம் > யாம் > யாம் + பு > யாம்பு > யாம்பு + இ > யாம்பி > ஆம்பி) மக்கள் வழக்கில் தொடர்ந்து வந்து பச்சிலை மூலிகை யகராதியுட் பதிவெய்தி நிற்கும் (யா > யாஅம் > யாம் > யாம் + அம் > யாமம் >)ஆமம் [காண்க: செ.ப.க.அ. பின்னிணைப்பு மடலம் :பக்:106] என்னும் சொல்லும், "கள்" என்னும் கருமைக்கருத்துப் பக்கவேரினின்று கிளைத்த [கள் > காள் > காள் + அம் > காளம் > காளன் >] காளான் என்னும் சொல்லும் உறுதிப்படுத்தி நிற்கின்றன!

காளான் :

கள் + அம் + கனி > களங்கனி = களாப்பழம் (கரியநிறப்பழம்)

கள் + அவு > களவு = களாப்பழம்
"களவும் புளித்தன விளவும் பழுநின" [அகம்: 394:1]

களவு > களா = களாப்பழம்
"தீம்புளிக் களாவொடு" [புறம்: 177:9]

களங்கனி = கரிய கனியையுடைய களா

(ஒ.நோ :) 1. "களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்"
[புறம்: 127:1, 145:5]

2. களங்கனி யன்ன கதழ்ந்து கிளருருவின்
வணர்ந்தேந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேரியாழ்"
(மலை: 36-37)

3. ".......................கேழல்
களங்கனி அன்ன பெண்பாற் புணரும்"
(ஐங்குறு: 264:1-2)

4. "களங்கனியைக் காரெனச் செய்தாருமில்"
(நாலடி: 103: 3-4)

கள் + அங்கு > களங்கு + அம் > களங்கம் = கருப்பு (திவா.)
களங்கம் = கறை, அழுக்கு, குற்றம்

கள் > காள் > காள் + அகம் > காளகம் = கருமை

❁ "காளக உடையினன்" [சீவக: 320]

❁❁ "காளக வுடையினள் காளி கூறுவாள்" (பாகவதம்: 10:1:81)

காளகம் > காழகம் [ளகர-ழகரத் திரிபு]
"நெடுங்கரைக் காழகம்" [மதுரைக்: 598]
[நச். உரை : நெடிய கரையையுடைய நீலநிறத்தையுடைய புடைவைகளிலே...]

காள் + அம் > காளம் = கருமை
"காளம் ஆகு இருளை" (சீவக: 2245)
காளம் : நஞ்சு (திவா.), முகில் (சதுரகராதி).

காள் + இ > காளி = கரியநிறத்தையுடைய பெண்தெய்வம், கொற்றவை

காள் + அம் > காளம் > காளன் > காளான் = கரிய ஆம்பி

யா > யாஅம் > யாம் > யாம் + பு > யாம்பு + இ > யாம்பி > ஆம்பி
= கரிய காளான்

(1) "ஆடுநனிமறந்த கோடுய ரடுப்பின்
ஆம்பி பூப்ப........." (புறம்: 164:1-2)

(2) "புனிற்றா எழுந்த ஆம்பிகள் இடறின"
(கம்பரா: 4,9,47)

(3) "சாம்பல் கண்டறியா வாய்பி பூத்த
எலிதுயில் அடுப்பு..." [காசிக் கலம்பகம்: 57]

(4) "ஆம்பியே............காளானாம்" [சூடா.நி: மகரவெது: 14]

"ஆம்பி"-என்னுமாறு கருமைக்கருத்து அடிப்படையில் காளானைக் குறித்துத் தோன்றிய சொல்—வெள்ளாம்பியையும் பிற ஆம்பி வகையினையும் பொதுப்படுமாறு சுட்டப் பயன்படுத்தும் வழக்கு தமிழமக்களிடையே பெருகுகையின்போது- கரிய காளானை மயக்கமறச் சுட்டும் நோக்கத்தோடு- மறுபடியும் "காள்" என்னும் கருமைப் பொருட்சொல்லை அடையாக முன்னுறுத்திக் [காள்+ஆம்பி>] "காளாம்பி" என்றவாறு தெள்ளிய திருத்தமான கூட்டுச்சொல்லொன்று உருவாக்கப்பெற்றது.

❁ "பூழி பூத்த புழற் காளாம்பி" [சிறுபாண்: 134]

❁❁ "ஆ உதை காளாம்பி போன்ற" [களவழி: 36 4]

2. ஆம்பி= வெள்ளாம்பி, (வெள்ளைக் காளான்)
"ஆம்பி வால் முகை அன்ன கூம்பு முகிழ்" (பெரும்: 157)

3. ஆம்பி= நீர் இறைக்கப் பயன்படும் கருவி, இடா, பன்றிப்பத்தர்
ஆம்பி= இடா, இறைகூடை

ஆம்பியானது குடைபோன்ற வடிவுடையது. "மாற்றார் குடையெலாம் கீழ்மேலாய் ஆவுதை காளாம்பி போன்ற" என்றவாறு களவழி நாற்பதின் ஒரு பா இக் காட்சிக் கருவை நன்கு காட்டி நிற்கும். (காண்க களவழி: 36.3-4). ஆம்பியைத் தலைகீழாகக் கவிழ்த்து வைத்தால் என்ன தோற்றத்தில் தோன்றுமோ- அதே வகை ஒப்புமை வடிவைப் பெற்றிருந்த இறை கூடையாகிய இடாவும்,— "ஆம்பி" என்ற சொல் கொண்டே சுட்டப்பெற்றது.

"பாடு சிலம்பு மிசையேற்றத்
தோடு வழங்கும் அகல் ஆம்பியின்" (மதுரை: 90-91)

காராம்பி= கரியநிறத் தோற்றத்திலிருக்கும் நீர் இறைக்கும் கருவி

கார்+ஆம்பி>காராம்பி

ஆம்பி>அம்பி

காண்க: "காராம்பி அம்பி" [பிங்: 1692]

நீரிறைக்கும் கருவியைக் குறித்து அதன்வழியே நீரிறைக்கப் பயன் பெறும் கயிற்றையும் "அம்பி" என்னும் சொல் குறிக்கலாயிற்று.

அம்பி= நீரிறைக்கும் கயிறு [சங். அக.]

(3-1) ஆம்பி= பன்றிப்பத்தர்
பத்தல்= குழி, பள்ளம்
"ஆன்வழிப் படுநர் தோண்டிய பத்தல்" [நற்: 240]

"பத்தல்" என்னும் குழியை, பள்ளத்தைக் குறித்த சொல்லினின்று குழிவையுடைய நீரிறைக்கப் பயன்பெறும் தொட்டியும் அப் பெயர் பெற்றது.

"தீம்பிழி எந்திரம் பத்தல் வருந்த" (பதிற்றுப்: 19:23)

பத்தல்= பத்தர் [லகர-ரகரத் திரிபு]
"நீர்ப்பத்தல்" (நற்: 92:6)
நீர்வாய்ப்பத்தல் (பதிற்றுப்: 22:13)

பத்தர்= தொட்டி

பன்றிகளுக்கு கூழிடுவதற்கெனப் பயன்படுத்திய தொட்டி "பன்றிப் பத்தர்" என்னப்பெற்றது! பன்றிக்குக் கூழிடுவதற்குப் பத்தரைப் பயன்படுத்திய காட்சியைப், "பன்றிக் கூழ்ப் பத்தரில்" [257] என்றவாறு வரும் நாலடி வெண்பாவினுட் காணலாம்! [குடுக்கைக்கும் இச்சொல் பயன்படுத்தப்பெற்றது. காண்க: ''கொடிக்காய்ப் பத்தர்'' (கல்லா: 40:3)

நீர் இறை கூடையாகிய ஆம்பியும் பன்றிப் பத்தரின் தோற்றத்தை ஒத்திருந்தமையினால்- "பன்றிப்பத்தர்" என்ற சொல்வழக்காலேயே ''ஆம்பி'' சுட்டப்பெற்றது. [காண்க: சிலம்பு: 10:110 உரை]

மேலுங் காண்க: ''அகல் ஆம்பியின்'' [மதுரைக்: 91]
(நச். உரை: ''அகன்ற பன்றிப் பத்தரின்...'')

4. ஆம்பி= பூட்டை

(ஏற்றமரமாகிய-) பூட்டையானது நீரிறைப்புக்கெனத் தான்

பிணித்துக் கொண்ட ஆம்பி (பன்றிப்பத்தர்) யின் பேறு காரணமாக- அவ் ஏற்றமரமே ஆம்பிப் பெயரை ஏற்று நின்றது!

ஆம்பி = பூட்டை (ஏற்றமரம்) (மதுரை-அக-)

5. ஆம்பி = ஒலி

ஏற்றத்துடனே பன்றிப் பத்தராகிய ஆம்பி உலாவுகையில் எழும் ஓசை காரணமாக- அவ் "ஆம்பி" என்ற சொல்வழிக் கொண்டே ஒலி என்னும் பொருட்பாடும் சுட்டப்பெற்றது.

(5-1) "ஆம்பியே ஒலி..." (சூடா. நி. மகரஎது: 14)

(5-2) "கறங்குபறை ஆம்பி அடர்தர" (வைண.ஆசா: 2,7,15)

ஆம்பல் = யானை

யா > யாஅம் > யாம் > யாம் + பு > யாம்பு > யாம்பு + இ > யாம்பி > ஆம்பி = கரிய காளான்

இவ்வகைத் தோற்றப் போங்கிலேயே கரிய நிறத்ததாகிய யானையும் [யா > யாஅம் > யாம் > யாம் + பு > யாம்பு > யாம்பு + அல் > யாம்பல் >] ஆம்பல் என்றவாறொரு பெயரைக் கொண்டது.

(1) "ஆம்பல் ஆட்டு அயரும் அருவியங் குவட்டின்" (கச்சி. காஞ்சிப்பு: 113)

(2) "அரியின் முன்னுறும் ஆம்பல் இனங்கள் போல்" (திருவாடானைப்பு: 1,16)

(3) "அந்நகர், மன் அணி ஆம்பலின் திரள்" (பாத்மோத்.பு: 4,112)

(4) "பரவு ஆம்பல் அம்போர்" [ஆனந்த-வண்டு.தூது:428]

(5) "ஆம்பல் ஊர்ந்தார் இயற்புலவர்" [பாரிகாதை: ப: 104]

யா : (கருமைக்கருத்து மூலவேர்)

யா > யாஅம் > யாம் > ஆம்

ஆம் = 1. நீர் 2. ஈரம் 3. குளிர்ச்சி

நாம் வாழ்ந்துவரும் இந்நிலவுலகத்தில் உள்ள நீரின் மொத்த அளவு முப்பது இலக்கத்து நாற்பதாயிரங்கோடி கனமாத்திரி! இவ்வளவில் 97விழுக்காடு கடல்நீர்! எஞ்சியுள்ள நீர் 3 விழுக்காடு! இதுதான் நன்னீர்! இம் மூன்று விழுக்காட்டு நீராகிய நன்னீரில் 77 விழுக்காடு பனிக் கட்டிகளாக நின்று பயன்தராது கிடக்கின்றன! அதில் எஞ்சியுள்ள 23 விழுக்காட்டு நீரில் — 22 விழுக்காட்டு நீரோ நிலத்தகத்தில் அடைபாடுற்றுள்ளது! இறுதி எச்சம்,—ஒரே ஒரு விழுக்காடுதான்! அவ் ஒரு விழுக்காட்டு நீர்த்திரள்களே—ஆறுகளாக அலைந்து நெளிகின்றன; ஓடைகளாக ஓடி உலவுகின்றன; குளங்களாக நிலவுகின்றன; தாங்கல்களாகத் தங்குகின்றன; அணைகளாக அடங்குகின்றன! முகில்களாக மூள்கின்றன!

இவ் ஒரு விழுக்காடுதான்,— உலக மக்களின் பயன்பாட்டு நீர்ச் சொத்தாக நிலவும் நிலையிருப்பு! இளைதாகவே பயன்மரங்கொன்று இருப்பைக் குலைக்கும் வழிமுறைகளில் கயமைமாந்தர் கருத்தும் வினையும் செலுத்துகின்றனர்! காடு கொன்று நாடழிக்கின்றனர்! தொழிற்சாலைக் கழிவுகளும், கழிவுச் சாய்கடைகளும் கால்கள் பெறுகின்றன! ஈற்றில்,—ஆற்றில் உறுகின்றன! எங்கும் இயற்கைக் கெடும்புகள் நாற்றந் தருகின்றன! இன்றைய போக்கிது! நம் நாட்டில் நனி மிகுதி!

குளம்—குட்டை—ஆறுகளிலிருந்தும்,— மிகமிகப் பெரும்பான்மையாகக் கடல்களிலிருந்தும் நீரை ஆவியாக்குகின்ற வினை—ஞாயிற்றால் நடைபெறுகின்றது! அவ் ஆவி திரண்டு அகன்ற வானவெளியில் முகிலாக உலாவுகின்றது! மாரியாய் மாறிச் சொரிகின்றது! கமஞ்சூல் கொண்டு- கரிய முகிலாக வெளியில் மிதக்கும் அத் திரளில் அடங்கியுள்ள நீரானது—உலகமனைத்திற்கும் ஒட்டுமொத்தமாக வாய்த்திருக்கும் நல்லநீரின் அளவில் 0.04 விழுக்காடுதான்! [நீரியலாளரின் தோராயக் கணக்கிது!]

வானநீரே வாழ்க்கையேந்துக்கு இன்றியமையா அடிப்படை என்

னும் கருத்துடையவராகத் தமிழர் வாழ்ந்தனர் என்பதற்குத் திருக்குறளில் கடவுள் வாழ்த்தை அடுத்துத் தொடக்கமாக நிறுத்தப்பெற்றுள்ள "வான் சிறப்பு" என்னும் அதிகாரத்துள் சுட்டப்பெற்றுள்ள சில கருத்துகள் சான்றுகளாக நிற்கின்றன! "நீர் இன்று அமையாது உலகு!" என்னும் இறுதிக் குறளின் [2:10] தொடக்கக் கருத்து—உச்சத் தெளிவுடையது!

[அ] முகில்:

முகிலைக் குறிக்க இருபத்திரண்டு சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர்—தமிழர்! இயற்கையோடு இவர்களுக்கிருந்த ஈடுபாட்டையும் அதன் நுட்பத்தை அறிந்துகொள்ள ஆர்வத்தோடு இயங்கியுள்ள தன்மையையும் இச்சொற்றொகையின் கருப்பொருட்பாடுகளைக் கொண்டும் அறியவியலும்!

[அ-1] முகில் = 1. வான் (வானப்) 2. விண் 3. விண்டு 4. விசும்பு 5. செல் 6. முதிரம் 7. புயல் 8. குயின் 9. விளைவு 10. கொண்டல் 11. கொண்மூ 12. [முகில்] 13. எழிலி 14. மை 15. மழை 16. மங்குல் 17. மஞ்சு 18. மாரி 19. மால் 20. மாசு 21. கார் 22. ஆயம்

(அ-1-1-2,3,4) வான் (வானம்), விண், விண்டு, விசும்பு = முகில் [பிங்· 58]

வான், விண், விண்டு, விசும்பு என்னும் இந் நான்கு சொற்களும்-விண்வெளியில் திரண்டு உலவி வரும் இடப்பேறு காரணமாக முகில் பெற்ற பெயர்கள்!

(அ-1-1) வான் = முகில் "ஏறொடு வான் ஞெமிர்ந்து" (மதுரைக்: 243)

(அ-1-1-அ) வான் + அ ர் > வானம் = முகில்
''ஒலலாது வானம் பெயல்'' குறள்: 559

(அ-1-2) விண் = முகில் (திவா.)

(அ-1-3) (விண் + து >) விண்டு = முகில் [பிங். 58]

(அ-1-4) விசுப்பு = முகில் [திவா.]
''விசும்பின் துளி வீழின் அல்லால்'' [குறள்: 16]

(அ-1-5) செல் = முகில் [பிங்: 58]

ஓரிடத்தே தங்கியிராது தொடர்ந்து செலவு (செல்லுகை) மேற் கொள்ளும் தன்மையினால்- ''செல்'' என்னும் சொல்வழியாகவும் முகில் சுட்டப்பெற்றது. [காண்க: திருமுரு: 5. வேறுரை-உ.வே.சா. அடிக் குறிப்பு]

முகில் செலவு [செல்லுகை] மேற்கொள்ளுகையை ''யானைபோல ....பொங்கு செலல் கொண்மூ'' என்றவாறு வரும் அகநானூற்றுப் பாடல் வரிகள் அழகுறக் காட்சி காட்டுவன. [அகம்: 125:8-9] [மே.கா: ''ஈண்டு செலல் கொண்மூ'' [புறம்: 161:2]

செலவு மேற்கொள்ளுகையில் [ஒ.நோ: செஞ்ஞாயிற்றுச் செலவும் புறம்: 30:1] எதிர்வரும் மற்றொரு முகிலுடன் மோதுவதன் வழி ஏற் படும் இடியையும் இச் ''செல்'' என்னும் சொல் குறித்து வழங்கத் தலைப் பட்டது! படை மறவர் விரைவொடும் சினத்தொடும் திரண்டவாறு மாற்றலருடன் இடியையொத்து மோதிப் பொருதுகையின் காட்சிவழியே அம் மோதுகைக்கென இயங்குமுறுப்பாகிய அன்னோரின் கையை உவமை கூறி ஏத்தும் வழக்கமும் பண்டைப் புலவர் பெருமக்களிடம் பர வலாக இருந்தது. [காண்க: செல் = இடி [பதிற்றுப்பத்து: 52:10-12, 58:4. அகம்: 342: 9-10]

(அ-1-6) முதிரம் = முகில் [பிங்: 58]

முது + இர் > முதிர். முதிர்தல் = முற்றுதல் [ஒ.நோ: முதிராக் கிளவியள்'' மணி: 22:181]

முதிர்தல் = முற்றிப் பதனெய்தல், செறிந்து திரளுதல்
''கொண்மூ............சூல் முதிர்ப்பு'' [புறம்: 161:2-3]

திரண்டு சூல் நிறைந்து முற்றிய முகில் [முதிர் + அம் >] முதிரம் என்றவாறு பெயர்பெற்றது.

முதிரம் > [skt] mudira = [cloud]

(அ-1-7) புயல் = முகில் (பிங்: 58)

புய் = துளைக்கருத்து மூலவேர்

புய் + அல் > புயல் = துளைவழியாக ஒழுக்குதலையுடைய முகில்

மிகப் பலவாகிய பொத்தல்களை [துளைகளை] உடைய ஒரு நீர்

நிரம்பிய கலத்தினின்று நீர் வெளிப்பட்டு ஒழுகுதலைப் போலவே- மழை நீர்ச் சொரிதலும் இருக்கக்கண்டு, வானத்தின்கண் திரண்டுதோன்றும் முகிலிலும் மிகப்பலவாகிய துளைகள் இருக்கின்றனவென்றும், அத் துளைகளின் வழி ஒழுகுதலாலேயே இவ்வாறு தனித்தனித் தனியாய் இம் மழை நீர்த் துளிகள் கீழ்விழுகின்றன என்றும் தொடக்கக் காலத் தமிழமாந்தன் கருதினான்! இவ்வாறான கருத்தை உட்கொண்டே, ''புய்'' என்னும் துளைக்கருத்து மூலவேரினின்று, (புய் > புய் + அல் >) ''புயல்'' என்றவாறு மழைநீரைத் துளித் துளியாகப் பொத்தல்களின்வழி ஒழுகவிடுகின்றது என்னும் அடிப்படையில் முகிலைக் குறித்த சொல் ஒன்றையுந் தோற்றிநின்றான்!

வையையாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது! பலரும் அவ்வெள்ளப் பெருக்கின் விளைவுகளைப்பற்றிப் பேசுவாராயினர்! ''ஊரையே வெள்ளம் சுற்றி வளைத்துக் கொண்டது!'' என்றவாறு ஒரு பக்கத்தில் கூக்குரல் எழுந்தது! வானத்து முகில்களில் துளைகள் சிதைவுற்றன! அதனால்தான் பெருமழை வந்துவிட்டது!"—என்னும் பேச்சும் ஒரு பக்கமிருந்து எழுந்தது!

''ஓதம் சுற்றிய தூரென ஒருசார்!
கார்தூம் பற்றது வானென ஒரு சார்!" (பரி: 7:29-30)

மீமுது பண்டைக் காலத்தில்,—வானிலிருந்து துளைகள் வழியாகவே மழைநீர் ஒழுகுகின்றது என்றவாறான கருத்துடையவராய் மக்கள் இருந்தனர் என்பதையும் — அதனடிப்படையிலேயே "புய்" என்னும் துளைக்கருத்து மூலவேரின் வழி துளையினின்று ஒழுகி நிற்கும் இயல்புடையது என்னும் பொருள்பட [புய் > புய் + அல் >]புயல் என்னும் சொல்லை உருவாக்கினர் என்பதையும் நிலைநாட்டுதற்குரிய பதிவுச் சான்றாய்—இம் மேற்குறிப்பிட்டுள்ள பரிபாடற் கருத்து வரிகள் அமைந்து நிற்கின்றமையை அணுகி நுணுகி நோக்கின் அறியலாகும்!

புயல் = முகில்.

"விண்டு முன்னிய புயல்" [பதிற்றுப்: 84:22]

[முகிலின் வண்ணம கரியது ஆதலால்—"புயல் வண்ணன்" என்றவாறு கரிய மேனியனான "திருமால்" சுட்டப்பெற்றான்!]

''புயல்வண்ணன் புனல் வார்க்க!...'' [கலிங்: 1]

புயல்+ஏறு>புயலேறு= இடி, [முகிலின் முழக்கம்]

''பெருஞ்சினப் புயலேறு அனையை'' [பதிற்றுப்: 51:28]

(அ-1-8) குயின்= முகில். (பிங்: 58)

''புயல்" என்னும் சொற்காரண அடிப்படையிலேயே ''குய்'' என்னும் மற்றுமொரு துளைக்கருத்து மூலவேரினின்று துளை வழியாக ஒழுகுதலையுடையது என்னும் பொருளில், [குய்>குய்+இல்> குயில் >] ''குயின்'' என்றவாறு அடுத்த சொல்லொன்றும் தமிழரால் உருவாக்கப் பெற்றுள்ளது.

குயில்>குயில்+நர்>குயினர்= துளையிடுவோர்
(மதுரைக்; 511, 522)

(அ-1-9) விளைவு= முகில் (பிங்: 58)

விள்+ஐ>விளை>விளை+வு>விளைவு= முதிர்வு
''விளைவு அமை தயிரொடு மிசைகுவிர்'' (சீவக: 122)

விளைவு= முதிர்வின் வழி உருவாகும் பயன், பயன்
''விளைவின் கண் வீயா விழுமம் தரும்'' (குறள்: 284)

விளைவு= முதிர்ந்து பொழிந்து பயன்நல்குவதாகிய முகில்

(அ-1-10) கொண்டல்= முகில் (பிங்: 58)

குல்>குள்>கொள்>கொள்ளு= பற்று
கொள்ளுதல்= பற்றிக்கொள்ளுதல், எடுத்துக்கொள்ளுதல்
''கொண்ட வாளொடும்'' (சீவக: 430)

கொள்ளுதல்= கவர்தல்
''மனையாளை மாற்றார் கொள'' (நாலடி:3)

கொள்>கொள்+(ள்)+இ>கொள்ளி= கொள்ளும் நெருப்பு, பற்றிக் கொள்ளுதலையுடைய நெருப்பு, நெருப்பு
[காண்க: புறம்: 325:6-10, நெடு: 7,8, அகம் 339: 7-10, குறு: 189: 3,4, ஐங்: 295:3-5]

கொள்ளி= கொள்ளிக்கட்டை, நெருப்புப் பற்றிக் கொண்டு கனலும் மரக்கட்டை அல்லது குச்சி

(காண்க: புறம்: 108: 1-3, அகம்: 73:14-17, 94:4-7)

கொள் > கொள் + கை > கொள்கை = 1. கொள்ளுகை

(காண்க: அகம்: 65:1-7, நற்: 175: 1-4, கலி: 67:10-13)

கொள்கை: 2. இயல்பாகக் கொள்ளுகை, இயல்பு

(காண்க: பதிற்றுப்: 57:10-13, 90:48-50, மதுரைக்: 644, 647, ஐங்: 408, ஐங். தி:7, கலி: 29:14-17)

கொள்கை: 3. கடைப்பிடியாகக் கொள்ளுகை, கோட்பாடு
[ஒ.நோ: கொள் > கோள் = கொள்கை
(நற்: 35: 2-5)

[கோள் + படு > கோட்படு = கொள்ளப்படு
காண்க: பதி: ப. 6:3,4, கலி: 105:43-46, 115:3-9]

[கோள் + படு > கோட்படு > கோட்பாடு = கொள்கை]

கொள்கை= கோட்பாடு
[காண்க: புறம்: 191:6,7, சிறுபாண்: 125, 126, மலை: 64,65, அகம்: 15:9-12,17, 95:12-15, 98: 1-6, 154:13-14, 205:3-7, 225:3,9,13,17,333:15 -17, 363:10]

கொள் > கொள் + (ள்) + ஐ > கொள்ளை = 1. கொள்ளுதல்

கொள்ளை = 2. கொள்ளையடித்தல், [கவர்தல்]

[காண்க: புறம்: 7:7-9, பதிற்றுப்: 19:1, 81:15 பட்டினப்: 265-268, மலை: 317]

கொள் > கொள்(ண்) + தி > கொண்டி = (1) கொள்ளை
(புறம்: 78:5-12, 198:12-14, 382:5. பதிற்றுப்: 63:8-14)

கொண்டி = 2. கொள்ளப் பெறுவதாகிய திறை (புறம்: 51:4-7)

கொண்டி = 3. கொள்பொருள் (புறம்: 390: 20-23)

கொண்டி = 4. பொருளைக் கொள்ளை கொள்ளும் பரத்தை
(நற்: 174:9,10)

கொண்டி மகளிர் = பொருளைக் கொள்ளை கொள்ளும் பரத்தையர்
[மதுரைக்: 246-251]

கொண்டி மள்ளர் = கொள்ளையிடும் மறவர் [பதிற்றுப்: 43:23-25]

கொள் > கொள்ளு > கொள்ளு + தல் > கொள்ளுதல் = கைப்பற்றுதல்
கொள்ளல் > கொளல் = கைப்பற்றுதல்
"கொளற்கு அரிதாய்" (குறள்: 745)
[உரை: கைப்பற்றுவதற்கு அரியதாய்...]

கொள் > கொள்ளு > கொள்ளுநன் > கொளுநன் > கொழுநன் =
கொண்டவன்,
(ஒருத்தியை-) மனைவியாகக் கொண்டவன், கணவன்
"கொழுநன் தொழுதெழுவாள்" (குறள்: 55:1)
கொண்டவன் > கொண்டான் = கணவன்
"தற்காத்துத் தற்கொண்டான் பேணி" [குறள்: 56]

கொள் > கொள்(ண்) + கு > கொண்கு + அன் > கொண்கன் =
கொண்டவன், கணவன்
"கொண்கன் முயக்கற்றம் பார்க்கும் பசப்பு" [குறள்: 1186]
[மே. கா: 1265, 1266, 1283, 1285]

கொள் > கொள்(ண்) + தல் > கொண்டல்

[ஒ.நோ: 1. வேள் > வேள் (ண்) + தல் > வேண்டல்
2. காண் + தல் > காண்டல்
[தல் = தொழிற்பெயர் ஈறு] [தல்லீறு]

கொண்டல்: 1. கொள்ளுதல், [நீரை முகந்து-] கொள்ளுதல்

(அ-1-10-1-1) "கொண்டல் மாமழை" (நற்: 140:1)
[உரை, நீரை முகந்து கொள்ளுதலை உடைய கரிய 'மேகம்'...

(அ-1-10-1-2) "கொண்டல் தண்தளி கமஞ்சூல் மாமழை"
[பதிற்றுப்: 24:28]

(உ.வே.சா: கொள்ளுதலையுடைய தண்ணிய துளிகளாகிய நிறைந்த சூலையுடைய கரிய மேகத்தின் மழை...)

கொண்டல்: 2. முகில், நீரைக் கடலினின்று முகந்து கொள்ளுதலை யுடைய முகில்

(அ-1-10-2-1) "கொண்டல் கொண்ட நீர்" [புறம்: 137:7]

(அ-1-10-2-2) "கொண்டல் மாமலை" [அகம்: 262;17]

[உரை: முகில் தவழும் பெரிய மலை...]

கொண்டல்: 3. மழை

(அ-1-10-3-1) "கொண்டல் வளர்ப்பக் கொடி விடுபு கவினி"
[மதுரைக்: 530]

[நச்.உரை: கொண்டல் வளர்ப்ப= மழை (பருவத்தே பெய்து) வளர்க்கையினாலே......] (மே.கா: மதுரைக்: 566, 568)

கொண்டல்: 4. கீழ்த்திசைக்காற்று

கிழக்கு பக்கத்தேயிருந்து மேலெழும் இயல்புடையது முகில்-என்ற வாறான கருத்தொன்றையும் தமிழர்கள் கொண்டிருந்தனர்.

[காண்க:] "ஞாலம் வறந்தீரப் பெய்யக் குணக்கு ஏர்பு
காலத்தில் தோன்றிய கொண்மூப் போல்"
[கலி: 1-2]

"கிழக்குக் கடலினின்று முகிலானது நீரை முகக்கும்"- எனத், தமிழர் கருதியமையைக் "குணகடல் முகந்து......" என்றவாறு வரும் நற்றிணைப் பாட்டொன்றின் (153:1) தொடக்கவரித்தொடரும் தொட்டுக் காட்டும்!

கிழக்கிலிருந்து நீர்கொண்டு மேலெழும்பும் கொண்டலே போன்று- அத் திசையினின்று எழுந்து வீசும் கீழ்க் காற்றையும் கொண்டல் என்ற சொல் கொண்டே குறிப்பிடுவாராயினர்

[காண்க: புறம்: 34:20-23, அகம்: 10:8-12, 20.7, 40·6-10, குறுந்: 185:5-7, நற்: 74:6-9, 89:1-4]

(அ-1-11) கொண்மூ= முகில்

கொள்>கொள்(ண்)+மூய்>கொண்மூய்>கொண்மூ

"முய்" : பொருந்துதற் கருத்து மூலவேர்

முய்>முய்+அங்கு>முயங்கு= பொருந்து, புணர், தழுவு

முய்+அக்கு>முயக்கு+அம்>முயக்கம்

முய்>மொய்= 1. நெருக்கம் "மொய் கொள் மாக்கள்" [மணி: 19:136]

2. இறுகுகை "மொய்வளம் பூத்த முயக்கம்" [பரி: 18:8]

மொய்= போர்

[ஒ.நோ: பொரு>போர்]

மொய்>மொய்+(த்)+தல்> மொய்த்தல்= செறிதல், நெருங்குதல், சூழ்தல்

முய்>மூய்>மூய்+தல்>மூய்தல்= செறிதல்

மூய்தல்= நெருங்கிச் சூழ்தல்

"ஆயிரரு மங்கண் மூயினர்"

(கந்தபு. சசத்திரவா: 18)

[ஒன்றுதற் கருத்து செறிதற் கருத்துக்கும் பின்னர் அடைத்தற் கருத்துக்கும் (மூடுதற்கருத்துக்கும்) படிப்படியே விரிவாக்கம் பெறும்.

ஒ.நோ: அடு= சேர், சார், செறிந்திரு, கிட்டு, நெருங்கு

அடு>அடை= சேர், சேர்ந்திறுகு

அடை+(த்)+தல்>அடைத்தல்= மூடுதல்

❀ "பாடுநர்க்கு அடைத்த கதவின்"

(புறம்: 151:10)

❀❀"பலர்புகு வாயில் அடைப்ப"(குறுந்: 118:3

இவ்வகையில் "மூய்" (=செறி) என்னும் சொல்லும் மூடுதற்குப் பயன்படும் மூடியைக் குறித்து வழங்கும் வழக்கும் ஏற்பட்டது.

[காண்க : "பொன்பெய் பேழை மூய் திறந்தன்ன" (குறுந்:233)]

(மூய்= செறிவு)

நீர் முகந்துகொண்டு — தனித் தனியே தோன்றிக் கூட்டமாக ஒருங்கு சென்று நெருங்கிச் சேர்தலின் காரணமாகக் (கொள் > கொள்(ண்) > கொண் + மூய்) கொண்மூய் என்றவாறு சுட்டப்பெற்ற முகில்- நாளடைவில் பேச்சோட்ட வழக்கினால் "கொண்மூ" என நின்று இலக்கிய வழக்கிலும் நிலைத்தது!

மூய் > மூ. [ஒ.நோ: சாய் > சா, மாய் > மா
நோய் > நோ, தீய் > தீ]

[வாய் என்பது "வா" என்றவாறும், வாழைக்காய் என்பது "வாழக்கா" என்றவாறு ஈற்று யகரமெய் ஒலிப்பில் உள்ளொடுங்கி இறுவதை இன்றுங் கேட்டுணரலாம்!]

கொண்மூய் > கொண்மூ

(அ-1-11-1) "பெருங்கடல் முகந்த இருங்கிளைக் கொண்மூ"
(அகம்: 188:1)

(அ-1-11-2) "இருங்கிளைக் கொண்மூ ஒருங்குடன் துவன்றி"
(அகம்: 183:9)

[மே.கா: புறம்: 35: 17-8, 161: 1-5, 369: 1-2, 373: 2-8. குறி: 47-53, அகம்: 68: 14-16, 125:3-10, 188:1-8, 374:1-10]

(அ-1-12) முகில்

நிலத்தின்மேல் நிரம்பிக் கிடக்கும் நெடுநீர்ப் பரப்பினின்று நீரை முகந்துகொள்ளும் வினையை மேற்கொள்ளுவது காரணமாக "முகில்" என்றவாறு பெயர் சூட்டியமை- தமிழ்மக்களின் அறிவியல் சான்ற நுண்ணோக்குக்கு ஒரு சான்று!

முகு > முகு + வு > முகுவு > முகவு > + ஐ > முகவை =
முகந்து கொள்ளுகை

முகவை: நீர் முகக்கும் கருவி
"கயிறுகுறு முகவை" [பதிற்றுப்: 22:14]

முகவை: அகப்பை. "முகத்தற்கும் பயன்படுதலின்வழி அகப்பை-முகவை என்றும் குறிக்கப் பெற்றது. (வின்சிலோ)

முகு > முக = மொள்ளு
முகத்தல் = மொள்ளுதல், மேல்வருமாறு ஈர்த்தல்

முகு + இல் > முகில் = நீரை முகக்கும் கார்

(அ-1-12-1) "கடல் முகந்து கொண்ட கமஞ்சூல் மாமழை"
(அகம்: 43:1)

[உரை: கடலின் நீரை முகந்து-நிறைந்த சூலினையுடைய கரிய முகில்......]

(அ-1-12-2) "நீண்டொலி யழுவங் குறைபட முகந்து கொண்டு
ஈண்டு செலற் கொண்மூ வேண்டுவயிற் குழீஇ
பெருமலை யன்ன தோன்றல சூன்முதிர்பு
உருமுரறு கருவியொடு பெயல்கட னிறுத்து"
[புறம்: 161:1-4]

[உரை: பெரிதாய் ஒலிக்கின்ற பரப்பினையுடைய கடல் குறைபட நீரை முகந்துகொண்டு — விரைந்த செலவையுடைய முகில்கள் வேண்டியவிடத்தே திரண்டு—பெரிய மலைபோலும் தோற்றத்தை யுடையவாய், சூல்முதிர்ந்து உருமேறு இடிக்கும் மின் முதலாகிய தொகுதிகளுடனே கூடிப் பெயலை முறையாகப் பெய்து......]

(அ-1-12-3) "நிறையிரும் பௌவம் குறைபட முகந்துகொண்டு
..........................கொண்மூ"
[குறிஞ்சி: 47:50]

(அ-1-12-4) "பனித்துறைப் பெருங்கடல் இறந்துநீர் பருகி
குவவுத் திரை அருந்து கொள்ளைய... கொண்மூ"
[அகம்: 183: 6...9]

(அ-1-12-5) "குணகடல் முகந்த கொள்ளை வானம்"
[அகம் 278;1]

(அ-1-12-6) "மாக்கடல் முகந்து மாதிரத்து இருளி
......................கொழும்பல் கொண்மூ"
[அகம்: 374:1...3]

(அ-1-12-7) "பெருங்கடல் முகந்த இருங்கிளைக் கொண்மூ"

[உரை: பெரிய கடல் நீரை முகந்துகொண்ட கரிய கூட்டமான கொண்மூவே......]

[அ-1-13] எழிலி = முகில்

எழு > எழு + மை > எழுமை = உயர்ச்சி

எழு + [ப்] + பு > எழுப்பு = எழுப்புகை, உயரச்செய்கை
எழும்புதல் = மேலெழுதல்

எழுப்புதல் = = எழும்பச் செய்தல்

எழு + [ச்] + சி > எழுச்சி = எழுகை

எழு + இல் > எழில் = 1. உயர்ச்சி
2. எழுச்சி
3. உள்ள எழுச்சியை உருவாக்கும் அழகு

எழில் + இ > எழிலி = நீரை முகந்து மேலெழுவதாகிய முகில்

(அ-1-13-1) "குணகடல் முகந்து குடக்கேர்பு இருளி
....
தன்தொழில் வாய்த்த இன்குரல் எழிலி"
[நற்: 153:1...4]

[உரை: கீழ் கடலிலே சென்றிறங்கி நீரை முகந்தெழுந்து மேல் பாலேகி யாங்கும் இருளடையும்படி இருண்டு......தனது பெய்யுந் தொழிலை மேற்கொண்ட இனிய இடி முழங்குதலாகிய குரலையுடைய 'மேகம்'.........]

(அ-1-13-2) "வலன் உயர் எழிலி" [பரி: 1:47]
[உரை: வானின்கண் வலமாக எழுந்து உயரும் முகில்களும்...]

(அ-1-13-3) "பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண்டு எழுந்த கொடுஞ்செல வெழிலி".
[முல்லை: 4-5]

எழிலி > = முகில் >

[முகில் >] = மழை

"பொய்யா எழிலி பெய்விடப் நோக்கி" [புறம்: 173:5]

எழிலி > [= முகில் > = மழை >] = கார்ப்பருவம்

''தளிமயங் கின்றே தண்குரல் எழிலி" (அகம்: 43:8)

வான், விண், விண்டு, விசும்பு—ஆகியன அவ்விடங்களில் உலவும் இடப்பேறு அடிப்படையிலும், — "செல்" என்னும் சொல், செல்லுகைவினை அடிப்படையிலும், — "முதிரம்" என்னும் சொல், முதிர்ந்து பதனெய்துவது என்னும் அடிப்படையிலும்,— புயல், குயின் ஆகியன துளைவழியாக ஒழுகுதலையுடையது என்னும் அடிப்படையிலும்,— "விளைவு" என்னும் சொல், முதிர்ந்து பொழிந்து பயன்நல்குவது என்னும் அடிப்படையிலும்,— "கொண்டல்" என்னும் சொல், நீரைக் கடலினின்று கொள்ளுதலையுடையது என்னும் அடிப்படையிலும்,— "கொண்மூ" என்னும் சொல், நீர் முகந்து கொண்டு நெருங்கிச் செறிவது என்னும் அடிப்படையிலும், — "முகில்" என்னும் சொல், நீர்ப்பரப்பினின்று நீரை முகந்து கொள்ளும் வினையை மேற்கொள்ளுவது என்னும் அடிப்படையிலும் உருவாக்கப்பெற்ற சொற்களாகும்! இவை மொத்தம் பதின்மூன்று என்னும் எண்ணிக்கையின!

இவற்றோடு,—மை, மழை, மங்குல், மஞ்சு, மாரி, மால், மாசு, கார், ஆயம் என்னும் ஒன்பது சொற்களும் முகிலின் கரிய தோற்றத்தை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பெற்றன!

கருத்துநிலையில் — முந்தியன்ற சிந்தனை வரலாற்று வளர்ச்சி நிலையில்—முந்திய பொருட்பாட்டுத் தன்மையின இவை! "கார்வான்" என்றவாறு, கரியதாகத் தோன்றுகையை அடையாக நிறுத்திவைத்து வானத்தைச் சிறக்கக் கூறிய வழக்கே—ஆங்கே உலவிய கரிய முகில்களின் தோற்ற அடிப்படையைக் காரணமாகக் கொண்டதேயாகும்!

(அ-1-14) மை = கரியமுகில், முகில் (பிங்: 58)

மய் : [கருமைக்கருத்து மூலவேர்]

மய் > மை = கருமை

"மை என விரிந்தன" [மலைபடு: 124]

(நச்.உரை: கருமைதான் வடிவுகொண்டது என்னும் படியாக அலர்ந்தன......)

மய் > மை = கரிய முகில்

(அ-1-14-1) ''சேயோன் மேய மைவரை உலகமும்''
[தொல்.பொருள்: 1:5:2]

(அ-1-14-2) ''மைதவழ் உயர்சிமை'' [அகம்: 143:13]

(அ-1-14-3) ''மைதூங்கு இறும்பு'' [அகம்: 329:12]

(அ-1-14-4) ''மைதோய் விசும்பு'' [அகம்: 125:10]

(அ-1-14-5) ''மைபடு குடுமிய குலவரை'' [பரி: 15:9-10]

(அ-1-14-6) ''மைசூழ் வெற்பின்'' [நற்: 214:7]

(மே.கா: கலி: 39:41, குறுந்: 371:2, மலை: 361, அகம்: 17:22, 119:20, 153:17, 187:24)

(அ-1-15) மழை = கரியமுகில்

மய் > மய் + ஐ > மயை > மழை. [யகர-ழகரத் திரிபு]

(ஒ.நோ: இய் > இயை > இழை)

மழை = முகில்

(அ-1-15-1) "மழை கொளக் குறையாது புனல்மிக மிகாது
கரை பொருது இரங்கும் முந்நீர் போல''
[மதுரைக்: 424-425]

(நச்.உரை: 'மேகம்' முகக்கவும் குறைவுபடாமல், யாறுகள் பாய்தலின் மிகுதலைச் செய்யாமல் கரையைப் பொருது ஒலிக்கும் கடல் போல......)

(அ-1-15-2) ''மழை முற்றிய மலை புரைய'' [மதுரை: 84]

(நச்.உரை: கருமேகம் சூழ்ந்த மலை போல......)

(மே.கா: மதுரைக்: 452, அகம்: 43:1, 328:12, புறம்:128:5 131:1, பதிற்றுப்: 73:14, கலி: 42:23)

மழை>(=முகில்>) மழைநீர்

"பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்து" (பெரும்: 19)

மழை>(முகில்)>(மழைநீர்) = நீர்

மழை = நீர் (பிங்)

மழை(>(முகில்)>(மழைநீர்)>நீர்>) = குளிர்ச்சி

''அரிமதர் மழைக்கண்'' [அகம்: 114:14]

[உரை: செவ்வரி படர்ந்த மதர்த்த குளிர்ந்த கண்கள்.........]

[மே.கா: ''பெருமழைக் கண்'' (குறள்: 1239)]

(அ-1-16) மங்குல் = (கரிய-) முகில் [பிங்: 58]

மய்: [கருமைக்கருத்து மூலவேர்]

மய்>மய்ம்>மம் [ஒ.நோ: செய்>செய்ம்>செம்
வெய்>வெய்ம்>வெம்]

மம்+கு>மங்கு>மங்கு+உல்>மங்குல் [உல்: ஓரீறு]

மங்குல் = கருமை, இருள், இருட்சி

மங்குல் மாமழை [அகம்: 264:1]

[கருமை>] கரிய முகில்

மங்குல் = கருமை, இருண்மை, முகில்

❁ "மங்குல் சூழ் மாக்கடல்" [பெரும்: வெண்பா: 1:2]

❁❁ "மங்குல் வானத்துத் திங்கள் ஏய்க்கும்" [பெரும்: 480]

(அ-1-17) **மஞ்சு = கரிய(முகில்-) [பிங்: 58]**

மய் > மய்ம் > மய்ம் + து > மய்ந்து > மய்ஞ்சு > மஞ்சு

[ஒ.நோ: மய் > மய்ம் > மய்ம் + து > மய்ந்து >
மைந்து = [கருமை] > வலிமை
மய்ந்து > மய்ஞ்சு > மஞ்சு = வலிய காளை

மஞ்சு = முகில்

("மழைமாய் மதியின் தோன்றுபு மறைய" மதுரைக்: 452)
(நச்.உரை: மஞ்சிலே மறையும் திங்களைப் போல் ஒருகால் தோன்றி ஒரு கால் மறைய......)

(அ-1-18) **மாரி = (கரிய-) முகில்**

மய் > மாய் > மா = கருமை
மா > மா + அர் > மார் > மாரி
மாரி = முகில் ''மாரிமாட்டு என்னாற்றுங் கொல்லோ உலகு''
[குறள்: 211]
மாரி > (முகில்) = மழை
''மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்'' [புறம்: 35]
''மாரியின் இகுதரு வில்லுமிழ் கடுங் கணை''
[மலை: 226]
(நச்.உரை: மழைபோலத் தாழ்ந்து விழும் வில்லுக் கான்ற கடிய அம்பினையுமுடைய......)
மாரி = (முகில்) > (மழை) > நீர் [பிங்: 57]

(அ-1-19) **மால் = முகில்**

மய் > மாய் > மா = கருமை. [ஒ.நோ: சாய் > சா. நோய் > நோ]

மா = கருமை ''கமஞ்சூல் மாமழை'' [நற்: 89:3]

மா + அல் > மாஅல் > மால் = கருமை
மால் = [கருமை >] கரிய முகில்
மால் = முகில் [பிங்: 58]

(அ-1-20) மாசு = முகில்

மா > மாய் > மாயு > மாசு = கருமை

மாசு = [கருமை >] = கரிய முகில்

மாசு = முகில் [பிங்:58]

(அ-1-21) கார் = கரியமுகில், முகில்

கய் : [கருமைக்கருத்து மூலவேர்]

கய் > காய் = கருமை காய் > காய் + அம் + பூ > காயம்பூ > காயாம்பூ = கருநிற மலர்வகை

காய் > காயா > காசா = காயாப்பூ

கய் > காய் > கா [ஒ.நோ: மய் > மாய் > மா
துய் > தூய் > தூ]

கா + அர் > காஅர் > கார் = [1] கருமை

(அ-1-21-1-1) "களங்கனியைக் காரெனச் செய்தாரு மில்" [நாலடி: 130]

(அ-1-21-1-2) "கார்க் கரும்பின் கமழாலை" [பட்டினப்: 9]

[மே.கா: கார்க்கோழி = கருங்கோழி [தேவா: 890:9]
கார்க்கோடல் = கருங்காந்தள் [திவ். நாய்ச்.10,1]

[கார் = [1-1] இருள்

[கருமைக் கருத்து இருண்மைக் கருத்துக்கு வழி வகுக்கும் உண்மையை "யாமம்" என்னும் கட்டுரைப் பகுதியில் காண்க.] [கார் இருள் என்னும் அடையடுத்ததாகிய கூட்டுச் சொல்லும் [காண்க: குறு: 282:2] இக் கருத்தை உறுதிப் படுத்தும்.]

"கார் அடு காலை" [பரி: 12:85]

(உரை: இருளை ஓட்டும் காலைப் பொழுதிலே...)]

கார் = 2. கரியதாகிய முகில்

(அ-1-21-2-1) "தீம்பெயர் காரும்" [அகம்: 54:2-3]

(அ-1-21-2-2) "கார்கதம்பட்ட கண்அகல் விசும்பின்"
[அகம்: 108:6]

(அ-1-21-2-3) "மின்னு வசிபு உரவுக் கார் கடுப்ப" [அகம்: 212: 12-13]

(அ-1-21-2-4) "கார் புறந்தந்த நீருடை வியன் புனத்து"
[குறுந்: 162:1]

[மே கா: குறுந்: 162;1, 186:1-3, நற்: 256:6,7, 316-6-10, 336:8-10, நற் 346:1-2, ஐங்: 491, 492, 496:1-4, கலி: 32:1,2, பரி: 7:30, 8:17:18, 13:42,43, 14:1,2, 15:50, 18:32, 22:29.]

கார் = 3. காராகிய முகில் பொழியும் மழை

(அ-1-21-3-1) "கார் பெற்ற புலமே போல்" [கலி: 38:12]

(அ-1-21-3-2) "கார் நனை வியன் புலத்தார்" (கலி: 106:5)

(அ-1-21-3-3) "கார் தலைக்கொண்டு பொழியினும்"
(கலி: 146:44)

[மே.கா: புறம்: 144:3-6, மலை: 141-144, கலி: 7:9-12, 109:1,2]

கார் = 4. கார்காலம் (கார்ப்பெயல் = கார்காலத்து மழை)

(அ-1-21-4-1) "கார்ப்பெயல் உருமின் முழங்கல்" (புறம்: 81:2)

(அ-1-21-4-2) "கார்ப்பெயல் கலித்த பெரும்பாட்டு ஈரத்து"
[புறம்: 120:2]

[குறிப்பு: **கார்கோள்:**

காராகிய முகில் முகந்து கொள்ளுவதற்குப் பேரிடனான கடல் [கார் + (கொள் >)கோள் >] "கார்கோள்" என்றவாறே பெயர்பெற்றுள்ளமையில்— கருமைக்கருத்தின் அடிப்படையில் "கார்" முகில் பெயர் பெற்றுள்ள உண்மையும்— அது நீரைக் கொள்ளுவது கடலினின்று என்னும் உண்மையும் அடங்கியிருக்கின்றமையை ஒரு சேரக் காணலாம்.

"கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை" [திருமுரு: 7]

[நச். உரை: கடலிலே முகந்ததனாலுண்டாகிய நிறைவினை யுடைத்தாகிய சூலினையுடைய பெருமையையுடைய மழை...]

[நச்.உரைக்குறிப்பு: கார் முகக்கப்படுதலிற் கடல் "கார்கோள்" என்று பெயர் பெற்றது. ஆகுபெயர்.]

(அ-1-22) ஆயம் = கரியதாகிய முகில், முகில்

யா: [கருமைக்கருத்து மூலவேர்]

யா > யாஅய் > யாய் > யாய் + அம் > யாயம் > ஆயம்

ஆயம் = முகில்

❁ முடிவின் மாரி ஆயத்தின் இடி இது என்றே
அஞ்சின உலகம்" [கம்பரா: 6, 14,142]

❁❁ "ஆயமும் அப்பெயர்க்கு [முகிலுக்கு] உரித்தே" [பிங்: 59;2]

இவ்வாறு,— முகிலை மட்டுமே குறித்து இருபத்திரண்டு தனித் தனிச் சொற்களைத் தமிழ்மக்கள் உருவாக்கியிருக்கின்றனர். இவற்றில் எட்டுச் சொற்கள் கருமைக்கருத்து அடிப்படையை உடையனவாயிருப்பது கருத்திலும் கவனத்திலும் இருத்தவேண்டிய செய்தியாகும்!

[ஆ. மழை:]

இவையே போல், முகிலினின்று பொழியும் மழை நீரைக் குறித்தும் பொதுப்பட நீரைக் குறித்துமாக இருபத்துமூன்று சொற்களைத் தமிழில் உருவாக்கியுள்ளமையில் — பதினொரு சொற்களைக் கருமைக்கருத்து அடிப்படையிலேயே தோற்றுவித்துள்ளமையும் புலனாகின்றது!

நீர், மழை, கார், மாரி, கம், ஆலம், அயம், ஆம், அம், அம்பு, அப்பு ஆகியன கருமைக்கருத்தின் அடிப்படையில் தோற்றுவிக்கப் பெற்றுள்ள அப் பதினொரு சொற்களாம்.

மற்றுமுள்ள சொற்கள் பன்னிரண்டும் அவற்றின் வழிநிலைகளும்:

[ஆ-1] பயம்: உலகுக்குப் பயன் நல்குவது, நீர்
"கார் பயம் பொழிந்த நீர்திகழ் காலை" [அகம்: 234;1]

[உரை: முகில் தான் உலகிற்கு அளிக்கும் பயனாகிய மழையை நன்கு பொழிந்தமையாலே, —எவ்விடத்தும் நீர் மிக்கு விளங்குகின்ற பொழுது......]

பயம் = நீர் [பிங். 57]

[ஆ-2] வாரி: நிலம் நோக்கி வருகின்ற வருவாய், நீர்

வா > வாஅர் > வார் > வார் + இ > வாரி = வருவது, வருவாய்
"கங்கை வாரியும் காவிரிப் பயனும்" [பட்: 190]

வாரி = (வருவாய் >) = நீர்
: நிலம் நோக்கி வருகின்ற வருவாயாகிய மழைநீர்
"புயலென்னும் வாரி" [குறள்: 14]
வாரி= நீர் [பிங். 57]

(ஆ-3) வான்: நீர்

வான் = காயம், விசும்பு
"வானுயர் தோற்றம்" [குறள்: 272]

வான் = முகில்
"ஏறொடு வான் ஞெமிர்ந்து" [மதுரைக்: 243]

வான் = மழை
"வான்மடி பொழுதில்" [பெரும்: 107]

வான் = நீர் [பிங்: 57]
வான் + அம் > வானம் = காயம், விசும்பு
''வானத் தரவின் வாய்க்கோட் பட்டு'' [கலித்: 105]

வானம் = முகில்
''ஒல்லாது வானம் பெயல்'' [குறள்: 559]

வானம் = மழை
''வானம் வாய்க்க மண்வளம் பெருகுக'' [மணி. 19,149]

வான் = நீர் [பிங்: 57] வானம் = நீர் [பிங்: 57]

(ஆ-4) வார்: நீர்

வார்தல்= ஒழுகுதல்

(ஆ-4-1) ''வார்ந்து உகு சின்னீர்'' [பெரும்: 340]

(ஆ-4-2) ''நெய்வார்ந் தனைய திண்கோல்'' [சீவக: 1697]

வார்=முகிலினின்று ஒழுகும் நீர், நீர்
''வார் ஆயிர முகமா நுகர் மஞ்சு''
[பாரத. அருச்சுனன் தவ: 159]

(ஆ-5) புனல் = நீர் [பிங்: 57]

[இந்நூலுள்- 86,87 ஆகிய பக்கங்களில் இதற்குரிய குறிப்புகளைக் காண்க!]

. [மே.கா: ''புனலின் நீங்கின்'' [குறள்: 495]

(ஆ-6) சிந்து = சொரிவுறுவது, சொரிவுறும் நீர், நீர்

சிது+அர்>சிதர்= சிதர்வுறு; சிந்து
சிதர்தல்= சிந்துதல் [நற்: 297:8, ஐங்: 458:2]

சிதர்= துளி

[காண்க: புறம்: 105:2-4, 277:2-6, முல்லை: 51,52 அகம்: 362:13,14]

சிது>சிந்து [சிது>சிந்து என ஆயினமை, இடைமிகை]
(ஒ.நோ: முது>முந்து)

சிந்து= சொரி, தூவு, தெளி
''வெண்பொரி சிந்தின புன்கு'' [சிலம்பு: 12:2-3]

(ஆ-7) இதடி= நீர் [பிங்: 57]

இது+அல்>இதல்>இதள்

இதள்>இதண்= பரண், காவற்பரண் [திணைமாலை:2]

இதண் + அம் > இதணம் = உயர்பரண், பெரிய காவற்பரண்.
(காண்க: குறிஞ்சிப்: 41)

இது + அடு > இதடு + இ > இதடி = வானினின்று (உயரத்தினின்று) பெய்யும் நீர், நீர்
''இதடியும்........நீரெனலாகும்'' [பிங்: 57]

(ஆ-8) அமுதம் = நீர் [பிங்:57]

(ஆ-9) அமிழ்தம் = நீர் [பிங்: 57]

அமிழ்தம்:

அவிழ் = விரி. அவிழ்தல் = விரிவுறுதல், மலர்தல்

அவிழ் + அகம் > அவிழகம் = மலர்ந்த பூ
"ஒள்ளிதழ் அவிழகம்" (பதிற்றுப்: 52:19)

அவிழ்தல் = கட்டுவிலகுதல், விரிவுறுதல், மலர்தல்
"மாமடல் அவிழ்ந்த காந்தள்" (நற்: 14:7)

உலையில் வெந்து மலர்ந்த அரிசி (அல்லது அதுபோலும் தவசங்கள்-,) அதன் கட்டவிழ்வு அல்லது மலர்ந்து விரிகை காரணமாக, "அவிழ்" என்ற சொல்லாலேயே குறிக்கப்பெற்று "உணவு" என்னும் பொதுப் பொருளுக்கும் பின்னர்ப் பயன்படுத்தப்பெற்றன!

அவிழ் = சோறு, உணவு

(ஆ-8-1) "வாலவிழ் வல்சி" [மலை: 183]

(ஆ-8-2) "அவிழ்ப்பதம் மறந்து பாசடகு மிசைந்து" [புறம்159:12]

அவிழ் + து > அவிழ்து
அவிழ்து > அமிழ்து (வகர-மகரத் திரிபு)

அமிழ்து = உணவு
வானோர் அமிழ்து = தேவர் உணவு

அமிழ்து+அம்>அமிழ்தம்= உணவு
"வானோர் அமிழ்தம் புரையுமால்"
[தொல்.பொருள்: 144:13]

அமிழ்து>அமிது [தொகுத்தல் திரிபு]
அமிது>அமுது (உயிரிசைவு மாற்றம்.)
(Harmonic sequence of vowels)

அமுது=உணவு
''இசையின் கொண்டான் நசையமுது உண்கென''
[புறம்: 399:21]

அமுது+அம்>அமுதம்=உணவு
''அமுதம் உண்க நம் அயலிலாட்டி'' (நற்: 6:51)

வானினின்று முகில்வழிப் பெய்யும் மழையாகிய நீர், ஓர்உணவாக வும் மக்களுக்குப் பயன்பெறுவதால் (காண்க: "துப்பாயதூஉவும்" குறள் 1:22) அமிழ்தம், அமுதம் ஆகிய சொற்களைக் கொண்டும் சுட்டப் பெற்றது!

(ஒ.நோ: "வானின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று'' (குறள்: 11)

அமிழ்து= நீர்
''அமிழ்து திகழ் கருவிய கணமழை'' (பதிற்றுப்: 17:11)
அமிழ்து+அம்>அமிழ்தம் = நீர் (பிங்: 57)

அமுதம்=நீர்
''துலங்கிய அமுதம் கலங்கியது என்ன''
[கல்லாடம்: 5:22]

கிரேக்கர் — உரோமர் ஆகியோரின் தொன்முது கற்பனைகளில் ஒன்று — ''சாவாமருந்து'' என்பது! சாகாமலேயே — உயிருடன் எப் போதும் வாழ்ந்து கொண்டேயிருக்கவேண்டும் என்று மாந்தன் விரும்பிய விருப்பத்தின் காரணமாக எழுந்த கற்பனை—,அஃது! அம் மருந்துக்கு அல்லது அப்படிப்பட்ட உனவுக்கென அவர்கள் படைத்த சொல்— ambrosia என்பது. (Greek: ambrosia= elixir of life (ambrotos= immortal = அழிவுக்கு எதிரானது, அழிவற்றநிலையை உண்டு பண்ணுவது.) (Latin=ambrosia)> (English) ambrosia = food of the gods. (p: 28. C.O.D)

அக்கிரேக்கப் பகுதியினின்று கிளம்பி, நாடோடியராகப் பரந்து அலைந்து இந்நாட்டுள் புகுந்து நிலைகொள்ளத் தொடங்கிய ஆரியர்— தம் வேதமொழியுள் பயன்படுத்திய ''அம்ருத'' என்ற சொல்லையும் அதற்குரிய அக்கற்பனை விளக்கங்களையும் இம் மண்ணுள் எங்கும் தூவினர்.

கடைக் கழகக் காலத்தில்— அச் சொல்லை நேரிடையாகக் கையாளாமல்— தமிழ் மானவுணர்வினராகிய அக்காலப் புலவர் பெருமக்கள்— ஒலிப்பமைதியிற் பேரளவுக்கு இயைபுடையதாயிருந்த ''அமிழ்தம் என்னும் உணவைக் குறித்த சொற்கொண்டே ''அம்ருத'' என்னும் அச் சாவா மருந்தைச் சுட்டுவாராயினர். ''அம்ருத''— என்னும் ஆரியச் சொல்லுக்குச் சாவா மருந்து என நேரிடையான மொழிபெயர்ப்பைச் செய்து, — அன்றைக்குச் சுட்டியவர்- திருவள்ளுவர்பெருமான் ஆவார்!

(காண்க: ''சாவா மருந்தெனினும் வேண்டாற் பாற்றன்று'' (குறள் 82)

நீரை நன்றியுணர்வோடு மதித்தெண்ணும் உயரிய மனப் பண்பினராகத் தமிழர் இருந்தமையால்— சாவா மருந்தைக் குறித்தும் வழங்கத் தலைப்படுத்திவிட்ட அவ் அமிழ்தம் என்னும் சொல்கொண்டும் அந் நீரைச் சுட்டுவதை விருப்பமாகவே கையாண்டிருந்திருக்கலாம்!

(ஆ-10) வசி= நீர் [பிங்: 57]

வய்: [பிரிவுக் கருத்து மூலவேர்]

வய்>வயி>வசி= பிரிவு, பிளவு

வசி+தல்>வசிதல்= பிளத்தல்
''வசிந்து வாங்கு நிமிர்தோள்'' [திருமுரு: 106]

வசிதடி= கண்டமாக்கிய துண்டம்
''வசிதடி சமைப்பின்'' (பரிபா: 5:39)

வசி+(த்)+தல்> வசித்தல்= பிளத்தல்
''இறைவன் கண்டமாக வசித்ததாகிய வசிதடியை......''
(பரிபா: 5:39: உரை)

வசி= பிளவால் உண்டாகிய தழும்பு

''வெள்ளூசி நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்''
(பதிற்றுப்: 42:2)

வசி= தழும்பு [பிங்.]

வசி= பிளவு
"கொழுநர் மார்பின் நெடுவசி விழுப்புண்"
[மலைபடு: 303]

[ஒ.நோ: துள் = பிரிவுக்கருத்து முதனிலை. துள்+இ>துளி= பிளவுற்றதாகிய- பிரிவுற்றதாகிய நீர்த்துண்டு, மழைநீர்த் துளி]

வசி= [துளி>] மழைநீர், நீர்

வசி= மழை
"வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி" (சிலம்பு: 5:73)

வசி > (skt) varṣ
வசி= நீர் (பிங்: 57)

(ஆ-11) அலர் = நீர் (பிங்: 57)

அலர்தல்= மலர்தல், இதழ் விரிதல்

அலர்தல்= பெருத்தல்
''அலர் முலை ஆகத்து'' (கலித்: 14.5)

அலர்தல்= மிகுதல்
''அலர்ந்தமைந்த காமம்'' (பரிபா: 6:102)

அலர்தல் = பரந்திருத்தல்
''அலர்ந்த விரிநீர் உடுக்கை உலகம்'' (கலி: 114:18)

மிகுந்து பேரளவாகப் பரவும் தன்மை காரணமாக—நீர், ''அலர்'' என்னப் பெற்றது.

''அலரும்..................நீரெனலாகும்" (பிங்: 57)
[மே.கா: கலைசைக்: 219]

(ஆ-12) கபம் = நீர்

குய்: (துளைக்கருத்து மூலவேர்)

[இம் முலவேரின் விளர்ச்சி விளக்கத்தை- எம்மின் ''அயற்சொல் அகராதி''- என்னும் நூலின் முன்னுரைப் பகுதியுள் காண்க!]

குய் > குய் + அம் > குயம் > கயம் (உகர-அகரத் திரிபு)

கயம் = இயற்கையாகவே உள்ள ஆழ்ந்த குழியத்தில் அமைந்துள்ள நீர்நிலை.

குய் > குய்ல் > குல் = தோண்டு

குல் > குள் > குள் + அம் > குளம் = தோண்டப்பெற்ற நீர்நிலை

[ஒ.நோ: ''குளந்தொட்டு வளம் பெருக்கி'' (பட்டினப்: 284)

கயம் = இயற்கைக் குளம்

(ஆ-12-1) ''காப்புடைய கயம்'' (புறம்: 15:9)

(ஆ-12-2) ''இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா''
[புறம்: 44:1]

கயம் = (இயற்கைக் குளம்) > நீர்நிலை

''துணிகயந் துகள்பட'' [மணி: 24:84]

கயம் = நீர் [பிங்: 57]

கருமைக் கருத்தின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பெற்ற பதினொரு சொற்களும் அவற்றின் வழிநிலைகளும் :

(ஆ-0-1) நீர்:

நீர் + அம் > நீரம் = நீர்

[''அம்''— பெருமைப் பொருள் பின்னொட்டு]
[Augmentative suffix]

ஈ: (கருமைக்கருத்து முலவேர்)

ஈ > ஈஇர் > ஈர்

ஈர் > ஈரு > இரு

இரு + மை > இருமை = கருமை [சீவக: 1171]

இருமை > எருமை [இகர-எகரத் திரிபு]

= கரிய நிறத்ததாகிய எருமை

[ஒ.நோ: "இருள் நிற மையான்" (குறுந்: 279:1)

ஈர்+உள் > ("உள்" ஒரீறு) > ஈருள் > இருள் = கருமை, இருட்டு

[கடல்: (இருள்நிறமுடையது)
"இருள்நிற முந்நீர்" (திருமுரு: 293)

வானம்: (இருள்நிறமுடையது)
''திருமழை தலைஇய இருள்நிற விசும்பின்'' (மலை: 1)

இர்+அவு > இரவு

இர்+அல் > இரல் > ஐ > இரலை = கரிய கலைமான்

இர்+அவு > இரவு+அம் > இரவம் = இருள்மரம்
[Iron wood of cylon, Mesua ferra]

இரவு > இரா = இரவு

இருள்+து > இருட்டு இருள்+சி > இருட்சி

இருள்(ண்)+மை > இருண்மை = இருள் தன்மை
[பரிபா: 8:58-60]

இரு+உம் > இரும். ("உம்"- ஒரு சொல்லாக்கச் சாரியை)

இரும்+து > இருந்து+ஐ > இருந்தை = கரி [நாலடி: 258]

இரும்+பு > இரும்பு = கரிய மாழை

இருள்+இ > இருளி = கரு நிறப் பன்றி

[ஒ.நோ: "இருள்நிறப் பன்றியை ஏனம் என்றலும்"
(தொல்.மரபி: 69:5)

இருளி = கருஞ்சீரகம் [மலையகராதி]

இரும்+சிலம்பு > இருஞ்சிலம்பு = கரிய மலை
''கண்வாங்கு இருஞ்சிலம்பின்" [கலி: 39:15]

[நச்.உரை: பார்த்தவர்கள் கண்ணைத் தன்னிடத்தே வாங்கிக் கொள்ளும் கரிய மலையிடத்து......]

[மே.கா:] இரும்பெண்ணை = கரிய பனை,
இருங்கடல் = கரிய கடல்
இருங்குயில் = கரிய குயில்
இருங்கூந்தல் = கரிய கூந்தல்
இருங்கழி = கரிய கழி

[வேர்நிலை விளர்வுகள்பற்றிய ஓர் அடிப்படைக் குறிப்பு]

(1) ''ஈ'' என்னும் கருமைக்கருத்து மூலவேரினின்று (ஈ) > ஈஇர் > ஈர் > ஈரு > இரு—என்றவாறு, வேர்நிலை விளர்ச்சியானது படிப்படியே நிகழ்ந்தாற்போன்றே — (2) ''இய்'' என்னும் பிரிவுக்கருத்து மூல வேர் ஒன்றிலிருந்து (இய்) > ஈய் > ஈ > ஈஇர் > ஈர் > ஈரு > இரு — என்ற வாறு வேர்நிலை வேறுகோணம் ஒன்றிலிருந்து விளர்ந்து இரண்டு என்னும் பொருண்மைக்கும் வளர்ந்தது. அப் பொருண்மையினின்று இரண்டாதல்—பிளவுபடுதல்—பிரிதல்—வெட்டுதல் போலும் சொற்பொருள் விரிவாக்கங்களும் நிகழ்ந்தன. [ஒ.நோ: ஈர் > ஈர் + தல் > ஈர்தல் = பிரித்தல், பிளத்தல். ''கோடுஈர் எல்வளை'' [ஐங்: 196:1] ''ஈர்முள் வேலி'' (அகம்: 297:12) ஈர்தல் = பிளத்தல், வெட்டுதல் (காண்க: ''உயிர் ஈறும் வாள்'' (குறள்: 334). ஈர் > ஈரு > இரு = இரண்டு. (காண்க: இரு சுடர் = ஞாயிறு— நிலவு ஆகிய இரண்டு சுடர்கள் (ஒ.நோ: தேவா: 320:10)

இவை போலவே,— (3) ''இய்'' என்னும் பொருந்துதற் கருத்து மூலவேர் வழியே (இய்) > ஈய் > ஈ > ஈஇர் > ஈர் > ஈரு > இரு— என்றவாறு செறிதற் கருத்தின் வழி — பெருமைக் கருத்து நோக்கிய விளர்ச்சியொன்றும் தமிழில் உருவாக்கப் பெற்றது! (ஒ.நோ: ஈர் + அறிவு > ஈரறிவு = பேரறிவு, ஈர் + இனம் > ஈரினம் = பேரினம் (அகம்: 275:11-12) (மே.கா: பதிற்றுப்: 78:18.) (அகம்: 267:8). "இய்" என்னும் பொருந்துதற் கருத்துடைய இம் மூலவேரின் வழியிலேயே (ஒ.நோ: இய் > இயை = பொருந்து. இயைதல் = பொருந்துதல் (நாலடி: 210). இயை + த் + தல் > இயைத்தல் = பொருத்துதல். இயை + பு > இயைபு = பொருத்தம் [குறள்: 573], புணர்ச்சி [தொல். சொல்: 308] இய் > இயை > இசை. இசைதல் = பொருந்துதல். இசைத்தல் = பொருத்துதல். இயை > இழை. இழைதல் = பொருந்துதல், கூடுதல், நெருங்குதல்) (3-அ) இய் > ஈய் > ஈ > ஈஇர் > ஈர் என்றவாறு விளர்ச்சி யெய்திப் பொருந்துதல், பொருந்தப் பண்ணுதல், தன்வயமாக்குதல் கருத்தடிப்படையாக இழுத்தல் (ஈர்ப்பு) கருத்து வளர்ச்சிக்குத் தழைத்துச் சென்றது.

இய் > இயு > இழு = சேர், சேரப்பண்ணு, ஈர்த்தலைச்செய். இய் > இய்ம் > இய்ம் + கு > இய்ங்கு > இங்கு. இங்குதல் = இழுத்தல். [இய்ம் + சு > இய்ஞ்சு > இஞ்சு > இஞ்சு + இ > இஞ்சி = (நீரை உள்ளுக்கிழுக்கும் வேர். இஞ்சிவேர் > (Latin) gingiber > (Greek) ziggiber >)

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
26959

(Med.Latin) gingiber > (old French) gingimbre > (old English) gingiber > (M.E) ginger > (English) ginger.]

ஈர் + (த்) + தல் > ஈர்த்தல் = இழுத்தல். ஈர்ப்பு = இழுப்பு. ஈர் + அம் > ஈரம் = ஈரப்பற்று. பொருளோடு அல்லது நிலத்தோடு சேர்ந்த இயைபு காரணமாக—நீராலாகிய சொதசொதப்புப் பற்றுகை— ''ஈரம்'' என்னப்பெற்றது.

ஈரம் > = (பற்று >) = [மனநெகிழ்ச்சி] அன்பு [காண்க: குறள்: 91, பதிற்றுப்: 90:14, சிறு: 93-95, குறிஞ்சி: 231-234, அகம்: 65: 2-4, நற்: 181:6-8]

[ஈரம் (> அன்பு) = அருள்]

[ஈ > ஈஇர் > ஈர் > இரு

இரு + மை > இருமை = கருமை

ஈ > ஈஇர் > ஈர் > ஞீர் > நீர் = கரிய முகிலினின்று பொழிவுற்ற மழைநீர், நீர்]

["இய்" என்னும் பொருந்துதற் கருத்து வேர்வழியில் "நீர்" என்னும் சொல் தோற்றுவிக்கப் பெறவில்லை! "ஈரம்" என்னும் நீர்வழிச் சொதசொதப்பே- அவ்வழியில் தோன்றியது!

இய் > ஃய் > ஈ > ஈஇர் > ஈர்

ஈர் + அம் > ஈரம்

"நீர்வார் மருங்கின் ஈர்அணி திகழ" [அகம்: 139:15]

ஈர் + மணல் > ஈர்மணல் = ஈரமணல் [குறுந் : 257:7, 351:3] [நற்: 21:10]

ஈர் + (ம்) + கை > ஈர்ங்கை = ஈரமுள்ள கை, உண்டு பூசிய கை

"ஈர்ங்கை விதிரார் கயவர்" [குறள்: 1077]

"எச்சில் ஈர்ங்கை" [புறம்: 258:5]

ஈர் + (ம்) + சேறு > ஈர்ஞ்சேறு (பெரும்: 341)

ஈர்+அளை+அலவன் > ஈரளை அலவன் = ஈர வளையிலிருக்கும் நண்டு

"இருஞ்சேற்று ஈரளை அலவன்" [அகம்: 350:4]

ஈர்+[ம்]+சாந்து > ஈர்ஞ்சாந்து [பரி: 6:19]

ஈர்+அணி > ஈரணி = 1. ஈரமான ஆடை [பரி: 11:81-86]
2. புனலாடற்குரிய அணி
[அகம்: 166:13-15, 266:2-6]

நீரின் ஈரக் காரணவழியில் குளிர்ச்சிக்கருத்து ஏற்பட்டது.

ஈர் = [ஈரம்] = குளிர்ச்சி

ஈர்+[ம்]+தண் > ஈர்ந்தண்

காண்க:—

ஈர்ந்தண் சிலம்பு [புறம்: 158:10], ஈர்ந்தண் ஆறு [அகம்: 222:15], ஈர்ந்தண் ஆடை [கலி: 52:11], ஈர்ந்தண் கொழுநிழல் [குறுந்: 123:1]

ஈர் = [ஈரம்] = குளிர்ச்சி

"ஈர்ங்கண் மாஞாலம்" [குறள்: 1058]

"ஈர் நறுங்கையள்" [ஐங்: 259:1]

ஈர் + அம் > ஈரம் = நீரின் படிவு காரணமாக ஏற்பட்ட சொத சொதத்த நெகிழ்வு நிலை

(காண்க: புறம்: 120:1-3,9, 289:1-3, 369:10-13, 392: 6-11)

ஈரம், நீரால் ஏற்படுவது. நீரல்லாத ஈரம்(!) கழக இலக்கியத்துள் ஒரேயோர் இடத்தில் குறிப்பிடப் பெற்றிருக்கின்றது! அக் காட்சி வருமாறு:—

"களிறு நின்று இறந்த நீர்அல் ஈரத்து" [நற்: 103:4]

[உரை: களிறு நின்று கழித்து அகன்ற நன்னீரல்லாத இழிந்த நீரினாலாகிய (சிறுநீர்) ஈரத்து.........]

விசும்பினின்று வீழும் நீரை [குறள்: 16]—, துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாயதுவும் ஆகிய மழை நீரை [குறள்:12] —வான்நின்று வழங்கும் அமிழ்தத்தை—, எழிலி தடிந்து தான் மீளவும் நல்கும் அத் தண்ணிய நீரைத் தமிழர் மிகவும் போற்றினர் என்பதற்குத் திருக்குறளின் வான்சிறப்பு அதிகாரத்தையே அதிகாரச் சான்றாகவும் கொள்ளலாம்! கடலினைத் தெய்வமாகக் கருதிய வழக்கமும் தமிழகத் தில் இருந்தது! [காண்க : கடற்றெய்வம் = கடலாகிய தெய்வம். [நற்: 131:12]

ஈர் > ஞீர் > நீர் = கரிய முகிலினின்று பொழிவுற்ற மழைநீர், நீர்

[நீருக்குப் பொதுப்படுமாறு "நிறம்" என்ற ஒன்றைச் சுட்ட இயலாது தான்! எப் பொருளைச் சார்ந்திருக்குமோ—அப் பொருளின் நிறத்தைக் காட்டவல்லது—அது! சார்ந்த பொருளொடு—அப் பொருளின் வன்மை மென்மைகளுக்குத் தகத் தன்னை இயைத்துக் கொள்ளும் தன்மையும் இந் நீருக்கு உண்டு! இதன் காரணமாக— நீருக்கு அறிவியற்பாங்கில் "உலகக் கரைமம்" [Universal solvent] என்றவாறான பெயரே உண்டு!]

ஆயினும்—நம் தமிழர்கள், நீரினை அது வந்து சேரும் வழிப்பேறு காரணமாகவும்— அதன் காட்சிநிலை காரணமாகவும்—நிறப்பேறு வழிய தாகவே அதற்குரிய தொடக்கப் பெயர்களை அமைத்துள்ளமையில் நம் மோரின் முறையுற்ற பார்வைப் போக்கும் தெளிவாகப் புலனாகின்றது!

வானப் பெருப்பரப்பில் அங்கும் இங்குமாகத் திரண்டு சென்று கொண்டிருக்கும் முகிலின் நிறம்—கரியது! (சான்றுகள் : (காண்க:) கார், மை, மழை, மங்குல், மஞ்சு, மாரி, மால், மாசு, ஆயம்). இக் கரிய முகில் சொரியும் மழையும் — (கருமை வழி அடிப்படையில்—) கருமை! (சான்றுகள்:) (காண்க:) ஆயம், ஆம், அம், அம்பு, அப்பு, ஆலம், மழை, கார், மாரி, கம்.). இம் முகில் உலாவிடமாகிய வானப்பெரு வெளியின் தோற்றமும் கருமை! (காண்க: கார்வான் (அகம்: 308:18; புறம்: 147:3), கார்வானம் (தி.மொ: 24:3) [மேலுங்காண்க: நீல் நிற விசும்பு (பெரும்: 135; மது: 581, 678; பட்: 67; நற்: 199:7, 348:1]. அம் முகில்நீர் ஆகிய மழை விழுகின்ற பெரும் பரப்பிடமாகிய திரைகடலின் நிறமும் — கருப்பு! [காண்க: கருங்கடல் (கார்: 37:1; தி.மா: 93:1, நீல்நிறப் பெருங்கடல் (நற்:45:2; குறுந்: 269:4; ஐங்: 102:2; அகம்: 40:2), நீலமாக்கடல் (மணி: 8:17)

சுனையில் மென்மெல ஊற்றெழுந்து கொண்டிருக்கும் நீரும்—

தோற்றப்பார்வைக்குக் கருமை நிறத்ததாய்த் தோன்றியது!

[காண்க:] "பறைக்கண் அன்ன நிறைச் சுனை பருகி"
[அகம்: 178:3]

(உரைக்குறிப்பு: வட்ட வடிவிற்றாய் வாயையுடைய சுனையின் கண் நீர் நிறைந்திருத்தலால் பறைக்கண் உவமையாயிற்று......)

(ஒ.நோ: "நீலப் பைஞ்சுனை" [திருமுரு: 253; பரி: 5:48]

ஆழமான நீர்நிலையை உற்றுப் பார்த்தபொழுது — ("நிலவரை யிறந்த குண்டுகண் ணகழி" (புறம்: 21:2), அதற்குள் கிடந்த நீரும் கருமையாகவே காட்சியளித்தது!

[காண்க:] "மண்ணுற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கின்"
[மதுரை: 351]

(நச்.உரை: மண்ணுள்ளவளவுமாழ்ந்த நீலமணிபோலும் நீரை யுடைய இடங்களையும்......]

காக்கை—கன்னங்கரியது! முகில் போன்ற நிறத்தையுடையது! (காண்க: "மைந்நிற உருவின் மணிக்கட் காக்கை" (அகம் :327:15) காக்கையின் நிறத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் "நீர்நிறக்காக்கை" என்றார், இளங்கோவடிகளார்!

காண்க: "கானக் கோழியும் நீர்நிறக் காக்கையும்"
(சிலம்பு: 10:116)

காக்கையின் நிறங் கூறுகின்றபொழுது — நீரைக் குறிப்பிடுகின்ற அளவுக்குத் தமிழர்களிடம் "நீரின் நிறங் கரியது!" என்றவாறான மரபு வழிப் பொருள்பற்றிவரற் போக்கு இம் மண்ணில் தொடர்ந்து வந்துள் ளமையை நாம் முதற்கண் நன்கு உளங்கொள்ளவேண்டும்!

ஈ > ஈ + இர் > ஈஇர் > ஈர் > ஞீர் > நீர்

ஈர்(யீர்) > ஞீர் [யகர- ஞகரத் திரிபு]

ஞீர் > நீர் [ஞகர-நகரத் திரிபு]

நீர் : 1. நீர்

2. கடல்

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்" [பட்: 185]

கடலினைக் குறித்து—நீர் என்னும் சொல்லை அடையடுத்தவாறு சொல்லிய பல கூட்டுச் சொற்களிலுங்கூட இவ்வுண்மை பரந்து கிடப்பதைக் காணலாம்!

(2-1) விரிநீர் = கடல் "விரிநீர் வியனுலகத்து" [குறள்: 13]

(2-2) நாமநீர் = கடல் "நாமநீர் வைப்பின்" [குறள்: 149]

(2-3) மாறாநீர் = கடல் "மாறாநீர் வையக்கு அணி" [குறள்: 701]

விரிகடலின் சூழ்வு காரணமாக — இவ்வுலகத்தையே "நீரகம்" என்றவாறு வழங்கும் வழக்கமும் ஏற்பட்டது.

"நீரகம்" = நீரால் சூழ்வுற்றதாகிய உலகம் (மணல: 81)
[மேலுங்காண்க :] "நீரக விருக்கை" (புறம்: 99:3)

நீர் = (கூட்டுச் சொற்களில் சில)
[நீர்க்கால், நீர்க்கோழி, நீர்நசை, நீர்நாய், நீர்த்துறை, நீர்க்குமிழி, நீர்க்கிடங்கு, நீர்ப்பாசி, நீர்நிலை, நீர்மலர், நீரணி......]

நீர் > (Greek) nerōs = Wet

[மே.கா:] Nereid = a sea nymph (= கடல் அணங்கு)

(ஒ.நோ.) கடல்கெழு செல்வி (= கடல் தெய்வம்) (அகம்: 370: 3-10)

(Latin) Nereid = a sea nymph
> (English) Nereid = a sea nymph (p. 732. C.O.D)

[மே.கா:] aneroid = [Barometer] that measures air-pressure by its action on elastic lid of evacuated box, not by height of fluid column.

[f. (French) aneroide f. (Greek) : a = not + nerōs = wet] [page: 35. C.O.D]

(Eng) Nerine = bulbous S.Afr. plant of genus nerine.
[Mod. L. f. L. name of a water nymph]
[page: 732. C.O.D]

தமிழிய மொழிகள் சிலவற்றில் "நீர்" என்னும் சொல்லின் வழக்காறுகள்:

Malayalam : nīr = water
Kota : ni-r = water
Toda : nir = water
Kannada : nīr, nīru = water
Tulu : nīru = water
Telugu : nīru = water
nīllu = [pl.]
Kolami : i-r = water
Naikri : īr = water
Parji : nīr = water
Kui : nīru = juice

இந்திய- ஆரிய மொழிகள் சிலவற்றில் "நீர்" என்னும் சொல்லின் பதிவுகள் :

Sanskrit : nīra = water
Prakrit : nīra = water
Lahndā : nīr = water
West-pahārī : nīr = tears [= கண்ணீர்]
[காண்க: நீர் = கண்ணீர். குறள்கள் : 71, 1170, 1174, 1177, 1315]
Bhadrawāhī dialect of West pahārī : nīrū = Water
Jaunsārī dialect of West pahārī : nīr = Clear water
Hindī : nīrā = Water
Ashkun : nil = lake

கருமைக்கருத்து அடிப்படையில் நீரைக் குறித்துச் சுட்டி உருவாக்கப் பெற்றுள்ள பத்துச் சொற்களாவன:

[இ-1] மழை = நீர்

[முகிலைக் குறித்து நீர்ப்பொருளுக்கு வளர்ந்த வரலாற்றை இக் கட்டுரையில் வரும் [அ-1-15] மழை என்னும் பகுதியுட் காண்க]

[இ-2] கார் = நீர் (காண்க: அ-1-21)

[இ-3] மாரி = நீர் (காண்க: அ-1-18)

[இ-4] கம் = நீர்

"கய்"—கருமைக்கருத்து மூலவேர்

கய் > கய்ம் > கம் = நீர்

[ஒ.நோ:]

கம் + புள் > கம்புள் = நீர்ப்புள், சம்பங்கோழி

[இ-4-1] "பழனக் கம்புள் பயிர்ப்பெடை யகவும்"
[ஐங்குறு: 60:1]

[இ-4-2] "வெண்நுதற் கம்புள் அரிக்குரற் பேடை"
தண் நறும் பழனத்துக் கிளையோடு ஆலும்"
[ஐங்குறு: 85:1-2]

[இ-4-3] "துறைநணி கெழீஇக் கம்புள் ஈனும்"
[புறம்: 297:7]

[இ-4-4] "பூம் பொய்கைக் கம்புட் சேவலின் துயில்"
[மதுரைக்: 253-254]

[இ-4-5] "பழனத் தாமரைப் பைம்பூங் கானத்துக்
கம்புட் கோழியும்" [சிலம்பு: 10:14]
[மே.கா: மணி: 4:12]

கழக இலக்கியங்களுள் கம்புள் காட்சிதரும் ஆறிடங்களும் நீர் நிலைப் பாங்கினவாகவே இருத்தல் நன்கு கவனிக்கத் தக்கது.

கம் + ஆலை > கம்மாலை = நீர் இறைக்கும் ஆலை
[கம்மாலை > கமலை]

கம் + அம் > கமம் = நீர்
கமம் + சூல் > கமஞ்சூல் = நீர்ச்சூல்
"சேயுயர் விசும்பில் நீருறு கமஞ்சூல்" [குறுந்: 341:1]

கம் = நீர் [பிங்கலம்]
> கம் = [முகில்] [சூடா.]

❀ கங்கை

கம்+கு > கங்கு = கருமை

கங்கு = கருந்தினை [பிங்: 3260]

கங்கு+அன் > கங்கன் = கருப்பன்

[ஒ நோ: கார்+இ > காரி = கருப்பன்

[மே கா: மலையமான் திருமுடிக்காரி]

கங்கு+உல் > கங்குல் = கருமை, இருண்மை உடைய இரவு

கங்கு+ஐ > கங்கை = கருப்பாறு

கங்கை : கழக இலக்கியங்களில் இதன் பதிவெண்களாவன: [காண்க:] புறம்: 161:5-8, பதிற்றுப்: 5:2-7, பெரும்பா: 429-431, மதுரைக்: 694-697, பட்டினப்: 190, அகம்:265:4-6, நற்: 189:4-6, 369:7-11, பரி: 16:32,38]

[ஒ.நோ: கார்+இ > காரி = ஓர் ஆற்றின் பெயர். (கருப்பாறு)

[மே.கா: காரியாற்றுக் கொண்ட நெடுங்கிள்ளி

''காரியாற்றுக் கொண்ட'' (மணி: 19:126)

(இ-5) அயம் = நீர் (பிங்கலம்: 57)

"யா"—கருமைக்கருத்து மூலவேர்

யா > யாஅய் > யாய் > யாய்+அம் > யாயம் > ஆயம் = முகில்

ஆயம் > அயம் [இது நெடுமுதற் குறுகல்]

முகிலைக் குறித்துப் பின் நீருக்காயிற்று.

அயம் = நீர்

"அருவி யார்க்கும் அயம் திகழ் சிலம்பின்" [நற்: 365:7]

[(மே கா:) அகம்: 38:16, கலி: 52.6, குறு: 293:5,6]

அயம் = (நீர்) > (நீரூறும்)—சுனை

"அயம் திகழ் சிலம்பு" [ஐங்: 264:3]

அயம் = (நீர்) = நீரோடை

"கார்ப்பயம் பொழிந்த நீர்திகழ் காலை
நுண்ணுயிர் பரந்த தண்ணயம் மருங்கில்"
[அகம்: 234:1-2]

(இ-6) ஆலம் = நீர்

யா > யாஅல் > யால் > யால் + இ > யாலி > ஆலி

ஆலி = மழை, மழைத்துளி

யால் + இ > யாலி > ஆலி = முகிலினின்று விழும் நீர்க்கட்டி

ஆலி = மழைத்துளி

''நீலத்து அன்ன நீர்பொதி கருவின்
மாவிசும் பதிர முழங்கி ஆலியின்
நிலந் தண்ணென்று.........'' [அகம்: 314:1-2]

[உரை: நீலமணி போன்ற நிறத்தைத் தோற்றுவிக்கும் நீர் நிரம்பிய சூலை உடைய பெரிய வானம் அதிரும்படி முழங்கி, பெய்த மழையினால் நிலங் குளிர்ந்து.........]

"ஆலித் தண்மழை" [ஐங்: 437]

யா > யாஅல் > யாலி > ஆலி > ஆலி + (த்) + தல் = ஆலித்தல் = சொரிதல், தூவுதல்

"வானம் கருவிருந்து ஆலிக்கும் போழ்து"
(கார் நாற்பது: 1)

யால் > யால் + அம் > யாலம் > ஆலம்

"ஆலமே.........மழையும்" (அக.நி.—ஆ முதல்:101)

ஆலம் = நீர்

"ஆலஞ்சேர் கழனி" [தேவா: 2, 81,7]

(இ-7) 1. ஆம் = நீர்

யா > யாஅம் > யாம் > ஆம் = நீர்

((இ-7-1) "ஆம்இழி சிலம்பின்" [குறுந்: 308]

(இ-7-2) "வரை ஆம் இழிய" [ஐங்: 223]
(இ-7-3) "ஆம்இழி அணிமலை" [கலி: 48:1]

2. ஆம்= (நீர்) > ஈரம்

(இ-7-0-1) "அழல்போல் வெங்கதிர் பைதறத் தெறுதலின்
....
அறுநீர்ப் பைஞ்சுனை ஆம்அறப் புலர்தலின்"
(அகம்: 1:10......12)

[உரை: தீயைப் போன்று வெப்பமிக்க கதிர் பசுமையறக் காய்தலின்................. நீரற்ற பசிய சுனைகளிலும் ஈரம் இல்லையாம்படிக் காய்தலின்"]

(இ-7-0-2) "ஆம் என்பதுவே இடைச்சொல்லும் ஈரமும்"
(அக. நி.—ஆ முதல்: 92)

3. ஆம்= (நீர்) > குளிர்ச்சி
"வேய்பயில் இறும்பின் ஆம் அறல் பருகும்"
[நற்: 213:5]
[ஆம் அறல்= குளிர்ச்சி பொருந்திய நீர்]

4. ஆம்= (நீர்) > நீர்வளம்
"ஆம் இருந்த அடைநல்கி" [புறம்: 362:13]
ஆம்+செல்கை>ஆஞ்செல்கை= தெப்பம் (raft)
[ஞானப்பிர. ஒப்பியல் அக.]

ஆம்>அம்= நீர் [நெடுமுதல் குறுகல்]

(இ-8) அம்= நீர் (பிங்: 57)

(இ-8-1) "கண்கள் அங்கு அம் செய்ய" [சேரமான். பொன்: 3]
(இ-8-2) "அந்தாழ் சடையார்" (வெங்கைக்: 35)
(இ-8-3) "அம்............நீராம்" [சூடா. நி. மகரவெதுகை: 6:1]

(இ-9) அம் + பு > 1. அம்பு= நீர்

(இ-9-1) ''வெம்மையை......அம்பின் ஆற்றுதும்''
[கம்பரா: 1,1,3]

(இ-9-2) ''விழி அப்பு உக ஓடி'' [கலிங்: 40]

2. அம்பு= (நீர்) > கடல்
''அம்பு ஏழும்'' [திருப்பு: 32]

3. அம்பு= (நீர்) > (நீர்கொண்ட-) முகில்
''அம்பே.........நீரும் புயலும்''
[அக.நி.-அம் முதல்: 152]

4. அம்பு= (நீர்) > (நீர்கொண்ட முகிலுடைய-) வானம்
''அம்பு..............விண்ணும் விளம்பலாகும்''
[பொதி. நி. 2,69]

5. அம்பு= (நீர்) > (நீர் சூழ்ந்த—) உலகம்
''அம்பு கைக் கொண்டால் ஆர் இவற்கு நிகர் ஆவார்''
[சீவக: 2332]

[அம்பு+அணம் (ஓரீறு) > அம்பணம்

அம்பணம்= நீர் விழும் தூம்பு
"கிம்புரிப் பகுவாய் அம்பண நிறைய" [நெடுநல்: 96]

அம்பணம் = நீர்ப்பத்தல்
"அம்பணம்........... நீர்ப் பத்தல்" [வட. நி: 58]

அம்பணம் = (நீர்ப்பத்தல் போன்ற தோற்றத்தையுடைய-)
மரக்கால்
"அம்பணத்து அன்ன யாமை ஏறி" [ஐங்குறு: 43:1]
அம்பணம்= மரக்கலம் [அக. நி.]

அம்பணம்= மரக்கால்; பதினோராடல் வகையினுள் ஒன்று;
[காளி ஆடிய ஆட்ட வகை]
"மாயவள் ஆடல் மரக்கால்" [சிலம்பு: 3:14 அடியார்க்கு-]

[மேலுங் காண்க:]

"மரக்கால் மேல் வாளமலை ஆடும்"
[சிலம்பு: 12: கூத்துப்பாடுதல்]

அம்பணம்+அத்தி>அம்பணத்தி= காளி, கொற்றவை (பிங்.)

[அம்பு+இ> அம்பி = நீரைக் கடக்கவுதவுங் கலம், தெப்பம், ஓடம், தோணி

அம்பி = தெப்பம்

"உறுவரும் சிறுவரும் ஊழ்மாறு உய்க்கும்
அறத்துறை யம்பி ...." [புறம்: 381:23-24]

[உரை: பெரியவராயினும் சிறியவராயினும் வருவோரை இரு கரையினும் மாறிமாறிக் கொண்டுபோய்விடும் நீர்த்துறையிடத்துள்ள அறத்துக்கு உழைக்கும் தெப்பம் போல......]

அம்பி = ஓடம்

''துறையம்பி ஊர்வான்'' [கலி: 103:38]

அம்பி = தோணி

1. ''வைகு கடல் அம்பியின் தோன்றும்''
[அகம்: 187:23]
2. ''பரிமுக அம்பியும் கரிமுக அம்பியும்''
[சிலம்பு: 13:176]

[மே.கா: அம்பி = தோணி [புறம்: 343.2]

இந்திய-ஆரிய மொழிகள் சிலவற்றில் இச் சொல்லின் வழக்காறுகள்:

அம்பு> (Sanskrit) ambu = water
[ambhah pati = the lord of waters
ambhah stha = standing in water
ambhoja = water born, the day lotus]
(Prakrit) ambu = water
(ambha) = water
(Pali) ambu (ambha, ambhas) = water
(Sinhalese) amba = water
அம்பு > (sanskrit) ambhas = water
(Prakrit) ambha = water
(Pali) ambha, ambhas = water
(Hindi) (ambhaurī = watery pustules)

(இ-10) [ஒரு முற்குறிப்பு] :

அம்பு= கணை, வில்லில் தொடுத்து எய்யுதற்குதவும் கணை

அய்= நுண்மை [>கூர்மைக் கருத்து]

அய்+இல்>அயில்= கூரிய வேல், வேல்

அய்>அய்ம்>அய்ம்+பு>அய்ம்பு> அம்பு= கூர்ங்கணை
"உருவ வல்வில் பற்றி அம்பு தெரிந்து" [அகம்: 82:11]

அம்பு>அப்பு [வலித்தல் திரிபு]

அப்பு= அம்பு

[1] "அப்புப் புதையும் அணிவரிச் சிலையும்"
[பெருங்: 1, 52,16]

[2] "வேடர் வெந்நுனி அப்பு மாரி" [சீவக: 451]

இம் மேற்குறித்தவாறான வலித்தல் திரிபு நிலையையே "அம்பு" என்னும் நீரைக் குறித்த சொல்லும் வாய்ந்தது!]

அம்பு > (1) அப்பு = நீர்

(இ-10-1) "குடமலை ஆகத்துக் கொள் அப்பு இறைக்கும்"
[கார்நாற்: 33]

(இ-10-2) "......................................அங்கி
ஆனது வெளிப்பட் டதன்க ணப்பின்
தன்மை வெளிப்பட்டு..............."
[மணி: 27:210-211]

2. அப்பு= ஐம்பெரும் பூதங்களுள் ஒன்றாகிய நீர்
"நிலனே அனல் காலொடு அப்பு ஆனவனே"
[திருவாச: 6:20]

3. அப்பு= கங்கை நீர்
"இளமதியும் அப்பும் முடிமேல் அணிந்து"
[தேவா: 2:85,7]

4. அப்பு= கடல்
"அப்பு நீர் ஆடுவான் போல்" [கம்பரா: 6:8,18]

5. அப்பு= (நீரைப்பொழியும்-) முகில்

''கார் அப்பு'' (சங்கர-கோவை: 283)

அப்பு > (Sanskrit) ap = Water

[apa-wat = Watery
aptya = Watery
apya = being in water, coming from water, connected with water]

யா : (கருமைக்கருத்து மூலவேர்)

யா > யா + அர் > யாஅர் > யார் > யாரு > யாறு

யாறு = ஆறு

பல்வேறு சொற்கள் — கருமைக்கருத்து அடிப்படையிலாக நீரைக் குறித்தெழுந்த சொல்வரலாறுகளை மேற்கண்டோம். நிலவி நின்றாற்போலத் தோற்றந்தந்தவாறே பெரும்பரப்பாகப் பாய்ந்தோடும் ஆறும்—தோற்றத்தில் மென்கரிய அல்லது நீலநிறத்தினதாக அமைந்துள்ளமை நோக்கி, "யா" என்னும் கருமைக்கருத்து அடிப்படையிலேயே (யா > யா + அர் > யாஅர் > யார் > யாரு >) யாறு என்றவாறு பெயர் சூட்டப் பெற்றுள்ளது! [இதற்குரிய கருத்து வலிவுகளுக்குக் "காரியாறு" என்னும் ஓர் யாற்றினது பழம் பெயர் ஆட்சியும், "கங்கை" என்னும் யாற்றின் பெயர்க் காரணமும் சான்றுகளாகி நிற்பதையும் உற்றுக்கண்டு உண்மையுணரலாகும்.)

(அ) யாறு = ஆறு

(1) "யாறும் குளனும் காவும் ஆடி" [தொல். பொரு: 4:50]

(2) "கான்யாறு தழீஇய அகல்நெடும் புறவின்" [முல்லை: 24]

(3) "யாறு கிடந் தன்ன அகல்நெடுந் தெருவில்" [மதுரை: 359] [நற்: 200:3]

(4) "யாறு போலப் பரந்தொழுகி" [பட்: 45]

(5) "தேறுநீர்ப் புணரியோ டியாறுதலை மணக்கும்" [பட்: 97]

[மே.கா: சிறு: 3-4, மதுரை: 696, மலை: 52,214, 324,481 நற்: 7:4, 53:6, 97:4, 114:8, 119:6, 121:10, 200:3]

(ஆ) யாறு > ஆறு

(1) "ஆறு கிடந் தன்ன அகல்நெடுந் தெருவில்" [நெடுநல்: 30]

(2) "ஆற்றய லெழுந்த வெண்கோட் டதவத்து" [குறுந்: 24: 3]

[மே.கா: பரிபா. திர: 2:61, நாலடி: 136, கம்பரா: 2,12,15, பெரியபு: 37:133]

பெரு+ஆறு > பேராறு = பெரிய ஆறு

''அருஞ்செலற் பேராற் றிருங்கரை யுடைத்து''

(பதிற்றுப்: 13:15)

சிறு+ஆறு > சிற்றாறு = சிறிய ஆறு

''கானச் சிற்றாற்றயல்'' [கலி: 108:27]

ஆற்றுக்கவலை = ஆற்றுத் துருத்தி, ஆற்றிடைக் குறை

''உள்ளாற்றுக் கவலை'' [புறம்: 219:1]

''செல்லாற்றுக் கவலை'' [குறுந்: 263:2]

"ஆறு" என்னும் சொல்-தமிழிய மொழிகள் சிலவற்றில் வழங்கும் வழக்காறுகளாவன:

Malayalam : āru = river
Tulu : āru, sāru, hāru = river, stream
Telugu : ēru = river
Gondi : yēr, ēr = river
atta-yēr = boiling water
(அடு >) அட்ட = (சுட்ட, காய்ச்சிய) > atta)
Konda : ēṛ(u)

[தனிக்குறிப்பு:]

(செல்வதற்குரிய—) "வழி" என்னும் பொருளில் வழங்கும் "ஆறு" என்னும் சொல், — நடந்து நடந்து அறுபட்டதாகிய பாதை என்னும் பொருளில் வேறு கருத்தோட்டத்தில் தோன்றியதாகும்.

அறு > ஆறு = அறுபட்ட வழி

நிலமானது—செடி கொடிகளும், புற்பூடுகளுமாகச் செறிந்து புதற் பரப்பாக இருந்த முற்காலத்தில்—மக்கள் அந் நிலத்தே தொடர்ந்து நடையிட்டதால் ஏற்பட்ட மிதிபாடுகளின் வழி அச் சின்னஞ்சிறு நிலைத் திணைகள் வளராதடங்கிய செல்வழி,— அறுபட்டாற் போன்ற தோற்றந் தந்தமை காரணமாக — "அறு" என்னும் பிரிவுக்கருத்து முதனிலை வழியே — (அறு >) "ஆறு" என்றவாறு குறிக்கப் பெற்றது!

ஆறு= பாதங்களின் தொடர்ந்த மிதிபாடுகளால் அறுபட்டாற் போன்று தோன்றும் செல்வழி, வழி, சுரவழி

[காண்க:]

(1) "பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி"
(தொல். பொருள்: 43:1)

(2) "மென்றோள் அஞ்ஞை சென்ற ஆறே" (அகம்: 15:19)

(3) "ஆறுசெல் வம்பலர் காய்பசி தீர" (பெரும் :365)

(4) "ஆறுசெல் வருத்தத்துச் சீறடி சிவப்ப" [சிலம்பு: 12:2]

ஆறு > [வழி] > முறை

''பல்லாற்றானும்'' [தொல். பொருள்: 166:2]
(=பலவழியானும், பலமுறையானும்)

ஆறு>(வழி)>(நெறி)>(உயர்நெறி)>(ஒழுக்கநெறி)>அறநெறி

''அறத்தாறு'' [அகம்: 5:16]
''ஒழுக்க ஆறாக் கொள்க" [குறள்: 161:1]

ஆறு>(வழி)>(நெறி)>சமய அறிவுநெறி

''சைவ நல்லாறு ஓங்க" [பெரியபு: 20:57]

ஆறு>(வழி)>(மரபு) >இயல்பு

''வரைதல் ஆறே'' [தொல். பொருள்: 138]

யா : (கருமைக்கருத்து மூலவேர்)

நானம் :

யா > யாஅன் > யான் > யான் + அம் > யானம் > ஞானம் > நானம்

நானம் : 1. புழுகு, புழுகுநெய்
2. மான்மதம்

[முற்குறிப்புரை:]

புய்தல் = பிரிதல், பிரிந்து வெளிப்படுதல், கிழிதல், கிழிந்து வெளி வருதல்

புய் > புயு > புழு [யகர·ழகரத் திரிபு]

புழு + [த்] + து > புழுத்து = வெளித்தள்ளு
புழுத்து-தல் > புழுத்துதல் = வெளித்தள்ளுதல்

புய் > புயு > புயுகு > புநுகு > புனுகு = 1. புழுகு என்னும் பெயருடைய மணப்பொருள்
2. அம் — மணப் பொருளை வெளித்தள்ளும் ஒரு வகைப் பூனை. [Civet-Cat]

புழுகு அல்லது புனுகு என்னப்பெறும் இது, "Viverridae" என்னும் ஊனுண்ணும் விலங்கினத்தைச் சார்ந்த ஒரு வகைப் பூனையாகும்! ஆங்கிலத்தில் இதனை "civet- cat" என்பர். இன்றும், —நடுவண் ஆப்பிரிக்க நாட்டில் உள்ள "Civettictis Civetta" என்னும் விலங்கியற் பெயருடைய பூனையே, இது!

புனுகுப் பூனையின் எருவாயுள் அமைந்திருக்கும் பையாகிய சுரப்பு உறுப்பு [anal gland] — புனுகுச் சட்டம் என்னும் பெயருடையது. [Gland in the anal pouch of the Civet-Cat]. இதற்குப் "புழுகுச் சட்டம்" என்னும் பெயரும் உண்டு! புனுகுச் சட்டத்தினின்று வெளிப் படும் திண்மையான பசைப்பொருள் ''புனுகு'' [Civet] என்னப்பெறும்!

[Telugu:— Punnugu]. [Kannada]—[Punnuku]

இது ''சவ்வாது'' என்றவாறு இன்று பரவலாகக் குறிப்பிட்டுச் சொல்லப் பெறுகின்றது. "zabād" என்னும் உருதுமொழிச் சொல்லின் திரிபு—இது!

''கலவை புழுகொடு சவ்வா தார்ந்த'' [தனிப்பா: 1:227:21]

'' zabād '' என்னும் உருதுச்சொல், azzabād என்னும் அரபு மொழிச் சொல்லின் திரிபு ஆகும்!" Civet"—என்னும் ஆங்கிலச் சொல்லே இவ் அரபிச் சொல்லினின்று திரிந்ததுதான்!

காண்க:	(Arab)	azzabād >	
	(Med.Latin)	zibethum >	
	(Italy)	zibetto >	
	(French)	civette >	
	(English)	civet	(காண்க: page : 182. C.O.D)

புனுகுப் பூனையின் பண்டைய வழக்கு,— ''புழுகு'' என்பதாகும். புய் > புயு > புயுகு > புழுகு = புழுகு என்னும் மணப்பொருளைப் புழுகுச் சட்டத்தினின்று வெளிப்படுத்தும் பூனை.

புழுகுப் பூனையினின்று வெளிப்படும் ''புழுகு'' என்னும் மணப் பிசின் ''புழுகுநெய்'' என்றவாறு சுட்டப்பெற்றது

''புழுகுநெய்ச் சொக்கர்'' (மதுரைச். 53)

புனுகுப் பூனையிடத்தேனும் — அதன் கூண்டுக்கம்பியிடத்தேனும் புனுகு உறைந்து கிடக்கையைப் ''புழுகு சாறல்'' என்ற சொல்லால் சுட்டுவர். [வின்சிலோ]

புழுகு, புனுகு—ஆகிய ஒரு பொருளைச் சுட்டும் இரு சொற்களும் ''புய்'' என்னும் பிரிதற்கருத்தினின்று (வெளிப்படுதல்) தோன்றியவை யாகும்.]

புழுகு அல்லது புனுகு என்றவாறு சொல்லப்பெறும் — புனுகுப் பூனையின் இம் மணப்பிசின் கரிய நிறத்தையுடையது. இதன் காரண மாக, "யா" என்னும் கருமைக்கருத்து மூல வேரொலியின் வழி யா > யா அன் > யான் > யான் + அம் > யானம் > ஞானம் > நானம் என்றவாறு ஒரு சொல் உருவாக்கப்பெற்றுள்ளது!

நானம் = 1. புழுகுநெய்

"நறுந்தண் தகரமும் நானமும் நாறும்
நெறிந்த குரற் கூந்தல்" (கலித்: 93:21)

(உரை : நறிய குளிர்ந்த மயிர்ச் சாந்தமும் - புழுகும் நாறும் அறல்பட்ட பற்றத்தையுடைய கூந்தல்......)

2. "நானம் நல்லகில் நறும்புகை யன்றியும்" (சிலம்பு 2 67)

3. "தேமார்ந்த நானந் தோய்த்து" (சீவக: 1652)

நானம் = 2. மான்மதம்

நடுவண் ஆசியாவில் பரவலாகவுள்ள Moschus என்னும் விலங்கின வகையைச் சார்ந்த சிறிய வடிவையுடைய — கொம்புகள் அற்ற—அசை போட்டு உண்ணும் வழக்கமுடைய—மான்வகை, ஆங்கிலத்தில் "musk" (musk-deer: Moschus moschiferus) என்ற சொல்லாற் சுட்டப் பெறு கின்றது.

இம் மான் வகையின் ஆண் மானின் சுரப்புப் பையினின்று சுரககும் ஒருவகை மணப்பிசினும் பண்டையில் தமிழகத்திற் பயன்படுத்தப் பெற்றுள்ளது! மானினின்று கசிந்து வெளிவரும் மதவொழுக்கு ஆகை யால்—தமிழில் "மான் மதம்" என்றவாறு கூட்டுச்சொல் ஒன்று கொண்டும் சுட்டப்பெற்றது. (காண்க: மான்மதம் (திவா.) இது—இன்னுந் தெளி வாக— "மான் மதச் சேறு" என்றவாறாகவும் (சிலப்பு: 6.81. உரை), "மான்மதச் சாந்து" என்றவாறாகவும், ("மான்மதச் சாந்தொடு வந்ததை (சிலம்பு 2 68) சுட்டப்பெற்றது. (மான்மதத்தை வடமொழிவாணர் "கஸ்தூரி" என்பர்.)

இம்—மணச் சாந்தும் கரிய நிறத்ததாகவும்— புழுகுப் பூனையின் பிசினாகிய புழுகு போன்றே மணமுடையதாகவும் இருந்ததனால் "நானம்" என்னும் சொற்கொண்டே குறிக்கப்பெற்றது!

''நானங் கமழுங் கதுப்பினாய்'' (நாலடி: 294:3)

நானம் = மான்மதம்

''மான்மதம்.........நானம் கத்தூரி'' [பிங்கலம்: 2524]

நானம் = (மான்மதம்) மான்மதந்தரும் மான்
[கஸ்தூரி மிருகம்] [பிங்கலம்]

இந் ''நானம்'' என்னும் சொல்— [தொடக்கத்தில் புனுகுப் பூனையின் புழுகைக் குறித்தும் — பின்னர் மான்மதத்தைக் குறித்தும் வழங்கி வந்த சொல்—) நாளடைவில் வகைப்படுமாறு வேறுபிரித்துச் சொல்லப் பெறாமல்—அவ்வகை மணப்பொருள்களைப் பொதுப்படச் சுட்டுமாறும் வழக்கு வளர்ச்சி பெற்றது.

''நானங் கலந்திழியும்நன்மலைமேல் வாலருவி''
[ஐந்.ஐம்: 13:3]

யா > யாவு > யாவு + இ > யாவி > ஞாவி > நாவி = கரிய மணப்பிசினை வெளித் தள்ளும் புழுகுப் பூனை

''பீலி மஞ்ஞையும் நாவியின் பிள்ளையும்''
[சிலம்பு: 25:53]

நாவியின் பிள்ளை = புழுகுப் பூனை
[ஒ.நோ: புழுகுப் பிள்ளை = "புழுகுப் பூனை"
[நாமதீப: 226]

நாவி = புழுகுநெய்
''நாவி யகலம் எழுதி'' [சீவக: 1575]

நாவிக்குழம்பு = புழுகுநெய்
''காழகிற் சாந்தம் கமழ்பூங் குங்குமம்
நாவிக் குழம்பு......'' [சிலம்பு: மதுரைக் காண்டம்:
(115-116)

[துணைக்குறிப்பு:]

கருமைக்கருத்து அடிப்படையில் புழுகு ஆகிய புனுகு குறிக்கப் பெற்றமையை— "மறு" என்னும் கருமைக்கருத்து முதனிலைச் சொல்லினின்று தோன்றியுள்ள ''மறுவி'' என்னும் மற்றுமொரு சொல்லும் சொல்லும்!

மறு = கறை
மறு + வு > மறுவு + இ > மறுவி = புனுகு
"மறுவி" மிருகமத நாவி யாகும்" [பிங்: 2523]

யா : (கருமைக்கருத்து மூலவேர்)

யா > யாஅம் > யாம் > யாம் + அம் > யாமம்

யாம் + அன் > யாமன் > யமன்

யமன் = கரிய இருள்நேரமாகிய யாமப்பொழுதில் வந்து உயிரைக் கவர்ந்து செல்பவன் (!)

மிக முது முற்காலங்களில் — 'இயல்பான இறப்பு' என்பது, அவ்வளவு எளிதாகத் திடுதிப்பென நடந்துவிடும் நிகழ்ச்சிகளில் ஒன்றன்று!

ஊசலாட்டமான மெல்லிய மூச்சோட்டம் உடைய கிடைப்பிணம் போலவே படுக்கையில் உயிர்த்தவரறே நீண்ட காலத்திற்குக் கிடந்து வந்த பழங்கால முதிய மாந்தர் ஒவ்வொருவரும்—கதிரவன் வழங்காத வெப்பக் குறைவுப் போழ்தான இரா நேரங்களிலேயே இயல்பான இறப்பை எய்தினர்! ஆற்றல் சாறங் குறைந்த மீயகவையெய்திய மூதுடல்—போதிய சூழல் வெப்பமின்மையை ஈடுகட்டுதற்கியன்ற தன் முயற்சியின் போது—இயலா நிலையில் இறுதியெய்துவது இயல்பானதுதான்!

இன்னவாறு — மிகப் பெரும்பான்மையாக இயல்பான இறப்புகள் நிகழும் போழ்தாக ''யாமம்'' இருந்தமையால் — இந் நேரத்தில்தான் (யாமத்தில்) ஏவ்வாற்றலோ வந்து அவ்வுயிரைப் பறித்துக்கொண்டு செல்லுகின்றது என்றவாறான கற்பனைக் கருத்தோட்டம் தமிழ மாந்தர்க்குத் தோன்றி வளர்ந்தது! இறுதியில் அச்சவழியிலேற்பட்ட அக் கற்பனை (யாமம்>) (யாம்+அன்>) "யாமன்" என்னுமாறு ஓர் ஆள் வடிவுற்றது!

"யாமன்" என்னும் செப்பச்சொல் வடிவம்—பேச்சு வழக்கில் "யமன்" என்றவாறு குறுக்கமெய்தியுள்ளது!

"யமன்" என்னும் இக் கற்பனைக் கருத்துருவுக்குத் தமிழர்களே முதல் சொந்தக்காரர்கள்!

"யமன்" என்னும் இச் சொல்லையே—வடபாலில் அன்று வந்து செறியத் தொடங்கிய ஆரியர்— "yama" என்றவாறு ஈறுகெடத் திரித்துக் கொண்டு,—அக் கருத்துருவை வேறுவேறு கோணங்களில் மேலும் பல படிகளில் வளர்த்துக்கொண்டு சென்றனர்!

வடபாலிருந்து படிப்படியே தென்னாட்டிலும் பரவிப் பதியத் தொடங்கிய ஆரியத் திரிநர் — அக் கற்பனையுருவான யமனைப் பற்றிப் பல்வேறு புனைவு பொலிவாரங்களோடு கூடிய கதை வடிவங்களில் தமிழர்களிடமே கட்டவிழ்த்து விட்டுக் கொண்டிருந்தனர்!

யகர வுயிர்மெய்யை முதலதாகக் கொண்டு தோன்றும் சொல் எதுவும் தமிழ்மொழிக்கண் வழக்கத்திலின்மை கருதியும்,—"யாமன்" என்பதன் நெடுமுதற் குறுக்கமெய்திய பேச்சுவழக்குத் திரிபுச் சொல்லை அது— என்னும் மொழியியல் திரிபுண்மையுணராதும் — அச் சொல் ஆரியச் சொல்லே என்றுதவறாகக் கருதியவராய்த் தாம் யாத்த இலக்கியவாக்கங்களுக்கிடையில் அதனைப் புகவொட்டாமல் அக்கால மொழிமானப் புலவர்கள் பெரும்பாலோரும் புறந்தள்ளியுள்ளனர்!

அக் கற்பனையுருவைப் பற்றிய புடையுணர்வுக் கருத்தோட்டங்களில் தம் இனமக்கள் உருவாக்கி வழங்கிய வேறுசில பெயர்களை வேண்டிய இடங்களில் கையாண்டுள்ளனர்.

உயிரை வவ்விச் செல்வதாகக் கருதிய அக்கற்பனையுருவுக்கு இக்காலம் வரையிலாக நந்தமிழர் வழங்கியுள்ள பல்வேறு பெயர்களாவன:

1. (யாமன்) யமன் 2. ஞமன் 3. நமன் 4. சமன் 5. ஏமன் 6. எமன் 7. சேமன் 8. காலன் 9. கால் 10. கூற்று 11. கூற்றம் 12. கூற்றுவன் 13. செங்கோற்கடவுள் 14. நடுவன் 15. அரி 16. மடங்கல் 17. மறலி 18. மறல் 19. கணிச்சி [காண்க: 10-அ] 20. பாசத்தன் 21. தென்றிசைக்கோன் 22. தென்றிசைக் கிழவன் 23. தென்றிசைக் கடவுள்.

1. (யாமன் >) யமன் = யாம நேரத்தில் வந்து உயிரைக் கவர்ந்து செல்பவன்(!)

(1-1) "இல்லத் துணைக்குப் பாலெய்த விறை யமன்"
[பரிபா: 11:8]

காரிருட் போதில் வந்து உயிர் வவ்வுவதாகக் கருதப்பெற்ற அக் கற்பனையுருவனான யாமனுக்கு — உயிரி — அணிசேர்க்கும் முறையில் கருங்கரிய நிறச் சிறப்பினதாகிய எருமையே ஊர்தியாக வழங்கப் பெற்றது!

எமன் ஊர்தி = எருமையூர்தி (பிங்:197)

(1-2) "எருமைப் பகட்டின் மிசை யமன் ஏறவே"
[தக்கயாகப்: 463]

யமன் = காலன் [பிங்: 197]

2 யமன் > ஞமன் = எமன்

(யகர—ஞகரத் திரிபு)

(2-1) "தீ செங்கனலியும் கூற்றமும் ஞமனும்" [பரிபா: 3:21]

(2-2) "திருந்துகோல் ஞமன் தன் மெய்யின் பிரிவித்து"
[பரிபா: 5:61]

[திருந்துகோல் ஞமன் = திருத்தமான செங்கோன்மையை உடையவனான எமன்.]

3. யமன் > ஞமன் > நமன் = எமன்

நமன் = எமன் [பிங்: 197]

"நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்"
[தேவா: 1236:1]

4. யமன் > அமன் > சமன் = எமன்

"அமன்" — சமன் என்றவாறு முன்மிகையெய்தியது.
(Prothesis)

சமன் = எமன் [பிங்: 197]

சமன் > (skt) šamana

5. யாமன் > யேமன் > ஏமன் = யமன்

ஏமன் = யமன் (சங்.அக.) (செ ப.க.த.பே: பக்: 561)

[ஒ.நோ; யாமம் > யேமம் > ஏமம் = யாமம், இரா [செ.ப.க. த.பே:பக்: 561]

''புறங்காட்டி லேமந்தோறும் அழலாடுமே''
[தேவா: 965:7]

6. ஏமன் > எமன் = யமன் [செ ப க.த பே:பக்: 528]

எமன் + பாசம் > எமப்பாசம் = யமன் பிறரின் உயிரை வவ்வுவதற்-குப் பயன்படுத்தும் (!) கயிறு

(எமப்பாசம் > எமபாசம்)

''சூலம் பிடித்து எமபாசஞ் சுழற்றி'' (கந்தரல: 107)

7. ஏமன் > சேமன் = யமன்

''ஏமன்—>சேமன் என்றாயினது—முன்மிகை'' (prothesis)

''இந்தச் சேமனை நீர் வெருட்டிடும்'' (விறலிவிடு: 860)

8. காலன் = யமன்

கால் = பொழுது [பிங்.]

கால் = (பொழுது >) உரிய நேரம்

கால் + அன் > காலன் = உயிரைப் பற்றிச் செல்வதற்குரிய காலம் பார்த்து- அவ்வண்ணம் இயங்குபவனாகிய யமன்

''காலனும் காலம் பார்க்கும்'' [புறம்: 41:1]

[உரை: கூற்றும் தன்னால் உயிர் கொள்ளலாகும் காலம் வருந்துணையும் பார்க்கும்......]

[ஔவை—துரைசாமி ஐயா—விளக்கக் குறிப்பு: உயிர்கள் அவை நின்ற உடம்பினின்று நீங்குதற்குரிய காலம் பார்த்து நீக்கும் இயல்பு பற்றிக் கூற்றுவனைக் காலன் என்ப! அதனால் — ''காலனும் காலம் பார்க்கும்''—என்றார்]

(மே.கா: புறம்: 240:3-6, கலி. 105:20-22, 143:39-41)

காலன் = யமன்

''காலன் என்னும் கண்ணிலி யுய்ப்ப'' [புறம்: 240:5]

காலன் = யமனின் தூதுவன் [காண்க: சீவக: 1487-உரை]

காலன் + முன்பு > காலமுன்பு = காலன்போலும் வலிமை

(8-1) ''காலமுன்பிற் பிறவும்'' [கலி: 105:19]

[உரை : காலனது வலிபோலும் வலியையுடைய பிற ஏறுகளையும்......]

(8-2) (காலமுன்பு + அன் > காலமுன்பன் = காலன் போலும் வலியவன்)

''காலமுன்ப'' (புறம்: 23)

9. கால் + அன் > காலன்

காலன் > (கால்) கால் = காலன் [சூடா.] [பிங்: 199]

''காலொக்குஞ் சில'' [இரகு.யாகப். 71]

10. கூற்று = உயிரைக் கூறுபடுத்துபனாகிய யமன், காலன்

[ஒரு குறுவிளக்கம் :

குல் : பிரிவுக்கருத்து வேர்

குல் + து > குற்று > குறு = பிரி, அறு, பறி

குறு + தல் > குறுதல் = பறித்தல்

''பூக்குற் றெய்திய புனலணி யூரன்'' [ஐங்: 23]

குறு + ஐ > குறை = பிரி, வெட்டு, தறி

''மாந்தர் குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்'' [வாக்குண்: 30]

குறைபடுதல் = அறுபடுதல், துணிபடுதல்

''நீர் கல் குறைபட வெறிந்து'' (பரிபா: 20)

குறு > கூறு = பிரிவு, கூறுபாடு, பங்கு, பிளவுபட்ட துண்டு

கூறு = கூறுபாடு ''கூறிட்டு மொழிதல்'' (மணி: 30: 236)

[கூறுதல் = கூறு கூறாகப் பிரிவுபடச் சொல்லுதல்]

கூறு செய்தல் = துண்டாக்குதல்

கூறு + ஐ > கூறை = குறைக்கப்பட்ட அதாவது துண்டிக்கப்பெற்ற ஆடை, துணி, சீலை [சேலை]

''அத்திட்ட கூறை அரைச் சுற்றி'' (நாலடி: 281)

கூறை + புடவை > கூறைப்புடவை = கூறைச்சேலை
= தாலிகட்டும் சமயத்திற்கு முன்னர் மணமகளுக்கென மணமகன் வீட்டார் கொடுக்கும் புதுச்சீலை

கூறைப்பை = சேலைகள் வைக்கும் பை

''தானே கூறைப்பையும் சுமந்துகொண்டு போய்''

(ஈடு: 4,1,2)

கூறு = பிரிவு, வெட்டு

கூறு > கூற்று = உயிரைக் கூறுபடுத்துவது; உயிரைக் கூறுபடுத்து பவனாகிய யமன், காலன்

[ஒ.நோ: "உயிர்ஈறும் வாளது" [குறள்: 334:1]

தண்டு (தண்டம் = தண்டக்கருவி), பாசம் (பாசக்கயிறு), கணிச்சி முதலியன, யமனுக்குரிய படைக்கருவிகளாகும்(!)

''..............................எறியும் ஒண்படை
தண்டு பாசம் தானாகும்மே!'' [பிங்: 198]

இம் மேற்குறித்துள்ள இரு கருவிகளுடன்— மிக இன்றியமையாத தாகிய—உயிரை வெட்டிப் பிரிப்பதற்கெனப் பயன்பெறும் மற்றொரு வெவ்விய படைக்கலனாகிய கணிச்சியையும் யமன் கையகங் கொண்டிருந்தான்(!)

[காண்க :]

''துணிக்கும் வெப்படை கணிச்சி யாகும்'' (பிங்: 200)

கொன்று எடுத்துக்கொண்டு போவதற்குரிய உயிரை நோக்கி, யமனானவன்,— தன் கையகத்துள்ள கணிச்சி என்னும் மழுவைச் சுழற்றி எறிவான்! இவ் வீச்சின் தாக்குதலினின்று எவ்வுயிரும் தப்பவேயியலாது! —இப்படியொரு கற்பனைக் காட்சியையுடைய எண்ணம் படிப்படியாக நெஞ்சிற்படிந்து அக்காலத் தமிழகத்தில் நம்பிக்கையாகவேகூட அமைந் திருந்தது!

காண்க: ''மருந்தில் கணிச்சி வருந்த வட்டித்துக்
கூற்று வெகுண்டன்ன......'' (புறம்: 42:23-24)

(உரை: கணிச்சி யென்னும் படைக்கலத்தை உயிர் வருந்தச் சுற்றிக் கூற்று சினந்தாற்போலும்.........)

[உரைக்குறிப்பு : நோயைத் தடுப்பது மருந்தாதலால்— சாக் காடாகிய நோய்செய்யும் கூற்றுவனை விலக்கும் ஆற்றலுடையது. பிறிதி யாதுமில்லையாதல் கொண்டு — ''மருந்தில்........கூற்றம்'' என்றார்!

(10-அ) கணிச்சி: கூற்றுவன்

கணிச்சியைக் கொண்டு உயிரைக் கூறுபடுத்திப் போகும் யமன்,— அக் கணிச்சியை உடையவனாயிருந்தது பற்றி(!) — அக் கருவிக்குரிய பெயர் கொண்டே சுட்டப்பெற்றான்!

கணிச்சி = கணிச்சியைப் படையாகக் கொண்டவனாகிய யமன்
காண்க: ''மடங்கலும் கணிச்சியும் காலனும் கூற்றும்"
[கலி: 105:20]

கூறு > கூற்று = உயிரைக் கூறுபடுத்துபனாகிய யமன், காலன்
கூற்று = காலன் (பிங்)
''கூற்று உடன்று மேல்வரினும்'' (குறள்: 765)
[மே.கா: புறம்: 4:10-12, 19:13-17]

கூற்று + உதைத்தான் > கூற்றுதைத்தான் = கூற்றத்தைக் காலால் எற்றி உதைத்தவனாகிய(!) சிவன்
''கூற்றுதைத்தார் நெல்வேலி குறுகினாரே''
[பெரியபு.திருஞான: 886]

11. கூற்று + அம் > கூற்றம் = கூற்றுவன், காலன்

(11-1) "மாற்றருங் கூற்றம்" (தொல்.பொருள்: 57)
(11-2) "அறனில் கூற்றம்'' [புறம்: 210:812, 230: 6-16]
(11-3) "வெந்திறல் கூற்றம்'' [புறம்: 238:10-19]

[மே.கா: புறம்: 3: 11-13, 98:15-17, 227, 361:1-3, பதிற்றுப்: 51:25-37, திருமுரு: 81,82, மதுரைக்: 632 633. குறுந்: 267, கலி: 105:35-38]

12. கூற்று + அன் > கூற்றுவன் = கூற்று. கூற்றம், காலன்

"இவன் வெங் கூற்றுவன்" (நைடத.நளன்றூது: 16)

13. செங்கோற்கடவுள் = யமன்

"தண்டு"—என்பது, தடியைக் குறித்த செந்தமிழ்ச்சொல்.

துள் > துண் > துண் + து > துண்டு = துண்டிக்கப்பெற்றது,
துணிக்கப்பெற்றது

துண்டு + இ > துண்டி = துண்டாக்கு
துண்டு > தண்டு (உகர-அகரத் திரிபு)

தண்டு = துண்டிக்கப் பெற்றதாகிய கோல்
"தண்டுகா லூன்றிய தனிநிலை யிடையன்" [அகம்: 274]

தண்டு = 1. கோல்
2. தண்டாகிய (தடியாகிய) படைக்கருவி
"சங்குமலி தண்டு முதற் சக்கரமு னேந்தும்"
[திவ்.பெரியதி: 3,9,10]

தண்டு + அம் > தண்டம் = தண்டுக் கருவி [தண்டாய்தம்]

யமன் தன் கையில் ("தண்டம்") தடியாகிய கருவியை வைத்திருந்தான் [!]. இக் கையிற்கொண்ட கோலைக்கொண்டு — எவருயிரைப் போக்கிக் கொண்டு போக வேண்டுமோ—அவருயிரை மட்டும் நேர்மையான முறையில், நடுவுநிலைமையானமுறையில் கொண்டு போவதற்கெனவே பயன்படுத்தினான்! அக் கோலை, அவ்வாறு நேரியமுறையிற் பயன்படுத்தியமை காரணமாக, அவன் கைத்தண்டாகிய அக் கோலும் (செம் + கோல் >) செங்கோல் என்றவாறே சுட்டப்பெற்றது!

"ஓர்ந்து" கண்ணோடாது யார்மாட்டும் தேர்ந்து செய்வஃதே முறை"— என்றாற்போல — எவரையும் எவற்றையும் தேர்ந்து பார்த்து —ஓர்ந்துபார்த்து, அக்கோலினை யமன் பயன்படுத்தியமை (!) காரணமாக — அது "தெரிகோல்" என்றவாறு சுட்டப் பெற்றமையையும் இவ்விடத்திற் கருதிப் பார்த்தல் வேண்டும். (மீண்டுங் கருதுக: 1. "திருந்து கோல் ஞமன்" (பரி: 6,9). 2. ''தெரிகோல் ஞமன்'' (புறம்: 6: 9).

''உயிர்களின் வாழ்நாளை ஆராய்தலையுடைய செங்கோன்மை பிறழாத கூற்றம் '' என்றவாறான பொருட்படமொழியும் மதுரைக் காஞ்சி வரிகளும் இவ்விடத்திற் கருதத்தக்கன.
(காண்க: மதுரைக். 632, 633)

ஞமனின் கோல் (ஞமற்கோல்)— செங்கோல் (தெரிகோல்) என்பதனை, ''ஞமன் தன் கையகத்தே செங்கோலை வைத்திருப்பதைப் போன்று ஒண்மைமிக்க திற ஆற்றலையுடையவன்''— என்றவாறு சீவக சிந்தாமணியில் ஒருவன் சிறப்பித்துச் சொல்லப்பெறுவதாலும்

தெரியலாம்! (காண்க: ''ஞமற் கோலை வைத்தன்ன வொண்டிற லாற்றலான்'' [சீவக: 251]

யமன் தன் கையகத்துள்ள தண்டாகிய கோல் செங்கோலாய் இருந் தமையால் [செங்கோல்+கடவுள்] > செங்கோற்கடவுள் என்றவாறொரு பெயர் கொண்டும் சுட்டப்பெற்றான்.

காண்க: ''செங்கோற் கடவுள்'' [பிங்: 198,

14. நடுவன்= செங்கோற் கடவுளாகிய யமன், நடுவுநிலைமையை உடையவன்

நடு+வு > நடுவு > நடுவு+அன் > நடுவன்

தெரிகோலாகிய — செங்கோலாகிய — தண்டக்கருவியை நடுவு நிலைமையோடு பயன்படுத்துபவன் என்னும்பொருளில், யமன் "நடுவன்" என்ற பெயர்கொண்டும் சுட்டப்பெற்றான்!

நடுவன்= காலன் (பிங் 199)

15. அரி= யமன்

அரி+தல் > அரிதல்= அறுத்தல்

அரி+(த்)+தல் > அரித்தல்=அறுத்தல், அழித்தல்

"உலகு அரிப்பான்" (சீகாழித் ஆபத்: 4)

அரி= அரிக்கை (சூடா.), பிரிக்கை

அரி= கொல்லும் விலங்காகிய அரிமான் [பிங்.]

அரி+மா > அரிமா = கோளரி (< கோள்+அரி)

அரிமா (நாலடி: 198). அரிமான் (கலி: 15)

அரித்தல்= அழித்தல்

யமனது தொழில்,—கொலைத்தொழில்! (காண்க·புறம்: 3:11-13) ஆருயிர்களைத் தின்னும் பொருட்டுத் திரிபவன், கூற்றுவன்! [காண்க: புறம்: 361: 1-3]. உயிர் குறைகின்ற நாளிடத்தே அதன்பின்னே சென்று குற்றத்தைச்செய்து துகைத்து உயிரையுண்ணுவது கூற்றம்! (காண்க: கலி:105:35-38). உயிரைக் கொன்றழிப்பதே தொழிலாதலின்

யமன்—உயிரை அரிப்பவன் (உயிரை அழிப்பவன்) என்னும் பொருளில் "அரி" என்ற சொல் கொண்டும் சுட்டப் பெற்றான்!

அரி= காலன் (பிங்: 199)

16. மடங்கல்= யமன்

மடக்கு= மடி மடக்குதல்= மடித்தல்

மடங்குதல்=வளைதல் [பிங்.]

"படைபோன் முடங்கி மடங்கி" [கலி: 94:9]

மடங்கு+அல்>மடங்கல்= வளைகை (திவா.)

அரிமாவுக்குரிய சிறப்புகளில் ஒன்று—அதனின் பிடரிமயிராகிய உளையின் பெருமிதத் தோற்றம்! அது பெரும்பாலும் மடங்கியவாறே கிடக்கும் காரணமாக— "மடங்கல்" என்ற பெயரை அரிமான் பெற்றது!

மடங்கல்= அரிமா

"மடங்கலிற் சீறி மலைத்தெழுந்தார்" [பு.வெ:மா: 3,24]

அரிமாவைக் குறித்த அரி என்னும் சொல்,—கொல்லுந்தொழில் அடிப்படையில் தோன்றியது! அதே சொல்கொண்டு—கொல்லுந்தொழிலுடைய யமனும் சுட்டப் பெற்றான்.

இரண்டும் தனித்தனிச் சொற்கள்!

"அரி" என்னும் அரிமாவைக் குறித்த சொல்வழியிலேயே—"யமன்" குறிக்கப் பெற்றுள்ளான் என்றவாறு தவறாகப் பொருள்கொண்டு, அரிமாவைக் குறித்த "மடங்கல்" என்ற [பிடரிமயிரின் மடிவுடைமை காரணமாகத் தோன்றிய] பெயரையும் எவரோ ஓர் இலக்கியவாசிரியர் மிகப் பண்டையிலேயே சுட்டத் தொடங்கி—அப் பெயரும் தொடர்ப்பயன்பாடு பெற்றுள்ளது.

"மடங்கல் போற் சினைஇ" (கலி: 2)

யமனைக் குறித்து பல்வேறு பொருட்பாடுகளில் சொற்கள் தோன்றத் தோன்ற—அப் பெயர்களில் சிலவற்றை யமனின் இனவகையினராக வேறுபிரிக்கும் போக்கும் நிகழத் தொடங்கியது!

"மடங்கலும் கணிச்சியும் காலனும் கூற்றும்" எனவரும் கலித்

தொகை வரியொன்றையே இதற்குச் சான்றாகக் கூறலாம். [கலி:105: 20]. இவ்வரியிலுள்ள நான்கு பெயர்களும் "யமனை" மட்டுமே குறிக்க வெழுந்து — பின்னர்த் தனித்தனியானவை என்று தவறாகக் கருதி வழக்கிற் பயன்படுத்தங்களும் கொண்டன!

கூற்றம் வேறு—யமன் வேறு என்றவாறெல்லாம் தனிப்பட்டவாறு பிரிக்கப் பெற்றுக் கதைகள் பின்னப்பெற்றன!

காண்க: ''சொற்பல சொல்லி யென்கொல் உயிர்வீசு பாசம்
விடுகாலன் யாவர் துணையே
பற்பலகோடியண்ட மொருதண்டி லெற்றும் யமராசன்
யாவர் படையே! [தக்கயாகப்: 444]

''அந்தகன்'' என்பது, காலன் என்னும் கண்ணிலியைச் [புறம்: 240:5] சமற்கிருதத்தில் சுட்டிய சொல்! அக் கண்ணிலியாகிய 'அந்த கனின் துணையமைச்சனாகக் காலனைக் குறிக்கும் கதையும் எழத் தொடங்கியது!

காண்க: "அந்தகன் அத்துணை யமைச்சனாகிய
வெந்திறற் காலனை விளித்து"
(கந்த-மார்க்கண்டேய. 216)

17. மறலி= யமன்

மறு + அல் > மறல்= பகை, பிணக்கு, போர் (சூடா)
மறல்≐ சாவு (சங்.அக)

மறலுதல்= 1. மாறுபடுதல்
"மன்னரோ டிளையவர் மறலி" [சீவக: 791]
2. போர் செய்தல்
"தெம்முனையுள்......மறலுங்கால்" (பு.வெ.மா: 10.5)
3. கொல்லுதல்
"வேதியனை மறலப் புகுந்தார் உன் உழையோர்"
(உபதேசகா.சிவநாம: 24)

மறல் + இ > மறலி= கொல்லுபவனாகிய யமன்
"மறலி யன்ன களிற்று மிசை யோனே" (புறம்: 13)

18. மறல் = எமன் (சூடா.)

19. கணிச்சி = யமன், காலன் (காண்க: 10-அ)

20. பாசத்தன்

பாச(ம்) + அத்து + அன் > பாசத்தன் = யமன்

"புய்"—ஒன்றுகைக் கருத்து மூலவேர்

புய் > பய் = ஒன்று, சேர், பிணி, கட்டு

பய் > பாய் > பாய் + அம் > பாயம் > பாசம் = பிணித்தற்குப் பயன் பெறும் கருவி.

"பாசம் தின்ற தேய்கால் மத்தம்" [நற்: 1:22]

[உரை : கயிறு ஆடித் தேய்த்தலாலே தேய்ந்த தண்டினை உடைய பெருமத்து.........]

[தவம் மறைந்தொழுகும் தன்மையிலாளர் முதலிய அறுவகையினரை நாற்சந்தியில் நின்றுகொண்டு பாசத்தால் அதாவது கயிற்றால் அன்னாரைக் கட்டிப் புடைத்து உண்ணும் தொழிலையுடையது பூதம் என்றவாறு — மணிமேகலையில் வரும் சதுக்கப்பூதக் கற்பனைக்காட்சியையும் நாம் இவ்விடத்தில் கருதுதல் வேண்டும்!

அப் பூதம் நிற்கும் நாற்சந்திக்குப் "பூத(ச்) சதுக்கம்" என்றே பெயர்! (காண்க: மணி: 22:50)

அப் பூதம் உரைத்ததாக யாத்துள்ள "கட்டாதுன்னையென் கடுந்தொழிற் பாசம்" என்றவாறு வரும் மணிமேகலை வரியாலும் (மணி: 22: 71)—பாசமாகிய கயிறு—கடுந் தொழிலாகிய கொலைச் செயலுக்கெனப் பயன்படுவது என்பதையும், அப் பாசமானது பிணித்தற் காரண அடிப் படையிலேயே உருவாயின உண்மையைக் "கட்டாது" என்றவாறு எதிர் மறைச்சொல் வழியாகக் குறித்துநிற்கின்றது என்பதையும் நாம் விளங்கிக் கொள்ளலாகும்! [மே.கா: சிலப்பு: 5:132, 1:579]

பாசமாகிய கயிற்றைப் பூதம் மட்டுமன்றிப் பேயும் பயன்படுத்துவ-

-தாகவும் ஒரு கற்பனைப் போக்கு, தமிழகத்தில் நிலவி வந்தது! அப்பேய் பயன்படுத்திய பாசமாகிய கயிற்றைக் கருவாகவைத்துப், பேய்க்குப் "பாசம்" என்றவாறொரு சிறப்புப்பெயரீடும் தமிழில் அடைவுற்றது!

காண்க: ''பலிகொண்டு பெயரும் ''பாசம்'' போல''
[பதிற்றுப்: 71;23]

பாசம் = கயிறு

பாசம்+கயிறு > பாசக்கயிறு (இருபெயரொட்டு)

யமன்-தான் கொண்டுபோக வந்த உயிரைப் பறித்தற்கு, வலையை வீசுவது வழக்கம்!

[காண்க:] ''மாற்றருஞ் சீற்றத்து மாயிருங் கூற்றம்
வலை விரித் தன்ன'' [பதிற்றுப்: 51: 35-36]

இக் காலனான கூற்றுவன் விரிக்கும் வலை(!) கயிற்றாலாகியதாக இருந்தமையை — மக்கள் வழக்கில் இன்றும் பரவலாகப் பயிலப்பெறும் ''பாசவலை'' என்ற கூட்டுச்சொல்லாலும் உணரலாகும்!

யமனின் படைக்கருவிகளில் ஒன்று, — ''பாசம்'' என்பதைப் பிங் கலம் சுட்டுவதும் இங்கு எண்ணத்தக்கது! (காண்க: பிங்: 198)

"பாசமாகிய கயிற்றை உடையவன்" என்றபொருளில், (பாச(ம்)+அத்து+அன் >) "பாசத்தன்" என்றவாறு யமன் சுட்டப்பெற்றுள்ளான்!

(காண்க:) ''கான்மறன் மடங்கல் காலன் பாசத்தனும் பேர்''
(சூடா: 1:30:4)

['' யாம்ய '' [yāmya] என்னும் சமற்கிருதச் சொல்லுக்கு— ''தெற்குச்சார்ந்த'' (தென்றிசை சார்ந்த) என்பது பொருள்! இச் சொல் "யம்" (yam) என்னும் மூலத்தினின்று தோன்றியுள்ளதாக அறிஞர். மானியர் வில்லியம்சு அவர்கள் குறிப்பார்! (காண்க: skt. and Eng. Dic. பக்: 851.]

"யம்" என்னும் மூலத்தினின்று தோன்றியதாகச் சொல்லப்பெறும் "யாம" (yāma) என்னும் சமற்கிருதச் சொல்லானது — தடுப்பு, தடை, முடிவு என்றவாறான பொருட்பாடுகளை உடையது!

இந்திய நாட்டிற்குள் (நாவலந்தீவுக்குள்) புகுந்து—காலப் போக்-கில் இந்நாட்டின் நில அமைவுநிலைகளை ஆரியர் அறியமுற்படும் பொழுது, தெற்குப்பகுதியில் நாட்டுப்பரப்பு முடிவுறுவதையும்,—அதற்கும் மேலாக நடைச்செலவு கொள்ளவியலாவாறு நீர்த்தடுப்பு அல்லது நீர்த் தடை உள்ளமையையும் உணர்ந்து அல்லது கேட்டறிந்து — தெற்கு எல்லைப் பகுதியை— ''யாம்ய'' (yāmya) என்றவாறு சுட்டத் தொடங் கினர்!

''யாம்ய'' என்னும் சமற்கிருதச் சொல்லின் திரிபு வடிவமே "யாமி யம்" என்பது ஆகும்! (காண்க: ''தெரியும் யாமியம்.........தெற்கே'' [சூடா. நி: 5:5.4]

மீக்கற்பனை மிடைவதிலும் — கட்டுக்கதைகள் புனைவதிலும் வல்ல திறவரான ஆரியர், — இவ்வுலகின் எட்டுத் திசைகளையும் எட்டுக் காவலர்கள் காத்து ஆளுகின்றார்கள் என்கிற ஒரு கற்பனை நோக்கோடு —அத் திசைகளுக்கு ஆள்கள் தேர்ந்தெடுத்துப் போடும்போது(!), யமன் என்னும் செந்தமிழ்ச்சொல்லினின்று அவர்கள் திரித்தெடுத்து (அதாவது ஈறு கெடுத்துத் தம் பயில்வில் உட்கொண்ட—) ''யம'' என்னும் கூற்று வனைக் குறித்த சொல்லானது — ஒலியமைதியில் ''யாம்ய'' என்னும் தெற்கைக் குறித்துத் தாம் வழங்கிய சொல் பெரிதும் ஒத்து நிற் கின்றமையை உளங்கொண்டவராய்— யமனையே அத் தென் திசைக் குரிய காப்பு ஆளுநனாகவும் (regent) அமர்த்தம்(!) செய்தனர்!

கற்பனைப் புனைவின் வழியாகத் தெற்குத்திசையின் காப்பாளுநன் ஆகிவிட்ட யமனின் கதையைக் கேட்டுக்கேட்டு—அக் கருத்தடிப்படை யிலான புதிய பெயர்வார்ப்புகளையும் தமிழஅச்சிலிட்டு நம் தமிழர் உருக்கி உருவாக்கத் தொடங்கினர்! 1. தென்றிசைக்கோன், 2. தென்றிசைக் கிழவன், 3. தென்றிசை முதல்வன் ஆகிய முப் பெயர் களும் தமிழர்கள் அவ்வாறு வார்ப்புகளாக வடித்தெடுத்த வடிவுகளாகும்! கருத்தும் கற்பனையும் அவர்களுடையது! வினவறியாது—பெயர்த்ததும், வார்த்து வடிவெடுத்ததும் நம் பேதைகளுடையது!]

21. தென்றிசைக் கோன்

தென் + திசை + கோன் > தென்றிசைக்கோன் = யமன், காலன்
(கோன் = அரசன்) [சூடா நி: 1:30:2]

தெற்குத் திசையை ஆளும் அரசனாகிய யமன்

22. தென்றிசைக்கிழவன்

தென்+திசை+கிழவன் >தென்றிசைக்கிழவன் =
(கிழவன் = உரிமையானவன், உரிமையாளன்)

தென்றிசைக்கிழவன் = யமன், காலன் (பிங்: 197)
=தெற்குத் திசையை ஆளுதற்கு உரியவனான யமன்

23. தென்றிசை முதல்வன்

தென்+திசை+முதல்வன் >தென்றிசைமுதல்வன் = யமன், காலன் (திவா.)
=தெற்குத் திசைக்குத் தலைவனான யமன்

பேய்களுக்கெல்லாம் அடிமைப் பேயாக — குற்றேவல் செய்யும் பேயாகத் தனிவகையான பேய் ஒன்று,— அக்கால அறியாமைத் தமிழர் சிலரின் நெஞ்சில் ஊர்ந்து உலாக் கொண்டது! அது உலவித் திரிந்த காலம்—நள்ளிருள் நேரமாகிய யாமக்காலம்! (காண்க: அகம்: 311: 4, 260:12-13) ''கழுது வழங்கும் யாமம்'' (அகம்:122:14) என்றவாறே —யாமநேரமானது சிறப்புறக் குறித்து வழங்கப்பெற்றிருப்பதிலிருந்தும் இவ்வெண்ணப் போக்குப் பயில்வை உணரலாகும்! பேய்க்கு ஊர்தியாக நின்று—அதனைச் சுமந்து உரிய இடங்களுக்கெல்லாம் உலாப் போய் வருவது—அக் கழுதின் தொழில்(!) இக் ''கழுது'' என்னும் குற்றேவல் பேயே—பண்டையில்(!) யாம நேரத்தில் உயிரைக் கவர்ந்து செல்லும் தொழிலனான யமனுக்கும் ஊர்தியாகப் பயன்பட்டது! யமனின் கொலைத் தொழிலுக்கு ஊர்தியாக இயங்கியமையால்(!), இது (கொல் +தேர் >) ''கொஃறேர்'' என்றவாறொரு சிறப்புப்பெயரையும் சுமந்து ஊர்ந்தது!

(காண்க:) ''பானாட் கங்குல் இடையது.........
ஆய்கோல் கூற்றக் கொஃறேர் கழுது''
[மதுரைக்: 631......633]

கழுது திரியும் நேரம்—யாமநேரம் மட்டுமேயாதலால் — (காண்க: மதுரைக்: 631-633, அகம்: 311:4, 260:12-13, 122.13-14, குறுந்: 161:1-2) யாமநேரத்தில் உயிர் வவ்வும் யாமனாகிய யமனுக்கும் ஊர்தியாக்கப் பெற்றது!

பண்டைத் தமிழர்க்கு அச்ச அடிப்படையிலெழுந்த கற்பனைப் புனைவெண்ணங்கள் — யாமனாகிய யமனை உருவாக்கி, அவனுக்கு— 1. யமன் 2. ஞமன் 3. நமன் 4. சமன் 5. ஏமன் 6. எமன் 7. சேமன் 8. நடுவன் 9. செங்கோற்கடவுள் 10. காலன் 11. கால் 12. கூற்று 13. கூற்றம் 14. கூற்றுவன் 15. அரி 16. மடங்கல் 17. மறலி 18. மறல் 19. கணிச்சி 20. பாசத்தன் என்றவாறான இருபது பெயர்களையும் படைத்துக் கொடுத்தன!

ஆரியரின்—யமன் கற்பனை வளர்ப்பில் உருவாக்கப்பெற்ற திசைக் காவல் பொருளை அடிப்படையாகக் கொண்டு—இலக்கியவொளி பிறங்கு மாறு தமிழர் மொழியாக்கமாகப் பெயர்த்து வழங்கியன —"தென்றிசைக் கோன்,— தென்றிசைக் கிழவன், — தென்றிசை முதல்வன்" என்னும் முப் பெயர்கள் ஆகும்!

இவ்விடத்தில் — நாம் ஓர் உண்மையை விளங்கிக்கொள்ள வேண்டும்!— ''யமன்'' என்னும் சொல் — யாமன் என்பதினின்று தோற்றிய திரிபுச் சொல்! அதாவது, ''யாமன்'' என்பதினின்று நெடுமுதற்குறுக்கமுறுத்திய செந்தமிழ்ச்சொல்! யாமநேரத்தில் வந்து உயிரைக் கவர்ந்து செல்லுபவன் என்றவாறு அறியாமையாலும்—அச்சத் தாலும் கருதிக் கற்பனைகளை வளர்த்தெடுத்துக் கொண்ட முதற்பிழைச் செயல் நம்மவர்களுடையது! ''யமன்'' என்னும் தமிழ்ச்சொல்லே — சமற்கிருதத்தில் ''யம'' (yama) என்றவடிவில் ஈறுகெடுத்துப் பச்சை யாகப் பயன்படுத்தப் பெற்று வருகின்றது! அவர்கள் பெற்று வழங்கும் அச்சொல்லுக்குள்,"யாமநேரத்தில் வந்து உயிரைப் பறித்துச் செல்பவன்" என்றவாறாகவோ—அல்லது "உயிரைக் கவர்ந்து செல்லுபவன்" என்ற வாறாகவோ மூலப் பொருட்பாடுகள் எள் அத்துணையும் இல்லவே இல்லை என்பது உள்ளத்தால் உள்ளத் தக்கதாகும்! நன்கு கவனிக்கத் தக்கதுவுமாகும்!

''yam''என்றவாறு சமற்கிருதவாணர் காட்டும் வேர்மூலத்திற்கு, —தடு, பற்று, தாங்கு என்பனவே அடிப்படைப் பொருள்கள்!

அவ்வடிப்படைப் பொருள்கள் வழியிலேயே சமற்கிருத மொழியில் ''yama'' என்றவாறு சொல் உருவாக்கப்பெற்று— 'இருக்கு' மறையில் (Rigveda) ''கடிவாளம்'' என்னும் பொருளில் மட்டுமே—(தடுத்து நிறுத் தப் பயன்படுவது காரணமாகப்) பயிலப் பெற்றுள்ளது! (காண்க: Rig veda: N: 6I-2)

"கடிவாளங் கொண்டு கட்டுப்படுத்துபவன்" என்றவாறு- (பொருள் விரிவாக்கத்தின் அடுத்த படிநிலை வளர்ப்பில்—) தேரோட்டி (வலவன்) என்னும் பொருளும் கொள்ளப் பெற்றுப் பதிவும் செய்யப் பெற்றுள்ளது! (காண்க: Rig veda: N: 6I-2, VII, 103, 10)

[மேலுங் காண்க: Yama= the act of checking or curbing, suppression, restraint

Yamin= restraining, curbing.

(p.847. skt. and Eng. Dic. M.M. Williams)

''யமன்" பற்றிய உருக்கரு கிடைத்ததும்—ஆரியர் தம் இயல்புப் படியே, கட்டவிழ்ந்த காட்டுமாடுகளாய்க் கற்பனைக்காடுகளில் புகுந்து விளையாடத் தொடங்கினர்!

''யமபுர'' (யமன்புரம்)! இது—யமனின் நகரம்! கீழுலங்களில் ஓர் உலகம்—இது! உடலைவிட்டுப் பிரிக்கப்பெற்ற மாந்தவுயிர்—உரிய மீட்பாக்கம் பெறுவதற்காக, அங்கேதான் பழுதுபார்க்கப் பெறுகின்றது(!) அந்த யமன்புரத்தில் ''சித்திரகுப்தன்'' என்னும் பதிவுருக்காரன் (recorder) பணி செய்கிறான்! அங்கு ''அக்கர-சந்தானம்'' (Agra-samdhānā) என்னும் பெயரில் யமவுலகக் குறிப்புப்பேரேடு (Ledger) ஒன்று இருக்கின்றது! அதிலுள்ள கணக்கு வழக்குகளை அவன்தான் பார்த்து வருகிறான்! இறப்பெய்தி அங்கு வந்துசேரும் உயிர்களுக்குத் தண்டனைகள் வழங்குவதற்கான தீர்ப்புகளை அவன்தான் படிக்கிறான்! அதன்படியேதான், அங்குத் தண்டனைகள் வழங்கப் பெறுகின்றன! (இப்படி ஒரு வகைக் கதைப்பு...........!)

''அரத்தச்சிவப்புநிறத்தில் உடைகள்! ஒளிரும் உருவம்! மின்னலடிக்கும் ஒண்கண்கள்! (வாரணனைப் போன்று-) தலையிலே மணிமுடி! உயிரை உடலினின்று பிரித்துக்கொண்டு செல்லுவதற்கெனக் கையில் ஒரு கண்ணி! (அவ்வுயிரின் உருவ அளவுகூட அளந்து சொல்லப் பெற்றுள்ளது!— அது மாந்தனின் கட்டைவிரல் அளவுதான் இருக்குமாம்!)...... ....இப்படி "மகாபாரதம்" போன்ற நூல்களில் வகைவகையான கயிறு விடுகைகள்!.........

யமன்!......பச்சைப் பசேல் என்றவாறு பாசி நிறத்தவன்! ஆனால்,

செந்நிற உடையணிந்திருக்கின்றான்! கன்னங்கரிய எருமை மாட்டின் மீது ஏறிக்கொண்டிருக்கிறான்! எருமையூர்தி ஊர்ந்து செல்கின்றது! இல்லையில்லை......ஓட்டமாய் ஓடுகின்றது!......இல்லவேயில்லை......... அதில் அவன் பறக்கின்றான்! ஒரு கையில் தடி! மறு கையில் கண்ணி ....இப்படிச் சில புதினமுறைப் புளுகுக் குப்பைகள்!...

இவ்வகைக் கற்பனை வண்ணவெடிப்பு ஆரவாரங்கள்— தமிழகத்திலும் அவ்வாரியரால் ஆர அமர்க்களப்படுத்தப் பெற்றன! சுவையான கதைப் போக்குகளில் மாந்தர் மயங்குதல் இயல்புதானே! ஆரவாரமான ஆரிய யமன்களையும் அருந்தமிழர் விரும்பியேற்றனர்! எருமைகள் தந்து அவ்வியமன்களை ஏறி ஊருமாறும் துணை நின்றனர்!

'எருமைப் பகட்டின்மிசை யமன் ஏறவே!" (தக்கயாகப்பரணி:463) என்றபடியெல்லாம் பாடிப்பாடி அவர்களுடன் கூடிக்கூடிக் கும்மாள மிட்டுக் கொண்டே- தங்களுக்கானகுழிகளையும் தோண்டிக் கொண்டனர்!

யாமனைக் குறித்த ''யமன்'' என்னும் சொல்லைத் தமிழ் என்று அறியாமலேயே—அவனை இறுகக் கட்டிப்பிடித்துக்கொள்ள விரும்பிய இடைக்கால இயன்மொழிப் புலவர்களிற் பலர்,—ஈயென—இகர முடி சூட்டி [ஏனெனில்,—மொழி முதலில் யகரம் வராதாம்!...) ''இயமன்'' என்றவாறு சுட்டி இமயவுச்சியேறி எவரெட்டினையும் தாண்டி இன்புற்றனர்!

அந்தகன், சண்டன், சண்பன், தர்மன், யமதர்மராஜன், தண்டதரன், சைமினிநகரோன், வைதரணி நகரோன், நாசவன், வைவச்சுதன் என்றவாறெல்லாம் பிங்கலநிகண்டு சூடாமணிநிகண்டு போன்ற சொற்றொகை நூல்களில் காணப்பெறும் யமனைக் குறித்துப் பதிவேறி நிற்கும் சொற்கள் யாவும், — சமற்கிருதக்குப்பையினின்று தமிழத் தண்புனற் பேராற்றில் சூறையால் வந்துவீழ்ந்த சொத்தைச் செத்தைகள்! சிம்பு—சிதார்கள்! துப்பு தூசுகள்! மட்கு—மாசுகள்!...........

யா : கருமைக்கருத்து மூலவேர்

யா > யாஅய் > யாய் > யாய் + அம் > யாயம் > ஆயம்

ஆயம் = கரிய முகில் ஆயம் = கருமுகில் (பிங்.)
(மே.கா: கம்பரா. 6,14,142)

யா : கருமைக்கருத்து மூலவேர்

யா > யாஅய் > யாய் > யாய் + அம் > யாயம் > ஆயம்

ஆயம் = மறைவு, கமுக்கம்

''உன்னால் அல்லது அவ் ஆயம் வெளிப்பட்டிருக்குமோ?''
[குருபரம்: 126]

யா : கருமைக்கருத்து மூலவேர்

யா < யாஅண் > யாண் > யாண் + அம் > யாணம் > சாணம்

சாணம் = மாடு—குதிரை முதலியவற்றின் மலம், பவ்வீ

யா > யாஅண் > யாண் > யாண் + இ > யாணி > சாணி

சாணி = சாணம்

யா > யாஅண் > யாண் > யாண் + அகம் > யாணகம் > சாணகம்

சாணகம் = சாணம்

''சாணகமானும் மிதித்தவிடத்துக் காலைக் கழீஇ''
[இறையனார் அகப்பொருள்: 3. உரை]

சாணகம் > சாணாகம் = சாணம்

[சாணகம் > சாணாகம் —, என்றாயினமை உயிரிசைவு மாற்றம்.]

[சாணத்தை- ''சாணாங்கி'' என்பது திருநெல்வேலி வட்டார வழக்கு]

கூட்டுச்சொற்களில் சில:

சாணிக்கெண்டை = கருங்கெண்டை (Bitter Carp)
சாணிச் சுருணை = சாணமிட்டு மெழுகுதற்குரிய துணிக் கற்றை
சாணிப்பால் = களத்தில் நெற்குவியலின் மேல் குறியிடு-வதற்குரிய சாண நீர்
சாணிப்பாறை = சாப்பர் நிறக் கடல்மீன் வகை [Gazza argentaria]
சாணிமுத்திரை = நெற்குவியலில் சாணிப்பாலால் இடும் குறி

யா : கருமைக்கருத்து மூலவேர்

யா > யாஅண் > யாண் > யாண் + து > யாண்டு > சாண்டு

சாண்டு = பூப்புநீர், மாதவிடாய் (Menstrual discharge)
சாண்டு + ஐ > சாண்டை = பூப்புநீர் [மக்கள் வழக்கு]

யா : கருமைக்கருத்து மூலவேர்

யா > யாஅண் > யாண் > யாண் + அம் > யாணம் > சாணம்
சாணம் = கறை, கறைபோன்று தோன்றும் தழும்பு, தழும்பு, வடு
"சாணந் தின்ற சமந்தாங்கு தடக்கை" [மதுரைக்: 593]

யாண் + அன் > யாணன் > சாணன் = உடம்பில் தழும்புகளை உடையவனாகிய வீரன், மறவன்
"சாணர்க்கு முன்னிற்கும் ஆட்கொண்ட நாயன்"
[தமிழ்நாவலர் சரிதை: 107]

யா : கருமைக்கருத்து மூலவேர்

யா > யாஅய் > யாய் > ஆய் = (கருமை, கறை, அழுக்கு), மலம் (பவ்வீ)

ஆய் = 1. மலம் (excrement)
2. (அருவெறுப்பைக் குறிக்கும் சொல்)

யா: கருமைக்கருத்து மூலவேர்

யா > யாஅல் > யால் > யால் + அம் > யாலம் > ஆலம்

1. ஆலம் = கருமை

"ஆலக் கோலத்தின் நஞ்சுண்டு அமுதத்தைச் சால......
ஈந்தளித்தான்" [தேவா: 1,81,3]

2. ஆலம் = நஞ்சு

(2-1) "ஆலம் கடந்தது ஒன்று ஆர் அறிவாரே"
[திருமந்: 745]

(2-2) "ஆலம் அமர்கண்டத்து அரன்"
[இயற். முதல்திருவந்: 4]

(2-3) "ஆலம் உண்ணும் துற்றரைத் துற்றறுப்பான்"
[தேவா: 7,22,9]

[மே.கா: திருக்கோ: 329, திருவாச: 36,5, பெரியபு: 6,9, திருமாளிகைத். திருவிசை: 1,5, பட்டினத்துப். நான்மாலை. 40, தாயுமா: 2,9]

ஆலம் = நஞ்சு [திவா.]

"யா" என்னும் கருமைக்கருத்து மூலவேரினின்று (யாலம் >) "ஆலம்" என்னும் நஞ்சைக் குறித்தெழுந்த சொல்பற்றிய உண்மையைக், —"கார்" என்னும் கருமைக்கருத்து முதனிலைச் சொல்லினின்று உருவாக்கப் பெற்றுள்ள நஞ்சைக் குறித்துநிற்கும் "காரி" என்னும் சொல்வழியும் தெளியலாம்.

காண்க: "காரி உண்டிக் கடவுளது இயற்கையும்"
[மலை: 83]

காரி உண்டிக் கடவுள் = நஞ்சை உணவாக உண்டவனாகிய சிவன்

காரி= நஞ்சு

ஆலம்+உண்டவன்> ஆலமுண்டவன்= சிவன்
''ஆலமுண்டவன் அடுந்திறல் மிக்கான்''
[கம்பரா: 6,10,26]

ஆலம்+உண்டான்>ஆலமுண்டான்= சிவன்
"ஆலமுண்டான்எங்கள் பாண்டிப் பிரான்"
(திருவாச: 36,5)

ஆலம்+உண்டோன்>ஆலமுண்டோன்= சிவன் (சங்.அக)

யா : கருமைக்கருத்து மூலவேர்

யா>யாஅய்>யாய்>யாயு>யாசு>ஆசு

["மய்"—என்னும் கருமைக்கருத்து மூலவேரினின்று "மாசு" என்னும் சொல், குற்றக்கருத்து வளர்ச்சி எய்தியமையையும் இவ்விடத்தில் கருதுதல் வேண்டும்.

மய்>மாய்>மாயு>மாசு= குற்றம்

காண்க: குறள்கள் : 34, 199, 278, 352, 601, 649, 956]

1. ஆசு= (கருமை>) குற்றம், குறை

(1-1) "ஆசில் கம்மியன் மாசறப் புனைந்த......பல்காசு"
(புறம்: 353:1)

(1-2) "பாசிலை முல்லை ஆசில் வான்பூ" [குறுந்: 108:3-4]

(1-3) "ஆசில் அங்கை அரக்குத் தேய்த்தன்ன" (சிறு: 74)

(1-4) "ஆசறு காட்சி ஐயர்க்கும்" (குறிஞ்சி: 17)
[ஆசறு காட்சி= குற்றமற்ற அறிவு]

(1-5) "அரியகற்று ஆசு அற்றார் கண்ணும்" (குறள்: 503: 1)

[மே.கா: பெரியபு: தடுத்தாண்: 40
கந்தபு. சுரு. 1,42]

ஆசு+அற>ஆசற= குறையற, குற்றம் நீங்க

"சொல்லப் புகுந்த பொருளை ஆசறக் கூறாது"

(தொல்.பொருள்: 663. பேரா.)

ஆசு+அறுதி>ஆசறுதி = குற்றமின்மை (மது.அக.)

ஆசு=(கருமை>அழுக்கு>மன-அழுக்கு>)

(>செருக்கு)>மனச்செருக்கு

"யான் எனும் ஆசும்இல் ஆதவனே" [சிவ.திரு: 1:49]

[மே.கா: திருவருட்பா: 1,4
சிவபுண்: 40]

ஆசு+எடை>ஆசெடை= 1. குற்றநீக்கம் (மது. அக.)
2. களையெடுப்பு (மது. அக.)

2. ஆசு= (கருமை>) தெளிவின்மை

ஆசு+ஆட்டம்>ஆசாட்டம்= தெளிவற்ற தோற்றம்

[கதிரை. அக]

3. ஆசு= (குற்றம்>) துன்பம்

''ஆசுஉக அயம் தீர்பு எய்த அறிமதி'' [ஞானா: 31,4]

யா: கருமைக்கருத்து மூலவேர்

யா>யாஅய்>யாய்>யாயு>யாசு>ஆசு

ஆசு+இரியன்>ஆசிரியன்= குற்றங்களை நீக்குபவன்,
அறியாமைக் குற்றத்தை நீக்குபவன்,
மனமாசுகளை நீக்குபவன், பயிற்றுநன்

[இய்>ஈய்>ஈ>ஈஇர்>ஈர்>ஈரு>இரு>
இரு+இ>இரி= பிரி, பிளவுறு, முறி, நீங்கு

[ஒ.நோ: இரி>இரியன்>இரிஞன்= பகைவன் (திவா.)]

இரிதல்= பிரிதல், கிழிதல்

''அரிக்கூடு மாக்கிணை இரிய ஒற்றி'' (புறம்: 378:9)

இரிதல்= முறிதல்

''இரிந்தது பாரின் முதுகு" [கலிங்: 360]

இரிதல்= நீங்குதல்

''தடந்தாள் நாரை இரிய'' [பதிற்றுப்: 29:4]

இரித்தல்= நீக்குதல், போக்குதல்

''திங்கள் எல்லாம் உடனாய் இருள் ஓட இரித்தது [கம்பரா: 3,7,159]

இரித்தல்= கெடுத்தல், அழித்தல்

"கணைவித்திய வெஞ்சிலை காய்ந்திரிக்கும் புருவக் கண்ணியர்" (சீவக: 1769)

ஆசு+இரியன்= அறியாமை இருளாகிய குற்றத்தை நீக்குபவன்:

[ஒ.நோ: ஆசறுதல்= குற்றம் நீங்குதல்

"அரியகற்று ஆசற்றார்" (குறள்: 503:1).]

''கற்க, கற்க—ஆசு அறும்,'' என்பது தமிழர் கருத்து, ஆசு அறுதல், ஆசு அற்றார் என்றவாறு வரும் சொல்லாட்சிகள்,— ஆசு இரியன் = அறியாமைக் குற்றங்களை நீக்குபவன் என்னும் பொருளுண்மையை மெய்ப்பிக்க வல்ல துணைச் சான்றுகளாகும்! [மே.கா.] "இருள்தீர எண்ணிச்செயல்"(குறள்)என்னும் வரியின் பொருண்மையும் இவ்விடத்தில் எண்ணத்தக்கது. இருள் = மயக்கம், மனமயக்கம் (காண்க. பரி: 4:1-3)

1. ஆசிரியன்: கல்வி பயிற்றுநன்

(1-1) "அகன்மனை யரங்கத்து ஆசிரியர் தம்மொடு" (மணி: 7:42)

(1-2) "ஆசில் ஆசிரியன்" (பெரியபு: 10.37)

2. ஆசிரியன் : குரு, மேலோன்

(2-1) "பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர் (பட்: 169-170)

(2-2) "தொல்லாணை நல்லாசிரியர்" (மதுரை: 760)

3. ஆசிரியன்= நூல் இயற்றுவோன்

(3-1) "கடிநிலை இன்றே ஆசிரியர்க்கே"
[தொல். எழுத்: 389]

(3-2) "அமைபவன் நூல்உரை ஆசிரியன்னே"
[நன்: 26]

4. ஆசிரியன் = உரை ஆசிரியன் (த.த.அக)

5. ஆசிரியன் : புலவன்
"மேலோர்.........புலவர் ஆசிரியர் [பிங்: 848]

ஆசு + இரியை > ஆசிரியை = கல்வி பயிற்றும் பெண் ஆசிரியர்

ஆசிரியன் கல்வி பயிற்றுகையில், தன் மாணாக்கரை விளித்து உரைக்கும் முறையையொத்து, — யாக்கப்பெறும் அகவற்பாவானது— "ஆசிரியப்பா" என்னப்பெற்றது.

அகவல் = அழைக்கை, கூவுகை
"அகவல் என்பது அழைத்தலாகும்" [பிங்: 1996]

அகவல் + மகள் > அகவல்மகள் > அகவன்மகள்
அகவன் மகள் = தெய்வங்களை அழைத்துப்பாடும் கட்டுவிச்சி
"அகவன் மகளே பாடுக பாட்டே" [குறுந்: 298]

ஆசு + இரி + அம் > ஆசிரியம் = அகவல்
"அகவல் என்பது ஆசிரியம்மே"
[தொல்.பொருள்: 386. இளம்]

ஆசிரியம் + பா > ஆசிரியப்பா = அகவற்பா

1. "ஆசிரியப்பா வெண்பா என்றாங்கு
ஆயிரு பாவினுள் அடங்கும் என்ப"
[தொல். பொருள்: 412 இளம்]

2. "ஆசிரியப்பா என்பது அகவலே"
(அறு. இலக்: 9: யாப்பு)

3. "அகவல் என்பது ஆசிரியப் பாவே" (யாப்.வி: 16)

ஆசிரியவிசை = அகவலோசை

நான்முறைவழிமுறையுற ஒழுகுகை-என்னும்பொருள்படும்"ஆசார" (ā-cāra) என்னும் சமற்கிருதச்சொல்லினின்று தோன்றிய, "ஆசாரிய"

(ā-cārya) என்னும் சொல்லுக்கும்,—"அறியாமைக் குற்றங்களை நீக்கு பவன்" என்னும் பொருண்மையில் தமிழில் தோற்றப்பெற்றுள்ள "ஆசிரியன்" என்னும் சொல்லுக்கும் பொருளடிப்படையிலும், தோற்ற அடிப்படையிலும் எவ்வகைத் தொடர்புமில்லை! மொட்டைத் தலைக்கும் (முழங்காலுக்கும்) முழந்தாளுக்கும் முடிச்சுப்போடுவதைப் போன்று,— "ஆசிரியன்" என்னும் சொல் ஆசார்ய (ā-cārya) என்னும் சொல்லினின்று விளைந்ததாக செ.ப.க.த.பே. மடலத்தில் (1. பக்: 210) வேர்மூலம் காட்டியிருப்பது, குறும்பும் குறுக்கு(!) நோக்கமும் கொண்டதாகும்!

அத்துடனன்றி, (அய் > ஐ) (அய் > ஆய் > ஆய் + அன் > ஆயன் >) ஆயான் என்றவாறு முதற்கண் ஐயனாகிய தந்தையையும், பின்னர்ப் பெரியோனையும் குறித்து வழங்கிய சொல்— பொருள் விரிவாக்க முறை வழியே—கல்வி பயிற்றுந்தந்தை என்னும் பொருளில் "ஆசான்" என வழங்கப் பெறுவதாயிற்று.

காண்க: 1. "தண்டமிழாசான் சாத்தன்" (சிலம்பு: 25;66)

2. "ஆசாற்கு அடியுறை செய்யும் மாணிபோல" (பெருங்: 2,9,58)

இவ் "ஆசான்" என்னும் சொல்லுக்கும் மூலமாக ''ā-cārya'' என்னும் சொல்லையே செ.ப க.த.பே. — முதல் மடலத்தில் அடுத்துக் குறித்திருப்பதும் அடாக்குறும்பும்—அறியாமையுமே ஆகும்!

யா : கருமைக்கருத்து மூலவேர்

யா > ஞா

1. ஞா+டு > ஞாடு > ஞாடு+அம் > (ஞாடம்) > ஞாட்டம் > நாட்டம்
(ஞாடு > நாடு > நாடு + தல் > நாடுதல்)

2. ஞாடு > ஞோடு > நோடு > நோடு + அம் > (நோடம்) > நோட்டம்

3. ஞா + கு > ஞாகு > ஞோகு > ஞோக்கு > நோக்கு

கண்ணே!......... தன்னுட் கருவாகித், தன்னினின்று உயிர்த்த உயிரியான — தன் குழந்தையைத் தாயானவள் உயிரன்போடும் உள்ளுவப்போடும் அழைக்கும் விளிப்பொலி!...... தன்னின் உயிருணர்வான காதலெழுச்சிக்குக் கருவியளான காதலியை நோக்கி மயங்கிய விருப்புணர்வோடு காதலன் விளிக்கும் அன்பொலி!...... கணவன் தன் வாழ்வுத் துணையாகிய மனைவியை அன்புச் சுரப்பெழுந்து நிற்கும்போது அழைத்துத் தழுவும்— ஆரின்பப் பேரொலி!...... இவ்வகை விளிப்பினின்று— உடலுறுப்புகள் எவற்றினையும்விட இக் கண்ணின் மீது ஓர் உயர்ந்த பெருமதிப்பைத் தமிழமாந்தர் தம் கருத்தளவிற் கொண்டிருந்துவந்த தொடர்ச்சிப்பாடும் புலனாகின்றது!

எச்சரிக்கையாகக் கவனஞ் செலுத்திக் காக்கப்பெற வேண்டியனவற்றுள் " கண் " மிகமிக முதலிடம் பெற்று நிற்கின்றது! சின்னஞ்சிறு தூசும் அல்லது நுண்ணியதினினும் நுண்ணியதான நொய்யதாம் ஒரு தும்பும் துடுமெனப்பட்டுவிடின் துடிதுடிக்கச் செய்துவிடுவது—கண்ணே! அவ்வளவு அருமையாக அதனைக் காத்துக் கொள்ளவேண்டிய பான்மையைப் பெற்றிருப்பதால் — மாந்தவுயிரியின் படிமலர்ச்சியில் (Evolution) மிக நேர்த்தியாகச் சுருங்கிவிரியும் திறத்திரைகளாகிய இமைகளும் பொருகதவங்கள்போல் பொருத்தமுற உருவாக்கம் பெற்றுள்ளன!

உருண்டையுருவின் முகப் பாக முகப்புப் பகுதியாகிய கண்ணின் பார்வையுறுப்புப் பகுதியை மூடுதற்கென மேலிருந்து கீழ்நோக்கியும்— கீழிருந்து மேனோக்கியுமாக இமைகளாகிய தசைத் திரைகள் இயங்குகின்றன! மேனின்று கீழ்நோக்கி வளையக் கவிந்து சரிவாக இயங்குகின்ற தசைத் திரையாகிய இமையியக்கத்தின் தோற்றக் காரணமாக— "வளைவு" என்னும் கருத்தடிப்படையில் — (இர் > இர = வளைவு.

இர+வு > இரவு = வளைவு. இரு > இறு > இறை= கூரையின்சரிவு வாட்டப்பகுதி.) (இர் > இரை > இரை+(ப்)+பு > இரைப்பு > இரைப்பு+ஐ > இரைப்பை >) இரப்பை என்றவாறொரு சொல்லும் தமிழில் தோற்றம் பெற்றது! மக்கள் வழக்கில் இச்சொல் "ரப்பை" என்றவாறான கொச்சை வடிவில் இன்றும் வழங்கப் பெறுவது கவனிக்கத்தக்கதாகும்!

[தமிழிய மொழிகள் சிலவற்றில் இதன் படிவுகளாவன!

Telugu: reppa (Kannada): reppe, rappe (Konda): repa (Kuwi): reppa (Kolami) (Kand-) reppa (Naiki): (Kandle-reppa)]

'' காப்பு '' — என்னும் வினைக்கு உவமையாகக் கூறும்போது "கண்ணை இமை காப்பது போல—" என்றவாறு சுட்டும் மரபு வழக்கி னுள்ளும் இமையின் காப்புத்திற வினையின் பெருமைக்குறிப்புள்ளமையை நாம் நன்கு அறியலாம்!

மிகச்சிறந்த பெருமை நிலையுடைய பொருள் ஒன்றுக்கு—அல்லது ஒருவற்கு ஈடாக உவமை கூறுகையில் கண்போன்றது அல்லது கண் போன்றவர் என்ற தொடர்மொழிவழியாகச் சுட்டும் வழக்கும் நம் மிடையே உண்டு! அரசனுக்குக் கண்போல இருந்து வழியும் முறையும் காட்டும் தகுதியினரான அமைச்சர்கள் "கண்ணவர்" என்றவாறு சுட்டப் பெற்றனர் என்பதும் இவ்விடத்தில் எண்ணத்தக்கது. (காண்க: "கடனறி காரியக் கண்ணவ ரோடும்" பரி: 19:22)

'' கண் அன்ன கேளிர் '' [குறள் : 1267] [= என் கண்போற் சிறந்த காதலர்], ''கண் அன்னார்'' [குறள்: 1061] [= கண்போலச் சிறந்தார்] — போன்ற குறிப்பீடுகளில் கண்ணைப்பற்றிய உயர்மதிப்பு பதிப்பு பெற்றுள்ளமையையுங் காணலாகும்!

பார்வை, விழி, நாட்டம், நோக்கு (நோக்கம்) முதலிய நான்கும் கண்ணைக் குறித்துத் தமிழர் வழங்கிய மற்றைய சொற்களாகும்.

பார்வை :

கண்களை இமைகள் மூடியுள்ளன! கண்ணின் தொழிலான காணு தலைச் செய்ய வேண்டுமாயின், அவ் இமைக் கதவுகளை அகலிதாகப் பரப்பவேண்டும்! இப்படி "அகலிதாக இமைகளை விரியச்செய்து பரப்பு"-

— என்னும் பொருளிலேயே, ''பார்'' என்னும் வினைச்சொல்லானது தோற்றுவிக்கப் பெற்றுள்ளது!

பா= பரப்பு

(1) "பருவ வானத்துப் பாமழை கடுப்ப" [பெரும்: 190]
(பாமழை= பரந்த முகில்)

(2) "பா அடி யானை" [புறம்: 233:2]
(பாஅடி= பரந்த அடி)

பா>பாஅர்>பார்= பரப்பு [சூடா.நி.] (பார்>(skt) sphāra)
பார்=பரந்த நில்வுலகம் (சீவக: 1931)
[ஒ.நோ: வியலகம், வியலிடம்]

பார்= (முடியுள்ள-) இமைகளைப் பரப்பு, இமைகளை விரித்துக் காண்

[மே.கா: அ.மொ.உ. தொகுதி:3. பக்: 19-21]

பார்+வு>பார்வு. பார்வு+அல்>பார்வல்=பார்க்கை
''இன்கண் உடைத்து அவர் பார்வல்'' [குறள்: 1152]

பார்வு+ஐ>பார்வை=காட்சி
(> (தெலுங்கு) (பாருவ= காட்சி, நோக்கு)

பார்வை= காட்சியைக் காணும் உறுப்பாகிய கண்
பார்வை: கண் (பிங்: 1053) (சூடா.நி: 2:96:2)
"பார்வையில்லி மைந்தரும்" [சேதுபு:அகவ:4]

விழி :

[''பார்''—என்னும் சொல்தோற்றக் காரண அடிப்படையிலேயே ''விழி'' என்னும் இச்சொல்லின் தோற்றமும் நிகழ்ந்தது!]

''வய்''= பிரிவு, விரிவு [மூலவேர்]
வய்>வெய்>விய் (விரிவுக் கருத்து விளர்ச்சி வேர்)

விய்+அல்>வியல்= விரிவு, அகலம்
''வியல் என் கிளவி அகலப் பொருட்டே''
[தொல்.சொல்:உரி: 66]

வியல் = பெருமை

''மூழ்த்திறுத்த வியன்றானை'' (பதிற்றுப்: 33:5)

வியல் + அகம் > வியலகம் = உலகம்

[ஒ.நோ: பார் = உலகம்]

''விரிகடல் வேலி வியலகம் விளங்க'' [சிறு: 114]

வியல் + இடம் > வியலிடம் = உலகம்

''இவ் வியலிடத்தே'' [திருக்கோ: 277]

வியல் + உள் > வியலுள் = அகன்ற இடம்

''விழவு வீற்றிருந்த வியலுள் ஆங்கண்''

[பதிற்றுப்: 56:1]

விய் > வியி > விழி = விரிவுறச் செய், கண்ணிமைகளை அகலிதாக விரித்துப் பார்

வியி > விழி (யகர-ழகரத் திரிபு)

[ஒ.நோ: பய் (பள்ளக்கருத்து) > பயி > பழி
ஒய் (வளைவுக்கருத்து) > ஒயி > ஒழி
குய் (துளைக்கருத்து) > குயி > குழி]

விழி + (த்) + தல் > விழித்தல் = 1. இமைகளைத் திறத்தல்

''இமையெடுத்துப் பற்றுவனென்றியான் விழிக்குங்கால்''

[கலி: 144:55-56]

[நச்.உரை: கூடின இமையை விழித்துப் பிடித்துக் கொள்வேனென்று கருதி யான் விழிக்க.........)

விழித்தகண் = இமை திறந்தவாறே உள்ள கண் (குறள்: 775)

2. விழித்தல் = உறங்கிய பின்—இமை திறத்தல், உறக்கந் தெளிதல்

(2-1) "உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" (குறள்: 339)

(2-2) "துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்தவர் ஆவர் விரைந்து" [குறள்: 1218]

விழித்திருத்தல் = இமை மூடாமல் விழிப்பாக இருத்தல், இமை மூடாத திறந்த நிலையில் பார்த்தும்

கொண்டே இருப்பது போலவே—எச்சரிக்கையா
யிருத்தல், கவனித்து நோக்குதல்
''நாட்டார் விழித்திருப்ப...........'' [திருவாசக: 5:28]

விழி = விழித்துப் பார்த்தலைச் செய்வதாகிய கண்

1. ''சுழல் விழி'' [முருகு: 48]
2. ''இருகயல் இணைவிழியே'' (சிலம்பு: 7:15:4)
3. ''விழியிலா நகுதலை'' [தேவா: 345:5]

விழி = (கண் >) அறிவு
''தேறார் விழியிலா மாந்தர்" [திருமந்: 177]
[ஒ.நோ: ''கண்ணுடைய ரென்போர் கற்றோர்''
[குறள் : 393]

மேற்குறித்துரைத்த பார்வை, விழி ஆகிய இரண்டு சொற்களும் கண்ணிமைகளை அகலித்து விரித்துக் காணுகை என்னும் அடிப்படையில் கண்ணைக் குறித்துத் தோன்றியனவாகும்.

''கண்'' என்னும் சொல்லோ—கருமை நிறத் தோற்ற அடிப்படையில் தோற்றுவிக்கப்பெற்றதாகும்.

கய் > கய்ல் > கல் > கள் = கருமை
கள் > காள் > காளி = கரிய பெண்தெய்வம்
களங்கனி = களாக்கனி, கரியகனி

கள் > கண் = கரிய மணியை நடுவாகக் கொண்ட உறுப்பு
(ஒ.நோ: ''கருமணியிற் பாவாய்'' [குறள்: 1123:1]

ஒரு முழு வெள்ளைத் தாளொன்றை எடுத்துக்கொண்டு — அதில் ஒரு பக்கத்தில் மிகச் சிறிய கரும் புள்ளியொன்றையிட்டுவிட்டு — ஒருவனிடம் காட்டி,—" இது என்ன?" என்று நாம் அவரிடம் கேட்போமேயானால்— "கரும்புள்ளி!" என்றே அதற்கு விடையிறுப்பான்! முழு வெண்ணிறப் பக்கமாக இருப்பினும் அதனுள் இடப்பெற்ற குறியீடே முற்பட்டவாறு அவன் எண்ணத்தில் எழுந்துநிற்கின்றமை போன்று—வெள்ளை விழியுறுப்பில் நடுவகத்ததாயிருக்கும் கருமணி முற்படத் தெரிவுறுவதாகிய இயல்புநிலை உண்மையே—"கண்" என்னும் இப்பெயரீட்டுக்

கும் அடிப்படையாக அமைந்துள்ளது! பார்வைக்கு இன்றியமையாத பகுதியுறுப்பாக அக் கருமணி அமைந்திருப்பதையும் அச் சொல்லுருவாக்கக் காரணத்தவரான — நம் முன்னையோர் நன்கு உற்று எண்ணிப் பார்த்திருக்கின்றனர்!

கருநிறத்திற் பூக்கும் பூக்களில்—நீலம் (காவி), குவளை, நெய்தல் என்னும் மூவகைப் பூக்களும் கண்ணுக்கு உவமைகளாகப் பல்வேறிடங்களில் கழக இலக்கியங்களில் சுட்டப்பெற்றுள்ளமை இவ்விடத்தில் நன்கு கவனிக்கத் தக்கது.

நெய்தற் பூ கண்ணங்கரியது!

(1) "...........வெண்காற் செருவில்
மை என விரிந்த நீள்நறு நெய்தல்" [மலை: 123-124]

(2) "மைபடு மலர்க் கழி மலர்ந்த நெய்தல்" [பதிற்றுப்: 64.16]

(3) "மணிமருள் நெய்தல்'' [மதுரை: 282]

இந் நெய்தற்பூ, கண்ணின் உருவுக்கு நேர் ஒப்பான தோற்றமுடையது!

(1) "கணைத்த நெய்தல் கண்போல் மாமலர்" (அகம்: 150:8)

(2) "ஒண்ணுதல் மகளிர் ஓங்கு கழிக் குற்ற
கண்நேர் ஒப்பின் கமழ்நறு நெய்தல்" (நற்: 283:1-2)

(3) "பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
கயம் மூழ்கு மகளிர் கண்ணின் மானும்" (குறுந்: 9:4-6)

குவளை: கரிய இதழ்களால் ஆன பூ, — இது!

காண்க: "மா இதழ்க் குவளை" [புறம்: 105:2-4]

(1) "கண்ணென மலர்ந்த மாயிதழ்க் குவளை" (அகம்: 228:4)

(2) "கண்நேர் இதழ தண்ணறுங் குவளை" (அகம்: 358:5)

(3) "குவளை மாயிதழ் மாமலர் புரைஇய கண்ணே"
(நற்: 317:9-10)

(4) "பாசலை யார்ந்தநம் குவளையங் கண்ணே" (குறுந்: 13:5)

[மே.கா: "காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ஒவ்வேம் என்று" (குறள்: 1114)

'' வைகையில் நீராடிய மகளிருள் ஒருத்தி, தன் இரு—காது மடல் களிலும் இருகுவளை மலர்களைச் செருகிக்கொண்டு—அவற்றின் வழி நான்கு விழிகளைப் பெற்றுத் தோற்றந்தந்து நின்றாள்!'' என்றவாறு வரும் கழக இலக்கியக் காட்சியொன்றில்—கண்ணின் தோற்றத்தை நேரி தாக அப் பூ ஒத்துள்ள உண்மையையும் உணரலாம்! [கணேக: பரி:11 97-28]

[மே.கா : குவளை உண்கண்: புறம்: 348:6 அகம்: 156:8, 129:16, 138:2-4, 310:5]

நீலம் : கருநீலப்பூ! காவிப்பூ!
[காவியும் நீலமும் ஒன்றே!]

(1) "நீலத்து இணைமலர் புரையும் உண்கண்" [புறம்: 111:3]

(2) "கண்போல் நீலம்" [நற்: 161:2, 273:8]

(3) "நீடிதழ் தலைஇய கவின்பெறு நீலம்
கண்ணென மலர்ந்த சுனையும்" [அகம்: 38,10-11]

காவி : நீலப்பூ

(1) "கழியே, சிறுகுரல் நெய்தலொடு காவி கூம்ப"
[அகம்: 350:1]

(2) "காவியங் கண்ணியாய்" [சீவக: 316]

(3) "காவியங் கண்ணார் கட்டுரை" [திருக்கோ: 1]

கருநிறப் பூக்களான நீலம் (காவி), குவளை, நெய்தல் என்னும் இம் மூவகைப் பூக்களும் கழக இலக்கியங்களுள் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களின் கண்ணுக்கு உவமைப் பொருளாகச் சுட்டப் பெற்றுள்ளமை யின் கருக் காரணம்— கருமைநிறத் தோற்ற ஒப்புமை நிலையே!

கண்ணின் கருவிழியாகிய கருமணியைப் போன்றே — மகளிர் மார்பகத்தின் முனைப்புமுகம் [முலைமுகப்] கரிய நிறத் தோற்றத்திலி ருப்பது கருதியே — "கண்" என்னும் சொற்கொண்டே பல்வேறிடங்களில் குறிப்பிடப் பெற்றிருத்தலும் — நன்கு கவனத்திற் கொள்ள வேண்டிய செய்தியாகும்!

(1) "திரங்குகண் வறுமுலைச் செம்முது பெண்டின்"
[புறம்: 276:2-3]

(2) "கருங்கண் கொண்ட நெருங்கல் வெம்முலை
மையல் நோக்கின் தையலை நயந்தோர்"
[புறம்: 345: 10-11]

(3) "மாக்கண் மலர்ந்த முலையள்" [புறம்: 352:14]

[மே.கா: அகம்: 26:6-9, 142:25, நற்: 314:6-8]

கருநிறத் தோற்ற அமைப்புக் காரணஅடிப்படையிலேயே,— தேனடைக் கண்ணும், ஊற்றுக் கண்ணும், பீலிக் கண்ணும் — "கண்" என்ற சொற்கொண்டே பல்வேறிடங்களில் பரவலாகச் சுட்டுப்பாடுற்றுள்ளன!

கருநெடுங்கண்ணி (சிலம்பு: 8:83), கருங்கண் (மணி:25:89), கருங்கயற்கண் (சிலம்பு: 18:52) போலும் பல்வேறு தொடர்ச் சொற்கள் —கருமைக் கருத்துடைய ''கரு'' என்னும் அடையொடு சுட்டப் பெற்றிருப்பதும் இங்கு நன்கு கருதத்தக்கது!

தமிழிய மொழிகள் பலவற்றுள் — இக் ''கண்'' என்னும் செந்தமிழ்ச் சொல்லின் பதிவுகளாவன :

Malayalam	:	Kaṇ, Kaṇṇu
Kota	:	Kaṇ
Toda	:	Koṇ
Kannada	:	Kaṇ
Kodagu	:	Kaṇṇi
Tulu	:	Kaṇṇu
Telugu	:	Kanu, Kannu
Kolami	:	Kan, (pl.) Kanḍl
Naikri	:	Kan, (pl.) Kanḍl
Parji	:	Kan (pl.) Kanul
Gadba	:	Kan (pl.) Kaṇul
Gondi	:	Kan (pl.) Kank
Konda	:	Kan
Pengo	:	Kanga
Manda	:	Kan
Kui	:	Kanu (pl.) Kan-ga
Kuwi	:	Kannū (pl.) Kanka

Kurux : Xann
Malto : qanu
Brahui : Xan

சில கூட்டுச்சொற்கள் :

கண்கலவி= காதற்குறிப்போடு, முதன்முதலில் தலைவனுந் தலைவியுங் காணுகை. (ஈடு: 5, 3 ப்ர.)

கண்களவு கொள்ளுதல்= தான் பிறனைப் பார்ப்பதை- அவன் காணாத வாறு, தான் அவனைக் களவாகப் பார்த்தல் [குறள்: 1092]

கண்ணாஞ்சுழலை= மருண்டு பார்க்கை [ஈடு: 8,1,4]

கண்ணுமை= காட்சி [தொல். பொருள்: 76]

கண்படை= உறக்கம் [முல்லை: 67]

கண்பாடு= உறக்கம் [குறள்: 1049]

கண்மணி= கருமணி, கண்ணின் கருவிழி [சிலம்பு: 11:55]

கண்மை= 1. கண்ணோட்டம் (பிங்.)
2. காட்சி (கம்பரா. ஒற்றுக். 51)

கண்வளர்தல்= 1. குவிதல் [தேவா: 621:1]
2. தூங்குதல், உறங்குதல் [திவ். பெரியதி. 2;10,1]

கருமைக்கருத்து அடிப்படையில் தோற்றப்பெற்ற ''கண்'' என்னும் சொல் போன்றே — ''யா'' என்னும் கருமைக்கருத்து மூல வேரினின்று மிகப்பண்டையில் ''ஞா'' என்றவாறு திரிபுறுத்தப் பெற்று அதுவே, ''கண்ணால் பார்'' என்னும் பொருட்பாட்டில் நன்கு ஆழமாகப் பயன்படுத்தப்பெற்றுவந்திருக்க வேண்டும் என்னும் உண்மை— அவ் வேரினின்று விளர்ந்து செழித்து வழக்கில் நிலைகொண்டிலங்கும் பல சொற்களால் விளங்குகின்றது!

கிரேக்கம், இலத்தீனம் போன்ற மொழிகளிலும் இம்மூலத் திரிபுச் சொல்லான ''ஞா'' என்னும் இத் தமிழ்க்கருவுருவே gno என்னும் திரிபு வடிவில் ஆழமாக வேரோடி மிகப் பல்வேறு காணுதற்கருத்துடைய— அறிதற் கருத்துடைய ஆக்கச் சொற்களாக—அம் மொழிகளைப் பற்றி வளர்ந்த இனமொழிகள் பலவற்றில் ஆல்போல் தழைப்பெய்தியுள்ள உண்மையும் மிகத் தெள்ளிமையாக ஒண்படத் தென்படுகின்றது!

யா : கருமைக்கருத்து மூலவேர்

யா > ஞா [யகர—ஞகரத் திரிபு]

யா > ஞா > ஞா + டு > ஞாடு > ஞாடு + அம் > (ஞாடம்) > ஞாட்டம் > நாட்டம்

ஞாடு > நாடு > நாடு + தல் > நாடுதல்

நாட்டம் = கண்

(1) ''விலங்கு மலைத் தமர்ந்த சேயரி நாட்டத்து
இலங்குவளை விறலியர்'' (மலை: 46-45)

[நச்.உரை: மானோடு மாறுபட்டுப் பொருந்தின செவ்வரியை யுடைய கண்ணினையும் — விளங்குகின்ற வளையினையுமுடைய விறல் படப் பாடுவார்.........]

(2) ''இமையா நாட்டத்து'' [புறம்: 62:16]
(= இமையாத கண்ணினையும்......)

(3) ''நுதல்விழி நாட்டத்து இறையோன்''
(= சிவன்) (சிலம்பு: 14.7)

நாட்டம் = கண். [மே.கா: திருமுரு: 155. அக. க. வா: 4, பரி: 461, 5:30]

''வயவர் தோளு நாட்டமு மிடந் துடிக்கின்றன''
[கம்பரா. சூரன்வதை: 71]

(பொருள் விரிவாக்கம் :)

நாட்டம் = (கண்) > (பார்வை) > நோக்கம்

''நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்கு
கூட்டியுரைக்கும் குறிப்புரை யாகும்''
(தொல். பொருள். களவி: 5)

(நாட்டம் இரண்டும்: (நச்.உரை) தன்னுடைய நோக்கம் இரண் டாலும்)

நாட்டம் > (கண்) > (பார்வை) > (நோக்கம்) > ஆராய்ச்சி

நாட்டம் = ஆராய்ச்சி

(1) ''நல்நய மருங்கின் நாட்டம் வேண்டலின்"
(தொல். பொருள்: 3:33:2)

(நாட்டம் வேண்டலின் = ஆராய்தலை விரும்புதலாலே...)

(2) ''நன்மதி நாட்டத்து'' (தொல். சொல். குற்: 78:5)
(= நல்லளவையாகிய ஆராய்ச்சியான்......)

(3) ''செங்கோல் நாட்டத்து'' (புறம்: 35:14)
[உரை: செங்கோலான் ஆராயும் ஆராய்ச்சியையுடைய...]

நாட்டம் > (கண்) > (பார்வை) > (நோக்கம்) > (ஆராய்ச்சி) > கணியம்

''சொற்பெயர் நாட்டங் கேள்வி நெஞ்சமென்று''
(பதிற்றுப் :211)

ஞாடு > நாடு = காண், பார், ஆராய், தேடு

நாடுதல் = ஆராய்தல்

(1) ''வினைக்குரிமை நாடிய பின்றை'' [குறள்: 518:1]
(2) ''நாடோறும் நாடுக'' [குறள்: 520:1]

[நாடாமை = ஆராயாமை, ஆய்ந்து எண்ணிப்பாராமை
''நாணாமை நாடாமை நாரின்மை'' [குறள்: 833:1]

நாடாது = ஆராயாது

1. ''நாடாது நட்டலிற் கேடில்லை" (குறள்: 791:1)
2. ''நீ நாடாது கூறுதி'' [அகம்: 268:7]
[உரை: நீ ஆராயாமல் கூறுகின்றாய்!...]

நாடுதல் = (ஆராய்தல்) > தேடுதல்

''தனக்குத் தாய் நாடியே சென்றாள்'' [நாலடி: 15:2]

நாடுதல் = (காணுதல்), (பார்த்தல்) > (விருப்பத்தொடு பார்த்தல்) > விரும்புதல்

''நல்லாற்றால் நாடி அருளாள்க'' [குறள்: 242:1]

ஞாடு > ஞோடு (உயிரியைபு மாற்றம்)
(Harmonic Sequence of Vowels)

ஞோடு > நோடு   நோடு + தல் > நோடுதல் = காணுதல்

நோடு > நோடு + அம் > (நோடம்) > நோட்டம் = நோக்கம்

கண் + நோட்டம் > கண்ணோட்டம் = கண்ணோக்கு
[புணர்ச்சி-ஒ.நோ: கண் + நோய் > கண்ணோய்
கண் + நுதல் > கண்ணுதல்

நோடுதல் = பார்த்தல்.   கண் + நோடுதல் > கண்ணோடுதல்

கண்ணோடுதல் = சிறப்பாக அன்பு கொள்ளுதல்
''ஓர்ந்து கண்ணோடாது'' (குறள்: 541:1)

[ஒ.நோ: கண் + நோக்கு > கண்ணோக்கு = (பார்வை) > அருட் பார்வை
''கண்ணோக்கரும்பா'' [நீதிநெறி: 37]

[மே.கா: கண் + காணி-த்தல் = கண்ணாற்கண்டு- மேற்பார்வை செய்தல்]

கண்ணோடுதல் (கண் + நோடுதல்) என்பது,— கண்ணோக்குதல், கண்காணித்தல் போன்றவாறே கண்ணாற்காணுதலைக் குறித்தே முதற்கண் வழங்கிவந்து பின்னர்- முறையே, கண்ணால் நோக்குதல் >, கண் கொண்டு அன்புடன் நோக்குதல் >, அருளுணர்வோடு நோக்குதல் >, அருளுணர்வொடு இரங்குதல் >, இரங்குதல் என்றவாறெல்லாம் பொருள் விரிவாக்கங்கள் எய்தியது! அருளுணர்வொடு இரங்கிச் சார்பொடு இயங்கும் இயக்கமே கண்ணோட்டம் என்றவாறான பொருளூட்டமும் படிப்படியே படிதலுற்றது!

கழக இலக்கியத்துள் எவ்விடத்திலேனும் "நோடுதல்" என்னும் வினைச்சொல்வடிவமோ—"நோட்டம்"என்னும் தொழிற்பெயர்வடிவமோ தனிப்படப் படிவெய்தவில்லை! கண்ணோடுதல் (கண்நோடுதல்), கண்ணோட்டம் என்றவாறான கூட்டுச்சொல் வடிவங்களாகவே காணப்பெறுகின்றன. ஒரு வினை குறித்த அல்லது பொருள் குறித்த ஒருபொருட் பலசொற்கள் பலபட வழங்கி வருகையில், சில அவற்றில் பட்டுப்போதல் —மொழிவழக்கில் உண்மையாயிருத்தலையும் இங்கு நாம் கருதுதல் வேண்டும்!

''ஞாடு''—என்னும் சொல்லின் உயிரியைபு மாற்றத்தால் திரி

பெய்திய (ஞோடு >) ''நோடு'' என்னும் வினைச்சொல் வடிவம், நமக்கு இதுவரைத் தப்பிக் கிடைத்துள்ள இலக்கியங்களினுள் தனிப்படத் தலையெடுத்து எங்கும் தோன்றவில்லை! கூட்டுச் சொல்லாக மட்டுமே நின்று நிலைத்துள்ளமையைக் காணுகின்றோம். இவ் வினைச்சொல் வடிவம தமிழ்மொழியின் பேச்சுவழக்கில் இன்று பயிலப்பெறவில்லை. தமிழிய மொழிகள் சிலவற்றில் இவ்வடிவம் இன்றும் பயில்விலுள்ளது! அதே போழ்து,— "நோடு" என்னும் சொல்லினின்று தோன்றிய "நோட்டம்" என்னும் கூர்த்த நோக்கத்தைக் குறித்த சொல், தமிழமக்களின் வாய் வழக்கினின்று வழுவாது தொடர்ந்து வாழ்வதை இன்றும் நன்றே அறியலாம்!

[காண்க: நோட்டமிடுதல் = ஒரு உள்நோக்கத்தோடு உற்றுநோக்கிக் கொண்டிருத்தல்

நோட்டம் பார்த்தல் = உற்றுப்பார்த்துத் தகுதியறிதல்

நோட்டம் = ஆராய்கை, மணி-பொன் முதலியவற்றை ஆய்ந்து தகுதியறிகை

நோட்டமாயிருத்தல் = ஒன்றைப்பற்றிய நோக்கமாகவே யிருத்தல்.]

இம் மக்கள் வழக்குகளையெல்லாம் உள்ளத்து உட்கொண்டே, "மொழி ஞாயிறு" — பாவாணர் அவர்கள், Inspector என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு, "உண்ணோட்டகர்" (உள் + நோட்டகர்) என்றவாறு மொழியாக்கஞ் செய்து பயில்வுக்கும் பழக்கத்திற்குமாகப் பயன்படச் செய்தார்.

"நோடுதல்" என்றவாறொரு தனிச்சொல், இலக்கியப் பயில்வுகளிடை எங்கும் படியாதது கண்ட உரையாசிரியர்கள், "கண்ணோட்டம்" என்னும் கூட்டுச் சொல்லைக் கண் + ஓட்டம் என்றவாறு துண்டித்துக் கருப்பொருள் கலைத்துக் கடும்பிழை செய்துவிட்டனர்! பெரும்பாலான திருக்குறள் உரையுரைப்புகளைப் பரிமேலழகரைப் பற்றியவாறே வரைந்துவிட்ட பாவாணர் பெருமகனாரும் — (கண் + ஓட்டம் = ''இது அவரைக் கண்டவுடன் அவர்மீது மனம் விரைந்து ஓடுவது பற்றிக் கண்ணோட்டம் எனப்பட்டது— என்றவாறு குறித்தார். [காண்க: திருக்குறள் தமிழ் மரபுரை—பக்: 327] இது, புணர்ச்சிப் பிரிப்புப் பிழை!

தமிழியமொழிகள் சிலவற்றில்— இச் சொல் வகைகளின் பதிவுகளாவன:

Malayalam : nōttam = Viewing, examination, sharp sight
Kota : no.t, not.m = a sight

Toda	:	nwit = a sight
Kannada	:	nōdu = to look, look on, look at, view, look after, examine nōduvike = looking nōdisu = to cause to look nōta = looking at or on, viewing, seeking, examination, a sight, spectacle, sight, a look nōtaka = a looker-on, spectator, eye-witness
Kodagu	:	no.t, noti = to look at
Tulu	:	nōta = sight, view, vision, aim nōdāvuni = show

காணுதல், நோக்குதல், பார்த்தல் ஆகிய முச் சொற்களின் பரவலான பயில்வுகள்— "நோட்டம்" என்னும் சொல்லின் பழைய வழக்காற்றைத் தள்ளிவைத்துவிட்டிருக்கின்றன! கடைக்கழகக் காலத்திலேயே இந்நிலை அமைந்துவிட்டது! எனினும், மூலப்பயில்வு அழியாது கூட்டுச் சொல்லொடு பிணைந்திணைந்து உயிர்த்துக்கொண்டுள்ளள்ளமையைக் —"கண்ணோட்டம்" என்னும் சொல்லும், அதனின் வினைச்சொல் வடிவான "கண்ணோடுதல்" என்னும் சொல்லும் தெளிவாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன!

(கண் + நோட்டம்) > கண்ணோட்டம் என்பது, "கண்வழிநோக்குகை" (கண்நோக்கு) என்றவாறான பொதுப் பொருளிலேயே முன்னர்த் தோற்றப்பெற்றுப் படிப்படியே பொருள் விரிவாக்கம் பெற்றது.

கண் + நோக்கு > கண்ணோக்கு

(1) "பார்வல் இருக்கைக் கவிகண் ணோக்கின்" [புறம்: 3:19]

(2) "நூல்இயல் கண்ணோக்கு ஒழிக்கும்" [அகம்: 234:7-8]

(3) "கலந்து கண்ணோக்கு ஆர" [கலி: 86:5]

கண்ணோட்டம் : 1. கண்பார்வை [கலைசைச். 97]
2. இரக்கத்தாலாகிய அருளுணர்வின் வழியான சார்பு

"கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை"
[குறள்: 571]

3. இரக்கத்தோடு கூடிய நோக்கு, அருள்

[காண்க: புறம்: 20:16, 198:14-17, பதிற்றுப்: 22 1-4, குறள்: 571, 572, 573, 574, 575, 577, 583]

4. அருட்செயல்

"பழங் கண்ணோட்டமும் நலிய" (அகம்: 66:25)

கண் + நோடுதல் > கண்ணோடுதல் = கண்ணோட்டஞ் செய்தல்

(காண்க : புறம்: 19:16, அகம்: 398:16, கலி: 8:16, 133: 13, 140:20, குறள்: 578, 541, 579)

யா > ஞா + கு > ஞாகு > ஞோகு > ஞோக்கு > நோக்கு

ஞாகு > ஞோகு — உயிரியைபு மாற்றம்
(Harmonic sequence of vowels)

ஞோக்கு > நோக்கு = பார்வை, கூர்த்த பார்வை

நோக்கு + அல் > நோக்கல் = பார்ந்தல்

[காண்க: பதி: 27:1, மலை: 240, அகம்: 297:97 நற்: 82:5, கலி: 49:8]

நோக்கு + தல் > நோக்குதல் = பார்த்தல்

"நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்றா"
[தொல். சொல். வேற்: 11]

நோக்குதல் > (பார்த்தல்) > கருதுதல்

"அறன் நோக்கி யாற்றுங்கொல் வையம்" [குறள்: 189]

நோக்குதல் > (பார்த்தல்) > கவனித்தல்

"நச்சாமை நோக்காமை நன்று" [ஏலாதி: 12]

நோக்கு = கண்

"யா" — என்னும் கருமைக்கருத்து மூலவேரினின்று (யா > ஞா >

(ஞா+கு) > ஞாகு > ஞோகு > ஞோக்கு >) "நோக்கு" என்றவாறு உருவாக்கப்பெற்ற "காண்" என்னும் பொருட்பாடுடைய சொல்— அக் காணுதல் தொழிலை நிகழ்த்தும் உறுப்பாகிய கண்ணுக்கும் வழங்கத் தலைப்பட்டது.

"மலர்ந்த நோக்கின்.........சேயிழை" (பதிற்றுப்: 65:7...10)
[மே.கா: அகம்: 116:8, 319:6, ஐங்: 375:2]

நோக்கு = பார்வை

பார்வையைக் குறித்துத் தமிழில் உருவாக்கப்பெற்ற சொற்றொகை நனிமிகச் சிறந்த அழகுடையது! கண்ணின் வினைகளை மிக ஆழமாக உற்று நோக்கி அவற்றின் நுண்வேறுபாடுகளறிந்த தமிழரின் போக்குகளைப் பண்டைய புலவர்பெருமக்கள் பலபடியாகத் தம் இலக்கிய வாக்கங்களிடையில் எழிலுற இயைத்துள்ளனர்! இத்துணை — இத்துணை நோக்குகளா நோக்குதல் வினைகளில் வேறுபாடுற அமைந்துள்ளன என்றவாறு நமக்கு வியப்பே மேலிடுகின்றது!

பொதுநோக்கு (புறம்: 121:6), செறனோக்கு (புறம்: 15:9), வெருணோக்கு (புறம்: 324:1), மையனோக்கு (புறம்: 345:11), மடநோக்கு (புறம்: 354:10), மானோக்கு (புறம்: 361:14), மடமானோக்கு (சிறு: 31), பிணைநோக்கு (மதுரை: 555), பிணையெழில் மானோக்கு (கலி: 27:3), மாவென்ற மடநோக்கு (கலி: 57:2), சூர்த்த நோக்கு (முருகு: 48), நுதிவேனோக்கு (சிறு: 158), அமர்த்த நோக்கு (அகம்: 27:17), மகிழ்நோக்கு (அகம்: 29:8), மகிழ்மடநோக்கு (அகம்: 297: 19), நிரம்பா நோக்கு (அகம்: 67:6), மதைஇயநோக்கு (அகம்: 130 14), செயிர்நோக்கு (அகம்: 371 2), புலிநோக்கு (குறுந்: 328:7), புலம்புகொள் நோக்கு (நற்: 113:12), இனை நோக்கு (கலி: 7:12), நோய்நோக்கு (கலி: 140:19), எறுழ்நோக்கு (கலி: 15:5), சிறுநோக்கு (நாலடி: 298), மென்னோக்கு (கலி: 86.23) — என்பன, அவற்றுள் சில!......

நோக்கு+அம்>நோக்கம் = பெரும்பார்வை, பார்வை

உருத்தநோக்கம் [பதிற்றுப்: 52:25], கடுநோக்கம் (மதுரை:162) தெளியா நோக்கம் [அகம்: 33:10], அருகா நோக்கம் [பொருந: 77], இருத்தநோக்கம் குறித்தநோக்கம் [அகம் : 110 : 21],

அமராநோக்கம் [அகம்: 378:12], குறியாநோக்கம் [நற்: 44:3], இன்னாநோக்கம் [நற்: 400:6], சிவந்த நோக்கம் [பரி: 21:21 — என் பன, அம்மீறு பெற்று வழங்கிய நோக்கு என்னும் சொல்லின் வினைவேறு பாட்டு வகைகளிற் சில!......

நோக்குதல் வினை, காட்சியறிவை வழங்குவதால் "கண்டறிதல்" என்னும் பொருட்பாட்டிற்கும் வளர்ந்தது.

ஒருவனுக்கு ஓர் அறிவுச் செய்தியை நாம் விளக்கிய பின்னர்— அவனிடம், "நான் கூறியது என்ன என்று நன்றாகத் தெரிகிறதா? என்று கேட்போமேயானால், — அவன், அதற்குத் தெரிகின்றது என்றோ, தெரியவில்லை என்றோ நமக்கு விடையிறுப்பதனுள்ளும், — காட்சிப் பொருளானது—அறிந்து கொள்ளுகைப் பொருளுக்கு வளர்ந்து நின்றுள்ள நம்மின் மொழியியன்மை வளர்ச்சி வரலாற்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாகும்!

"காட்சி" என்னும் சொல்லே — "அறிவு" என்னும் பொருட்பாட்டில் தமிழில் வளர்ந்து செழித்து நின்றமையும்—இவ்விடத்திற் கருதுதற்கு உரியது!

காண்க: காட்சி = காணுதல்

(காண்க: புறம்: 236:10-12, சிறு: 136-139, நற்: 397:1-3, கலி: 65 25-29)

காட்சி = (காணுதல்) > அறிவு

(காண்க: புறம்: 170:2-4, 213:4-6, 213:15, 214:1-3, முருகு: 137, 166, பெரும்: 445, குறிஞ்சி: 15-18, மலை: 49,50, அகம்: 73:8-10, 75 1-3, 215:7-10, 245:1,2, ஐங் 470, கலி: 94:42,43, 120:1-3, பரி: 1:45,46)

"காட்சி" — என்னும் சொல், "அறிவு" என்ற பொருளுக்கு ஆகி நன்கு வளர்ச்சியெய்திய பின்றை— அறிவுப் பொருண்மை சான்ற நூலுக்கும் வளர்ந்த உண்மையும் இவ்விடத்திற் குறிப்பிடத் தக்கதாகும்!

(காண்க: புறம்: 192 8-11)

நோக்குதல்—(கண்ணால் நோக்குதல்)என்னும் கருத்துநிலைக்குப் பின்னர்— "மனத்தால் நோக்குதல்" என்றவாறான அடுத்த படிநிலைக்கு

வளரத் தொடங்கியமைக்கு, — (நோக்கு+அல்+நோக்கம்>) நோக்கல் நோக்கம் (நோக்கனோக்கம்) என்னும் கூட்டுச் சொல்லையே சான்றாக நோக்கி உண்மை அறியலாம்!

"நோக்கல் நோக்கம்" [தொல். சொல். வேற்: 10:1]

[நச்.உரை: கண்ணால் நோக்கும் நோக்கமன்றி — மனத்தால் நோக்கும் நோக்கம்—அதாவது, "கருதுதல்"......]

நோக்குதல் =காணுதல்>மனத்தாற் காணுதல்>கருதுதல் >அறிதல

நோக்கு= அறிவு

"நுழைந்த நோக்கின் கண்ணுள் வினைஞரும்" [மதுரை: 517-518]

[உரை: கூரிய அறிவினையுடைய ஓவிய வினைஞர்களும்...]

நோக்கு+அம்>நோக்கம்= அறிவு

[1] "மருளிகொள் மடநோக்கம்" [கலி: 14:11]

[2] "முழுது கொடுப்பினும் அமரா நோக்கமொடு" [மலை: 75]

[நச். உரை : முற்றுங் கொடுப்பினும் அமைதி பிறவாத அறிவுடனே......]

யா>ஞா>ஞா+டு>ஞாடு+அம்> (ஞாடம்)> ஞாட்டம் >நாட்டம்

ஞாடு>ஞோடு>நோடு>நோடு+அம்>(நோடம்)>நோட்டம்

ஞா>ஞா+கு>ஞாகு>ஞோகு>ஞோக்கு>நோக்கு

"கண்" என்னும் அடிப்படைப் பொருளையும்—அதன்வழியே கண்ணாற் காணுகை, மனத்தாற் காணுகை, அறிகை, ஆராய்கை என்றவாறு பொருள் விரிவாக்கங்களையும் பெற்று வளர்ந்த "நாட்டம்" என்னும் சொல்லுக்கும்,—

கண்ணால் பார், உற்றுநோக்கு, ஆராய் என்றவாறான பொருள்

களில் வளர்ந்துசென்ற "நோடு" என்னும் வினைச்சொல்லின் வழி எழுந்த தொழிற்பெயரான "நோட்டம்" என்னும் சொல்லுக்கும்,—

கண்ணால்பார், மனத்தால்காண், கருது, அறி என்றவாறான பொருள்களில் வளர்ந்து சென்ற "நோக்கு" என்னும் வினைச்சொல் வடிவினின்று எழுந்த தொழிற்பெயர்களான நோக்கு, நோக்கம் ஆகிய இரு சொற்களுக்கும்,—

கருமைக்கருத்து மூலவேராகிய "யா" என்னும் ஒலியே கருவாகும். அக் கரு மூலவேர்—அடுத்த படி நிலைகளில் மூக்கொலியாகச் சிறந்து (Nasal Sound) திரிபுற்று — "ஞா" என்னும் கிளைவேரையும், "ஞோ" என்னும் கிளைவேரினின்று கிளைத்த பக்கக் கிளைவேரையும் பெற்றது!

'' காண் '' என்பதுவே, இவ்விருவகை வேர்களுக்குமான கருப் பொருள் ஆகும்.

இவ்விருவகை வேர்களும், — இன்றைக்குப் பரவலாகப் பயிலப் பெறும் இந்திய- ஐரோப்பிய மொழிகள் பலவற்றினுள் அறிகைக் கருத்துக்கும் அதன்வழி விளர்ந்த பொருள் விரிவாக்கங்கள் பலவற்றிற்கும் அடிப்படைகளாக நின்றிலங்குகின்றன!

இந்திய-ஐரோப்பிய மொழிகள் பலவற்றில் இக்கருத்துப் பொருண்மையில் வளர்ந்து செழித்துள்ள மிகப் பலவாகிய சொற்களுக்கும் மூலமாகத் தமிழ்மொழியின் இஞ் ''ஞா'' என்னும் கருவொலி இருப்பதை அவ்வம் மொழிகளை ஆயும் வேரியலாளர் [Etymologists] அறியாமையினால் — இந்திய — ஐரோப்பிய மொழிகளின்பொதுமூலமாக ''gn'' என்கின்ற ஒலியீட்டைக் குறிக்கத் தொடங்கியுள்ளனர்!

இத் தமிழ்க் கருவொலியின் பரவலான பயன்படுத்தங்களில் சில.—

ஞோ (Greek) gno = Know

(Greek) gno > (ON) = Kna > (OHG) Cnā(h)en >
(OE) Cnāwan > (Eng.) Know.

Know = 1. recognize, identify. 2. be acquainted with thing, place, person by sight. 3. have in the mind

Know+ing>Knowing

Know+ (OE) laecan (lāc) (lāc= suffix denoting action)

Know+laecan > Knawlechen > (M.E) Knaulege>
(Eng.) Knowledge= Knowing, familiarity, gained by experience

ac+Knowledge>acknowledge
[ac = erroneously for a]

acknowledge+ment>acknowledgement

ஞா > (Greek) gnō

gnō>gnōsis= Knowledge

gnōsis> (Eng.) gnōsis = Knowledge

gnōstikos> (Latin) gnōstic= insight, the power of perceiving

(Latin) gnōstic>(Eng.) gnōstic= relating to knowledge, cognitive

(Greek) gnō > gnōme= opinion

gnōme> (Eng.) gnōme= maxim, aphorism

(GK) gnō > gnōmon= indicator
> (Eng.) gnōmon

(Greek) a- gnostos= Unknown
[a=not. gnō= Know]
> (Eng.) agnostic= one who holds that nothing is known

(Greek) dia= through

dia- gnōsis > (Eng.) diagnosis= identification of disease by means of patient's symptoms, etc.

ஞோ > (GK) gnō > gnōscere = to apprehend

(Latin) Co- gnoscere = ascertain

> (Eng.) Cognition, Cognizable, Cognizance,
Cognizant, Cognize

(Italian) Cognoscent = one who knows

> (Eng.) Cognoscent, Cognoscente = Connoisseur

(Eng.) Cognovit = defendant's acknowledgement

(Eng.) re+
recognition, recognizance, recognizant, recognize

ஞோ > (GK) gnō > gnoscere > (Latin) gnoscere

(Latin) Co + gnoscere > Cognoscere = ascertain

Cognoscere > [past participle] Cognitus
Cognitus > (OF) Cointe > (M.E) quaint >

(Eng,) quaint
quaintness = [earlier senses] wise, cunning

(OF) acointance > (Eng.) acquaintance =
knowledge more than mere reeognition and usually less than intimacy.

ஞோ > (GK) gnō > gnōmon = judge

(GK) phusis = nature

(GK) phusis + gnōmon > phūsiognomonia =
judging of man's nature by his feature

> (MED.L) phisonomia > (OF) phisonomie

> (Eng.) physiognomy = art of judging character from features of face or form of body.

ஞோ > (GK) in + gnō > [Latin] ignorare >

[Eng.] ignore = refuse to take notice of or accept, intentionally disregard

[Eng.] ignorant = lacking knowledge
(L) ignorantia > [Eng.] ignorance = lack of knowledge

ஞோ > (GK) gnō > gnōscere = cognize

> (L) re-cognoscere > [F] reconnoitre
> (Eng.) reconnoitre = make reconnaissance of [enemy, district]
(F) reconnoissance > (Eng.) reconnaissance
(Eng.) Connoisseur = expert judge

ஞோ > (GK) gnō > gnōscere > [L] noscere = to know
noscere [past participle] notus = known
(L) nota = mark. (L) notare = to observe
(L) Nota Bene [N.B] = note well
> [Eng.] : annotate, connote, denote, notability, notable, notary, notate, notation, note, notice, notifiable, notify, notion, notorious.

ஞோ > (GK) gnö > noëo = apprehend
noētos = intellectual
noetikos > (Eng.) Noetic = of the intellect
(GK) gnō > [Latin] gno- bilis > (OF) noble
(M.E) noble > (Eng.) noble.

யா > ஞா

ஞா + அனம் > ஞானம் = காட்சியறிவு, அறிவு
[''அனம்''—ஓர் ஈறு.] [ஒ.நோ: மா + அனம் > மானம்
தா + அனம் > தானம்]

ஞானம் = அறிவு

[காண்க: நாலடி: 308.2, 311:3,4, பழ: 298:2,3, சிறு
பஞ்: 34:4, சிலம்பு: 10:194, மணி: 23:138,
30:262]

ஞானம் = கல்வி [சூடா. நி]

ஞானம் = மெய்யறிவு

''ஞானந் தன்னை நல்கிய நன்மையும்'' [திருவாசக:2:74]

ஞானம் = மெய்யறிவு நூல் [சூடா. நி.]

சில கூட்டுச் சொற்கள் :

ஞானக்கண் [= அறிவாகிய பார்வை. [அஷ்டப். திருவேங்: 76]
ஞானக்காட்சி, ஞானக்கூத்தன், ஞானக்கை,
ஞானச்சுடர் [= அறிவாகிய ஒளி [திவ். இயற்: 2,1] [கடவுள்]
ஞானத்தாளன் [ஞானம் + அத்து + ஆளன்] அறிவன்
[பெருங். வத்தவ: 15:42]
ஞானத்திறைவி [ஞானம் + அத்து + இறைவி] = திருமகள் [பிங்.]
ஞானநாயகன் [1. மெய்யறிவிற் சிறந்தவன் [கப்பரா. இரணிய:23]
2. கடவுள்
ஞானநிலை, ஞானநூல், ஞானப்பிள்ளை
ஞானப்புதல்வன் [திருவாலவா: 27:54]
ஞானப் பூங்கோதை [தேவா. 1099.9]
ஞானப்பெண், ஞானவழி, ஞானவாரி, ஞானவீரன், ஞானவேள்வி,
ஞானன் [= அறிவில் முதிர்ந்தோன்.]

தமிழின் வடபாற்கொடுந்திரிபு மொழியாயிருந்த பிராகிருதத்தில் தமிழின் மூலவடிவான ''ஞானம்'' என்னும் சொல், ''ஞான'' என்ற வாறான பேச்சு வழக்கு வடிவில் '' அறிவு '' என்னும் அதே பொருட் பாட்டில் வழங்கி வந்தது. வடபாற்பகுதியில் வந்து வதியத் தொடங்கிய மறையாரியர் — கிரேக்க வகைப்பட்ட நிலையினின்று சற்றே திரிந்த [gnō >] jñā என்னும் திரிபு மூலவழியாக—அஜ்ஞா [a-jñā = அறிவில் லாதவன்] பிரஜ்ஞா [pra-jñā = முன் நிகழ்ந்ததை அறியும் அறிவு, அறிவு, உணர்ச்சி], அஜ்ஞாத [a-jñāta = அறியப்படாதது], அஜ்ஞாத வாச [a-jñāta-vāsa = பிறரறியாதவாறு மறைமுகமாக வாழ்கை] என்ற

வாறான பல்வேறு இனச் சொற்களைத் தம் மொழிக்கண் பெற்றிருந்தன ராதலால் — "ஜ்ஞா" என்னும் தங்களின் ஒலிப்பமைதிக்கும் பொருட் பாட்டிற்கும் ஓரளவுக்கு ஒத்திருந்த ''ஞான'' என்னும் பிராகிருதச் சொல்லை, ''ஜ்ஞான'' [jñāna] என்றவாறான அமைப்பில் தம் மொழிக் கண் செலுத்திக் கொண்டனர். இவ்வேற்புக்கு அடிப்படை அறிதற் பொருட்பாடு இரண்டிற்கும் ஒத்திருந்தமையேயாகும்.

''ஞானம்'' என்னும் தமிழ்ச்சொல்லின் ஈற்றுநலிபு வழக்கான ''ஞான" என்னும் பிராகிருதச் சொல்லை jñāna என்ற வடிவில் தம் மொழிக்கண் ஏற்றுக் கொண்ட பின்னர் [a-jñāna] அஜ்ஞான (=அறி யாமை), [vi-jñāna] விஜ்ஞான [=உண்மையறிவு] என்றவாறான சொற்களையும் ஆரியர் படைத்துக் கொண்டனர்!

(தமிழ்) ஞானம் > (Prakrit) ñāna > (skt) jñāna = Wisdom
[(GK) gnō > (skt) jñā]

''ஞா'' என்னும் ஒலிப்பு, தமிழிற்போல சிறப்புறவும் தனிப்பெறவு மான தெளிந்த அமைப்பு வடிவில் — சமற்கிருதத்திலோ அல்லது அம் மொழிக்கு மூலவகைப்பட்ட கிரேக்கத்திலோ இல்லவேயில்லை என்னும் உண்மையும் —, ''ஞா'' என்னும் செப்பத் தமிழ் ஒலிப்பே — gnō, gnā, gn என்றவாறான பல்வேறு மூலவொலித் திரிபுப் பதிவுகளாக — மேலை ஆரிய இன மொழிகள் பலவற்றிலும் இந்திய—ஐரோப்பிய மொழிகள் பலவற்றிலும் படிந்துள்ளன என்னும் உண்மையும் நன்கு உளங்கொள்ள வேண்டிய செய்திகளாகும்.

ஞா + அகம் > ஞாவகம் = அகக்காட்சி, நினைவு

இத் தெளிவுச்சொல், தமிழ்மக்களின் பேச்சு வழக்கில் அப்படியே சற்றும் நிலை குலைவுறாது இன்றும் நீளத் தொடர்ந்து பரவலாகப் பயி லப் பெற்று வருவதைச் — சிற்றூர்ப் புறங்களுக்குச் சென்றால் செவிகுளிரக் கேட்டுவக்கலாம்!

''ஞாவகம்'' என்பதன் திரிபே, ''ஞாபகம்'' என்பது ஆகும்.

(வகர—பகரத் திரிபு : ஒ.நோ : 1. கலவு > கலவு + அம் > கலவம் > கலாவம் > கலாபம். 2. சாய்வு > சாவு > சாவு + அம் > சாவம் > சாபம் (= வில்) 3. திரிவு > திரிபு 4. அளவு > அளபு 5. உருவு > உருபு)

ஞாபகம்+கூறல் > ஞாபகங் கூறல்= குறித்த பொருளை நேரே கூறாது, பொதுப்பட்டவாறான குறிப்பீட்டிற்குள் குறிப்பிடுவதாகிய நுண்ணுத்தி.

"தந்து புணர்ந்து உரைத்தல், ஞாபகங் கூறல்"
(தொல். பொருள். மரபி. 112:22)

கூட்டுச் சொற்களில் சில :

ஞாபகப் படுத்துதல்= நினைவூட்டுதல்.

ஞாபகக் கருவி= அறிதற்கு உதவும் கருவி.
[தொல்.சொல். 74. உரை]

ஞாபகக் குறி= ஞாபகக் குறிப்பு. ஞாபகக்குறை=ஞாபகமின்மை

ஞாபகப் பிசகு= ஞாபக மறதி. ஞாபகமறதி=நினைவின்மை

ஞாபகம் பண்ணுதல்= ஞாபகப் படுத்துதல், மனப்பாடஞ் செய்தல்

ஞாபக முடிச்சு= நினைவு வருவதற்கிடும் முடிப்பு

ஞாபகம்> (Sanskrit) jñāpaka

[யா : பொருந்துதற்கருத்து]

யா : பொருந்துதற்கருத்துக் கிளைவேர்

["இய்" — என்பது பொருந்துதற்கருத்து மூலவேர்களில் ஒன்று. இய் > இயை = பொருந்து, சேர்.

இயை + தல் > இயைதல் = 1. பொருந்துதல், சேர்தல், அணுகுதல், நேர்தல்
2. இணங்குதல், உடன்படுதல், மனம் இசைதல்
3. புணர்தல், கூடுதல்
4. ஒத்தல், போலுதல்

இயை + (த்) + தல் > இயைத்தல் = பொருத்துதல், சேர்த்தல்

இயைய = ஓர் உவமையுருபு
இயை + வு > இயைவு = சேர்க்கை
இயைவு > இயைபு = பொருத்தம், புணர்ச்சி, இணக்கம்

[யகர—சகரத் திரிபு] இயை > இசை = பொருந்து

இசை + தல் > இசைதல் = பொருந்துதல், ஒத்துச் சேர்தல், கலத்தல், உடன்படுதல்
இசை + (த்) + தல் > இசைத்தல் = பொருத்துதல், கட்டுதல், ஒத்தல்
இசைவு = பொருத்தம், உடன்பாடு, ஏற்றது, தகுதி

[யகர—ழகரத் திரிபு] இயை > இழை = பொருந்து.

இழை + தல் > இழைதல் = கூடுதல், பிணைதல், உராய்தல் மனம் பொருந்துதல், நெருங்கிப் பழகுதல்.
இழை + (த்) + தல் > இழைத்தல் = பொருத்துதல், பதித்தல், செய்தல்.

இம் மேற்குறிப்பிட்டுள்ள வகைச் சொற்களையும் — இதன் வழியி

லான மிகப்பலவாகிய இனச் சொற்களையும் தமிழில் வளர்வுறச் செய்தற்கு, அடிப்படை மூலக்கருவாக இருந்த "இய்" என்னும் மூலவேரே— இய் > இய > இயா > "யா" என்றவாறு வளர்ந்து எளிய நெட்டொலியாக நின்று, அப் பொருந்துதற் கருத்தையே அடிப்படையாகக் கொண்ட கிளைவேராக விளர்ந்து, நூற்றுக்கும் மேற்பட்ட சொல்வடிவங்களைத் தோற்றுவிக்கக் காரணக் கருவாயிற்று!]

யா : பொருந்துதற்கருத்துக் கிளைவேர் :

யா + (த்) + தல் > யாத்தல்

1. **யாத்தல்** = ஒன்றோடொன்று பொருந்துதல், கட்டுதல்
   "காஞ்சியி கைத்துக் கருப்பருத்தி யாக்குந்
   தீம்புனல் ஊர" [அகம்: 156:6-7]
2. **யாத்தல்** = பிணித்தல்
   "யானையால் யானை யாத் தற்று" [குறள்: 678]
3. **யாத்தல்** = கட்டிக்கொள்ளுதல், அணிதல்
   "அரைக்கு அமை மரபின மிடற்றுயாக் குநரும்
   மிடற்றமை மரபின அரைக்குயாக் குநரும்"
   (புறம்: 378:16-77)
4. **யாத்தல்** = தொடர்பு கொள்ளுதல்
   "குன்றா இனனும் அறிந்தியாக்க நட்பு" (குறள்: 793)
5. **யாத்தல்** = விட்டு நீங்காதிருத்தல்
   "யாக்குமவர் யாக்கும், அணைந்து" (ஏலாதி: 8:4)
6. **யாத்தல்** = செய்யுள் முதலியன கட்டுதல்
   "மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல்"
   (தொல். பொருள்: 652)

யாத்தார் = கட்டுற்றவர், உற்ற நண்பர்
"தன்நெஞ்சத்து யாத்தாரோ டியாத்த தொடர்பு"
(நாலடி: 214:3-4)

யா > ஆ

யாத்தல் > ஆத்தல் = கட்டுதல், பிணித்தல்

1. "ஆத்த அறிவினவர் ஆண்டிளையராயினும்" (நாலடி: 351)

2. "ஆத்த மனையாள் அகத்தில் இருக்க" [திருமந்: 201]
[மே.கா: பெருங்:2,11,76, சீவக: 1882, பாரிகாதை:115]

யா > ஞா

யாத்தல் > ஞாத்தல் = 1. கட்டுதல் [யாழ். அக.]
2. பொருந்துதல்

"மண் ஞாத்த கோட்ட மழகளிறு
தோன்றுமே" [தொல்-எழுத்: 146. உரை]

யா > யா + கு > யாகு > யாக்கு > யாக்கு + ஐ > யாக்கை

யாக்கை = நரம்பு- நார்- எலும்பு- தசை- குருதி- முதலியவற்றால் கட்டுறப் பெற்றதாகிய உடம்பு, உடல்

1. "மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு" [குறள்: 942]
2. "நீர் இன்று அமையா யாக்கைக்கு" [புறம்: 18:18]

[மே.கா: புறம்: 24:27, 69:5, 93:5, 160:4, 167:3, 175:4, 214:13, பதிற்றுப்: 13:11, 19.14, 22:10]

யாக்கையன் = உடலினன், உடம்பினன் [காண்க:புறம்: 180:5,6]

[யாக்கை = உடம்பு, உடல்.

ஒ.நோ: யா + (ப்) + பு > யாப்பு > ஆப்பு = உடல்
காண்க: திவ்யப்ர. அமலனாதி-இயற்பா: 4:93]

யா > ஆ

யாக்கை > (1) ஆக்கை = உடம்பு, உடல்

1. "ஆக்கை பிரிந்தது அலகு பழுத்தது" [திருமந்: 147]
2. "பிறவித்தலை நின்று நினைப்பவர் ஆக்கையை நீக்குமிடம்"
[தேவா: 7,10,6]

[மே.கா: காரைக். அந் 37, பெருங்: 3,20,170-171, பெரியதி: 1,9,6, திருவாசக: 3,118, சீவக: 1362, திருவருட்பா: 4615:14]

ஆக்கையிலான் = காமன் [மதுரை அக.]
ஆக்கைவிடுதல் = சாதல் காண்க: [திருவாய்: 1,2,9]

3. ஆக்கை = நார் "கதிர் நரம்பாக்கை யார்த்து"
[தேவா: 4, 67,3]

3. ஆக்கை= கயிறு [மதுரை. அக.]

4. ஆக்கை= கட்டுகை, உண்டாக்குகை [மதுரை. அக.]

5. ஆக்கை=விளாறு [காண்க: வட்.சொ.வி.ப:40] (ராட்.வட்.அக)

யா+(ப்)+பு=யாப்பு= 1. கட்டுகை

"கழல் யாப்புக் காரிகை நீர்த்தது"
[குறள்: 777]

2. கட்டு "யாப்புடை யாழ்" [சீவக: 2011]

2-(அ). பிணிப்பு [நற்: 21:2]

3. கட்டுவடம் [கலி: 54:3]

4. வல்லிகை என்னும் குதிரைக்குரிய கழுத்தணி [கலி: 96:10]

5. கட்டப்பெற்ற பாட்டு, செய்யுள் [பிங்.]

6. யாழ்ப் பத்தரில்-குறுக்கே வலிவுறச் செய்யும் கட்டு

"புதுவது புனைந்த வெண்கை யாப்பமைத்து"
(மலை: 28)

7. கவசம் [நற்: 265·4]

8. மெய்ப்பை [பரி.திரட்டு: 2،19]

9. அன்பு, அன்புத் தொடர்பு

"நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர்" [குறள்: 1093]

10. உறுதி ''யாப்புறு மாதவத்து''
[மணி:பதி: 57]

11. பொருத்தம் ''அதற்கு யாப்புடைமையின்''
[தொல்.சொல்: 77]

[யாப்பு= கட்டு, கட்டுத்துணி.

(ஒ.நோ: மார்+யாப்பு>மாராப்பு= 1. மார்பகத்தின் மேலிட்டுக் கட்டும் சீலைப்பகுதி

2. முதுகை வளையவந்து மார்பருகில் இணைத்து-மூட்டை கட்டுங் கச்சை (சீதக்: 36)]

[யாப்பு+அம்>யாப்பம்= புணர்ச்சி [சங்கத்தகராதி]
யாப்பம்> (Sanskrit) yābha=sexual intercourse]

யாப்பு+அறு+ஐ>யாப்பறை= யாப்பு அறுபட்டவள், கற்பில்லாதவள்

''யாப்பறை யென்றே யெண்ணின னாகி'' (மணி: 22:42)

யாப்பு+உறவு>யாப்புறவு= தகுதி

''கோப்பெருந் தேவிக் கல்லதை
யிச் சிலம்பு யாப்புறவில்லை! (சிலம்பு:பதி: 24)

யா > ஆ

யாப்பு > (1) ஆப்பு = கட்டு

(1) ''ஆக்கும் ஐவர்தம் ஆப்பை அவிழ்த்தருள்'' [தேவா: 5,47,7]

(2) ''ஆப்புடை ஒழுக்கம் அறியக் கூறி'' [பெருங்: 3,4,82]

[மே.கா: பெரியாழ் திரு: 2,1,5, வைண.ஆசா. 2,6,78]

ஆப்பு= உடல் (காண்க: இயற். முதல் திருவந்: 75)

ஆப்பு+உண்ணுதல்> ஆப்புண்ணுதல்= கட்டப்பெறுதல்

1. ''வாசியின் வட்டணைமேல் ஆப்புண்டவன்'' (கம்பரா: 6,19,97)

2. ''வெண்ணெய் உண்டு ஆப்புண்ட வண்ணம்'' [இரண்டாம் திருமொழி: 5:3]

ஆப்பு+இடுதல்>ஆப்பிடுதல்= கட்டுதல்

''ஆப்பிடு பாசத்தை அங்கியுள் வைத்திட்டு'' (திருமந்: 2881)

2. ஆப்பு= அறுப்புறும் மரத்துக்கிடையில் செறிப்புறும் முளை, அறுக்கும் பொழுதோ-வெட்டும் பொழுதோ மரத்தின் பிளப்பு வாயில் செறியப் பொருத்தப்பெறும் மரத்துண்டு

(2-1) ''ஆப்பின் உள்ளார்'' (தேவா: 1,8,2)

(2-2) ''ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்கதனைப் போல'' (பட்டினத்தார்·42)

3. ஆப்பு= அச்சாணி, கடையாணி

(3-1) ''ஆப்பதில்லாத தேர்'' [அறப்பளி. சத: 57]

(3-2) ''ஆப்பிலாச் சகடு போல்'' [விவேகசிந்: 36]

[Malayalam : āppu = wedge, plug
Kannada : āpu = a peg]

யா : பொருந்துதற்கருத்துக் கிளைவேர்

யா + வு > யாவு > ஆவு

ஆவு + அம் > ஆவம் = பற்று, விருப்பம்
''எனக்கு ஆவம் கிடந்து அடித்துக்கொள்கின்றது''
(தென்னார்க். வழ.)

ஆவு + அம் > ஆவம் = கட்டுக்கயிறு, வில்நாண்
(1) ''பூரி ஆவம்............நாணின் பெயர்'' [பிங்: 1537]
(2) ''ஆவம் பரித்திடம் பார்த்துநின்ற''
[நைட: 11:101]

ஆவு + இ > ஆவி = நட்பு (ரா. வட். அக.)

ஆவு + இகை > (1) ஆவிகை = பற்றுக்கோடு
[இகை = ஓர் ஈறு]
''ஆகாயம் போவோர்க்கும் ஆவிகையோ''
[ஒழிவி. கிரியை: 5]

2. ஆவிகை = துணை, உதவி [மதுரை. அக.]

ஆவு > + இ > ஆவி > ஆவி + (த்) + தல் > ஆவித்தல் =
ஆசைப்படுதல் [மதுரை. அக.]

ஆவு + அல் > ஆவல் = ஆசை, விருப்பம்

''ஆவல்பேர் அன்பினால் அறைகின்றேன்''
[கம்பரா: 3,5,127]
[மே.கா: தாயுமா. பா : 19:2]

ஆவல்+அன்>ஆவலன் = 1. விருப்பமுடையவன்
(முக்.பள்.கடவுள் : 3)
2. நண்பன் [கயற்.மாலை:20]
3. கணவன், காதலன்
''காதலர் வேட்டோர் ஆவலராகும்'' [பிங்:3150]

ஆவல்+இ>ஆவலி> ஆவலி+(த்)+தல்> ஆவலித்தல் = ஆசைப்படுதல் [சங்: அக.]

ஆவலி+(ப்)+பு>ஆவலிப்பு = ஆசை, பேராசை (சங்.அக.)

யாவு+அணம்>யாவணம்>ஆவணம் :

ஆவணம் = 1. கட்டு, கட்டுப்பாடு, கட்டுப்படுத்தம், அடிமைப்படுத்தம்
''திண்டோள் இருபதும் நெரிதர ஊன்றி
ஆவணம் கொண்ட.........அண்ணல்'
(தேவா: 1,320:8)

2. கட்டுப்பாட்டுக்குள்ளிருக்கும் உரிமை
"ஆவணமாவருளிய.........தண்ணளியே"
[திருவலங். திர: 2,47]

3. உரிமையோலை
"அன்றே சிவனுக்கு எழுதிய ஆவணம்"
[திருமந்: 1876]
(மே.கா: தேவா: 7,17,5. நம்பி. திருத்தொண். 8 பெரியபு: 7,49 திருப்பு: 211)

ஆவணம்+ஓலை>ஆவணவோலை
= உரிமையாவணம்
"அண்ணல் ஓர் விருத்தன்போல் வந்து
ஆவணவோலை காட்டி" (கந்தபு: 1,23,12)

யா>யா+வு>யாவு>ஆவு

ஆவிச்சேர்த்தல் = கட்டியணைத்தல், தழுவுதல்
"ஆவிச்சேர்த்து முத்தமிட்டான்" (வட். வழ.)

யா : ஒன்றுகைக்கருத்துக் கிளைவேர்

யா > யா + சு > யாசு > ஆசு

ஆசு = ஒன்றல், பற்று, பற்றுக்கோடு

1. "ஆசு ஆகு எந்தை யாண்டுளன் கொல்லோ" [புறம்: 235:16]

(உரை : பலர்க்கும் பற்றுக் கோடாகும் தகுதியையுடைய என் தந்தை போல்வான் இற்றைநாள் எந்நாட்டின்கண் இருக்கின்றனனோ அறிகின்றிலேன்......)

2. "ஆசு ஆகு என்னும் பூசல்போல" (புறம்: 266:9)
ஆசு = பற்றுக்கோடு. (மே.கா: குறுந்: 176:5, 325:4)
புறம்: 307:1)

ஆசு = முட்டு
"தோள் ஆசு அற வாளி துரந்தனனால்"
(கம்பரா: 6,19,82)

ஆசு = (பற்றுக்கோடு>) கைப்பிடி > (வாளின்-) கைப்பிடி
"குற்றுடை வாள் ஆசுங் கண்டமும்" (தெ.இ.க.உ, 185)

ஆசு = கவசம்

1. "வாளால் கால் ஆசோடற எறிந்த" (சீவக: 2236)
2. "ஆசு............கவசப் பெயரே" (பிங்: 1607)
3. "ஆசு............கவசம்" (அக.நி. ஆமுதல்: 103)

ஆசு = கைக்கவசம் [செ.ப.க.த.பே.]

ஆசு = பற்றாசு, இணைக்கும் பொருள் [யாப்.காரிகை. 24. உரை]

ஆசு = 1. நேரிசை வெண்பாவின் முதற்குறளின் இறுதிச் சீர்க்கும் —தனிச் சொற்கும் இடையில் கூட்டப்பெறும் அசை
(யாப்.காரிகை: 24. உரை)

2. எதுகையிடையில் வரும் ய, ர, ல, ழ என்னும் ஒற்றுகள்
(யாப்.காரிகை. 56. உரை)

ஆசு + இடுதல் > ஆசிடுதல் = பற்றாக வைத்தல், ஆசு இடையிட்டுக் கொள்ளுதல்

ஆசு + இடை > ஆசிடை = ஆசாக இடையிட்டுக் கொண்ட சொல்.
(மதுரை: அக.)

ஆசு = கட்டு

ஆசு + அழிதல் > ஆசழிதல் = கட்டுக் குலைதல், நிலை குலைதல்

"ஆகையால், உயிர் ஆசழிவானையும்" (கம்பரா: 5:3:99)

ஆசு + அறுதல் > ஆசறுதல் = முடிதல்

"ஊழி சென்று ஆசறுங் காலத்து அந்நிலையதாகி"
(கம்பரா: 3,2,30)

ஆசு + அறுதி > ஆசறுதி = கடைசி, முடிவு (தெ.இ.க: 1:87)
ஆசறுதிப்பல் = கடைவாய்ப்பல் (செ.ப.க.த.பே)

யாசு > ஆசு > ஆசு + ஐ > ஆசை

ஆசை: 1. வேண்டலுறும் பொருட்கண் செல்லும் விருப்பம், விழைவு

"காட்சி ஆசையின் களம்புக்குக் கலங்கி"
(தொல். களவி: 17:4)

[உரை: அக்குறிகாணும் காட்சி விருப்பத்தினால் — தலைவி பிற்றைஞான்று விடியலிற் சென்று ஆண்டைக் குறிகண்டு கலங்கி......)

ஆசை: 2. காம விருப்பம், புணர்ச்சி விருப்பம்

"வார்கோட்டு வயத்தகர் வாராது மாறினும்
குரூஉ மயிர்ப் புருவை ஆசையின் அல்கும்"
(ஐங்: 238:1-2)

ஆசை: 3. பொருள் விருப்பு, பொருளாசை

(3-1) "ஆசை உள்ளம் அசைவின்று துரப்ப"
(அகம்: 199:15)

(3-2) "தவஞ் செய்வார் தம் கருமம் செய்வார் மற்றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு" [குறள்: 266]

(ஆசை = உலக வாழ்வு—பொருள் முதலியவற்றில்—பற்று)

ஆசை: 4. இறைப்பற்று

[காண்க: காரைக். அந்: 70, திருமழிசை: 80. பெரியதி:1,9,88 பெரியபு: 21:99]

கூட்டுச்சொற்களில் சில :

ஆசைக்கிழத்தி, ஆசைகாட்டுதல், ஆசை தீர்த்தல், ஆசைநாயகன், ஆசைநாயகி, ஆசைப்படுதல், ஆசைப்பாடு, ஆசைப்பெருக்கம், ஆசைப் பேச்சு, ஆசைமருந்து, ஆசையூட்டுதல், ஆசைவைத்தல்,

(தமிழ்) ஆசை > (சமற்கிருதம்) āsā

புடைவடிவங்கள், (skt) āsas, āsah
> Āsis = wish, prayer.

"ஆசை" என்னும் செந்தமிழ்ச்சொல், சமற்கிருதத்தில் "ā-sā" என்ற வடிவில் திரிக்கப்பெற்று பதிவு செய்யப் பெற்றுள்ளது!

"ā-sā" என்னும் சொல்லுக்கு முந்திய வடிவம் "ā-sas" என்றவாறு இருந்ததாகவும், அது "ā-śans" என்ற சொல்மூலத்தினின்று தோன்றிய தாகவும் இட்டுக்கட்டியுள்ளமையை — அறிஞர். மானியர் வில்லியம்சு அவர்களும் அவ்வாறே பதித்துள்ளார். [காண்க: Skt and Eng-Dictionary — பக்: 157]

"śans"—என்னும் சொல்லுக்கு, "உரத்துப்படி", "நினைவிலிருந்து சொல், ''மறுபடியும் சொல்" — என்பனவே பொருள்கள்! [காண்க: (ibid)—பக்: 1043, 1044]

''śans''—என்பதனின்று பிறந்ததாகக் கூறப்படும் (!) sās என்னும் சொல் மூலத்திற்கு—தூய்மையாக்கு, திருத்து, கண்டி, தடு, கட்டுப்படுத்து, ஆளுமைசெய் என்றவாறான கருத்துக்களே பொருள்களாகக் கூறப் பெற்றுள்ளன!

இம் மூலங்களிலிருந்து(!) எவ்வாறு விருப்பக்கருத்து திடுதிப்பென முளைத்து முன்னெழுந்துவிட முடியும்? இம் மூலங்களுக்கு முன்னீடாக "ā" சேர்ந்தவுடனே—மாய மந்திரத்தில் மாங்காய் முளைப்பதைப் போல்(!) புதுப்புதுப் பொருள்கள் ஆரிய நூல்களில் அடைசலாய்த் தோன்றி யுள்ளன!!!...

புளுகுவதில் புலத்தேர்ச்சி மிக்க ஆரியப் புளுகுணிகள் அடிப்படை யில்லாமலேயே—இவ்வாறு நூற்றுக்கணக்கில் புளுகிப் புளுகிப் புனுகிட்டு மூடியுள்ள இடங்கள் பேராளம்!...

யா : பொருந்துதற்கருத்துக் கிளைவேர்

யா > யாஅர் > யார் > ஞார் > நார்

[ஒ.நோ:

யார் > ஆர் > ஆர் + (த்) + தல் > ஆர்த்தல் = கட்டுதல்

1. ஆர்த்தல் = கட்டுதல், பிணித்தல்

(1-1) ''பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு'' (குறள்: 482)

(1-2) ''நல்வினை ஆர்க்கும் கயிறு'' (திரிகடு: 23)

2. ஆர்த்தல் = கூட்டுதல்

''அடியாரிடை ஆர்த்து வைத்து'' (திருவாச: 6,27)

3. ஆர்த்தல் = கட்டுப்படுத்துதல்

''ஆர்க்கும் நெஞ்சத்தவர்'' [சிவதரு: 6,63)

4. ஆர்த்தல் = மணமுடித்தல்

(4-1) ''ஆர்த்த மனைவி அடங்காமை'' (இன்.நாற்: 2]

(4-2) ''ஆர்த்த கணவன் அகன்றனன்'' (சிலம்பு: 9,37)

5. ஆர்த்தல் = கட்டியணைத்தல்

''மலைமன்னன் அருள்காரிகை ஆர்க்கும்
எழுவுறழ் தோட்கள்'' (பழமலை.அந் 31)

6. ஆர்த்தல் = தொடுத்தல்

''தார் ஆர்த்த கொன்றை'' (சிவஞா.காஞ்சிப்:பாண்ட:5)]

யார் > ஞார் [யகர—ஞகரத் திரிபு]

ஞார் > நார் [ஞகர—நகரத் திரிபு]

நார் : நூற்கயிறு திரித்து உருவாக்கத் தெரிவதற்கு முற்பாடாக மட்டை முதலியற்றினின்று உரித்தெடுத்த நார்க்கயிறே பயன்படுத்தப் பெற்றது. கட்டுதற்குப் பயன்படுபொருளாய் நின்றமையின் ''யா'

என்னும் கட்டுதற் கருத்தடிப்படைப் பொருட்பாட்டில் [யா > யாஅர் > யார் > ஞார் >] நார் என்னும் பெயர்வழி—மட்டை முதலியவற்றினின் றெடுத்த நார்க்கயிறு சுட்டுப்பாடுற்றது! பின்னர்க் — கயிறு என்னும் பொதுப்பொருளுக்கும், வில்லின் நாண் என்னும் பொருளுக்கும் — (கயிற்றுப் பின்னலன்ன ஒழுங்கமைவு உடைய—) பன்னாடை நார் என்னும் பொருளுக்கும் படிப்படியே பொருள் விரிவாக்கங்கள் நேர்ந்தன!

நார் = 1. மட்டை முதலியவற்றின் நார், நார்க்கயிறு

(1-1) "நாரில் முருங்கை நவிரல் வான்பூ" (அகம்: 1:16)

(1-2) "திரங்கு மரல் நாரில்" (மலை: 431)
[= உலர்ந்த மரல் நாரிலே......]

(1-3) "புணர்நார்" [பெரும்: 218]
[= முடிந்த நார்]

(1-4) "பெரும் பொளி வெண்நார்" [அகம்: 83:6]
[உரை: பெரிதாக உரித்த வெள்ளிய நார்க்கயிற்றால்......]

நார் = 2. கயிறு
''நாரினாற் கட்டி'' (நாலடி: 158:3)

நார் = 3. வில்லின் நாண்
''நாருள தனுவுளாய்'' [கம்பரா. நகர்நீங்: 156]

நார் = 4. பன்னாடை நார்
''நார்அரி நறவின் எருமை யூரன்'' [அகம்: 36:17]
[மே.கா: அகம்: 216:3, 296:9, புறம்: 297:5, 400:14, பரி: 6:49]

நார் + அம் > நாரம் = கயிறு. (பிங்.)

சில கூட்டுச் சொற்கள் :

நார்க்கட்டில் = நார்க்கயிற்றால் கட்டப்பெற்ற கட்டில்
நார்க்கட்டு = பனைநார்த் தொகுதி
நார்க்கத்தி = மட்டையினின்று நாரெடுக்கும் கத்திவகை

நார்க்கதுவுதல் = கத்தியாற் பட்டை சீவி நாரெடுத்தல் [யாழ்-வழக்கு]

நார்க்கயிறு = நாராலாகிய கயிறு

நார்ச்சீலை = 1. நார்மடி 2. மரவுரி (யாழ். அக.)

நார்மடி = நாராற் செய்த ஆடை

நார்+அ+புண்>நாரப்புண் = நரம்புச் சிலந்தி

நார்+இ>நாரி = 1. வில்லின் நாண்

"நாரியின் பேரொலி" [கந்தபு.தாரக: 142]

2. பன்னாடை [பிங்.] (ஒ.நோ: நார்=பன்னாடை)

3. பன்னாடை வழி அரித்தெடுக்கப் படுவதாகிய தேன் அல்லது கள்

4. யாழ்நரம்பு (வின்சிலோ.]

நாரி : "நறவு.......... நாணி பன்னாடை நாரி" (பிங்: 3721)

நார், நாரி ஆகிய இருசொற்களும் சொற்பொருள் விரிவாக்கங்கள் பெற்று வழங்கும் இந்திய-ஆரிய மொழிகளும்-அவற்றுள் பதிவுகளும் :

Gawar-bati	: nār	=	root
Baskhari dialect	: nēr	=	root
Pahlvi	: nērī	=	root of grass
Sindhi	: nāṛu	=	stubble (அரிதாள்)
	nāro	=	naval string
	nārī	=	stubble, vein, pulse
Lahnda	: nāṛ	=	stubble
	: nār	=	stubble, vein
Panjābi	: nāṛ		
	: nāṛī	=	vein
	: nāṛu	=	naval string
Nepali	: nāri	=	pulse
Assamese	: nāri	=	vein, pulse
Bengāli	: nāṛi	=	vein, lotus string

Maithili : nār = stubble
Hindi : nāṛ, nār = pulse
nāṛī, nārī = vein
Gujarati : nāṛ = vein, string

நார் + அம்பு > நாரம்பு > நரம்பு

[''அம்பு''—ஓர் ஈறு. நாரம்பு > நரம்பு என்றாயினமை- நெடுமுதற் குறுகல்.]

நரம்பு : 1. தசைநார்

"நரம்பெழுது உலறிய நிரம்பா மென்றோள்"
(புறம்: 278:1)

2. குருதிக் குழாய் (vein-blood vessels)

3. யாழ் நரம்பு

(3-1) ''விரல் உலர் நரம்பின்'' (பொருந: 17)
(3-2) ''புரியடங்கு நரம்பின்''
(சிறு: 34, பெரும்: 15, புறம்: 308:1)
(3-3) அடங்குபுரி நரம்பின்'' [சிறு: 227]
(3-4) ''நரம்பு இனிது இயக்கி'' [மதுரைக்: 657]

[மே.கா: திருமுரு: 212, மதுரைக்: 217, பெரும் : 181 குறிஞ்சி: 147, பட்: 254, மலை: 23,535, அகம்: 4:9, 109:2, 142: 26, 279:11, 317:13, 318:6, 355.5, 374:8, புறம்: 109:15, 135:5 164:11, 302:6, 318:5]

நரம்பு > (யாழ்நரம்பு>) யாழ்

நரம்பு = யாழ், நரம்பு பூட்டிய யாழ்

''நெய் வார்ந் தன்ன துய்யடங்கு நரம்பின்
இரும்பாண் ஒக்கல் தலைவன்'' [நற்: 300:8-9]

[உரை: நெய் வடிந்தாலொத்த பிசிர் அடங்கின நரம்பு பூட்டிய யாழையுடைய பெரிய சுற்றத்தையுடைய பாணர்தலைவன்...]

[குறிப்பு: தொல்காப்பியர் காலத்தில், "யாழ்" என்னும் இசைக்

கருவிக்குத் தனியாக இலக்கணநூலே இருந்தது! யாழிலக்கணம்— "நரம்பின் மறை" என்ற சொல்லால் குறிக்கப்பெற்றது.

காண்க : ''அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்''
[தொல். எழுத்: 33]

[நச்.உரை: முற்கூறிய உயிரும்—உயிர்மெய்யும் மாத்திரையை இறந்தொலித்தலும் — ஒற்றெழுத்துகள் அரை மாத்திரையின் நீண்டொலித்தலும், யாழ் நூலிடத்தன என்று கூறுவர் புலவர். அங்ஙனம் அளபிறந்து நீண்டும் இசைத்தல் ஓசையோடு பொருந்திய நால்வகைச் செய்யுட்களுக்கும் உளவென்று கூறுவர் ஆசிரியர்'']

தமிழிய மொழிகள் பலவற்றுள் இந் "நரம்பு" என்னும் சொல்லாட்சியின் பதிவும்-அதன் பொருள் விரிவாக்கங்களும் :

Malayalam	:	ñarampu, narampu= tendon, nerve ñeravu= vein
Kota	:	narb= sinew
Toda	:	narb= muscle, vein
Kannada	:	nara, naravu= sinew, tendon, nerve, vein, artery
Tulu	:	nara= vein, nerve, tendon narambu= nerve
Telugu	:	naramu= nerve
Kolami	:	naram= vein
Parji	:	narb= vein (pl.) nerbul naram= nerve
Gondi	:	naral (pl.) naralku
Konda	:	naram= nerve
Kuwi	:	naromi= nerve
Kurux	:	narī= pulse
Malto	:	naru= the veins

"நரம்பு" என்னும் சொல்,-இலத்தீனமொழியுட் சென்று அடைந்தவடிவும்-அவ்வடிவின் வகைத்திரிவும் வளர்ச்சியும் :—

நரம்பு> (L) nervus= 1. nerve

2. a string of a musical instrument
3. a bow string

nervāilis	=	of or belonging to the nerves
nerviae	=	strings or chords of a musical instruments, gut strings
nerviceus	=	made of sinews
nervicus	=	that has a nervous disorder, nervous
nervīnus	=	made of sinews
nervositas	=	of a thread
nervōsus	=	full of sinews, nervous
nervūlus	=	nerve

நரம்பு > (Greek) neuron = nerve

கிரேக்க மொழிவழியாகப் பிரஞ்சு முதலிய மொழிகளிற் பதிவுற்று ஆங்கில மொழியுள் நன்கு இடம்பெற்று வளர்ந்து நிற்கும் சில சொல் வகைகளாவன :

(Greek) neuron > +

(English) neuralgia, neurasthenia, neuritis

(Greek) neuro(n) > (Eng.) neuro = comb, form. Nerve(s)

(English) neuroglia, neuromuscular, neuropath, neuropathic, neuropathy, neuropathology, neurophysiology, neuropterous, neurosurgery, neurotomy, neurology, neuroma, neurone, neurosis, neurotic

(Latin) Nervus > (M.E) nerve > (Eng.) nerve

> (English) nerve +

nerve cell, nerve centre, nerve gas, nerve knot, nerve racking,

nerveless, nervous, nervous system, central nervous system, nervous breakdown, nervure, nervy

யா > யாஅர் > யார் > ஞார் > நார்

நார் = உள்ளக்கட்டு, உள்ளப்பிணைப்பு, அன்பு
1. "நலத்தின் கண் நாரின்மை தோன்றின்" [குறள் : 958:1]
2. "நாரில் நெஞ்சம்" [குறுந்: 212:2]
3. "நாரில் நெஞ்சு" [நற்: 98:12]
4. "நாருடை நெஞ்சம்" [நற்: 233:7]
5. "நாரில் மாலை" [குறுந்: 118:2]

நார் + அம் > நாரம் = அன்பு, காதல்
''நாரங் கொண்டார்'' [கம்பரா: மாரீச: 180]

நார் + அன் > நாரன் = காமன்
''வேழவில்லால்............எய்யு நாரனார்'' [கம்பரா. இராவண: 244]

நார் = அன்பு, விருப்பவுணர்வு
நார் + இ > நாரி = 1. விருப்பத்தக்கவள்,
2. அன்புடையவள்
3. பெண்

''பெண்'' என்னும் சொல், ''பெள்'' என்னும் விரும்புதற்கருத்து அடிப்படையில் தோன்றியுள்ளமை இவ்விடத்திற் கருதுதற்குரியது.

[ஒ.நோ: பெள் > பெள் + பு > பெட்பு = விருப்பம் [சூடா.நி.]
பெள் + தல் > பெட்டல் = விருப்பம் [திவா.]
பெட்டர் = விரும்பியவர்
''பேணாது பெட்டார்'' [குறள்: 1178]
பெள் > பெண்

நார் + இ > நாரி = பெண்
''நறவு பெண் நாணி பன்னாடை நாரி'' [பிங்: 3721]

நாரி + அர் > நாரியர் = பெண்டிர்
''நாரியர் இல்லை இஞ் ஞாலம் ஏழும் என்ன'' [கம்பரா. கைகே: 22]

நாரி + கை > நாரிகை = பெண் ["கை" பெண்பாலீறு]
''நாணா ளவனையிந் நாரிகை'' [பரிபா: 12,56]

நாரி > [Sanskrit] nārī = Woman
நாரிகை > [Sanskrit] nārika = Woman

யா : பொருந்துதற்கருத்துக் கிளைவேர்

யா > யா + அர் > (யாஅர்) > யார் > ஆர் = ஆத்தி

ஒரு நிலைத்திணையின் காட்சியில்—அல்லது அதன் பயன்பாட்டில் எந்நிலை மிகுவாகத் தம்மைக் கவருந்தன்மையதாயிருந்ததோ— அதன் அடிப்படையிலேயே — அதற்குரிய பெயரை அமைப்பதைத் தமிழமாந்தர் தம் முறையாகக் கொண்டிருந்தனர்.

''ஆர்'' என்றும், — "ஆத்தி" என்றும் இருவேறு பெயர்களால் பண்டையில் சுட்டப்பெற்ற பல்வகை நுண்வேறுபாடுகளைக் கொண்ட மரம் ஒன்று[1] — அம் மரத்தில் துளிர்த்துத் தழைத்த ஒட்டிய — கவைத்த இரட்டையிலை அமைப்புத் தோற்றக்காரண அடிப்படையில் பெயர் பெற்றது.

" கவைஇலை ஆரின் " — என அகநானூற்றிலும் [104:12], "கவட்டு இலை ஆரொடு" எனக் கம்பராமாயணத்திலும் [6:14:115] இக் காரணக் காட்சி பதிவுற்றிருப்பதைக் காணலாம்!

இரு வித்திலை நிலைத்திணையான இவ் "ஆர்" அல்லது "ஆத்தி" என்னும் இம் மரத்தின் இலை — இரண்டு சிற்றிலைகள் கொண்ட ஒரு கூட்டிலை ஆகும். இக் கூட்டிலை அடியில் ஒட்டியிருக்கும் தகைமை பெற்றது.

சோழமரபினரின் குடிப்பூவாக இம் மரத்தின் மலர் விளங்கியது. பாண்டியமன்னர் வேப்பமலரையும்— சோழமன்னர் "ஆர்" மலரையும்— சேரமன்னர் பனம்பூவையும் தத்தங் குடிமலராகச் சூடி வந்தமையைப்

---

1. கழக இலக்கியங்களில் "ஆர்" என்றும் — "ஆத்தி" என்றும் சுட்டப்பெறும் இம் மரம்,—பிற்கால இலக்கியங்களில் "மந்தாரம்" என்ற வாறு சுட்டப்பெறுவதாகவும், திருவாத்தி, திருவாட்சி, கொக்கு மந் தாரை, வெள்ளை மந்தாரை, மந்தாரை என்றவாறெல்லாம் உலக வழக் கிற் பயிலப் பெறுவதாகவும், "ஆத்தி" என்னும் பெயரில் குறிப்பிடத்தக்க மூன்று சிறுமரங்கள் தமிழ்நாட்டில் உள்ளன என்பதாகவும்—இவை மூன் றும் ஒரே வகையினவே என்றும் புதலியல் அறிஞர். முனைவர். கு. சீநிவாசனார் சுட்டுவார். [காண்க: ''சங்க இலக்கியத் தாவரங்கள்'' பக்:262, 265]

புறநானூற்றில் வரும், ''வேம்பும் ஆரும் போந்தையும் மூன்று மலைந்த சென்னியர்'' [338:6-7] எனும் வரி பட்டியலிட்டுக் காட்டும்.

யா [ஒன்றுதற்கருத்துக் கிளைவேர்] யா>யா+அர்>யாஅர்>யார்>ஆர் = ஆத்திமரம், ஆத்திப்பூ.

ஆர் = ஆத்திமரம்

1. "வெண்மறி......கவ்வ இலை ஆரின் அம் குழை கறிக்கும்"
[அகம்: 104:9-12]

2. "ஆரும் வெதிரும்" (தொல்.எழுத்: 363)

ஆர் = ஆத்திப்பூ

"நின்ன கண்ணியும் ஆர் மிடைந்தன்றே-நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே"
[புறம்: 45:3-4]

❁ மேலுங்காண்க ![2]

''ஆர்''—என்னும் இம் மரப்பெயரை அடிப்படையாகக் கொண்டு அமைந்த ஓர் ஊர்— ஆர்+ஊர்>ஆரூர். இவ்வூர்த் திரு என்னும் அடையுற்றுத் திருஆரூர்>திருவாரூர் என்றவாறு இன்றைக்கு வழங்கி வருகின்றது.

இவ் ஆர் மரங்களின் செறிவாலாகிய காடுகள் நிறைந்த பெரு வட்டாரம் ஆர்க்காடு என்னப்பெற்றது[1]. தென்னார்க்காடு — வடார்க்காடு ஆகியன அன்றைய மரபை நினைவூட்டும் இன்றைய பெயர் எச்

---

2. மணிமே. 9:125, தேவா: 1:56:1, தொல்.பொருள்: 63:4 இளம்., புற.வெண்.சூ: 10:1, விக்கிர.உலா. 54, திருவால் நூற்சி. பாயி.2, மதுரைச்.உலா.206, திருநெல் பு.தக்கன்:90., திருவருணைக் கலம்.47

1. ''ஆர்க்காட்டு ஆங்கண்'' (நற். 227:6)
''அழிசி ஆர்க்காடு அன்ன'' (குறுந். 258:7)

சங்கள்! [ஆற்காடு என வழங்குகை — மரபறியாத, வரலாறறியாத, இலக்கணமறியாத, எழுத்துத் தெளிவறியாத கொடும் பிழைபாடுடைய தாகும்! இவ்வடிவப்படி ஆலங்காடு என்றவாறு பொருள்பட்டு—வர லாறே சிதைந்து சிதறி மயக்கமுறுவதையுங் காணலாம்!]

ஆரம்

ஆர் + அம் > ஆரம் = ஆத்தி

''காஞ்சிப் பனிமுறி ஆரம் கண்ணி'' (புறம்: 344:8)

❁ மேலுங்காண்க [2]

(ஆர் + (ச்) + சி > ஆர்ச்சி [சாம்ப.அக] என்பதுவும்

ஆர் + ஐ > ஆரை (மூலிகையக.) என்பதுவும்,

ஆரைமாமரம் (சி.வை.அ) என்பதுவும் ஆர் மரத்திற்குரிய பிற வழக்கு வடிவங்களாம்)

ஆரன்

ஆர் + அன் > ஆரன் = ஆத்திமாலையைச் சூடிய சிவன்

''புரம் மூன்று எய்த ஆரனை'' [தேவா: 5,4,7]

ஆத்தி

யா > யா + தி > (யாதி) > யாத்தி > ஆத்தி = ஆர்

ஒன்றுதற் கருத்து அடிப்படையில் "யா" என்னும் மூலத்தினின்றே தோன்றி மக்கள் வழக்கில் பெருக நின்று பெயர் பெற்றது, இவ் ஆத்தி!

''அடும்பமர் ஆத்தி'' [குறிஞ்சிப்: 87]

ஆர் மரப்பூவைச் சுட்டிய இவ் ஆத்திப்பெயர் வழக்கை "ஆத்திசூடி" என்னும் மிக மிகப் பிந்திய — பிற்றைக் கால ஔவையாரின் சிறிய அற

---

2. பெருந்: 576, திருக்குற்றா.பு.5:16, மதன.மாலை:148.

நூலொன்றின் பெயர் வழியிலும் நாம் காணலாம். (''ஆத்திசூடி அமர்ந்த தேவனை'' (ஆத்தி.கடவுள்)

ஆத்திசூடி= ஆத்தி மலரைச் சூடியவன், சிவன்
ஆத்தி மாலையன்= சோழன்

''கொல்லும் புலிக் கொடிக்கு இறை ஆத்திமாலையன்...
சோழன்'' (தேவா: 5,4,7)

''ஆத்தி'' என்னும் ஆர் மரத்தைக் குறித்த பெயரொடு "திரு" என்னும் அடைசேர்த்து திரு+ஆத்தி>திருவாத்தி என்றவாறு வழங்கி வருகின்றமையையும் நாம் அறிகின்றோம்.[3]

---

3. ''கடிசேர் திருவாத்தியின் நீழல்''
(பெரியபுராணம். சிறுத்தொண்: 46

யா : பொருந்துதற் கருத்துக் கிளைவேர்

யா > யாஅண் > யாண் > யாண் + இ > யாணி > ஆணி

ஆணி : இரு பொருள்களை இறுகப் பிணைப்பதற்காக அடிக்கப் பெறும் தைப்புப் பொருள்

'' ஆணி தைத்தல் '' — என்னும் வழக்கு, இரு பொருள்களை ஒன்றுடனொன்று பொருத்துதற்கென ஆணியடித்தலைக் குறிப்பதாகும்.

மரப் பலகைகளை ஒன்றோடு ஒன்றாகப் பொருந்தச் செய்வதற்குப் பயன்பெற்ற செறிப்பு உறுப்பு (யாண் >) யாணி என்னப்பெற்றுப்— பின்னர், ஆணி என்றவாறு செப்பவடிவுற்றது.

மரப்பலகைகளை ஒன்றோடொன்றாகப் பிணித்துக் — கட்டில் முதலாகிய மரவழிப் பயன்படு பொருள்களை உருவாக்கும் தொழிலாளரான தச்சர்,— "யாணர்" என்றவாறு அழைக்கப்பெற்றமையையும் இவ்விடத்தில் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

யா > யாஅண் > யாண் > (யாண் + அர்) > யாணர் = தச்சர் [அக. நி.]

[ஒ.நோ: "துய்" — பொருந்துதற் கருத்து மூலவேர்]

துய் > தய். (உகர--அகரத் திரிபு)

தய் > தை > தை + (த்) + தல் > தைத்தல் = பொருத்துதல்

தய் > தய் + (ச்) + சு > தய்ச்சு > தச்சு = பொருத்துதல், தைத்தல், மரப் பலகைகளை ஒன்றோடொன்றாகப் பொருத்துந் தொழில்

தச்சு + அர் > தச்சர் = மரப் பலகைகளை ஒன்றோடொன்றாகப் பொருத்துநர்

"தச்சன் செய்த சிறுமா வையம்" (குறுந்: 61:1)

ஆணி =

1. இரும்பாணி

''துளைவாய் தூர்ந்த துரப்பு அமை ஆணி'' (பொருந: 10)

2. சுள்ளாணி

''இலங்கு துளை செறிய ஆணி முடுக்கி'' (மலைபடு: 27)

3. கடையாணி

''உழுவார் உலகத்தார்க்கு ஆணி'' (குறள்: 1032)

கடையாணி = அச்சாணி (அச்சு + ஆணி)

''உருள்பெருந் தேர்க்கு அச்சாணி அன்னார்''

(குறள்: 667)

4. யாழின் உறுப்பாகிய மரவாணி

''பத்தரும் கோடும் ஆணியும் நரம்பும்'' (சிலம்பு: 7:1:3)

5. எழுத்தாணி

''பித்திகைக் கொழுமுகை ஆணி கைக்கொண்டு''

(சிலம்பு: 8:55)

''கண்டம் ஊசி ஆணி எழுதுங் கருவி'' (பிங். நி: 1595)

6. பொன்னின் மாற்று அறியக் கட்டளைக் கல்லில் உரைத்துப் பார்க்கப் பயன்பெறும் உரையாணி

''ஆணிக்கு அமை பொன்'' [கம்பரா: 3:7:158]

(மே.கா: அஷ்டப்பிரபந்தம்: அழக: 3)

7. தீயைத் தூண்டப் பயன்படுத்தப்பெறும் இரும்புக்கோல், உலைக்கோலாணி, சுட்டுக்கோல்

''சுட்டுக்கோல் ஆணி'' (பிங். நி: 1637)

8. நுகத்தின் நடுவில் அமையும் பகலாணி (மதுரை. அக.)

9. துலையாணி (மதுரை. அக.)

10. முறுக்காணி (மதுரை. அக)

இரும்பு + ஆணி > இரும்பாணி > இருப்பாணி = இரும்பாலாகிய ஆணி

''அடிப்பேன் கவியிருப்பாணி கொண்டே''

(தனிப்பா: 1:170:22)

இருப்பாணி — என்னும் செப்பச்சொல், ரகர லகரத் திரிபின்வழி இலுப்பாணி என்றவாறு கொச்சை வழக்கில் இன்றும் பயிலப் பெறுவதைக் காணலாம். (ஒ.நோ: இருப்பை > இலுப்பை)

உரல் + ஆணி > உரலாணி = உரலிலிட்டுக் குத்தப் பயன்பெறும் மரவாணியாகிய உலக்கை

"...அண்ணத்தை அணைந்து உரலாணி இட்டாற்போல"
[தொல்.எழுத். 99. நச்]

மேலுஞ் சில ஆணி வகைகளாவன :

1. திருகாணி, 2. வரிச்சாணி 3. வரிச்சலாணி 4. வலிச்சலாணி 5. கட்டாணி 6. வேம்பாணி 7. கையாணி 8. குடையாணி 9. சடையாணி 10. குமிழாணி 11. கூராணி

ஆணி = பதித்து நடக்கையில் ஆணித் தைப்புப்போல் வலியை யுண்டாக்குகின்ற - உள்ளங்காலில் அமைந்துள்ள திண்ணிய முடிச்சு (சீவரட்.ப: 411)

ஆணி = காலாணி (கால்+ஆணி), ஆணிப்புண்

ஆணி = கடையாணி (அச்சாணி) > அடிப்படை

1. "உலகிற்கு ஆணியாய்ப் பலர் தொழ" (நற்: 139:1)
2. ஆணியாய் உலகுக் கெல்லாம் அறம் பொருள் நிரப்பும் அண்ணல்" [கம்பரா: 5,1,26]

ஆணி = (அடிப்படை) > தலைமை, முதன்மை

"தன் குலத்து ஆணியாய பழிவர" (கம்பரா: 3:11:21)

ஆணி = (தலைமை, முதன்மை) > மேன்மை

"ஆணி வையம் ஆரிருள் மறைய" [பெருங்: 2,9:11]

ஆணி = ஆணிவேர் (மதுரை-அக)

ஆணி = ஆண்குறி

"ஆணியாம் நீர்த்தாரைச் சுருக்கம்"
[அகத்தியர் குண: 1177]

ஆணி = [அடிப்படை] > அடிப்படையாகிய உயிர், ஆதன்

"ஆணி கலங்காது அவ்வாயிரத் தாண்டே" (திருமந்: 866)

[ஆணி = அடிப்படை.]

"ஆணி+அன் > ஆணியன் = ஆணிவேர் போன்றவன், அடிப்படையானவன்

"ஆணியனாகி அமர்ந்து நின்றானே" [திருமந்: 29]

"ஆணி"- என்னும் இச்செப்பத் தமிழ்ச்சொல் வழங்கும் பிற மொழிகளாவன :

ஆணி >	Sanskrit	:	āṇi	=	axle-pin
	Pali	:	āṇi	=	linch-pin, bolt, peg
	Bengali	:	āni	=	linch-pin
	Oriya	:	āṇi	=	linch-pin
	Sinhalese	:	anaya	=	nail, peg
	Marathi	:	āṇī	=	spike, point

யா : பொருந்துதற் கருத்துக் கிளைவேர்

யா > யாஅண் > யாண் > ஞாண்

ஞாண் = கட்டுக்கயிறு, கயிறு
''திண்ஞான் எழினி வாங்கிய'' [முல்லை: 63]

ஞாண் = வில்லின் நாண்
''சாப நோன் ஞாண்'' [புறம்' 1:49]

அரை + ஞாண் > அரைஞாண் = 1. அரையில் (இடுப்பில்) கட்டுங் கயிறு
2. அரையணி [பிங்.]

["அரைஞாண் கயிறு" என்னும் கூட்டுச்சொல் "அண்ணாக்கயிறு" என்னும் வடிவில், கடுங்கொச்சைத் தொகுத்தல் திரிபாக இக்கால் பேச்சு வழக்கில் பயிலப் பெறுகின்றது.]

ஞாண் > நாண் = 1. கயிறு (சூடா.நி.)
''மரப்பாவை நாணால் உயிர் மருட்டியற்று''
[குறள்: 1020]
2. வில்லின் நாண்
''வஞ்சிலை வல்விற் புரிநாண் புடையின்'' [கலி: 15:2]

3. அரைஞாண்
''நாணும் அரைத்தொடரும்''
[திவ்யப்ர-பெரியாழ்: 1,2,4]

4. மங்கலக் கயிறு, மங்கலநாண்
''உன் கழுத்தின் நாண் உன் மகற்குக்
காப்பின் நாணாம் என்றான்'' [கம்பரா. நகர்நீங்கு:49]

தமிழிய மொழிகள் சிலவற்றில் இந் "நாண்" என்னும் சொல்லின் படிவுகளாவன :

[ஞாண் > Malayalam: ñāṇ = bow-string, other strings and cords]
Beṭṭa Kurula: nūṇi = rope
Toda : no.ṇ = twisted string, string of cane
Kannada : nēṇ(u) = cord, rope
Tulu : nēṇa, nēṇu = cord, rope, bow-string
Gondi : nōnē = rope
Telugu : nānu = a sort of necklace
Kuwi : nōṇo = rope

நாண் > நாண் + இ > நாணி = வில்லின் நாண்
''நாணியிற் கோலொன்றினால்'' [தேவா: 616:4]

ஞாண் + அல் > ஞாணல் > நாணல் = கட்டுக்கயிறு போன்ற தோற்றமுடைய புல்வகை, நாணற்புல் நாணற்கோரை

> Malayalam : ñānal = a reed
Kannada : nānal = a kind of reed
Gondi : nānci = Bambusa arundinacea

யாண் > யாண் + அம் > யாணம் > சாணம் [யகர—சகரத் திரிபு]

சாணம் = 1. நாராலாகிய பொருள்
[நன்னூல்: 266. மயிலைநாதர்-]
2. கட்டுக் கயிறு

சாணம் = சணற்கயிறு
''இறுக்கின சாணமும் கட்டின கச்சும்''
[திவ்யப். திருநெடுந்: 21
வியாக்: பக்: 170]

யாண் > யாண் + அன் > யாணன் > யாணன் > சாணன் =

கயிறு அல்லது நாரினைக் கொண்டு மரமேறிக் கள்ளிறக்குநன்

சாணன் > சாணான் (உயிரிசைவு மாற்றம்)

[குறிப்பு: தமிழகத் தொழிற்குலங்களுக்கிடையில் உயர்வு—தாழ்வு கற்பித்துக்கொண்டு இயங்கின இடைக்கால மடத்தனப் போக்குக்கு எதிராகத் தம் தொழிற்குலப் பெயருக்கு ஏற்றம் தந்துகொள்ளும் முயற்சியாகவே "சான்றான்" (=பண்பு நலங்கள் நிறைந்தோன்) என்றவாறொரு போன்மை ஒலிப்பீட்டினைக் கொண்டு அத் தொழில் வகுப்பினர் தம்மைக் குறித்துக் கொள்வாராயினர்.

(காண்க : சான்றார் = சாணார்

''சான்றான் மாட்டு மேனிப் பொன்னும்'' [T.A.S. II,67]

("சான்றான்" என்னும் சொல், "சாணான்" என்றவாறு திரிபடையவே அடையாது. இரண்டும் தனித்தனிச் சொற்கள்.)

"சாணார்"—என்றவாறு அத் தொழிற் குலத்தவரைக் குறிப்பிடுகையில்—அக் குறிப்பீட்டை இழிவாகக் கருதுபவரும் அல்லது பயன்படுத்துவரும்—அவர் எவராயினும்—அன்னார் குமுகநல எதிரியரும், இழிஞரும், மாந்தநேயமற்ற மடயருமே ஆகுவர்!]

யண் > யாண் + அல் > யாணல் > சாணல் > சணல் = நார்ச்செடிவகை

(sunn-hemp) (Crotalaria juncea)

சணல் = அந் நார்ச் செடியினின்று பிரித்தெடுத்த கயிறு.

(யாணம் >) சாணம் > சணம் [நெடுமுதற் குறுகல்] = சணல்

[மூலிகை அக.]

சணம் + பு > சணம்பு = சணல்

''சணம்போடு பருத்தி'' (காசிகண்டம்-பிரமச: 14)

சணம்பு > சணப்பு [வலித்தல் திரிபு) = சணல் (பதார்த்த குண. 250)

சணப்பு + ஐ > சணப்பை = சணல்

சணப்பை + நார் > சணப்பைநார் = சணல்நார்

[தெலுங்கு] Janapanāra

சணப்பு+அண்>சணப்பன் = சணலினின்று நாரெடுக்கும் தொழிற் குலத்தான்

''சணப்பன் வீட்டுக் கோழி தானே விலங்கு மாட்டிக் கொண்டது''—என்பது ஒரு தமிழ்ச் சொலவடை; பழமொழி!

சணம் = சணல்

சணம் > (Sanskrit) šaṇa = சணல்
šaṇaka = சணல்

''சணல்''—என்னும் சணப்பநாரைக் குறித்து மக்கள் வழங்கிய சொல்,— பொருந்துதற் கருத்து வேர் வழியில் தோன்றியமைக்குச் சான்றாகச், சணலைக் குறித்து ஆங்கிலத்தில் வழங்கும் "Jute" என்னும் ஆங்கிலச் சொல்லின் தோற்ற வரலாற்றையும் ஓர் ஒப்பு நோக்குக்காகக் காணுதலும் இவ்விடத்தில் தெளிவுக்கு வழி வகுப்பதாகும்!

அடு>அடு+ஐ>அடை = பொருந்து, சேர், சேர்ந்திருகு

அடை>சடை = 1. கற்றை, செறிவு
2. கற்றையாக அமைந்த மயிர்முடி, அடர்ந்த மயிர்
"விரிசடைப் பொறையூழ்த்து" [பரிபா: 9:5]
3. "பின்னிய கூந்தல் [பிங்.]

சடை+முடி>சடைமுடி = முடியாகப் புனைந்த சடைமயிர்
''புன்மயிர்ச் சடைமுடிப் புலரா வுடுக்கை''
[சிலம்பு : 25:126]

சடை> (Sanskrit) Jaṭā = matted hair

"சடை" — என்னும் தூய செந்தமிழ்ச்சொல் சமற்கிருதத்தில் Jaṭā என்றவாறு திரிபெய்தி நிலைத்தபின்— Jūta என்றவாறொரு வடிவம புடைகொண்டது. பதப்படுத்தி அடித்துப் பிரிக்கும்நிலையில் சடை போன்ற தோற்ற அமைப்பிலிருந்த சணல் நார்க் கற்றையை வங்காளியர் Jhōta என்றவாறு குறிக்கத் தொடங்கினர். இச்சொல் Jūta என்னும் சமற்கிருதச் சொல்லினின்று தோன்றியதாகும். சணல்நார்ச் கற்றையை Jhōta என்றவாறு குறித்த வங்காளச் சொல்லினின்று, Jute என்றவாறான திரிப்பமைப்பில் ஆங்கில மொழிக்கண் சணல் நார்ப்பெயர் புகுந்து உலகெங்கணும் பரவியது. இவ்வனைத்திற்கும் அடிப்படை, தமிழ்மொழிக்குரிய சொல்லாகிய சடை என்பதுவே!

[Jute= fibre from bark of East-Indian plants of genus Corchorus used for sacking, mats, cords etc] f. Bengali Jhoto fr. Skr. Jūta= Jaṭā= braid of hair] (C.O.D.)

யா : பொருந்துதற்கருத்துக் கிளைவேர்

யா > யாஅண் > யாண் > யா + அம் > யாணம்

யாணம் > ஆணம்

ஆணம் = 1. உள்ளக்கட்டு, அன்பு, விருப்பம்

(1-1) "ஆணம் சான்ற அறிவர்"
[தொல். பொருள்: 491 இளம்]

(1-2) "ஆணமில் பொருள் எமக்கு" [கலி: கடவுள்: 17]

(1-3) "ஆணமில் நெஞ்சத்து அணி நீலக் கண்ணார்க்கு"
(நாலடி: 374)

"புரிவு ஆணம் நேயமும் பேர்" (சூடா. நி. 8,33)

2. "பற்றுக்கோடு

"தேவரை ஆணமென் றடைந்து"
(திருமழிசை-திருச்சந்: 69)

3. (பற்றுக்கோடு >) அரணம், காப்பு

"என் மம்மர் வெந்நோய்க்கு ஆணமாகிய
ஆயிழை"
(பெருங்: 3,22,57-58)

4. கூட்டு, குழம்பு

(4-1) "ஆணம் குழம்பு ஆம்" (பிங். நி: 1124)

(4-2) "ஆமை அவியல் ஆணம் கண்டறியோம்"
(திருவ. சித்து: 66)

5. கஞ்சி

"அடுப்பு மூட்டி ஆணம் காய்ச்சி"
(மலையகராதி: 225)

6. மணமுள்ள கூட்டுப் பொருள்

"மெல்லியலை ஆணம் முழுக்காட்டி"
(இன்னிலை: 24)

7. (மணமுள்ள கூட்டுப் பொருள் >) காட்டுக் கறி வேப்பிலை (மர இனப்பெ.)

யாண் > யாணா > ஆணா = காட்டுக் கறிவேப்பிலை மரம்
(சித். பரி.அக: பக்: 59)

யாண் + அன் > யாணன் > ஆணன் = அன்புடையவன்

''சரம்பல ஆணன் தென்கிழக்கு இறைஎன்ன எய்தார்''
(தில்.யம.அந்: 25)

ஆணம் + மடை > ஆணமடை = அன்பாகிய உணவு

''நன்பெரு நெல்லின் ஆணமடையில்"
(பெருங்: 5,9,78-79)

யாண் > யாணு > ஆணு

ஆணு = 1. அன்பு நேயம்

(1-1) "வரிஅரி ஆணு முகிழ்விரி சினைய" (பரிபா: 10:5)

(1-2) "ஆணுப் பைங்கிளி யாண்டுப் பறந்ததே"
(சீவக: 1002)

2. இனிமை

"ஆணுவே இனிமை........" (சூடா.நி:11.ரகர:5)

3. "ஆணுவே...நன்மை" (சூடா.நி:11 ரகர. 5)

யா : பொருந்துதற் கருத்துக் கிளைவேர்

யா > யாஅண் > யாண் > யாண்அம் > யாணம் = கட்டு

[ஒ.நோ: கலி + யாணம் > கலியாணம் = ஆரவாரத்தோடு கூடிய புதிய மண இணையரைக் கட்டுவிக்கும் மங்கல நிகழ்வு விழா

ஒட்டு + யாணம் > ஒட்டியாணம் = இடையை உள்ளொடுங்குமாறு ஒட்டிக் கட்டும் அரைவளை, அரையணி

ஒட்டியாணம் > Kannada : Odyâṇa, oḍḍyāna, oḍḍaṇa, oddavāṇa, oḍvana = belt of gold or silver chiefly worn by woman

Tulu : oḍyaṇe, odyāṇe

Telugu : oḍḍāṇamu

ஒட்டியாணம் > (Sanskrit) uḍḍīyāna

"உடைதாரமும் ஒட்டியாணமும்"
[மீனாட்சி. பிள். ஊசல்: 10]

யா > யாஅண் > யாண் > யாண் + ஐ > யாணை > ஆணை = கட்டளை

[ஒ.நோ: கட்டளை = [குல்: பொருந்துதற் கருத்துக்கிளை வேர்]

குல் > கல் > கள் = (சேர்க்கை)

கள் + அம் > களம் = கூட்டம், அவை, இடம்

கள் + து > கட்டு = சேர்க்கை, பந்தம், உறவின் கூட்டம்

கட்டு = பாசம்

''கட்டறுத் தெனையாண்டு'' (திருவாசக: 5 49)

கட்டு = கட்டுப்பாடு ("அவன் கட்டுக்கு அடங்காதவன்") (உ.வ)

கட்டு = ஆணை

"கட்டுடைக் காவலிற் காமர் கன்னியே" (சீவக: 98)

கட்டு + அல் > கட்டல் > கட்டலை > கட்டளை = கட்டுப்படுத்தும், கட்டுப்பாடு, கட்டுப்படுத்துகின்ற உத்தரவு, ஆணை உறுதிப்பாட்டுரை]

[கட்டளை + கல் > கட்டளைக் கல் = பொன்னின் மாற்று அறிதற்குரிய வகையில் - வேறுபாட்டை உறுதிபடுத்திக்காட்டி ஆணையிடும்—உரைப்புக்குரிய கரிய கல்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்" (குறள்: 505)

கட்டளை = கட்டளைக்கல் (காண்க: குறள்: 986)

கட்டளை = ஆணை, ஆணையீடு

கட்டளையிடுதல் = ஆணையிடுதல், பணித்தல்

"கட்டளை" — என்னும் இச் சொல்லாக்கத்தின் கருவையே—"ஆணை" என்னும் சொல்லாக்கமும் உட்கொண்டுள்ளமை இவ்விடத்திற் கருத்திற் கொள்ள வேண்டியதாகும்.]

ஆணை = 1. கட்டளைமொழி, கட்டளை, உத்தரவு, ஏவல்

(1-1) "நிறைமொழி மாந்தர் ஆணையின் கிளக்கும்
மறைமொழி தானே மந்திரம் என்ப"
(தொல். பொருள்: 8:171)

(1-2) "ஆணையால் வந்த" [கலி: 139,23]

[மே.கா: மணி: 3:61, தேவா: 2,85,11. நாச்சி. தி: 12:2 சீவக: 634. பெருங். 1,33,140, கம்பரா: 3,9,16]

2. அதிகாரம்
''காவலன் ஆணையால்'' (முத்தொள்: 14)

3. மெய்யுறுதி, உறுதியுரைப்பு
''வள்ளல் இராமன் உன் மைந்தன் ஆணை என்றான்''
(கம்பரா: 2,3,11)

4. (உறுதியுரைப்பு>) சூள் உரைக்கை, வஞ்சினம்
''குறவன்மகள் ஆணை கூறு ஏலா! கூறேல்''
[பரிபா: 8:69]

5. உறுதி, உண்மை
''தவத்தினால் அளித்தது ஆணை'' (கம்பரா : 6,18,235)

6. கட்டளையிட்டுத் தடுக்கை, தடுக்கை
''ஆணை சூளும்.........தடுத்தலும் இசைப்பர்''
(பொதி.நி: 2,207)

7. அரசமுத்திரை, அடையாளம்
''ஆணை.........இலாஞ்சனை ஆகும்'' [பிங்: 2296]

8. வெற்றி
''ஆணை மெய்யுடனே வென்றி சூள்''
[சூடா. நி: 11: ணகர:6]

9. ஆன்றோர் மரபு
''தொல்லாணை நல்லாசிரியர்'' [மதுரைக்: 761]

10. மந்திரம் (சீவக: 233)

11. முறைமை, கடப்பாடு
''அப் பொழுதே உயிர் துறக்கும் ஆணையேன்''
(கம்பரா: 5,4,15)

ஆணையோலை= அரச கட்டளைத் திருமுகம்

ஆணையிடுதல்= 1. கட்டளையிடுதல், உத்தரவு பிறப்பித்தல்
2. சூளுரைத்தல்
3. மெய்யென்று அடித்துக்கூறுதல்

ஆணை வைத்தல்= 1. கட்டளையிடுதல்
2. சூளுரைத்தல்

"கட்டளை" — என்னும் பொருளை நன்கு உள்ளடக்கியுள்ள இவ் "ஆணை" என்னும் சொல்,— பிராகிருத மொழியில் āṇā என்றவாறு திரி பெய்தியது. இப் பிராகிருதத் திரிபு வடிவத்தினின்றும் மிகத் திரி பெய்திய கொடிய வடிவே ājña என்பதாகும்.

ājña— என்னும் வடிவை ஏற்ற சமற்கிருதம்,— அவ்வடிப்படை கொண்டே — ājñap என்னும் வினைவடிவையும் — ājñapana என்னும் தொழிற்பெயர் வடிவையும் சமைத்துக்கொண்டது.

"ஆக்கினை" என்றவாறு இக்கால் தமிழில் வழங்கிவரும் வடிவம்— ājña என்னும் சமற்கிருதச் சொல்லினின்று திரிபுபடுத்தி வழங்கும் தமிழெழுத்து வடிவமாகும்.

[ஆணை என்னும் செந்தமிழ்ச்சொல்லினின்று எழுந்த, பிராகிருத வழித் திசைவுற்ற திரிபுச்சொல்லே —சமற்கிருதத்தில் பதிந்த ājñā என்பதை அறியா நம் பேதைத் தமிழர்— திருத்திக் கொண்டவாறு(!) வழங்கி வந்த திரிபு வடிவம், இது!

''எங்கள் தமிழ்ச் சொல்லே இது! — என ஆணையிட்டுக் கூறும் உண்மையறிந்த வன்மை உள்ளெழாத இக்கட்டுக்காலத்தில் இவ் "ஆக்கினை" எழுந்தது! "இன்று ஆணையிட்டுச் சொல்லுகின்றோம்!— இங்கு வந்து, அவர் (அவாள்) ஆக்கினவெல்லாம்—நம் மொழிச் செல்வத்தினின்று தூக்கினவே! "]

ஆணை >	(Prakrit) :	aṇṇā, āṇā = order
	Sanskrit :	ājña = command
	Pali :	āñña = recognition
	:	āṇā = command
	Nidoc :	ana
	Kashmiri :	ān
	Sindhi :	ān = submission
	Punjābi :	ān = sign
	Kumauni :	ān, āṇ = wov
	Oriya :	ān = wish, swearing
	Hindi :	ān = command, oath
	Gujarati :	ān
	Marāthi :	āṇ = oath
	Kota :	āṇa = promise
	Sinhalese:	aṇa = order

யா : பொருந்துதற்கருத்துக் கிளைவேர்

யா > யாஅம் > யாம் > ஆம்

பொருந்துதற்கருத்து அழகுக்கருத்துக்கு வழி வகுத்தது.

[ஒ.நோ: (1) கவ்வு= பற்று, பிடி, ஒன்றோடான்றாக அழுத்தமுறப் பற்றிக்கொள்

கவ்வு + இன் > கவ்வின் > கவின்

= உள்ளத்தைப் பற்றிக்கவ்வுந்தகைமையை—யுடைய அழகு

(2) தகு= பொருந்து, கிட்டு, ஒத்திரு

தகு + ஐ > தகை= 1. பொருத்தம் 2. ஒப்பு

(2-3) அழகு

"தாடோய் தடக்கைத் தகைமாண் வழுதி"

[புறம்: 59:2]

(2·4) தோற்றப் பொலிவு

"படைத்தகையால் பாடுபெறும்"

(குறள்: 768:2)]

ஆம் = அழகு

1. "ஆம் தண் பழையனூர்" [தேவா: 1,45,12]

2. "ஆம் மென் கனிவாய்" [சிவஞா. காஞ்சிப்பு. பராச: 9]

ஆம் > அம் [நெடுமுதற் குறுக்கம்]

அம்= அழகு

[காண்க: 1. "அந்தீங் கிளவி" [அகம்: 3.16],

"அந்தீஞ் செயல் நல்லார்" [கலி: 83:28]

2. "அந்துகில் போர்வை" [கலி: 65:4]

3. "அந்துவர் ஆடை" (கலி: 102:37)

அம் : 1. ''அம் கட்டேறல்'' (புறம்: 366:15)

2. ''அம்கண்'' (ஐங்: 469:3)

3. ''அம் கழனி'' (புறம்: 209:2)

4. ''அம் கோடு'' (அகம்: 97.2)

5. அம்சில் ஓதி'' [நற்: 324:8, மணி: 8:12]

6. ''அம்செவி'' [முல்லை: 89, கலி: 5:1]
7. ''அம் சொல்'' [புறம்: 235: 13]
8. ''அம் துகில்'' (நற்: 120:8)
9. ''அம் பகட்டு மார்பு'' [முருகு: 104, புறம்: 88.4, 96:1]
10. ''அம் பனை மென்தோள்'' (அகம்: 132 6)]

அம்+ம்+ஐ>அம்மை = 1. அழகு (பிங்.)
2. நூல்வனப்புகளுள் ஒன்று
(தொல்.பொருள்: 8:1:11)

யா>யாஅய்>யாய்>யாழ்>யாழகு>யழகு>அழகு =
கவின், எழில்

அழகு= கவின்

1. "ஐது வீழ் இகுபெயல் அழகு கொண்டு" (சிறு: 13)
2. "அமளித் துஞ்சும் அழகுடை நல்இல்" (பெரும்: 252)
3. "வேள்வியின் அழகு இயல் விளம்புவோரும்"
(பரி: 19:43)

(மே.கா: கலி: 59:6, நாலடி: 131:1, திரிகடு: 42:4, சிலப்பு: 2:39, 3:7, 6:105, மணி: 18:104)

யா>யாஅண்>யாண்>யாணு = கவின், அழகு

யாண்+அர் ["அர்"—சொல்லாக்க ஈறு]

யாண் = கவின், அழகு
''யாணது பசலை என்றனன்'' [கலி: 50:7]

யாண்+அர்>யாணர் = அழகு

1. "யாணர்த் தண் பணை உறும் என" [அகம்: 220:19]
2. "யாணர்த் தம் சிறுகுடி யானே" [அகம்: 228:13]
3. "கார்அணி யாணர்த் தூம்பகம் பழுனிய தீம்பிழிமாந்தி"
[பதிற்றுப்: 81:20-21]

அழகுடைய ஒன்று — புதியதாகத் தோன்றியதாகவும்,— புதுமையொடு அமைந்திருப்பதாகவும் இருத்தல் இயல்பாதலின்,— புதுமை— புதிது ஆகிய கருத்துப்பொருள் விரிவாக்கங்கள் நிகழ்ந்தன.

1. "பேரா யாணர்த்தால்" [பதிற்று: 24:30]
2. ''பெரும்பல் யாணர்க் கூலம் கெழும'' [பதிற்றுப்: 89:7]
3. ''நல்அகத்து யாணர் இளமுலை நனைய'' [நற்: 398:9]

யாணர் = புதிய மழை

"ஆர்கலி யாணர்த் தரீஇய, கால் வீழ்த்து
கடல்வயின் குழீஇய அண்ணல் அம் கொண்மூ"
(புறம்: 205:10-11)

யாணர் = புதிய வளம், வளப்பம்

"கனிபெறாஅது, பெறுநாள் யாணர் உள்ளி" [அகம்: 57:4]

யாணர் = புது வருவாய்

1. "யாணர் வைப்பின் நல்நாட்டுப் பொருந" [புறம்: 2;11]
2. "யாணர்ப் பயன்திகழ் வைப்பின்" [புறம்: 7:12]
3. "காலம் அன்றியும் மரம் பயன் பகரும்
யாணர் அறாஅ வியல்மலை" [புறம்: 116:13-14]
4. "பிரசம் தூங்கும் அறாஅ யாணர்" [புறம்: 375:9]

யாணர் = செல்வம்

1. "பாண! கேண்மதி, யாணரது நிலையே" (புறம்: 260·8)
2. "அறாஅ யாணர் அகன்தலைப் பேரூர்" [பொருந: 1]

யாணர் > ஆணர் = 1. நன்மை (மதுரை-அக.)
2 வளமை (மதுரை-அக.)

யா : பொருந்துதற் கருத்துக் கிளைவேர்

யா > யாஅண் > யாண் > ஞாண் = கட்டு

ஒ.நோ: யாத்தல் = கட்டுதல்
யாத்தல் > ஞாத்தல் = கட்டுதல், பொருந்துதல்

ஞாண்+பு>ஞாட்பு= 1. போர்

"கடல்வயிறு கலக்கிய ஞாட்பும்" [சிலம்பு: 26:237]

(ஞாண்பு>ஞாட்பு
ஒ.நோ: காண்+சி>காட்சி)

ஞாண்= போர், போர்க்களம்

"ஞாணென் மஞ்சனமென்" [தக்கயாகப்: 8:377]
(ஒ.நோ: பொரு>போர்)

ஞாட்பு= 2. போர்க்களம்

"ஞாட்பினுள் நண்ணாரும் உட்கும் என் பீடு"
(குறள்: 1088)

3. படை (வின்சிலோ)

4. கூட்டம்

"வந்தனர் மண ஞாட்பின்"
(காஞ்சிப்பு-தழுவக்: 279)

5. கனம் (பிங்.)

6. வன்மை (வின்சிலோ)

யா : பொருந்தற்கருத்துக் கிளைவேர்

யா>யாஅனம்>யானம்= மரக்கலம்

யானம்= கட்டப்பெற்ற ஊர்தி வகை
(ஒ.நோ: புண்>புணை
கட்டு+மரம்>கட்டுமரம்)

"யானமே மரக்கலத்தோ டெழிலூர்தி"
(சூடா. நி: 11:15:2)

யா : பொருந்துதற்கருத்துக் கிளைவேர்

யா > யா + டு > யாடு > யாடு > யாடு + ஐ > யாடை > ஆடை

ஆடை = கட்டுத்துணி, உடை (பிங்.)

ஆடை = 1. ''நீலக் கச்சைப் பூவார் ஆடை'' [புறம்: 274:1]
பூவார் ஆடை = பூத்தொழில் செய்யப்பட்ட ஆடை
(embroidery = பூத்தொழில்)
2. ''கொடுந்திரை யாடையும்'' [புறம்: 275:1]
3. ''துவர்செய் ஆடை'' (நற்: 33:6)
4. ''சிலை விற் பகழிச் செந்துவ ராடை'' (ஐங் 363:1)
"பொலம்புரி" (பரி. 3:88)
[= பொன்னிழைகளாலாகிய ஆடை]

ஆடை + அன் > ஆடையன் = ஆடை உடுத்தினவன்
''செய்யன் சிவந்த ஆடையன்'' [திருமுரு: 206]

ஆடை = துணி
''அணியும் கலனும் ஆடையும் நிறைந்த
கண்ணகன் கடைகள்'' (பெருங்: 1,38,62-63)

= சீலை, சேலை
''துகில்...சேலை புடைவை...ஆடை (உரி. நி: 7,6)

= கொடிச் சீலை
''பார்முகத்து நிகர் இலா தூண்முகத்து நிமிரும் ஆடை''
(திருக்காவ. கலம்: 71)

= போர்வை [மதுரை-அக.]

= கச்சு
''நீடிய ஆடை முனிந்த வனமுலை" (விக்கிர-உலா: 560)

ஆடை = 1. பகல் முதலியவற்றின் மேல் படரும் ஏடு
2. கண்ணில் படரும் படலம்
3. பனங்கிழங்கின் உள்தோல் (இலங். வ.)

யா : பொருந்துதற் கருத்துக் கிளைவேர்

யா > யாஅய் > யாய் > யாழ் = நரம்புகளாற் கட்டப்பெற்ற இசைக்கருவி

கடைக்கழகக் காலத்திலும்—அதற்கு முந்தியுமாக இயற்றப் பெற்றுள்ள பாடல்கள் அனைத்துள்ளும் மூவகை யாழ்கள் குறிக்கப் பெற்றுள்ளன. வில்யாழ், சீறியாழ், பேரியாழ் என்பன அவை! யாழ் வகையினுள் முன்னீடாகத் தோன்றியது, "வில்யாழ்" ஆகும்!

வில்லின் நாணியை நெருடுகையில் ஏற்பட்ட ஒலியினிமையே இவ்வகை இசைக்கருவிகள் பன்னிலைப் பெருக்க வளர்ச்சிக்கு அடிப்படையாய் நின்றது.

தொடக்கக் காலங்களில்— யாழிசைக் கருவிக்கு அடிப்படையான நரம்பு— முறுக்கின நாரினால் ஆனதாகும்! மெல்லியவுருவமைந்த— நன்கு முறுக்குதற்கியைந்த இழையாகவும்—வல்லிய உறுதியார்ந்த நுண் கயிராகவும் இருந்தமையின் — மரல்நார் யாழ்க்குரிய நரம்பாகப் பயன் படுத்தப் பெற்றது.

[காண்க]"...........................குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சி"
(பெரும்: 180-183)

''குமிழ்'' என்னும் (Gmelima asiatica) புதர்ச்சிறு மரத்தின் கிளைகள் உள்ளே மெல்லிய புழையுடைமையால் வளையுந் தகையன. இக்கோடுகளை உரியஅளவில் வெட்டி—நிரல்பட வளையச்செய்து இவற்றின் இரு முனைகளிலுமாக இழுத்துக்கட்டிய மரல் நாராலாகிய நரம்புகளையுடைய— பன்வில் வடிவமாகச் செய்த முந்தைய யாழ் வகையே— "வில்யாழ்" ஆகும்!

யாழின் உறுப்புகளிலேயே இன்றியமையா மூலவுறுப்பு என்பது அதனிற் கட்டுற்ற நாராகிய நரம்பேயாகும்!

"நரம்பு"— என்னும் சொல்லாலேயே— யாழிசைக்கருவி குறிக்கப் பெற்றிருக்கின்றமையும் இவ்வுண்மையைத் தெளிவாகக் காட்டுகின்றது.

தொல்காப்பியர் காலத்திற்கும் முன்னரேயே யாழிசைக் கருவிக்

கெனத் தனி இலக்கண நூலே இயற்றப்பட்டிருந்தமையையும் அறிகின்றோம். யாழ் இலக்கணமானது — "நரம்பின் மறை" என்றவாறான குறிப்பீட்டொடு தொல்காப்பியத்துள் பதிவாகியுள்ளமையில் (தொல். எழுத். 1:33:3)—நம் தமிழர்களின் வாழ்வியக்கத்தில்— யாழிசைக்கருவியின் பரவலான பயன்படுத்தத்தையும்—அவர்களுக்கிருந்த இசைத்தோய்வையும் நன்கு காணவியல்கின்றது!

யாழ்க்குரிய தெய்வம் ஒன்றையும் தமிழர்கள் தம் இறையோர் படைப்புப் பட்டியலில் படைத்துக் கொண்டவராய்—அக் கருவியை இயக்குகையில் முன்னீடாக அத் தெய்வத்தை வழிபடும் முறைமையை மேற்கொண்டு வந்துள்ள நிலையாலும்,— யாழ்த் தெய்வத்தின் மீது சூளுரை செய்யும் வழக்க நிலையாலும்,— அவ் யாழிசைக் கருவிக்குத் தம் வாழ்வில் எத்தகு அளவுக்கு மீமதிப்புத் தந்துள்ளார்கள் என்னும் உண்மையும் நன்கு புலனாகின்றது.

(காண்க:) 1. "இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பிக்
கடனறி மரபிற் கைதொழூஉப் பழிச்சி"
[பெரும்: 462-463]

2. "யாழொடும் எடுத்துச் சூள்பல உற்ற பாணன்"
[கலி: 71:13-14]

நாரினைக் கயிறாக முறுக்கிய நரம்பே,— யாழ்க்கருவியை உருவாக்கப் பயன்பெற்றது! அம் முறுக்கமைந்த நரம்பு—கொடும்புரியாகவோ ஏறிய முறுக்காகவோ இருத்தல்—இசைப்பின் நுட்பத் திற வெளிப்பாட்டுக்குத் தடையாகுமாதலின் — அந் நிலைகள் குற்றங்களாகவே கொள்ள பெற்றன.

''கொடும்புரி மயிர் தும்பு முறுக்கிவை நான்கும்
நடுங்கா மரபிற் பகையென மொழிப'' - எனவரும்

சீவக சிந்தாமணியுரை மேற்கோள் இந் நிலையைத் தெரிவிக்கின்றது. முறுக்கின கொடும்புரியாகவிருத்தல், ஏறிய முறுக்குடனமைந்திருத்தல், நீடி நிற்கும் மயிரனயை தோற்றத்தில் நாரானது பிரிந்து தனிப்படத் தெரிதல், முறுக்குக்கிடையில் சிறிய அளவான பிசிராக வெளிநிற்றல் ஆகியன நரம்பின் குற்றநிலைகளாகும்.

இக் குற்றங்கள் நீங்கிய நரம்பே—யாழின் நுட்ப இசைத்திறத்தை முழுதுற வெளிப்படுத்திக் காட்டவல்ல தகைமையதாகும்.

(காண்க:) புரி= கொடும்புரி
1. "புரியடங்கு நரம்பின்" (புறம்:135:5, 308:1, சிறு·34)

2. [துய் = பிசிர், துய்பு]
" துய் அடங்கு நரம்பின்" (நற்: 300 8)

பொருந்துதற் கருத்துக் கிளைவேரின்வழிக் கட்டுதற் கருத்துப் பொருட்பேற்றைப் பெற்ற "யா" என்னும் வினையடியாகப் பிறந்த (யா > யாஅய் > யாய் >) "யாழ்" என்னும் நரப்புக் கருவிக்குரிய சொல்-கட்டுதற் கருத்து அடிப்படையில் தோற்றப்பெற்றது என்னும் உண்மையை—"நரம் பினாலே தொடுக்கப் பெற்றது" என்றவாறாகப் பலபடப் பயின்று வந் துள்ள இலக்கியக் கருத்துப் பதிவுகளால் தெளியவுணரலாம்!

தொடுத்தல் = கட்டுதல்

1. ''நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றில்'' (பெரும்: 152)
2. ''சிறுதாப்பு தொடுத்த பசலைக் கன்றின்'' (முல்லை: 12)

தொடு + ஐ > தொடை = கட்டு, கட்டுகை

1. ''தொடை மாண்டு'' (நெடுநல்: 124)
(நச்.உரை: கட்டுதல் மாட்சிமைப்பட்டு...)

2. ''மென்தொடை'' [மதுரை: 93]
(நச்.உரை: மெத்தென்ற கட்டுக்களையுடைய...)

யாழில் நரம்பு கட்டப்பெறுகின்றது என்ற உண்மை சுட்டப்பெறும் ஓர் இலக்கிய வரியை இவ்விடத்தில் ஆழ்ந்து கருத்திற் கொள்ளவேண்டும்

[காண்க:]
''குரல் ஓர்த்துத் தொடுத்த சுகிர்புரி நரம்பின்'' [மலை: 23]
(நக்.உரை: ஓசையை ஓர்ந்து பார்த்துக் கட்டின வடித்து முறுக்கின நரம்பினையும்...)

இத் தொடுத்தற் கருத்துக்குரிய பிற வலிவுச் சான்றுகளாவன:

[தொடுத்தல் = கட்டுதல்]

1. ''தேஎம் தீம் தொடைச் சீறியாழ்,' [புறம்: 70:1]
2. ''தொடுத்த மரல்புரி நரம்பின் வில்யாழ்'' (பெரும்: 181-182)
3. ''தீம் தொடைப் பையுள் நல்யாழ்'' (அகம்: 314:11-12)

4. ''கட்டு யாழின் புரிநெகிழ்ப்பார் போன்றன கை''
[கலி: 18:36-37]

5. ''ஏழ் புணர் சிறப்பின் இன்தொடைச் சீறியாழ்''
[மதுரைக்: 559]

6. ''தண்மையின் திரிந்த இன்குரல் தீந்தொடை
கொம்மை வருமுலை வெம்மையிற் றடை இக்
கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்ப''
[நெடு: 58-70]

7. ''யாப்புடை யாழ்'' [சீவக: 2011]

யா > ஞா

யாழ் > ஞாழ் [யகர-ஞகரத் திரிபு]
[ஒ.நோ: யாத்தல் > ஞாத்தல்]

''தன் ஞாழ் நவிற்றிய தாமரை யங்கை''
[பெருங்: மகத: 6,17]

யா : பொருந்துதற்கருத்துக் கிளைவேர்

யா > யாஅம் > யாம் > யாம் + பு > யாம்பு > யாம்பு + அல் > யாம்பல்
> ஆம்பல்

ஆம்பல்: பகலில் கூம்பியிருந்து— இரவில் மலரும் நீர்ப்பூ
[ஆர்பல் : Nymphaea pubescens]

ஆம்பல் வகையில் — வெண்ணிறத்தையுடைய வெள்ளாம்பல், செந்நிறத்தையுடைய அரக்காம்பல் ஆகிய இருவகைப் பூக்களும் தமிழகத்திற் சிறப்பாகக் காணப்பெறுபவை. நீல நிறத்தையுடைய நீல ஆம்பலும் மஞ்சள் நிறத்தையுடைய மஞ்சளாம்பலுங்கூட ஓரோரிடங்களில் தமிழகத்தில் உள்ளன. கழகத் தமிழ் இலக்கியங்களுள் பயிலப்பெறும் "ஆம்பல்" என்னும் தனிச்சொல்—மிகக் குறிப்பாக வெள்ளாம்பலையே குறிப்பதாகும்.

புதலியல் அறிஞர் — இலின்னியேசு — இவ்வாம்பற்பூவுக்கு "Nymphaea alba" என்றே பெயரிட்டார். இப்பொழுது, ஆம்பலைக் குறித்த பொதுச் சிறப்புப் பெயராக, "Nymphaca pubescens" என்னும் பெயர் குறிப்பிடப் பெற்று வருகின்றது.

அரக்காம்பல் = செவ்வல்லி

அர் = சிவப்புக் கருத்துக் கிளைவேர்.

அர் + அக்கு > அரக்கு = செம்மெழுகு

அர் + அன் > அரன் = சிவன். அர் + அத்து + அம் > அரத்தம் = செந்நிறக்குருதி

அரக்கு + ஆம்பல் > அரக்காம்பல் = செவ்வாம்பல், செவ்வல்லி (Nymphaea rubra)

ஆம்பற்பூவிற்கு — "அல்லி" என்ற பெயரும், "குமுதம்" என்னும் மற்றொரு மக்கள் வழக்குப் பெயரும் உள்ளன.

தாமரை—பகலிற் பூத்து விளங்கும்! ஆம்பற்பூ—மாலை தொடங்கி, கன்னிவிடியற்காலம் வரையிலான கால அளவில் பூத்து ஒளிறும்!

ஆம்பல் இரவில் பூப்பது பற்றிய பதிவுகளாவன :

1. "மதிநோக்கி மலர்வீத்த ஆம்பல் வான்மலர்" (கலி: 72:6)

[நச். உரை: மதியை நோக்கி அலர்ந்த ஆம்பலினது வெள்ளி தாகிய மலரை...]

[மே.கா: "ஆம்பல் அலர்விக்கும் வெண் திங்களே"
(நம். திருவிருத்: 76)

2.' 'கயக்கணக் கொக்கின் கூம்புமுகை அன்ன
கணைக்கால் ஆம்பல் அமிழ்துநாறு தண்போது
குணக்குத் தோன்று வெள்ளியின் இருள்கெட விரியும்''
(நற்: 230:2-4)

[உரை: குளத்தின் கண்ணுள்ள அழகிய கொக்குப் போல கூம்பிய முகையையும், அவற்றிற்கொத்த திரண்ட தண்டினைமுடைய ஆம்பலின் அமிழ்துநாறும் மெல்லிய மலர் — வைகறையிலே இருள்கெட மலரா நிற்கும்............] (மலராநிற்கும் = மலரும்)

செல்வச் செழிப்புடைய மனைகள்! பூந்தொடிகளை அணிந்த மகளிர் அந்திப்பொழுதில் விளக்கு ஏற்றுகின்றார்கள்! அப்போது கூம்புகளாக நின்றிருந்த ஆம்பலின் முகைகள் தளையவிழ்கின்றன! மலரத் தொடங்குகின்றன!

3. ''ஆம்பல் ஆயிதழ் கூம்புவிட- வளமனைப்
பூந்தொடி மகளிர் சுடர்தளைக் கொளுவி'' (குறிஞ்சி: 222-223)

காலைநேரம்! தாமரை மலர்ந்து நிற்கின்றது! அத் தாமரைக் குளத்தில் — ஆம்பல் கூம்புதலைக்கொண்டு கைகுவித்த நிலையில் நிற்கின்றது! அந்நேரத்தில் ஒரு பெருங்காற்று வந்து குளப்பரப்பில் மோதுகின்றது! பூ மொட்டாக—இதழ்விரியாத—தளையுற்ற ஆம்பல் முகைகள் தாமரையின் முன்னர் வளைகின்றன! இக் காட்சியைக் காணுகின்றார்— பரணர்! அரசனின் மகள் சினங்கொண்டவுடன் — தோழியர் குழு அவளுக்கு எதிரில் கைகுவித்து வணங்கி நிற்பது போன்று கற்பனை செய்கின்றார்! அது—இது!

4. ''சுடர்த் தொடிக் கோமகள் சினந்தென அதனெதிர்
மடத்தகை ஆயம் கைதொழு தாங்கு
உறுகால் உற்ற ஓங்கி ஆம்பல்
தாமரைக்கு இறைஞ்சும்'' (நற்: 300:1-4)

தாமரை மலர்ந்திருக்கும் காலம் — ஆம்பல் கூம்பி நிற்கும் காலமாகும் என்னும் காட்சியுண்மை — இவ் வரிகளிடையே வண்ணங்காட்டி நிற்பதைக் காணலாம்!

இரவிற் பூக்கும் இயல்புடைய இவ் ஆம்பல், பகற்பொழுதெல்லாம் இதழ்கள் விரிவுறாமல் தளையுற்றுக் கூம்பியிருக்கும் நிலையைக் கவனித்த தமிழர், — தாமரை போன்ற மலர்வகைகள் விரிந்து மலர்ந்திருக்கும் அப் போழ்துகளில், இந் நீர்ப்பூ மட்டும் கட்டுற்றுக் கிடப்பதைச் சிறப்புக் கருப் பொருண்மையாக அமைத்தே, "யா" என்னும் கட்டுற்றுச் செறிந்திருக்கும் கருத்தடிப்படையிலான (யா > யாஅம் > யாம் > யாம் + பு > யாம்பு > யாம்பு + அல் > யாம்பல் >) ஆம்பல் என்றவாறான சொல்லைத் தோற்றுவித்துள்ளனர்!

ஆம்பல் = குமுதம்

நற்றிணைப் பாடலொன்றில் கூறப்பெறும் "கூம்புமுகை" (230:2)

என்னும் அதன் பகற்கால வடிவத் தோற்றம் நன்கு ஆழ உளங்கொள்ளத் தக்கதாகும்.

[கும் > கும்பு = கூடு கும்பு + அல் > கும்பல் = கூட்டம் கும்பு = திரள். [தெலுங்கு] gumpu = crowd, collection] குமுக்கு = மொத்தம், கூட்டம்.

கும்பு > குப்பு ஒ.நோ: (வெம்பு > வெப்பு) (செம்பு > செப்பு)

குப்பு + ஐ > குப்பை = 1. குவியல்

"உப்பின் பெருங்குப்பை நீர்ப்படியின் இல்லாகும்"
[திரிகடு: 83]

2. "குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை"
[பொருந: 244]

3. செத்தை, கழிவுக் கூளம்

குப்பை > (Germanic.) haup, hūp >
> OHG : houf, hūfo >
> OS : hōp >
> OE : heap >
[English] heap = group of things lying one on another, large number or quantity
(P. 495-C.O.D.)

கும்பு > கூம்பு (ஆதிநீடல்)

கூம்புதல் = 1. குவிதல் "மலர் கூம்ப" (நைடத. சந்திரோ: 2)
2. ஒடுங்குதல் (சூடா.)

கூம்பு = பூமொட்டு
"தாழைக் கூம்பவிழ்ந்த வொண்பூ" [ஐந். ஐம்: 49]

பகலில் பூமொட்டாகக் குவிந்த நிலையில் தோற்றந்தரும் ஆம்பல் பூவானது—கூடித் தளையுற்றுக் கிடக்கும் தோற்றத் தகைமையால்- (கும் > கும்மு > கும்முது > குமுது > குமுது + அம் >) குமுதம் என்றவாறொரு வழக்குச் சொற்கொண்டும் மக்களிடையே நிலவி வந்தது.

குமுதம் = 1. வெள்ளாம்பல் [திவா.]

2. செவ்வாம்பல்

''துவரித மலர்வன குமுதம்''
[கம்பரா. நாட்டுப்: 43]

குமுதம் > (Sanskrit) Kumuda = white water-lily
(P. 292- M.M. william's
Sans- and -Eng. Dic.)

"Kumuda"—என்னும் சொல்வடிவம் அதற்குரிய பொருளும் சமற்கிருத மொழிக்கு உரியதன்று என்பதற்கு—அச் சமற்கிருதவாணர் கட்டியுரைக்கும் மூலவழிப் புளுகுமுறையே முழுச் சான்றாகும்.

அன்னோர் காட்டும் மூலவழி :

Ku = (வினாச்சொல்.) இது "குவி", "குஹ" போன்ற வினாச் சொற்களின் அடி! (ஒ நோ: "குதஸ்" = எங்கிருந்து? குத்ர = எங்கு?)

Ku-muda. (skt) mud = மகிழ்ச்சி. (skt) Ku-muda = exciting What joy? = என்ன மகிழ்ச்சியுறுத்துவது?

(நூற்சான்று: மேற்படி நூல்: பக்: 292)

"குமுதம்" என்னும் பூப்பெயர் சமற்கிருதத்தில் எப்படித் தோன்றியது தெரியுமா?— "என்ன மகிழ்ச்சியுறுத்துவது?" என்னும் பொருளடிப் படையிலேயே "Ku-muda" என்றவாறு உருவாக்கப்பட்டுள்ளதாம்!!! சமற்கிருதவாணரின் புளுகுமுறைக்கு — இது ஒரு சோற்றுப்பதமாகும்!

ஆம்பல் = அல்லி

பகலில் கூம்பியவாறிருந்து முறையாகவே காட்சி தரும் பூமொட்டு என்னும் பொருளில் "ஆம்பல்" என்னும் சிறப்புப் பெயரை வழங்கிய தமிழர்,— இரவில் மலரும் சிறப்பு நோக்கி — இரவு என்னும் கருத்தடிப் படையிலாக — (அல் > அல்+ல்+இ >) "அல்லி" என்றவாறொரு சொல்லையும் தோற்றுவித்து வழங்குவராயினர்!

யா > யாஅல் > யால் > யால் + அம் > யாலம் > ஆலம் = கருமை

யா > யாஅல் > யால் > ஆல் > அல் = கருமை

அல் = (கருமை) > கரிதாகிய இருள், இரவு நேரம்.

அல் = இராக்காலம்

1. "அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்" [நற்: 142:9]
2. "அல்சேர்ந்து அல்கி அசைதல் ஓம்பி" (மலை: 256)
3. "பின்னையும் அல்லிடைப் பெயர்ந்தனர்" [சிலம்பு: 13:136]
4. "அல் உணா வல் அமணர்" (தேவா: 4:101:2)

''அல்லும் பகலும்'' என்னும் இன்றைய பரவலான வழக்கிலும்-- இவ் அல்லியின் பழந் தொடர்ச்சிப்பாட்டைக் காணலாம்.

அல் > அல்+ல்+இ > அல்லி= இரவிற் பூக்கும் ஆம்பல் மலர், ஆம்பற்பூ வகை, அல்லிக்கொடி
(காண்க: கலி: 13:10-13, 91:1-3)

ஆம்பற்பூவின் காய்க்கும் "அல்லி" என்ற பெயருண்டு! இவ் அல்லிக் காயில்—சிறிய கடுகுகள் போன்ற விதைகளை "அல்லியரிசி" என்பது வழக்கு. கணவரையிழந்த கைம்பெண்டிர்—இவ் அல்லியரிசியை உணவாகவுண்ணும் வழக்கமும் பண்டைத் தமிழகத்தில் இருந்துவந்தது!

காண்க: 1. "சிறுவெள்ளாம்பல் அல்லி உண்ணும்
கழிகல மகளிர் போல" (புறம்: 280:13-14)
2. "அல்லி உணவின் மனைவியோடு" (புறம்:250:5)

''கோடி'' — என்னும் எண்ணுப்பெயர் — ''உச்சம்'' என்னும் பொருட்பாட்டில் நூறு நூறாயிரமாகிய நூறிலக்கத்தைக் குறித்த பண்டைப் பழப்பெயர்!

[குடு > குடு+மி > குடுமி = உச்சி

குடு > கொடு > கோடு = 1. மலையுச்சி.
''பொற்கோட்டிமயமும்'' (புறம்: 2:24)
2. மலை. ''குமரிக்கோடும்''
(சிலம்பு: 11:20)

கோடு = உயரமான நிலம், மேட்டுநிலம்
''கோட்டின் வித்திய'' (மதுரை: 286)

கோ+இ > கோடி = உச்ச எண், நூறிலக்கம்.

இச் சொல்லே—சமற்கிருதத்தில் "Kōṭi" என்றவாறான திரிபெய்திய வடிவில் கடன் கொள்ளப்பெற்றது. பிராகிருத மொழியில் இவ்

வடிவம் Kroḍi என்று நின்றது. இப்பிராகிருத வடிவின் கடுங் கொச்சைத் திரிபே இந்தியில் வழங்கும் Kroṛ என்பது. இச்சொல்லி னின்றே ஆங்கில மொழியில் Crore என்னும் கோடியைக் குறித்த வடிவம் படிவெய்தியது!

கோடி > (Sanskrit) Kōṭi > (Prakrit) Kroḍi > (Hindi) krōr (K(a)rōr) > (English) Crore

(English) Crore = ten millions.

ஒன்று என்னும் எண்ணுப்பெயர்க்கும் கீழாக — மிக நுண்ணுணுக்க வேறுபாடுகளையுடைய மீச்சிறுகூற்றுநிலை எண்ணுப் பெயர்களைக் கூறுபடுத்தி வழங்கிவந்த நுழைபுலத் தமிழர்கள்— "கோடி" என்னும் எண்ணுப் பெயருக்கும் மேலாக—மீப்பெருங்கூற்று எண்ணுப் பெயர்களை யும் சுட்டி வழங்கிவந்த உண்மையைத் தொல்காப்பியத்துள்ளும் காணலாம்.

புள்ளிமயங்கியலில், "ஐ அம் பல் என வரூஉம் இறுதி அல்பெயர் எண்"— என்றவாறுவரும் நூற்பாப் பகுதியுள்— (துமர் > தமர் > (தமர் + ஐ > தமரை > தாமரை) (சங்கு + அம் >) சங்கப், ஆம்பல் என்றவாறு மூன்று எண்ணுப் பெயர்கள் குறிக்கப் பெற்றுள்ளன. ''ஆம்பல்'' என் பது யாம்பு + அல் > யாப்பல் > ஆம்பல் என்னும் வழிமுறையில் விளர்ச்சி யெய்தி வடிவுற்றது எனும் உண்மையறியாத தொல்காப்பியர் ''அல்'' எனக் குறிக்கவேண்டிய ஈற்றைப் ''பல்'' என்றவாறு மயங்கிக்கொண்டு பதிவு செய்துள்ளார். ('' ஐ அம் அல் என வரூஉம் இறுதி''—என்ற வாறே அப் பதிவுமுறை அமைந்திருக்க வேண்டும்.)

''நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்
மையில் கமலமும் வெள்ளமும் நுதலிய
செய்குறி யீட்டம் கழிப்பிய வழிமுறை''— எனவரும்

பரிபாடல் வரிகளால் (2.13-15), நெய்தல்— குவளை—ஆம்பல்— சங்கம் —தாமரை— வெள்ளம் முதலியன ஏறுவரிசை முறைமையில் முறையுறச் சுட்டப் பெற்றுள்ளனவாகவே தோற்றுகின்றது!

''கோடிபல அடுக்கிய பொருள் நுமக்கு உதவிய'' என்றவாறும் [புறம்: 202:7], "ஒன்று பத்தடுக்கிய கோடிகடை யிரீஇய பெருமைத்தாக" என்றவாறும் [புறம்:18:5-6] வந்துள்ள புறவரிகளாலும்—பிறவிடங்களில் பயிலப்பெறும் பல்வேறு பதிவுகளாலும் — கோடி என்னும் எண்ணிக்கை

யைப் பலமடிப் படிகளாக அடுக்கியெண்ணிப் பயன்படுத்திய தமிழர்களின் எண்ணியலறிவின் விரிவுப்பரப்பை ஓரளவுக்கு விளங்கிக்கொள்ள இயல்கின்றது.

கோடி எண்மடங்கு கொண்டது — சங்கம் என்றும், சங்கம் எண் மடங்கு கொண்டது—விந்தம் என்றும், விந்தம் எண்மடங்கு கொண்டது— ஆம்பல் என்றும் — ''ஈழயாழறிஞர்'' — விபுலானந்தர் தம்மின் யாழ் நூலில் ஒழுங்குபடக் கூறிச் செல்வார்.

ஆம்பல் என்பது ''குமுதம்'' என்னும் சொல்வழக்குக் கொண்டும் சுட்டப் பெற்றமையால் — ''குமுதம்'' என்னும் பெயர், ''பேரெண்'' என்னும் பொருட்பாட்டிலும் மக்களிடையே வழங்கி வரலாயிற்று.

யா > யாஅம் > யாம் > யாம் + பு > யாம்பு > யாம்பு + அல் > யாம்பல் > ஆம்பல்

ஆம்பல் = மூங்கில்

மூங்கில் — ஒரு புதர்நெடுஞ்செடி! பெருமூங்கில், சிறு மூங்கில் எனும் இருவகை மூங்கில்கள் தமிழகத்தில் பெரும் பயன்பாட்டில் இருந்து வருவன ஆகும்! பெரு மூங்கிலைக் கழை, உந்தூழ், வெதிர், வெதிரம் என்றவாறான சொற்களாலும் நம்மோர் சுட்டினர்! சிறு மூங்கிலானது— இக்காலத்தில் — மலைமூங்கில், கல்மூங்கில் என்றவாறான பெயர் களாலும் சுட்டப்பெறுகின்றது!

வெதிர் :

விய் > விய்து > விது

விது + உம்பு > விதும்பு. விதும்புதல் = நடுங்குதல்

விது + ப் + பு > விதுப்பு = நடுக்கம்

''பிறைநுதல் பசப்பூர பெருவிதுப் புற்றாள்'' (கலி: 99)

விது + இர் > விதிர் விதிர் + (த்) + தல் > விதிர்த்தல் = நடுங்குதல்

''மைபுரை மடப்பிடி மடநல்லார் விதிர்ப்புற''
(பரிபா: 10:47)

விதிர் + (ப்) + பு > விதிர்ப்பு = நடுக்கம்

''என்போற் பெருவிதிர்ப்புறுக'' [புறம்: 255]

[மே.கா:] விதிர் விதிர்த்தல் = நடுங்குதல்

''மெய்யெரி துயரின் மூழ்கி விதிர்விதிர்த்து''
(சீவக: 1540)

விதிர் > வெதிர் [இகர-எகரத் திரிபு]
= காற்றில் அலைவுறுவதாகிய மூங்கில்
[காண்க: "வெதிர்." தொல்- எழுத்: 364-1 குறிஞ்சி: 35, அகம்: 27:2, 185-6, 395-14 புறம்: 109:4]

வெதிரம் :

வெதிர் + அம் > வெதிரம் (காண்க: 62:1, ஐங்: 278:1, புறம்: 277:5)

உந்தூழ் :

உய் : வளைதற்கருத்து மூலவேர்

உய் > ஊய் > ஊழ் = முறை (ஊழ் = தடவை)

"பல்லூழ் பெயர்ந்தென்னை நோக்கும்" (கலி: 61)
(பல்ஊழ் = பலமுறை)

ஊழ் = முறைமை. "ஊழிற்றாக நின் செய்கை" (புறம்: 29)

உந்துதல் = மேற்செல்லுதல், மேல்நோக்கி வளர்தல்
ஒ.நோ: "நெடுங்கழைக் கொம்பர்"
[மலை. 237]

உந்து + ஊழ் > உந்தூழ் = காற்றின் அலைப்புக்குத் தக வளைவுற்று அலமரும் பெருமூங்கில்

"...............................பயம் புக்கு
ஊழ் உற்று அலமரும் உந்தூழ்" (மலை: 132-133)
[மே.கா: குறிஞ்சி: 65, குறுந்: 239:6, அகம்: 78:8]

வேரல் :

விய் > விய் + அர் > வியர் > வியர் + அல் > வியரல் > வேரல்
= அகலித்துப் பரவலாக முளைத்தெழும் மூங்கிற்செடி

[வேரல்: (காண்க:) குறிஞ்சி: 71, மலை: 223-224, குறுந்: 18:1, நற்: 232:4.]

வியரல் > வேரல் (ஒ.நோ:

1. வியல் > வியல் + ஐ > வியலை > வேலை =

விரிவாக அகன்றிருக்கும்
நீர்ப்பரப்பாகிய கடல்.

2. வியர்>வேர்

3. வியர்வை>வேர்வை

கழை :

குய் : துளைக்கருத்து மூலவேர்

குய்>குய்+ஐ>குயை>குழை= துளை
[குழை>குழாய் ஒ.நோ: உரை>உராய்]

குழை>கழை [உகர-அகரத் திரிபு]
கழை= துளையுடையதாகிய மூங்கில்

வேழம் :

வய்>வய்+இர்>வயிர்= துளை

வய்>வெய்>வேய்= துளையுடையதாகிய மூங்கில்

வேய்+அம்>வேயம்>வேழம்= மூங்கில்
(மேலும் விளக்கங்களுக்குப் பக்கம்: 29 காண்க!)

மூங்கில் :

முய்>மூய்>மூய்+கு>மூய்ங்கு>மூய்ங்கு+இல்>
மூய்ங்கில்>மூங்கில்

முய்= செறி, சேர், நெருங்கு, அடர், தழுவு
முய்+அங்கு>முயங்கு. முயங்குதல்

முயங்குதல்= பொருந்துதல், புணர்தல், தழுவுதல்
''முயப்பிடி யானையின் செவி யன்ன'' [நற்: 230:1]
[உரை: நெருங்கிய பிடியானையின் செவி போன்ற...]

முய்>மூய். மூய்+தல்>மூய்தல்= நெருங்கிச் சூழ்தல்
''ஆயிரரு மாங்கண் மூயினர்கள் அண்ணலை''
[கந்தபு. சக்த்திரவா: 18]

மூய்>மூழ். மூழ்+தல்>மூழ்தல்= பற்றிக் கொள்ளுதல்
''மூழ்ந்த பிணி நலிய'' [நன்: 417: விருத்.]

மூழ்+(த்)+தல்>மூழ்த்தல்= மொய்த்தல், செறிதல்

''கதழ்பு மூழ்த்தேறி'' [பரி: 10:18]

(மே.கா: திவாகரம்)

மூய்ங்கு+இல்>மூய்ங்கில்>மூங்கில் = செறிவுற அடர்ந்து வளரும் கழை

அமை :

செறிவுறப் பல்கி வளரும் தகைமையுடையதாகிய மூங்கில்—"அம்" என்னும் கூடுதற் கருத்துக் கிளைவேர் வழியில் (அம்+ஐ>) ''அமை'' என்னப் பெற்றதும் இவ்விடத்தில் நன்கு ஒப்பிட்டுக் காணத் தக்கதாகும்.

அம்+ஐ>அமை= மூங்கில்

1. "ஆடு அமைக் குயின்ற அவிர்துளை மருங்கில்" (அகம். 82:1)

2. „இல்லாள் அமை ஆர் தோள்" [குறள்: 906]

(மே.கா: சிலம்பு: 10:157, திணைமொ. 3.103 கம்பரா: 1,21,29)

அமை= திண்ணிய மூங்கில்

"அமையொடு வேய்கலாம் வெற்ப" (பழமொழி: 215)

''முய்''—என்னும் செறிதற் கருத்துப் பொருளடிப்படையில் (முய்>'மூய்> மூய்+கு> மூய்ங்கு> மூய்ங்கு+அல்> மூய்ங்கில்>) மூங்கில் என்றவாறு வடிவெய்தினாற் போன்றே, — ''அம்'' என்னும் (செறிதல்) கூடுதற் கருத்துக் கிளைவேர்ச் சொல்லில் (அம்+ஐ)> ''அமை'' என்றவாறு வடிவெய்தினாற் போன்றே —, ''யா'' என்னும் பொருந்துதற் கருத்துக் கிளைவேர் வழியாக, [யா>யாஅம்>யாம்>யாம்+பு> யாம்பு யாம்பு> +அல்>யாம்பல்>] ஆம்பல் என்றவாறு மூங்கிலைக் குறித்த பிறிதொரு சொல்லும் தோற்றம்பெற்றது.

ஆம்பல்= மூங்கில்

1. "இசையின் குழலும்... மூங்கிலும்...ஆம்பல் ஆகும்" (பிங்: 3133)

2. "விதிர் இணை புயம் முதுகு ஆம்பல்" (புள்ளிருக். கலம்: 90)

3. "ஆம்பல் முத்தே" [மறைசையந்: 92]

ஆம்பல்—என்பது மூங்கில்! மூங்கிற்கோல் உள்ளே புழையுடைமையால் புல்லெனவே கொள்ளவும் — சொல்லவும் பெற்றது. ''புறக் காழனவே புல் என மொழிப'' (தொல்.பொருள்.மரபி, 87) எனவரும் தொல்காப்பிய நூற்பா இவ்விடத்திற் கருத்திற் கொள்ளவேண்டியதாகும். மூங்கிற் கோலால் செய்யப் பெற்ற இசைக்குழல் [புல்+அம்+குழல்>] [புல்லங்குழல்] புல்லாங்குழல் என்னப் பெற்று வரும் அறாத்தொடர் வழக்கே—இதை நன்கு தெளியவுணரப் போதிய சான்றாகும்! ஆம்பல் என்பது மூங்கிலுக்குரிய பெயருள் ஒன்றாயினமையால் — உரியவாறு துளைகளிடப்பெற்ற மூங்கிற் கோலாகிய புல்லாங்குழல்.— "ஆம்பற் குழல்" என்றவாறும் குறிக்கவும் பயிலவும் ஆயிற்று!

ஆம்பல்+குழல்>ஆம்பற்குழல்= புல்லாங்குழல்

"முல்லைக்குரிய கருப் பொருளாகிய...கோவலரும்,
ஆம்பற் குழலும்..." (நம்பியகப்.வி. 251:உரை.)

ஆம்பல்+அம்+குழல்>ஆம்பலங்குழல்= மூங்கிற்குழல், புல்லாங்குழல்

1. "ஆம்பலங் குழலின் ஏங்கி" [நற்: 113:11]
2. "ஆம்பலந் தீங்குழல் கேளோமோ தோழி" (சிலம்பு: 17:20)

ஆம்பல்= ஆம்பற்குழல், புல்லாங்குழல்

1. ஆபெயர் கோவலர் ஆம்பலொடு அளைஇ...
   செவ்வழி வகுப்ப......" (அகம்: 214 12)
2. "ஆம்பல் ஊதி" [புறம்: 281:4]

ஆம்பல் = (ஆம்பற்குழல், புல்லாங்குழல்)> ஊதுகொம்பு

''வயிரே இரலை ஆம்பல் கோடுஎன்று ...... நான்கும் கொம்பு''
[திவா.நி: 1354]

"ஆம்பல்" என்னும் சொல்,— மூங்கில் என்னும் கருத்துப்பொருள் வழியே புல்லாங்குழலைக் குறித்து ஆளப்பெற்றது என்னும் தெளிவு வழக்கறியாமல் — நச்சினார்க்கினியரும் — அரும்பதவுரையாசிரியரும்— அடியார்க்குநல்லாரும் தத்தம் உரையிடங்களில் பலவாறு குழம்பிக் குழப்புவாராயினர்! (காண்க: குறிஞ்சி: 221-222 (நச்.). கலி: 108:62 (நச்.). சிலம்பு: 17:20 (அரும்; அடியார்க்.) சீவக: 1314, 1662. (நச்.)

ஆம்பற்பண் என்பது குழலோசைக்குரிய பொதுப்பெயர்! சிலப்

பதிகாரத்தில் —மதுரைக் கண்டத்துள் பயிலப் பெற்றுள்ள ஆம்பலந் தீங் குழல் [17:20] என்னும் சொற்றொடர்க்கு "ஆம்பற்பண்" என்றவாறு எழுதப்பெற்ற பிறவுரைகளை மறுத்த அடியார்க்கு நல்லார்—அது, வெண் கலத்தால் குமுத வடிவாக (ஆம்பல்வடிவாக) அணைசு பண்ணிச் செறித்த குழல் என்றவாறு மிகைக்கட்டு உரையெழுதி மேலும் மயக்கமுறுத்தினார்.

ஆம்பல் > ஆமல் [பேச்சுவழக்கு]

ஆமல் = 1. மூங்கில் [மூலிகை அகராதி]
2. நச்சு மூங்கில் [மூ.அ.]

ஆம(ல்) ஆமம் = 1. நச்சு மூங்கில் (மூ அ.)
2. மூங்கில் (மூ.அ.)

யா : பொருந்துதற் கருத்துக் கிளைவேர்

யா > யாஅம் > யாம் > யாம் + ஐ > யாமை

யாமை : பிற உயிரிகளால் ஊறுவரும் சூழல் நேரும்போது— உடனே தன்னின் தலையுறுப்பையும், நான்கு கால் களையும் ஒருசேர உள்ளொடுக்கிக் கொள்ளும் ஈரிட வாழி (Amphibian), (ஆமை, கயலாமை, கடலாமை)

யாமை > ஆமை :

1. "ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்" (குறள்:126)
2. "ஆமை தன் உறுப்பு ஒர் ஐந்து
அதனுளே அடக்குமாப் போல" [பகவற்: 2:50]
3. "ஆமைபோல் ஒடுங்கி அடங்கினேன்" [திருவருட்: 3448]

வல்லிய புறவோட்டுக்கு அடியினின்று- முற்புறத்திலும் இரு பக்கப் புறங்களிலும் இயக்கமுறும் தன் ஐந்து உறுப்புகளையும் இக்கட்டு நேரத்

தில் ஒருசேரக் கட்டுறுத்தி ஒடுக்கிக் கொள்ளும் ஆமையின் வினைப்பாடு கருதியே,— ''யா'' என்னும் பொருந்துதற் கருத்துக் கிளைவேரின் வழியிலேயே,— ("யா > யாஅம் > யாம் >யாம்+ஐ >) யாமை என்னும் சொல் உருவாக்கப்பெற்றுள்ளது என்னும் நுண்ணுண்மையை அதனைப் போன்றே இக்கட்டுக் காலத்தில் ஒருமை வினையாற்றும் "நத்தை" என்று இன்று மக்களாற் பரவலாகக் குறித்து வழங்கப்பெறும் "நந்து" என்னும் சொல்லின் சொற்பிறப்புத்தோற்றக் கருத்துக் கருவாலும், நாம் விளங்கிக் கொள்ளவியலும்!

"உய்"—வளைவுக்கருத்து மூலவேர்

உய் > ஞய் > நுய் = வளை, வளைவுற உள்ளொடுங்கு

நுய் > நுய்+து > நுய்து > நுது. நுதுத்தல் = உள்ளொடுங்குதல்

நுதுத்தல் = உள்ளொடுங்குதல், அவிதல், அவித்தல்

"நெய்யால் எரி நுதுப்பேம் என்றற்றால்" [குறள்: 1148]

நுது > நுந்து > நந்து [உகர-அகரத் திரிபு]

நந்துதல் = அவிதல். [ஒ.நோ: நந்தாவிளக்கு = அவியா விளக்கு [பட்: 247]

நந்துதொறும் = அவியுந்தோறும் [முல்லை : 49]

நந்து = பிற உயிரிகளால் ஊறுவரும் சூழல் நேரும்போது— உடனே முகப்புப் பகுதியில்உள்ள—கதிர் போன்றஉணர்வறி கோட்டினை உடைய வெளித்துருத்தியுள்ள சுரிமுகப் பகுதி முழுவதையும் உள்ளொடுக்கிக் கொள்ளும் இயல்புடைய நத்தை.

1. "கதிர்க்கோட்டு நந்தின் சுரிமுக வேற்றை" [புறம்: 266:4]
2. "நந்தும் முரலும் ஈர் அறிவினவே" [தொல். பொருள். மரபி: 29:1]

நந்து > நத்து [வலித்தல் திரிபு]

''நத்தொடு நள்ளி நடையிறவு'' (பரிபா: 10:85)

நத்து+ஐ > நத்தை = நந்து

யா : வினாக்கருத்து மூலம்

யா ?: வினா ஒலி!

தமிழ்மொழியில் முதந்கண் மாந்தன் விளைத்த வினாக்கேட்புக் கான ஒலி! எவ்வகைக் கேள்விகேட்புக்குமாக முதற்கண் வழங்கிய பொது ஒலி! வினாமொழி! எந்த ஒன்றையும் அறிந்து கொள்ளுதற்கென மாந்தன் எழுப்பிய முதல் வினாச் சொல்!

வினவிக் கேட்கும் எக் கேள்விக்கும் உரிய —பொதுஒலியீடாக முந் தைப் பொழுதில் — இவ்வொலியே நின்றவுண்மையை — இதனின்றும் தோன்றிய மிகப் பலவாகிய வினாச்சொற்களின் ஒட்டு மொத்தப்பரப்பு — நமக்கு நன்கு துலக்கிக் காட்டுகின்றது!

யா :

"யா என் வினாவும்" (தொல்.எழுத்: உருபி:3,6:1, உயிர்ம:22:2)

யா : எது?

"யா காவாராயினும் நாகாக்க" (குறள்: 127:1)

: எவை? என்ன?

''பெண்ணிற் பெருந் தக்க யாவுள?" [குறள்: 54:1]
(மே.கா: குறள்: 380:636, 781)

"யா"—என்னும் வினாவொலியின் அடியாகப் பிறந்த ஐம்பால் வினாப் பெயர்கள் :

1. யாவன் = எவன்?

"அன்"—ஆண்பாற் பெயரீறு.
[ஒ.நோ: அன்பு + அன் > அன்பன்]

யா + (வ்) + அன் > யாவன் = எவன் [Interrogative Pronoun]

(1-1) "யாவன்......என்னும் ஆவயின் மூன்றொடு"
(தொல். சொல். பெயரி: 8:6-7)

(1-2) "யாவனோ ஒருவன் என்றாள்" (கம்பரா. உலாவியற்: 11)

2. யாவள் = எவள் ?

"அள்"- பெண்பாற் பெயரீறு

யா+(வ்)+அள்>யாவள்= எவள்

(2-1) "......யாவள்......என்னும் ஆவயின் மூன்றொடு"
[தொல். சொல். பெயரி: 8:6-7]

(2-2) "யாவளோ எம் மறையாதீமே" (ஐங்குறு: 370:4)

3. யாவர் = எவர்?

"அர்"- பலர் பால் ஈறு

யா+(வ்)+ஆர்>யாவர்= எவர்

(3-1) ''......யாவர் என்னும் ஆவயின் மூன்றொடு''
(தொல். சொல். பெயரி:8:6-7)

(3-2) ''பலர்அறி சொல் முன் யாவர் என்னும் பெயரிடை''
[தொல். எழுத். தொகை: 30:1-2]

(3-3) ''யாவர் வாய் திறக்க வல்லார்'' [கம்ப ரா. பூக்கொய்:6]

யா+அர்>யாஅர்>யார் = யாவர், எவர்

''யாஅ ரென்னும் வினவின் கிளவி''
[தொல். சொல். வினை: 13]

[மே.கா: அகம்: 50:8, பரி: 17:8, நாலடி: 119:1]

யார்>ஆர் = எவர்?

''ஆர் அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை''
[திருமந்: 95]

4. யாவது = எது?

"அது"—அஃறிணை ஒருமைச் சுட்டுப்பெயர்

யா+(வ்)+அது>யாவது= எது

(4-1) "நினக்கியான் மறைத்தல் யாவது" [நற்: 72:5]

(4-2) 'ஆயிடை-உடன்றோர் உய்தல் யாவது [புறம்: 97:17]

(4-3) "இலம்பாடு அகற்றல் யாவது" [புறம்: 281:15]

யா+அது>யாஅது>யாது

''யாது யா........என்னும் பெயரும்''
[தொல்.சொல்.பெயரி: 13:5]

5. யாவை = எவை?

"அவை" — அஃறிணைப் படர்க்கைப் பன்மைச் சுட்டுபெயர்
[தொல். சொல். 167. சேன.

[காண்க: ''அவை இவை உவை என வரூஉம்''

யா + அவை > யா அவை > யாவை = எவை

(5-1) "யாது யா யாவை என்னும் பெயரும்"
[தொல். சொல். பெயரி: 13:5]

(5-2) "புகழுந் தலைவன் யார் நூற்பொருள் யாவை"
[மணி: 27:168]

யா + வ் + ஐ > யாவை என்ற நிலையில்— இவ் வினாப்பெயர் உருவாகியுள்ளதாகத் தொல்காப்பியர் கருதியது —பிழைபாடானதாகும்.

காண்க: ''யாவென் வினாவின் ஐயென் இறுதியும்''
[தொல். எழுத். உருபி: 6:1]

யாவன்—யாவள்—யாவர்—யாது—யாவை

யாவன் > யேவன் > ஏவன் > எவன்
யாவள் > யேவள் > ஏவள் > எவள்
யாவர் > யேவர் > ஏவர் > எவர்
(யாஅர் > யார்)
(யா + அது > யா + (வ்) + அது > யாவது)
யா + அது > யாது > யேது > ஏது > எது
யாவை > யேவை > ஏவை > எவை
[யா > யே > ஏ
ஒ.நோ: யானம் > யேனம் > ஏனம்
யானல் > யேனல் > ஏனல்]

யா:

யா + அன் > யா அன் > யான் > யேன் > ஏன் > என்

ஏன் > என் என் + (ன்) + அது > என்னது? [ஒருமை]
என் + (ன்) + அ > என்ன? (பன்மை)

ஏன் = எதற்கு

1. ''அடுத்த வினையுளதாயி னிறையே னென்னில்''
[சிவப்பிர: 2,6

2. ''ஏன் இங்கு வந்தாய்?'' [உ.வ.]

ஏன் > என் = யாது?

''இல்லது என் இல்லவள் மாண்பானால் உள்ளது என்
இல்லவள் மாணாக் கடை'' [குறள்: 54)
[மே.கா: குறள் : 70,812]

என் = எப்படி?

''என் பரியும் ஏதிலான் துப்பு'' [குறள் .862]

என் = ஏன்?

1. ''இருந்துள்ளி என்பரிதல் நெஞ்சே'' [குறள்: 1243]
2. என் மறந்தீர் என்றென்னைப் புல்லாள்" [குறள்:1316]

என் = என்ன, எவை,

''ஈவார்கண் என் உண்டாம் தோற்றம்'' [குறள்:1059:1]

என் = எவை (>எல்லாம்)

''அறிவிலார் என்னுடைய ரேனும் இலர்'' [குறள்: 430]

என் + (ன்) + அ > என்ன (பன்மை)

1. ''என்ன பெயரும் அத்திணை யவ்வே''
[தொல். சொல். பெயரி: 12]
(என்ன பெயரும் = எவ்வகையான பெயர்களும்)
2. ''வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல'' (குறள்: 1100)

என் + (ன்) + அர் > என்னர் = எப்படிப்பட்டவர், யாவர்

''என்ன ராயினும் இனிநினை வொழிக'' (நற்: 64:1)
[என்னோரும் = எப்படிப்பட்டவரும், எத்தன்மையோரும்
(பு.வெ. 9:6. கொளு.)

என் + (ன்) + அது > என்னது? = எது

என்னது > என்னாது (கொச்சை.)

என்னது + உம் > என்னதுவும்

என்னதுவும் > என்னதூஉம் (அளபெடை)
= எதுவும்; எந்த ஒரு சிறிதும், எந்த அளவும்
''என்னதூஉம் ஈரஞ் சேரா இயல்பின்'' [அகம்: 65:2-3]
''என்னதூஉம் அறனில மன்ற" (ஐங்குறு: 332:1-2)

என் + (ன்) + (ன்) + ஐ > என்னை = என்ன

"என்னைகொல் ஏதிலார் மாட்டு" [குறள்: 188]!

என் + (ன்) + (ன்) + ஏ > என்னே = என்ன?!

1. ஒரு வியப்புக் குறிப்பு
"ஒரு சிறை யிருந்தே னென்னே" (புறம்: 399:18)

2. ஓர் இரக்கக் குறிப்பு
"அவனா இறந்தான்! என்னே இது! (உ.வ.)

என்னோ :

என் + (ன்) + (ன்) + ஓ > என்னோ = என்னவோ? யாதோ?
"என்னோ பெரும உரைத்திசின் எமக்கே"
[புறம்: 167:11-12]

என்னை > எனை [தொகுத்தல் திரிபு]
(ஒ.நோ: அன்னை > அனை. திண்ணை > திணை)

எனை = என்னை?, எப்படி?

1. ''வாழ்க்கை எனை மாட்சித்தாயினும்'' (குறள்: 52)
2. ''எனைத் துணையர் ஆயினும் என்னாம்'' (குறள்: 144)

என் + ன் + அது > என்னது
என் + து > என்று என்று > எற்று

என்னது அல்லது என்ன தன்மையது என்னும் பொருளில் உருவான "என்று" என்னும் சொல்லானது. — "எந்தநாள்" என்னும் பொருள்படுவதாகிய "என்று" என்னும் மற்றுமொரு சொல்லும் நன்கு வழக்கத்திலிருந்து வந்தமை நோக்கி ("இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது" நாலடி: 36)— குழப்பமயக்கம் நேருறாதவாறு (என்று >) "எற்று" என்றவாறு வலித்தல் திரிபுக்கு உட்படுத்தப் பெற்றது!

இந்நிலை ஒருபுறங்கிடக்க,—(1.) "என்று" என்னும் இடைச்சொல், —என்று சொல்லி" என்னும் பொருட்பாட்டில் தொடர்புறவு இடைச்சொல்லாகவும்— (relative particle), (2) (2-1) "நரைவருமென்றெண்ணி" என்பதில் வினைச் சொற்களுக்கிடையில் "வரும்என்று" என்பதைப் போன்ற — (அல்லது). (2-2) "பாரியென்றொருவன் உளன்" என்பதில் பெயர்ச் சொல்லுக்கும் மாற்றுப்பெயருக்கும் இடையில் வரும்"என்று"என்பதைப் போன்ற-(அல்லது), (2-3) ஒல்லென்றொலித்தது" என்பதில் ஒப்பொலிச் சொல்லுக்கும் (imitative sound) வினைச் சொல்லுக்கும் இடையில் வரும் ''என்று'' என்பதைப் போன்ற — (அல்லது), (2-4) ''பச்சென்று பசந்தது'' என்பதில் வரும் அல்லுருவப் பெயர்ச்சொல்லுக்கும் (abstract noun) வினாச் சொல்லுக்கும் இடையில் வரும் ''என்று'' என்பதைப் போன்ற — (அல்லது), (2-5) '' நிலனென்று — நீரென்று — வானென்று'' என்றவாறு வினை, பெயர், குறிப்பு, இசை, பண்பு, எண் ஆகிய பொருள்கள் பற்றிய சொற்களுக்கு இடையில் வரும் ''என்று'' என்னும் இடைச்சொல்லைப் போன்ற — நிலைகளிலெல்லாம் ஓர் இணைப்பிடைச் சொல்லாகவும்— (Connective particle), (3) ''கலியா

ணத்துக்கு என்று பணம் வைத்திருக்கிறேன்''—என்பதில் வரும் "என்று" என்பதைப் பேற— சொல்லசையாகவும் [an expletive] — தொடர்ந்து பயின்று வருகினற பரந்த வழக்காறுகளினால் — மயக்கமேற்படக்கூடிய நிலையையுங் கருத்திற்கொண்டு,— ''என்னது'' என்னும் பொருட் பாட்டையுடைய "என்று" என்பது, நம் இலக்கிய இலக்கண அறிவரால் "எற்று" என்றவாறு வலித்தல் திரிபுறுத்தப்பெற்று — வழங்கத்தலைப் படுவதாயிற்று!

என்று = ஓர் இடைச்சொற் குறிப்பு

"என்றென் கிளவியும் அதனோரற்றே"

(தொல். சொல். இடை: 11)

என்று > எற்று (வலித்தல் திரிபு)

என் + (ன்) + அது > என்னது

என் + து > என்று > எற்று

(ஒ.நோ: அன் + (ன்) > + அது > அன்னது

அன் + து > அன்று > அற்று

(காண்க: "களித்தார்க்குக் கள்ளற்றே கள்வநின் மார்பு"

(குறள்: 1288)

எற்று:

1. ''எற்று என்று இரங்குவ செய்யற்க'' [குறள்: 655]
2. ''துளியின்மை ஞாலத்திற்கு எற்று-அற்றே'' (குறள்: 557)

எற்று + இல் + கு > எற்றிற்கு = எதற்கு

''எற்றிற்குரியர் கயவர்'' [குறள்: 1080]

வலித்தல் திரிபுக்குரிய சான்றுகள்:

1. என்றைக்கு > எற்றைக்கு 2. அன்றைக்கு > அற்றைக்கு
3. இன்றைக்கு > இற்றைக்கு

எற்று:

''எற்று''என்னும் இடைச்சொல், காலச்செலவினை அல்லது காலக்கடப்பினை உணர்த்தும் பொருட்டாயும் வரும்.

"எற்றென் கிளவி இறந்த பொருட்டே"

[தொல். சொல், இடை: 15]

[எ-டு: ''எற்றென் உடம்பின் எழில் நலம்''

[எற்று = என்ன தன்மையது; என்ன தன்மையோடிருந்தது!]

எழிலுடையதாக இருந்த உடம்பு-இப்பொழுது எழில் குன்றியமை யைப் புலப்படுத்தலின் காலக்கடப்பினை உணர்த்தி நிற்கின்றது!]

யா > யே > ஏ > எ

"யா"— என்னும் வினாவடியின் இறுதித்திரிபான, "எ" — என்னும் வினாவடித்திரிபு, புறவினா முன்னொட்டாக [Interrogative prefix before noun] வளர்ச்சியெய்தி நின்றது!

1. [க்] — எ+கடவுள் > எக்கடவுள் [கலி: 93:10]
2. [ச்] — எ+சொல் > எச்சொல் [தொல் சொல்.வினை: 40,2]
3. [ஞ்] — எ + ஞான்று > எஞ்ஞான்று [குறள்: 145:1]
4. [த்] — எ + திசை > எத்திசை
5. [ந்] — எ + நன்றி > எந்நன்றி [குறள்: 110:1]
6. [ப்] — எ+பொருள் > எப்பொருள் [தொல்.சொல்:35:1]
7. [ம்] — எ+முறை > எம்முறை [குறுந்:40:2]
8. [வ்] — எ+வயின் > எவ்வயின் [தொல்.சொல்:69:1]

ஆ > அ: புறச்சுட்டு

ஆ > ஆ+கு > ஆகு > ஆங்கு = அவ்விடம்

"ஆங்கு அவை நிகழும் என்மனார் புலவர்" [தொல். பொருள்: களவு: 6:2]

ஆங்கு > அங்கு = அவ்விடம் [கலி:145:46]

யா+(வ்)+அண் > யாவண் = எவ்விடம். [யாவண்+அது > யாவணது]

"இருள் யாவணதோ நின் நிழல் வாழ்வோர்க்கே" (புறம்: 102:7-8)

யா+அங்கு > யாஅங்கு > யாங்கு = எங்கு

"கரப்பவர்க்கு யாங்கு ஒளிக்குங் கொல்லோ" [குறள்: 1070:1]

யாங்கு = எவ்வாறு

"யாங்கு வல்லுநையோ" (ஐங்: 231)

யாங்கு+அண் > யாங்கண் = எவ்விடம்

"எஞ்ஞான்றும் யாங்கணும் யார்க்கும் எளிது" [குறள்: 864]

யாங்கு+அனம் > யாங்கனம் = எவ்வாறு ("அனம்"—ஓரீறு)

"யாங்கனம் தாங்குவென்" (நற்: 381:6)

அண் = ஓர் இடப்பொருளுருபு

அண்+து > அண்டு = இடத்தை உடையது; இடம்

ஆ+அண்டு > ஆஅண்டு > ஆண்டு = அவ்விடம்

"அசையியற்கு உண்டு ஆண்டு ஓர் ஏஎர்" (குறள்: 1098)

யா+அண்டு > யாஅண்டு > யாண்டு = எவ்விடம்

1. "யாண்டுச் சென்றியாண்டு முளராகார்" [குறள்: 895:1]
2. "தண்ணென்னுந் தீ யாண்டுப் பெற்றாள்" [குறள்: 1104]

ஆண்டு + ஐ > ஆண்டை = அவ்விடம் [நாலடி: 91]
யாண்டு + ஐ > யாண்டை = எவ்விடம்
"யாண்டையது கான் என" (கம்பரா. உருக்காட்டு. 61)

யா : தன்மைச்சுட்டு மூலம்

யா : "நான்" என்றவாறு தன்னையே குறிப்பிட்டுச் சொல்லிக் கொள்ளுவதற்கு முதன்முதல் மாந்தன் பயன்படுத்திய மூலவொலியீடு.

யா + அன் > யாஅன் > யான்

"யான் நோக்குங் காலை நிலன் நோக்கும்" (குறள்: 1093)

யான் > ஞான் > நான் (யா > ஞா > நா)

தமிழியமொழிகள் சிலவற்றில் இவற்றின் திரிபுகளாவன :

Malayalam : ñān
Kota : a.n
Toda : o.n
Kannada : ān, nān
Kodagu : na-ni, na
Tulu : yānu, yēnu
Telugu : ēnu, nēnu, nā
Kolami : a.n
Naikri : ān
Parji : ān
Gadba : ān
Gondi : anā, rannā, nanā
Konda : nān(u), nā
Pengo : ān, nā
Manda : ān, nā
Kui : ānu, nānu
Kuwi : nānū
Kurux : ēn
Malto : en
Korava : nā, nānu
Kaikadi : nān, nā
Irula : nānu, na

இந்திய—ஆரிய மொழிகளில் இவற்றின் திரிபுகளாவன :

Korean : nà
Turki : man
Burušaski : jā (யா > jā)
ஒ.நோ: யாழ்ப்பாணம் > jāffnā)
Talaing : ai (written)
oā (spoken)
Sakai : en, eṅ, nāeṅ
Semang : ye, yàm
Palaung : a
Katuṛṛ : a
Wa ; au
Son : au
En : ao
A Mok : a
Ang.Kū : a
MongLwe : a
Dana : o
Yin (or) Riang : e
Kāsī : ṅā
Wār : ñia, ne
Kerwārī, Santālī : īñ
Mundārī : aing, īñ
Kūrku : iṅg
Kariā : iṅg
Juang : āiṅ
Savara : ñēn
Mandarin : ṅa, wa
Cantonese : ṅa

Gyami : nau
Pwo. (literary) : ya
Bassein : yā
Maulmein : yā
Sgà (literary)- ya
(spoken) yà, yi
Bwe : ya
Wewaw : na, na.w
Karenbyn : yà
Bra : yu
Karenni : và
Mano : hē
Zayein : ṅà, ñà
Mopwa, Bilichi : e
Mopwa, Dermuha : zā
Hē-Miao : vai
Man : yē
Lanten-yao : yā
Man-lan-tien : ya
Man-ta-pan : ya
Manchāti (or) patni : gye
Chamba Lāhuli : gē
Tāmi : gai
Limbu : āṅ-ā
Dūmi : ān-ṅu
Rai [or] Jimdār : āṅ
Gurung : ṅa
Murmi : ṅā
Magarī : ṅā
Aka : ṅa, ña, nà
Abor : ṅa
Miri : ṅa
Mismi, Digāru : hā
Si-hia : ṅo
Lolo : ṅa
Lolo-po : ṅo
A-ka[ka] : ṅà
A-ko : ṅà
Lisu : ṅwà
Mo-so : ña
Pyen [or] pyin : gā
Nung : ṅa
Gyarung : ṅa, ṅayau
Manyàk : a
Takpà : nai, ñai

Haurpà : ṅa
Bōtia, Tibetan
[written] ṅa
[spoken] ṅa
Balti : ṅā
of purik : ṅā
Ladakī ṅa
of spiti : ṅā
Kāgate : ṅa
Sarpa : ṅa
Danjongka : ṅa
Hloke : ṅa
Bado (or) Bara : āṅ [ā]
Lālung : ān
Dīmā-sā : aṅ
Garō, Achik : āṅā
Tipurā : āṅ
Deuri-Chutiya : ā
Angāmi : ā
Semā : ina
Kēzāmā : iyē, yē
Hlōtā : ā, ai, aiyo
Tengsa : ṅai
Tukumi : ina
Yachumi : iyā, ina
Tamlu : ṅai
Namsangiā : ṅā
Chāng : ṅo
Mošōng : ṅā
Empeo : ā-nūī
Kabui : āi
Koirao : hai
Mikir : ne
Murām : yē, ē
Kwoireng : ī
Kangoi : ī
Chingpa (or)
Kachin : ṅai
Maran : ṅai
Singpo : ṅai
old Meitei : ei
Meitei : ei
Hirōi-Lamgāng ; nai
Andro : ṅà
Sengmai : ṅà

Chairel : ṅà-(hak)
Kadu : ṅā
Szi [or] Atsi : ṅa
Laši [or] Lechi : ṅo
Maru : ṅa, ṅà
Maingoa [or]
Ngachang : ṅa
Pun, Samong : ṅā
Me-gya : ṅā
Mrū : āṅ
Burmese
(written) :ṅā
(spoken) :-ṅā
Arakanese : ṅā
Taungyo : ṅa
Daun . ṅā
Inoa : ṅā
Tavoyan :ṅā
Arabic : ana
Wai-alā : yē
Kalāšā : ā
Gawar-bati : ā
Pasai : ā
Kōwār [or]
Chitrālī : awa
Pogulī : aū
Dōdō, Sirājī : aū
Rambanī : añ
Kohistānī, Gārwi : ya
Tōrwāli : ā, ai
Sindi vichōli : āū
Lāri : āñ
Bengali : ā mi
Dogri : āū
Sirmaurī : āw
Bagatī : āu
Kiutalī : ā
Mandealī : haū
Chameālī, haū
Gādi : aū
Pangwāli : āū
Badrawāhi :aū
Padarī : aū

யான் > யேன் > ஏன் > என்
யேன், ஏன் = தன்மை யொருமைப் பெயர் - வினைகளில் வரும் ஈறு
[எ-டு] கடையேன் பெற்றேன்
என் = என்னுடைய
"இவக்காண் என் மேனி பசப்பூர்வது" [குறள்: 1185]
யா > யா + அம் > யாஅம் > யாம்
"அம்"— தன்மைப் பன்மையீறு
(1) "யாஅம் துணை புணர்ந் துறைதும்" [ஐங்: 333:4]
(2) "யாம் தம்மை நீடுவாழ்கென்பாக்கு அறிந்து" (குறள்: 1312)
யாம் > ஞாம் > நாம் [யா > ஞா > நா]
"நாம் காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ?"
[குறள் : 1195]
நாம் > நம் "நம் பெண்மை உடைக்கும் படை" [குறள் : 1258]
யாம் > யேம் > ஏம் > எம் [எ-டு] உடையேம் வருவேம்
எம் : எம்முடைய
"நெருநற்றுச் சென்றார் எம் காதலர்" (குறள்: 1278)
யான் > யேன் > ஞேன் > ஞேனு > நேனு [தெலுங்கு]
யாம் > யேம் > யேமு > மேமு [தெலுங்கு] ["கள்"—பன்மையீறு]
யாம் + கள் > யாங்கள் நாம் + கள் > நாங்கள் எம் + கள் > எங்கள்

❋❋❋

பிழை- திருத்தப் பட்டியம்

பக்	வரி	பிழை	திருத்தம்
27	7	ஞீமிறு	ஞமிறு
30	21	களவன்	களபம்
35	24	யாடு + டு	யா + டு
47	15	எற்றுக்கொண்டு	ஏற்றுக்கொண்டு
58	22	ஒரு ஒப்பு	ஓர் ஒப்பு
67	22	கருதி	கருதிப்
72	2	குரல் > குரல்	குரல் > குரால்
73	13	ஈன் றணித்தான	(நீக்குக!)
79	9	அடிப்படையிலேயே	[சேர்க்க] கூகை என்பதுவு
81	23	குழறியா	குழறிய
90	17	வளத் தோற்றத்தோடு	வளத்தோற்றத்தோடும்
108	16	பன்றிகளுக்கு	பன்றிகளுக்குக்
119	1	சொல்லும்	சொல்லுக்கு
119	13	என்றவாறு	என்றவாறும்
126	27	தீம் பெயர்காரும்	தீம் பெயற் காரும்
131	17	பெற்றன	பெற்றது
155	12	புநுகு	புனுகு
158	29	நாவியாகும	நாவியாகும்
160	7	திரிபுச் சொல்லை அது	திரிபுச் சொல்லே அது
163	9	கூறுபடுத்துபனாகிய	கூறுபடுத்துபவனாகிய
165	8	கூறுபடுத்துபனாகிய	கூறுபடுத்துபவனாகிய
168	25	யமனைக்குறித்து	யமனைக்குறித்துப்
189	24	அவரிடம்	அவனிடம்
191	5	கணேக	காண்க
191	21	பொருளாகச்	பொருள்களாகச்
198	17	கொண்டுள்ளள்மையைக்	கொண்டுள்ளமையைக்
202	8	அறிதல	அறிதல்
211	10	காஞ்சியிகைத்து	காஞ்சியி னகத்து
213	3	ராட். வட். அக	ரா. வட். அக.
230	10	தீருவாத்தியின்	திருவாத்தியின்
234	12	திண்ஞான்	திண்ஞாண்
236	14	தனிச் தனிச்	தனித் தனிச்
241	2	உறுதிபடுத்திக்	உறுதிப்படுத்திக்
249	14	கயிராகவும்	கயிறாகவும்
251	21	நக். உரை	நச். உரை
256	7	சொல்வடிவம்	சொல்வடிவோடு
257	26	கோ + இ	கோடு + இ

KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
26957

***